# இலக்கணக் கருவூலம்

(1)

T17528
R005K03
T.17528

தமிழ்த் துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

# இலக்கணக் கருவூலம் - 1

பதிப்பாசிரியர்
டாக்டர் ஆறு. அழகப்பன்
தமிழ்த்துறைத் தலைவர்
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

முதற்பதிப்பு: செப்டம்பர், 85

பதிப்புத்துறை,
அண்ணாமலைப் பல்கலைக்கழகம்,
அண்ணாமலைநகர்-608 002.

விலை ரூபாய்

அச்சு:
சிவகாமி அச்சகம்,
அண்ணாமலைநகர்.

## முன்னுரை

### டாக்டர் ஆறு. அழகப்பன்

தமிழ்த்துறைத் தலைவர்

மொழி என்பது வளர்ச்சியடையக் கூடிய தொடர்புச் சாதனம். வளர்ச்சி பெறும் ஒவ்வொன்றையும் கட்டுமீறிச் செல்லாமல் அளவுக்குட்படுத்த வேண்டும். அவ்வகையில் வளரும் மொழியினை ஒழுங்குபடுத்தும் சாதனமே இலக்கணம்.

தமிழில் இலக்கியத்திற்கு எவ்வளவு மதிப்புண்டோ அவ்வளவு மதிப்பு இலக்கணத்திற்கும் உண்டு. தமிழறிஞர்கள் இலக்கணத்தில் தனி நாட்டம் செலுத்தினர். தமிழில் தோன்றிய இலக்கண நூல்கள் பல. அவற்றுள் கிடைப்பன சில; மறைந்தன பல. கிடைப்பனவற்றுள்ளும் பயிற்சியில் இல்லாதன பல.

பயிற்சியில் உள்ளன, இல்லாதன, உரைகள் காட்டும் நூற்பாக்களைக் கொண்டு அறிவன, பெயரளவில் தெரிவன ஆகிய இலக்கண நூல்களைப் பற்றித் தனித்தனியே ஆராயின் அவ்வாய்வு, தமிழ் வளர்ச்சிக்குப் பெருந்துணை செய்யும். மொழியின் வளர் நிலைகண்டு புத்திலக்கணம் வகுக்கவும் வழி காட்டும். எனவே தமிழ் இலக்கண நூல்கள் அத்தனையையும் பற்றிக் கருத்தரங்கு நடத்தி அவைபற்றி ஆய்வு நூல்கள் வெளியிடுதல் தக்க பணி எனத் தமிழ்த் துறை கருதியது. அதன் விளைவாக இலக்கணக் கருத்தரங்கம் 1984ஆம் ஆண்டு செப்டம்பர்த்திங்கள் 8,9, ஆகிய இருநாட்களில் நடைபெற்றது. பேராசிரியர் திருமிகு. லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார் அவர்கள், கருத்தரங்கிற்குத் தலைமை தாங்கினார்கள். பேராசிரியர் டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் முதன்மையுரை வழங்கினார்கள். இருநாட்களிலும் இலக்கண நூல்கள் பதினான்கு பற்றிய ஆய்வுக் கட்டுரைகள் படிக்கப் பெற்றன. அவிநயம் முதலாக இருபதாம் நூற்றாண்டில் நம் காலத்தில் தோன்றியுள்ள யாப்பு நூல்வரை ஆய்வுக்குட்பட்டன. அக்கட்டுரைகளின் தொகுப்பே இலக்கணக் கருவூலம் - 1. ஒன்று என்ற எண்ணே இது தொடர் நூல் என்பதனைச் சுட்டும்.

செம்மை, தெளிவு, நிறைவு ஆகிய காரணங்களால் தொல் காப்பியம், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலக் காரிகை, நன்னூல், தண்டியலங்காரம், நம்பியகப்பொருள் என்னும் ஆறு நூல்களே தமிழிலக்கண உலகில் நிலைத்த புகழ் பெற்றன. தமிழ்க் கல்விக்கு உரிமையும் கொண்டன. இவற் றுள்ளும் 18, 19ஆம் நூற்றாண்டளவில் தொல்காப்பியக் கல்வியும் குறைவாகவே இருந்தது. புறப்பொருள் வெண்பா மாலை, காரிகை, நன்னூல், தண்டியலங்காரம், நம்பியகப் பொருள் என்னும் ஐந்துமே கருவி நூல்களாக மதிப்புப் பெற்றன. இவற்றைப் 'பஞ்சலட்சணம்' என்று புலமையுலகம், புதுத்தொகைப் பெயர் கொடுத்துப் போற்றியது. இவற்றைப் பயின்றவர்கள், 'பஞ்சலட்சண வித்துவான்கள்' என்று பாராட் டவும் பெற்றனர்.

19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் ஏட்டுச் சுவடிகள், அச்சு வடிவம் கொண்டபோது தொல்காப்பியம் புத்துயிர் பெற்றது. தொல்காப்பியக் கல்வியால் தமிழின் பழமையும் செழுமையும் வெளிப்பட்டன. 20 ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியில் கல்லூரிகளும் பல்கலைக் கழகங்களும் தமிழுக்குத் தந்த முதன்மையால் தமிழ் இலக்கண நூல்கள் அனைத்தும் ஆய்வுப் பார்வைக்கு உரியனவாயின. மாணவர்களின் அறிவுத் தேர்ச்சிக்கு மூலமாயின.

ஓதுக்கப் பெற்ற இலக்கண நூல்கள் ஒப்பாய்வுக்கு உட் பட்டன. கிடைத்த இலக்கண நூல்கள் அச்சாயின. அவை பற்றிய ஆய்வுக் கட்டுரைகளும் வெளிவந்தன.

கி. மு. மூன்றாம் நூற்றாண்டில் தோன்றியது என்று பலராலும் ஒப்புக் கொள்ளப் பெறும் தொல்காப்பியம் முதல், அண்மையில் தோன்றிய யாப்புநூல் வரை அனைத்தும் பற்றி ஆண்டுக்குப் பத்து முதல் பதினைந்து நூல்கள் வரை ஆய்ந்தால் ஏறத்தாழ ஐந்து கருத்தரங்குகளில் தமிழ் இலக்கண நூல்கள் பற்றிய முழுமையான கணிப்புக் கிடைக்கும்.

இலக்கணக் கருவூலம் - 1. என்னும் இத் தொகை நூல், இலக்கண நூல்கள் பதினான்கின் அமைப்பும் தனித்தன்மையும் உணர்த்துவது. வீரசோழியம், இலக்கண விளக்கம், சுவாமி

நாதம், முத்து வீரியம் நான்கும் ஐந்திலக்கண நூல்கள். ஓரளவே கிடைத்துள்ள அவிநயம், எழுத்து சொல் பொருள் என மூவிலக்கணம் உணர்த்துவது என்றும் யாப்பும் பாட்டியலும் அவர் செய்தார் என்றும் கூறுவர். காக்கைபாடினியம் யாப்புப் பற்றியது. நேமிநாதம் எழுத்தும் சொல்லும் ஆயும் சின்னூல்.

இலக்கணக்கொத்து, சொல்பற்றி ஆயும் திறனாய்வு நூல்; எழுத்திலக்கணம் பற்றி ஓரளவு கூறுகின்றது. நவநீதப்பாட்டியல் பாட்டியல் நூல்களுள் ஒன்று. சொல்லிலக்கணப் பயன் பாட்டை விளக்குவது பிரயோக விவேகம். பிரபந்த மரபியல், பிரபந்த தீபம் இரண்டும் பிரபந்தங்களைப் பற்றியன. தமிழ்நூல் எழுத்தும் சொல்லும் பற்றியதாயினும் கால வளர்ச்சியைக் கருத்திற் கொண்டு யாக்கப் பெற்றது. யாப்பு நூல், பழைய யாப்பினையும் புதிய யாப்பினையும் சீர்தூக்கி இலக்கணம் வகுப்பது.

கட்டுரைகள் யாவும் ஆய்வு மூலங்கள் கொண்டன. கருத் தரங்கக் கால அளவு கருதிச் சுருக்கமுடையனவாயினும் விரித்தற்கு ஏற்ற கருக்கள் பொதிந்தன.

இலக்கணிகள் மொழி வளர்ச்சியையும் வாழ்வு மாற்றங் களையும் மதித்தவர்கள். அவர்கள் பழமை விரும்பிகள் அல்லர். ஏற்பன ஏற்று மாற்றுவன மாற்றி மொழிக்குச் செம்மை தந்த பெருமையர்.

களவு என்பதைக் கற்பு என்ற திருமண நிகழ்ச்சியின் முன்நிகழ்ச்சி என்று கொள்வது பிழை; பழங்காலத் திருமண முறை என்பது கருதியே களவு, கற்பு என முறைபெற்றது என டாக்டர் அறவாணன் கூறுவதும் அதற்குச் சமுதாயவியற் சான்றுகள் காட்டுவதும் களவு பற்றிய கைகோளைப் புதிய கண்ணோட்டத்துடன் நோக்கத் தூண்டுவன.

இலக்கணக் கொத்தினை ஆராய்ந்துள்ள டாக்டர். செ. வை சண்முகம் அவர்கள், அந் நூலின் நிறையும் குறையும் காட்டி அந் நூலினை மதிப்பீடு செய்திருத்தல் அந் நூல் புறக் கணிக்கத் தக்கதன்று; மொழிவளர்ச்சியின் அடிப்படையில் சிந்தனைக்கு உரியது என்னும் எண்ணத்தை ஊட்டுகின்றது

'என்றுமுள தென்றமிழ்' என்ற கவியரசர் கம்பர் வாக்குப் பொய்யாவாக்கு. தமிழ் மட்டுமா? தமிழுக்குரிய இலக்கணமும் 'என்றுமுள இலக்கணம்'. தொல்காப்பியர் கூறிய இலக்கணங் களில் தொண்ணூறு விழுக்காடு இன்றும் மாறவில்லை. மாறிய பத்து விழுக்காடும் தலைகீழ் மாற்றமன்று. வளர்ச்சியினால் விளைந்த கூடுதல் நிலைகள்.

இத் தொகுப்பு நூல், இலக்கணக் கல்விக்குத் தக்க பயன் நூல். கட்டுரை வழங்கிய பெருமக்கள் அனைவருக்கும் நன்றி உரியது.

'அண்ணாமலைப் பல்கலைக் கழகம் தனியொருவரின் உடைமையன்று; அது தமிழ் மக்களின் உடைமை' என்பது அமரர் முத்தைய வள்ளலின் கொள்கையுரை. தமிழ்மக்களின் உடைமை என்றால் இப்பல்கலைக் கழகம் தமிழ் மொழிக்கும் தமிழ் இனத்திற்கும் தமிழ் நாட்டிற்கும் சிறப்புரிமை கொண்டது என்பது பொருள். இப்பல்கலைக் கழகத்தை இவ்வாறே அரசர் முத்தையவேள் அவர்கள் வளர்த்தார்கள். இப்போது அவர் களின் ஒப்பற்ற திருமகனார் இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் வளர்த்து வருகின்றார்கள். அவர்களின் கூர்த்த மதியால், விரைந்த செயல்திறனால் தமிழ்த்துறை பொலிவுபெற்று வருகின்றது. அவர்களுக்கு நாளும் நன்றி யுடையேன்.

இலக்கணக் கருத்தரங்கம் நடைபெறுதற்கும் கருத்தரங்கக் கட்டுரைகள் நூலாக வெளிவருதற்கும் ஆக்கம் தந்தவர்கள், மதிப்பிற்குரிய துணை வேந்தர் பேராசிரியர் சை.வே. சிட்டிபாபு அவர்கள் ஆவார்கள். கல்வித் தொண்டிலேயே தம் வரலாற்றை இணைத்துக் கொண்டிருக்கும் அவர்களால் தமிழ்த்துறை நாளும் வளர்ந்து வருகின்றது. அவர்களுக்கு என்றும் நன்றியுடையேன்.

அண்ணாமலைநகர்,
22—9—85.

**ஆறு. அழகப்பன்,**
தமிழ்த்துறைத்தலைவர்.

# உள்ளுறை

கட்டுரையாளர்கள்

ஆராயப்பெற்ற நூல்கள்

தலைமையுரை i

பேராசிரியர் லெ. ப. கரு. இராமநாதன் செட்டியார்

முதன்மையுரை xiv

டாக்டர். வ. சுப. மாணிக்கம்

அவிநயம்-ஓர் அறிமுகமும் ஒரு மானுடவியல் விளக்கமும் 1

டாக்டர் க. ப. அறவாணன்

காக்கை பாடினியம் 13

இரா. இளங்குமரன்

புத்தமித்திரனாரின் இலக்கணக் கோட்பாடு 27

டாக்டர் கோ. விசயவேணுகோபால்

நேமிநாதம் 37

டாக்டர் வெ. பழநியப்பன்

இலக்கண விளக்கம் 53

டாக்டர் சொ. சிங்காரவேலன்

நவநீதப் பாட்டியல் 72

சு. சுவாமிஐயா

பிரயோக விவேகம் 83

கு. சுந்தரமூர்த்தி

பிரபந்த மரபியல் 103

டாக்டர் அ. மா. பரிமணம்

பிரபந்த தீபம் 119

டாக்டர் இரா. சாரங்கபாணி

இலக்கணக் கொத்து 130

டாக்டர் செ. வை. சண்முகம்

சுவாமிநாதம் 147

மு. வை. அரவிந்தன்

முத்துவீரியம் 165

அ. ஆனந்தநடராசன்

தமிழ்நூல் 179

டாக்டர் ஆறு. அழகப்பன்

யாப்புநூல் 191

த. சரவணத் தமிழன்

# கட்டுரையாளர்கள்

**1. அரவிந்தன், மு. வை.**

கிருட்டிணகிரி அரசு கலைக் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர். அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர். 'உரையாசிரியர்கள்' என்ற பெயரில் விரிவான ஆய்வுநூல் எழுதித் தமிழ் வளர்ச்சிக் கழகப் பரிசு பெற்றவர். நாட்டுப்புறப்பாடல்களைத் திரட்டி ஆய்ந்து நூல்களும் கட்டுரைகளும் எழுதியவர். தொல்லியல், மொழியியல், நாடகவியல் ஆகியவற்றில் சான்றிதழ் பெற்றவர். 'சிறுவர் உலகம்' என்ற கவிதை நூல் எழுதிப் பரிசு பெற்றுக் குழந்தைக் கவிஞராக அறிமுகமானவர். தமிழ்ச் சொற்களின் வரலாற்றை வடிவம் பொருள் ஆகிய அடிப்படையில் ஆய்ந்து கட்டுரைகள் படைத்தவர்.

**2. அழகப்பன், ஆறு.**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவர். இந்திய மொழிப்புல முதன்மையர். அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர். இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தாய்லாந்து, பர்மா முதலிய அயல் நாடுகளுக்குச் சென்று தமிழ்பரப்பிய தூதுவர். 'தமிழ் நாடகங்களின் தோற்றமும் வளர்ச்சியும்' பற்றி ஆராய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர். இவரின் நாடகக் கலைத் தொண்டிற்காகத் தமிழக அரசு 'கலைமாமணி' என்னும் விருது கொடுத்துப் பாராட்டியது. நாட்டுப்புற இயல் ஆய்வாளர்களில் இவர் குறிப்பிடத்தக்கவர். நாடக நூல்கள் பலவற்றின் ஆசிரியர். இவரது 'எள்ளல் நாடகம்' தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசு பெற்ற நூல். தமிழ்த்தாய்க்குத் திருவுருவம் கண்டவர்களில் இவரும் ஒருவர்.

**3. அறவாணன், க. ப.**

இலயோலா தன்னாட்சிக் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவர். அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர். நன்னூல் உரைகளைப் பற்றி ஆய்ந்து 'எம். லிட்.' பட்டமும் தொல்

காப்பியப் பொருளதிகார உரைகளை ஆய்ந்து 'டாக்டர்' பட்டமும் பெற்றவர். மேற்கு கிழக்கு ஐரோப்பிய நாடுகள், தென் கிழக்காசிய நாடுகள், சப்பான், ஆப்பிரிக்க நாடுகள், அமெரிக்க ஒன்றிய நாடுகள் ஆகியவற்றிற்குப் பன்முறை சென்று வந்தவர். மேற்காப்பிரிக்காவில் உள்ள தக்கார் பல்கலைக் கழக ஆப்பிரிக்க அடிப்படை ஆய்வகத்தில் திராவிட ஆப்பிரிக்கத் தொடர்புகள் பற்றி ஐந்து ஆண்டுகள் ஆய்வு நிகழ்த்தியவர். இருபது தமிழ் நூல்களையும் ஐந்து ஆங்கில நூல்களையும் எழுதியவர். 'சைனரின் தமிழிலக்கண நன்கொடை' என்ற இவரின் நூல், தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசு பெற்றது.

**4. ஆனந்தநடராசன், அ.**

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர். ண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர். தூது இலக்கியத்தை ஆய்ந்து 'டாக்டர்' பட்டம் பெற்றவர். மொழியியல், வடமொழி ஆகியவற்றில் சான்றிதழ் பெற்றவர். ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதியவர்.

**5. இராமநாதன் செட்டியார், லெ. ப. கரு.**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறைத் தலைவராகவும் கீழைக்கலைப்புல முதன்மையராகவும் விளங்கியவர். இப் பல்கலைக்கழகத்தின் ஆட்சிக் குழு, ஆளவைக் குழு, நியமனக் குழு போன்றவற்றின் உறுப்பினராய் அமைந்து அதன் வளர்ச்சிக்கு உறுதுணையாக இருப்பவர். நிகழ்நிலைத் துணை வேந்தராகப் பன்முறை பொறுப்பேற்றுத் தம் ஆட்சித் திறமையை வெளிப்படுத்தியவர். செட்டிநாட்டரசர் அண்ணாமலை வள்ளல் அவர்கள் தோற்றுவித்து அமரர் முத்தைய வேந்தர் அவர்கள் வளர்த்த தமிழிசை இயக்கத்தில் தொடக்கம் முதல் துணை நின்று இன்றும் பணி செய்பவர்.

மதுரைத் தமிழ்ச் சங்கத்தில் 'பண்டிதம்' தேர்ந்தவர். சென்னைப் பல்கலைக் கழக வித்துவான் தேர்வில் முதல்வராகத் தேர்ச்சி பெற்று ஆயிரம் வெண்பொற்காசுகள் பரிசாகப் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆசிரியப்

பயிற்சி வகுப்பில் பயின்று தேர்ந்தவர். தொல்காப்பியச் செல்வம், எட்டுத் தொகைச் செல்வம் முதலான பல நூல்களும் ஆய்வுக்கட்டுரைகளும் எழுதியவர். மேல் நாடுகள் பல வற்றிற்குச் சென்றுவந்தவர். 'முத்தமிழ் வித்தகர்', 'இலக்கிய வித்தகர்,' 'பண்டிதமணி', 'தமிழ்மாமணி' என்பன இவர் பெற்ற சிறப்புப் பட்டங்கள். மதுரை காமராசர் பல்கலைக் கழகம் 'தமிழ்ப் பேரவைச் செம்மல்' என்னும் பட்டம் வழங்கிப் பாராட்டிச் சிறப்பித்துள்ளது.

**6. இளங்குமரன், இரா.**

சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'வித்துவான்' பட்டம் பெற்றவர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியற் புல ஆய்வாளர். பாடல், கதை, கட்டுரை, ஆராய்ச்சி, வர லாறு, பதிப்பு, உரை, தொகுப்பு என்னும் பல்வேறு துறை களில் 130க்கு மேற்பட்ட நூல்களின் ஆசிரியர். தமிழ்க்காப்புக் கழகப் 'புலவர்மணி', சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழகக் 'கழக இலக்கியச் செம்மல்', தமிழக அரசின் 'நல்லாசிரியர்' ஆகிய பட்டங்களைப் பெற்றவர். சொல்லாய்வில் பேரீடுபாடு உடைய இவர், 'பாவாணர் ஆராய்ச்சி நூலகம்' என்னும் பெரிய நூலகத்தை மதுரைத் திருநகரில் நிறுவி ஆய்வாள ருக்குத் துணைபுரிபவர்.

**7. சண்முகம், செ. வை.**

அண்ணாமலைப் பல்கலைக் கழக மொழியியல் உயர்வு ஆய்வுமைய இயக்குநர். அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர். இலண்டன், இந்தோனேசியா ஆகிய இடங்களுக்குச் சென்று மொழிப்பணியாற்றியவர். 1350 முதல் 1700 வரை அமைந்த கல்வெட்டுக்களின் மொழியினை ஆய்ந்து டாக்டர் பட்டம் பெற்றவர். சுவாமிநாதம் என்னும் இலக்கண நூலின் உரையாசிரியர்; பதிப்பாசிரியர். எழுத்திலக்கணக் கோட்பாடு, சொல்லிலக்கணக் கோட்பாடு என்பன இவர் எழுதிய இலக்கண ஆய்வு நூல்கள். ஆங்கிலத்தில் இவர் எழுதிய மொழியாய்வு நூல்கள் ஆறு. மரபிலக்கணத்தை மொழியியல் கண்ணோட்டத்தில் ஆராய்ந்து நூல்களும் கட்டுரைகளும் எழுதிவருபவர்.

**8. சரவணத் தமிழன், ச.**

சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'வித்துவான்' பட்டம் பெற்றவர்; தமிழாசிரியர். திருவாரூரில் இயற்றமிழ்ப் பயிற்றகம் என்னும் மொழிக் கழகத்தை நிறுவித் தமிழ்த் தொண்டாற்றி வருபவர். இவர் இயற்றிய 'யாப்பு நூல்' தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் முதற்பரிசு பெற்றது. சமயச் சார்பும் சாதிச் சார்பும் கட்சிச் சார்பும் வேண்டாதவர். மொழிஞாயிறு தேவநேயப் பாவாணரின் பற்றாளர்.

**9. சாரங்கபாணி, இரா.**

தமிழ்ப் பல்கலைக் கழக இலக்கியத் துறைத் தலைவர். அண்ணாமலைப் பல்கலைக்கழக மாணவர். 'தமிழில் அறவிலக்கியங்கள்' பற்றித் திறனாய்ந்து 'டாக்டர்' பட்டம் எய்தியவர். இவர் எழுதிய 'பரிபாடல் திறன்' என்னும் ஆய்வு நூல், தமிழ்வளர்ச்சிக் கழகத்தின் பரிசுபெற்றது. திருக்குறள் உரை வேற்றுமை, இயற்கை விருந்து, குறள் விருந்து முதலியன இவர் எழுதிய நூல்கள். இப்போது தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் 'சங்க இலக்கியப பொருட்களஞ்சியம்' உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளார்.

**10. சிங்காரவேலன், சொ.**

மயிலாடுதுறை அ.வ.அ.கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர்; ஆய்வு நெறியாளர். சென்னைப் பல்கலைக் கழக 'வித்துவான்' தேர்வில் முதல்வராகத் தேர்ச்சியுற்று ஆயிரம் வெண்பொற் காசுகள் பரிசாகப் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் அப்பர் தேவாரத்தின் மொழியினை ஆராய்ந்து டாக்டர் பட்டம் எய்தியவர். செஞ்சொற் கொண்டல், திருமுறை உரைமணி, தமிழாகரர் என்பன இவர்பெற்ற சிறப்புப் பட்டங்கள். நூல்கள் கட்டுரைகள் பலவற்றின் ஆசிரியர்.

**11. சுந்தரமூர்த்தி, கு.**

திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரியின் முதல்வர்; செயலர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறையில் தமிழ் இணைப் பேராசிரியராக ஓராண்டு பணியாற்றியவர்.

தொல்காப்பியத்திற்கு உரிய அனைத்து உரைகளையும் மெய்கண்ட நூல்கள் பதினான்கனுள், பதின்மூன்று நூல்களையும் திருக்குறள், சேக்கிழார் பிள்ளைத் தமிழ், தண்டியலங்காரம்' முத்துவீரியம், கந்தர் கலிவெண்பா முதலிய பல நூல்களையும் தக்க விளக்கங்களுடனும் ஆய்வுரைகளுடனும் பதிப்பித்தவர். 'சுந்தரர் வரலாற்று ஆராய்ச்சியும் தேவாரத் திறனாய்வும்' இவர் எழுதிய நூல்களில் குறிப்பிடத்தக்கது. சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'டாக்டர்' பட்டம் பெற்றவர். 'சைவப்புலவர்' சித்தாந்த நன்மணி', 'தொல்காப்பியச் செல்வர்' என்பன இவர் பெற்ற சிறப்புப் பட்டங்கள்

**12. சுவாமி ஐயா, சு.**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை இணைப், பேராசிரியர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் 'வித்துவான்' பட்டமும் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பி.ஒ.எல். எம்.ஒ.எல்; ஆசிரியப்பயிற்சி; டாக்டர் பட்டங்களும் பெற்றவர். 'சிவஞான முனிவரின் காஞ்சிப் புராணம் – ஓர் ஆய்வு' என்பது, இவரது டாக்டர் பட்ட ஆய்வுத் தலைப்பு. அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்ட 'யாப்பருங்கலக் காரிகை - பாட நுண் பதிப்'பின் பதிப்பாசிரியர். ஆய்வுக் கட்டுரைகள் பல வரைந்தவர்.

**13. பரிமணம், அ.மா.**

தமிழ்ப் பல்கலைக் கழகக் கலைக் களஞ்சியப் பதிப்பாசிரியர் பூண்டி திரு. புட்பம் கல்லூரித் தமிழ்த் துறைத் தலைவராகவும் தமிழ் ஆராய்ச்சி மையத் தலைவராகவும் பணியாற்றியவர். சென்னைப் பல்கலைக் கழக 'வித்துவான்' தேர்வில் முதல்வராகத் தேர்ந்து ஆயிரம் வெண் பொற்காசுகள் பரிசு பெற்றவர். பதிற்றுப் பத்தினை ஆய்ந்து எம்.லிட். பட்டமும் அப்பர் தேவாரத்தினை ஆராய்ந்து டாக்டர் பட்டமும் எய்தியவர். வையாபுரிப் பள்ளு, வீரையன் அம்மானை, இராமர் அம்மானை என்பன இவர் பதிப்பித்தன. 'இயற்கை நாட்டியம்' இவர் எழுதிய கட்டுரை நூல்.

**14. பழநியப்பன், வெ.**

அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறையின் இணைப் பேராசிரியர். அண்ணாமலைப் பல்கலைக் கழக

மாணவர். 1960 - 64 ஆம் ஆண்டுகளில் 'தமிழ்நாடு' நாளிதழில் துணையாசிரியராகப் பணியாற்றியவர். புகழேந்தியின் நள வெண்பாவினை ஆய்ந்து எம். லிட் பட்டமும் 'தமிழ் இலக்கண இலக்கிய நூல்களில் பாட வேறுபாடுகள்' (சங்க இலக்கியம் சிறப்பாய்வு) என்னுந் தலைப்பில் 'டாக்டர்' பட்டமும் பெற்றவர். 'தமிழ்ப் புலவர் வரலாற்றுக் களஞ்சியம்' என்னும் பெயரில்அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வெளியிட்டுள்ள இரு தொகுதிகளின் பொறுப்பாளர். 'நம்பியகப் பொருள் - பாட நுண் பதிப்'பின் பதிப்பாசிரியர்.

**15. மாணிக்கம், வ. சுப.**

அண்ணாமலைப் பல்கலைக் கழக மாணவர். அழகப்பா கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவராகவும் முதல்வராகவும் பணியாற்றியவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராகவும் இந்திய மொழிப்புல முதன்மையராகவும் தொண்டாற்றியவர். மதுரை காமராசர் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக வீற்றிருந்தவர். தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் தொல்காப்பியத் தகைஞராகப் பணிஏற்றிருப்பவர். சங்க இலக்கிய அகப் பொருள் பற்றி ஆராய்ந்து 'டாக்டர்' பட்டம் பெற்றவர். அண்ணாமலைப் பல்கலைக் கழகப் பொன் விழாவில் டி.லிட். பட்டம் பெற்ற சிறப்பினர். வள்ளுவம், தமிழ்க் காதல், கம்பர், சிந்தனைக் களங்கள், இலக்கிய விளக்கம், உப்பங்கழி முதலியன இவரது நூல்கள். 'கம்பர்' தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பரிசுபெற்ற நூல்.

**16. விசயவேணுகோபால், கோ.**

மதுரை காமராசர் பல்கலைக் கழகத் தமிழியல் துறையில் ஒப்பிலக்கியப் பேராசிரியர். அண்ணாமலைப் 'பல்கலைக் கழக மாணவர். 'நன்னூல் ஒப்பாய்வு' என்னும் தலைப்பில் ஆய்ந்து எம்.லிட். பட்டமும் 'தமிழில் தொகைச் சொற்கள்' பற்றி ஆய்ந்து டாக்டர் பட்டமும் பெற்றவர். அமெரிக்கப் பல்கலைக் கழகங்களுக்கு இருமுறை அழைப்புப் பேராசிரியராகச் சென்று தமிழியல், மொழியியல், சமயம் முதலிய பொருள்களில் சொற் பொழிவாற்றியவர். இவருடைய சிறப்புத்துறைகள் ஒப்பிலக் கியம், இலக்கணக் கோட்பாடுகள், தமிழக வரலாறு, சமயம், தமிழகக் கலைமரபுகள் என்பன.

# ஆராயப்பெற்ற நூல்கள்

**1. அவிநயம்**

ஆசிரியர்: அவிநயனார்.

காலம்: கி. பி. 9 ஆம் நூற்றாண்டு.

சமயம்: சமணம்.

பொருள்: எழுத்து, சொல், பொருள்.

உரையாசிரியர்: இராசபவித்திரப் பல்லவதரையன்.

குறிப்பு: இந் நூலும் உரையும் கிடைக்கவில்லை. யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக் காரிகையுரை முதலான உரைகளில் அமைந்துள்ள அவிநய நூற்பாக்கள் 130ஐத் திரட்டி 'அவிநயம்' என்ற பெயரில் 1975–ல் டாக்டர் க. ப. அறவாணன் பதிப்பித்துள்ளார்; உரையும் எழுதியுள்ளார்.

அவிநயம், அவிநயனார் யாப்பு, அவிநயப் புறனடை அல்லது நாலடி நாற்பது, அவிநயனார் கலாவியல், பன்னிரு படலத்துள் காஞ்சிப்படலம் ஆகியன அவிநயனாரால் எழுதப் பெற்றன என்பர்.

**2. இலக்கண விளக்கம்**

ஆசிரியர்: திருவாரூர் வைத்தியநாத தேசிகர்.

காலம்: கி.பி. 17ஆம் நூற்றாண்டு.

சமயம்: சைவம்.

பொருள்: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி. பொருளதிகாரத்தில் பாட்டியலும் இணைக்கப் பட்டுள்ளது.

அதிகாரங்கள்: 3.

இயல்கள்: 15.

நூற்பாக்கள்: 941

உரையாசிரியர்: நூலாசிரியரே உரையாசிரியர்.

குறிப்பு: இந்நூலைக் 'குட்டித் தொல்காப்பியம்' என்ப.

### 3. இலக்கணக் கொத்து

ஆசிரியர்: சாமிநாத தேசிகர்.

காலம்: கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.

சமயம்: சைவம்.

பொருள்: சொல்லிலக்கணத்திற்கே முதன்மை. ஒழிபியலில் எழுத்திலக்கணம் பற்றிய செய்திகள் ஓரளவு உள.

இயல்கள்: 3.

நூற்பாக்கள்: 131.

உரையாசிரியர்: நூலாசிரியரே உரையாசிரியர்.

குறிப்பு: இலக்கணத் திறனாய்வு நூல்.

### 4. காக்கைபாடினியம்

ஆசிரியர்: காக்கைபாடினியார்.

காலம்: கி. பி. 2 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர்; கி. பி. 7 ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர்.

சமயம்: அறிதற்கில்லை.

பொருள்: யாப்பு.

குறிப்பு: இந்நூல் கிடைக்கவில்லை. யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக் காரிகையுரை முதலான உரைகளில் அமைந்துள்ள காக்கை பாடினிய நூற்பாக்கள் 76. இவற்றை 'எழுத்தசை சீர்' என்ற வரிசையில் தொகுத்துக் 'காக்கை பாடினியம்' என்னும் பெயரில் இரா. இளங்குமரன் பதிப்பித்துள்ளார். உரையும் வரைந்துள்ளார். இப் பதிப்பில் 89 நூற்பாக்கள் உள. காக்கை பாடினியார் யாத்த 76 நூற்பாக்கள் நீங்கலாக எஞ்சிய 13 நூற்பாக்கள், யாப்பு நூல்கள் பிறவற்றிலிருந்து எடுத்துக் கொண்டன.

**5. சுவாமிநாதம்**

ஆசிரியர்: சுவாமிநாத கவிராயர்.
காலம்: கி. பி. 19ஆம் நூற்றாண்டு.
சமயம்: சைவம்.
பொருள்: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.
அதிகாரங்கள்: 5.
இயல்கள்: 15.
நூற்பாக்கள்: 202. (விருத்தயாப்பு).
பதிப்பும் உரையும்: டாக்டர் செ. வை. சண்முகம்.
வெளியீடு: அண்ணாமலைப் பல்கலைக் கழகம், 1975.

குறிப்பு: எழுத்ததிகாரத்திற்கு முன்னர், 'நூல்வழி' என்ற பிரிவு உள்ளது. இது, பாயிரம் பற்றிய செய்திகளைக் கூறுவது.

இனி '**சுவாமிநாதம் மூலமும் விருத்தி உரையும்**' என்னும் பெயரில் மற்றொரு நூலும் வெளிவந்துள்ளது. இதன் பதிப்பாசிரியரும் டாக்டர் செ. வை. சண்முகம். கேரளப் பல்கலைக் கழகக் கீழ்த்திசைக் கையெழுத்துச் சுவடி நூல் நிலையத்தில் உள்ள எழுத்தாக்க மரபு விருத்தி உரையும் கரந்தைச் தமிழ்ச்சங்கம் தமிழ்ப் பொழிலில் வெளியிட்ட எழுத்தாக்க மரபு, பதமரபு என்ற இரண்டு இயலுக்கும் டாக்டர் செ. வை. சண் முகம் எழுதிய உரையும் இப்பதிப்பில் உள.

**6. தமிழ் நூல்**

ஆசிரியர்: சரவணத் தமிழன், த.
காலம்: நம்மிடையே இன்று வாழ்பவர்.
பொருள்: எழுத்து, சொல்.
இயல்கள்: 7.
நூற்பாக்கள்: 433 + 12 = 445
உரையாசிரியர்: நூலாசிரியரே உரையாசிரியர்.

**7. நவநீதப் பாட்டியல்**

ஆசிரியர்: நவநீதநடன்.
காலம்: கி. பி. 13 ஆம் நூற்றாண்டிற்குப் பிற்பட்டவர்.

சமயம்: வைணவம்.
பொருள்: பாட்டியல்.
இயல்கள்: 3.
நூற்பாக்கள்: 104. (காரிகை யாப்பு)
உரையாசிரியர்: பெயர் தெரியவில்லை.

### 8. நேமிநாதம்

ஆசிரியர்: குணவீர பண்டிதர்.
காலம்: கி. பி. 12 ஆம் நூற்றாண்டு.
சமயம்: சமணம்.
பொருள்: எழுத்து, சொல்.
அதிகாரங்கள்: 2
இயல்கள்: 10.
நூற்பாக்கள்: 95+3+2=100. (வெண்பா யாப்பு).
உரையாசிரியர்: பெயர் தெரியவில்லை.

### 9. பிரபந்த தீபம்

ஆசிரியர்: பெயர் தெரியவில்லை.
காலம்: கி. பி. 19 ஆம் நூற்றாண்டு.
சமயம்: சைவம்.
பொருள்: பிரபந்த இலக்கணம்.
நூற்பாக்கள்: 96.
பதிப்பாசிரியர்: டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் (1980).

### 10. பிரபந்த மரபியல்

ஆசிரியர்: புராணத் திருமலைநாதர்.
காலம்: கி. பி. 17 ஆம் நூற்றாண்டு.
சமயம்: முருகவழிபாட்டினர்.
பொருள்: பிரபந்த இலக்கணம்.
நூற்பாக்கள்: 35.
பதிப்பாசிரியர்: மு. அருணாசலம் (1976)
குறிப்பு: நூல் முழுமையாகக் கிடைக்கவில்லை.

**11. பிரயோக விவேகம்**

ஆசிரியர்: சுப்பிரமணிய தீட்சிதர்.
காலம்: கி.பி.17 ஆம் நூற்றாண்டு.

சமயம்: சைவம்.
பொருள்: சொல்லிலக்கணம்.
படலங்கள்: 4.

நூற்பாக்கள்: 51. (காரிகை யாப்பு).
உரையாசிரியர்: நூலாசிரியரே உரையாசிரியர்.

**12. முத்துவீரியம்**

ஆசிரியர்: முத்துவீரிய உபாத்தியாயர்.
காலம்: கி.பி.19 ஆம் நூற்றாண்டு.
சமயம்: சைவம்.

பொருள்: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி. (யாப்பிலக்கணத்தில் பாட்டியலும் கூறுவர்.)

அதிகாரங்கள்: 5.
இயல்கள்: 15.
நூற்பாக்கள்: 1286.
உரையாசிரியர்: திருப்பாற்கடல்நாதன் கவிராயர்.

**13. யாப்பு நூல்**

ஆசிரியர்: சரவணத் தமிழன் த.
காலம்: நம்மிடையே இன்று வாழ்பவர்.
பொருள்: யாப்பு.
நூற்பாக்கள்: 154 + 39 = 193
உரையாசிரியர்: விரிவுரை: சரணவத் தமிழன் த.

பொருளுரை: மு. கனகசபை.

சான்றுரை: பயிற்றகப் புலவர்குழு.

## 14. வீரசோழியம்

ஆசிரியர்: புத்தமித்திரனார்.
காலம்: கி.பி.11 ஆம் நூற்றாண்டு.
சமயம்: புத்தம்.
பொருள்: எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி.
அதிகாரங்கள்: 5.
படலங்கள்: 6.
நூற்பாக்கள்: 183. (காரிகை யாப்பு.)
உரையாசிரியர்: பெருந்தேவனார்.

## தலைமையுரை

### பேராசிரியர் லெ.ப.கரு. இராமநாதன் செட்டியார்

**தமிழ் வளர்க்கும் பல்கலைக் கழகம்**

இலக்கிய வளமும் இலக்கண அமைதியும் உடையமொழிகளுள் தமிழ்மொழி, மிகவும் சிறப்புள்ள மொழி; பழமையான மொழி. இக்காலத்தில் நம் தமிழ் மொழி, எல்லாத்துறைகளிலும் வளர்ந்து வருகின்றது. தமிழக அரசு, தமிழுக்காகவே தஞ்சையில் தமிழ்ப்பல்கலைக் கழகத்தினைத் தோற்றுவித்துள்ளது. அத்தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பணியாற்றுகின்றவர்களில் பெரும்பாலான அறிஞர்கள், நம் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைச் சார்ந்தவர்கள். பலர் இங்குப் படித்தவர்கள்; ஆராய்ச்சியாளராக ஆய்வுப் பணியில் ஈடுபட்டவர்கள்; ஆசிரியராகத் தொண்டாற்றியவர்கள். 'தமிழ்ப் பல்கலைக்கழகம்' என்னும் பெயரில் புதிதாக இப்பல்கலைக் கழகம் தோன்றினாலும், இதற்குமுன்னரே தமிழ்ப் பல்கலைக் கழகமாக மதித்துப் போற்றப்பெற்று வருவது, அண்ணாமலைப் பல்கலைக்கழகம். செட்டிநாட்டரசர் டாக்டர் ராஜாசர் அண்ணாமலைச் செட்டியார் அவர்கள், தம் பெருங்கொடையால் தமிழ்நாட்டின் - தமிழ்இனத்தின் - தமிழ்மொழியின் பெருமைகளைக் காக்கவும் வளர்க்கவும் அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தைத் தோற்றுவித்தார்கள். அவர்களின் திருமகனாரும் நம் நினைவில் என்றும் நிலைத்து நிற்பவரும் ஆகிய அமரர் செட்டிநாட்டரசர் டாக்டர் முத்தையவள்ளல் அவர்கள், அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தைக் கண்ணும் கருத்துமாகக் காத்தார்கள்; வளர்த்தார்கள். அவர்களின் அன்பு மகனார் இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம் இராமசாமி அவர்கள், அப்பல்கலைக்கழக வளர்ச்சியையே நாளும் எண்ணிச் செயற்பட்டு வருகின்றார்கள்.

அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பல்வேறு கலைத் துறைகளும் பல்வேறு விஞ்ஞானத்துறைகளும் பொறியியல் துறைகளும் மருத்துவத்துறைகளும் உள்ளன. செட்டிநாட்டு அரசகுடும்பம், எல்லாத்துறைகளையும் சிறப்பாக வளர்த்தாலும் தமிழ்த்துறையை வளர்ப்பதில் - வளம்பெறச் செய்வதில் தனிப் பற்றுக்கொண்ட குடும்பம். அண்ணாமலை அரசர் அவர் கள், முத்தைய வள்ளல் அவர்கள், இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம் இராமசாமி அவர்கள் ஆகிய மூவேந்தர்களும் தமிழ்த் துறை முனனேற்றத்தில் பெருவிருப்பம் கொண்டவர்கள். அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் தலையாய நோக்கம்- அது தோன்றியதன் நோக்கம் தமிழ்வளர்ச்சியே என்பது எல்லாரும் அறிந்த ஒன்று. அதனால் தமிழ்த்துறை வளர்ச்சியில் மிகுதியான நாட்டம் செலுத்தப்படுதல் இயல்பே.

எல்லாத்துறைகளும் நன்றாக வளரவேண்டும் என்பது பொதுக்கருத்து; தமிழ்த்துறை பாராட்டத்தக்க வகையில் வளர வேண்டும் என்பது சிறப்புக்கருத்து. எல்லாத்துறைகளும் வளர வேண்டும் என்பதில் நூறுமடங்கு ஆதரவினை நம் மதிப்பிற் குரிய இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம் இராமசாமி அவர்கள் தருகிறார்கள் என்றால், தமிழ்த்துறை வளர்தற்கு இருநூறு மடங்கு ஆதரவு தந்து வருகின்றார்கள். இது அவர்களின் பாட்டனாரும் தந்தையாரும் எண்ணிய எண்ணத்தை, தமிழை- தமிழ்ப்பண்பாட்டை உலகறியச் செய்யவேண்டும் என்ற குறிக் கோளை நிறைவேற்றுதல் ஆகும். அதற்காக அவர்களை நாம் பாராட்டவும் வாழ்த்தவும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

### தமிழ்த்துறையின் பெருமை

அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை, மிகவும் புகழ்பெற்ற துறையாகும். தமிழ்நாட்டின் தலைசிறந்த அறிஞர் கள் எல்லாரும் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் பணி யாற்றியவர்கள்; தொடர்பு கொண்டவர்கள். தமிழ்த்துறைத் தலைவர்களாக வீற்றிருந்த பெருமக்களின் ஆற்றலையும் ஆசிரியர்களாகப் பணியாற்றிய அறிஞர்களின் திறத்தையும் தமிழ்நாடு நன்கு அறியும். இப்போது தமிழ்த்துறைத் தலை

வராகப் பணியாற்றும் கலைமாமணி பேராசிரியர் டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்கள், என்மாணவர் என்பதில் நான் பெருமைப்படுகின்றேன். அதற்குமேல், அவர்கள் எம். லிட் பட்டத்திற்காக ஆய்வு செய்தபோது அவர்களுக்கு ஆய்வு வழிகாட்டியாக இருந்தேன் என்பதிலும் மகிழ்ச்சியடை கின்றேன்.

டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்கள் இளமையிலேயே அறிவும் ஆற்றலும் பெற்றவர்கள். எச் செயலாக இருந்தாலும் எண்ணித்துணிவார்; துணிந்தபின், எவ்வளவு எதிர்ப்புக்கள் வந்தாலும் இடையூறுகள் ஏற்பட்டாலும் எண்ணியவாறே முடிப்பார். இது, அவர்களுடைய பெருஞ்சிறப்பு. மிகப் பெரிய செயல்களையெல்லாம் சாதித்த பெருமை அவர்களுக்கு உண்டு. அவர்கள், தமிழ்த்துறைத்தலைவராகப் பொறுப்பேற்ற நாளி லிருந்து நல்ல நிகழ்ச்சிகள் பல, தொடர்ந்து நடைபெற்றுவருதல் பாராட்டுதற்கு உரியது. அவர்கள் பதவியேற்ற சில மாதங் களுக்குள், மூன்று பெரிய தமிழ்விழாக்கள் நடந்திருக்கின்றன. முதல்பெரியவிழாவாகப் பக்தி இலக்கியக் கருத்தரங்கு நடந்தது. அதற்கு நம்முடைய மதிப்பிற்குரிய அரசர் இணைவேந்தர் டாக்டர் எம்.ஏ.எம். இராமசாமி அவர்கள் வந்து வாழ்த்திச் சிறப்பித்தார்கள். அதன்பின் நம் தமிழ்த்துறையில் பணியாற்றிய பேரறிஞர் நாவலர் ந.மு. வேங்கடசாமி நாட்டார் அவர்களின் நூற்றாண்டுவிழா நடைபெற்றது. அவ்விழாவில் நம் பல்கலைக் கழகத்தமிழ்த் துறையின் முன்னாள் மாணவர், நிதி அமைச்சர் மாண்புமிகு நாவலர் நெடுஞ்செழியன் அவர்கள் கலந்து கொண்டார்கள். இப்போது இலக்கணக் கருத்தரங்கு நடை பெறுகின்றது. இது, அறிஞர்களும் அன்பர்களும் பல்துறைப் பேராசிரியர்களும் ஆய்வாளர்களும் மாணவர்களும் கூடி யிருக்க இலக்கண மாநாடு போலக் காட்சி தருகின்றது. இதனைக் கண்டு நான்மகிழ்கின்றேன்; பாராட்டுகின்றேன்.

தமிழ்த்துறை ஆசிரியப் பெருமக்களுக்கும் இலக்கணக்கருத் தரங்க அமைப்பாளர் திரு. சாமி ஐயா அவர்களுக்கும் என் வாழ்த்துக்கள் உரியன. நம்பல்கலைக்கழகத் துணைவேந்தர்

மதிப்பிற்குரிய போராசிரியர் சை. வே. சிட்டிபாபு அவர்கள் பல்கலைக்கழக வளர்ச்சியையே நாளும் நினைப்பவர்கள். தமிழ்த்துறையின் முன்னேற்றத்தில் பேரார்வம் கொண்டவர் கள். அவர்களுக்கும் நம் நன்றி என்றும் உரியதாகும்.

## இலக்கணத்தின் தோற்றம்

பேச்சுமொழி எப்பொழுது ஒழுங்கு பெற்றதோ அப்பொ ழுதே இலக்கணமும் தோன்றிவிட்டது என்று கருதலாம். இலக்கணம், எழுத்து மொழிக்கே உரியது என்று கருதுதல் தவறாகும். பேச்சுமொழிக்கும் உரியது இலக்கணம் என்பதனை மறந்துவிடுதல் கூடாது. ஒருமொழியைப் பிழையறப் பேசவும் எழுதவும் உதவுவது இலக்கணம் என ஆறுமுகநாவலர் கூறியிருத்தலும் இங்கு நினைக்கத்தக்கது.

'இலக்கணம்' என்னும் சொல்பற்றி அறிஞர்கள் ஆராய்ந் துள்ளார்கள். வடமொழிச் சொல்லான 'லக்ஷணம்' என்பதே 'இலக்கணம்' எனத் தமிழாயிற்று எனறு கூறியவர்களும் உண்டு. இது தவறு. லக்ஷணம் என்ற வடசொல்லின் பொருளும், இலக்கணம் என்ற தமிழ்ச் சொல்லின் பொருளும் வேறு வேறு என்பது அறிஞர்கள் கருத்து. நாம் இலக்கணம் என்று கூறுவது, வடமொழியில் வியாகரணம் என்று சொல்லப் பெறும். ஆதலால் வடமொழி லக்ஷணத்தையும் தமிழ் இலக் கணத்தையும் ஒன்றாகக் கருதி மயங்குதல் கூடாது. இதனைச் சொல்லாராய்ச்சியாளர்கள், நன்கு ஆராய்ந்து வெளிப்படுத்த வேண்டும். தமிழ்ச் சொல் என்று கூறுபவர்கள், இலக்கு அணம் எனப் பிரித்துக் காட்டுகின்றனர்.

## இயற்றமிழ் இலக்கணம்

தமிழை 'முத்தமிழ்' என்று சிறப்பித்தல், தொன்று தொட்டு வரும் மரபு. முத்தமிழுக்கும் உரிய இலக்கண நூல்கள் தமிழில் கிடைத்தாலும், இயற்றமிழ் இலக்கணம் பற்றிய நூல்களே மிகுதி. ஆதலால் 'இலக்கணம்' என்றால் அது இயற்றமிழ் இலக்கணத்தையே குறிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

தமிழ்மொழி, மிகப் பழையமொழி என்பதில் யாருக்கும் கருத்து வேறுபாடு இருத்தல் இயலாது. இம்மொழியில் இலக்கண நூல்கள் பல தோன்றியுள்ளன. வரவேற்புரை கூறிய பேராசிரியர் டாக்டர் ஆறு. அழகப்பன் அவர்கள் தமிழில் 97 இலக்கண நூல்கள் உள்ளன என்று குறிப்பிட்டார்கள். இவ்வளவு பெரிய எண்ணிக்கையைக் கேட்கும் போதே நமக்கு மலைப்பாகவும் திகைப்பாகவும் உள்ளது.

தொண்ணூற்றேழு இலக்கண நூல்கள் உள்ளன என்றாலும் அவை கூறும் இலக்கணங்கள், ஐந்திலக்கணம் எனற பகுப்பினில் அடங்கும். எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்பன ஐந்திலக்கணம் எனப்படும். இக்கால ஆய்வாளர்கள் ஐந்து என்னும் வரையறையைக் கடந்து ஆறுவகை, ஏழு வகை என்று பிரித்துக் காட்டுகின்றனர். இப்பிரிவுகள், ஐந்திலக்கணப் பகுப்புக்களில் ஏதேனும் ஒன்றில் அடங்கும் என்பதனை அறிதல் வேண்டும்.

பாட்டியல் நூல்கள் பிற்காலத்தில் பெருகின. இவற்றைப் படிப்பதால் இடைக்காலத்தில் செய்யுளிலக்கணம் வளர்ந்த வரலாற்றை அறிந்து கொள்ள முடியும். ஆனால் பாட்டியல் களில் கூறப்பட்ட பொருத்தங்கள் எக்காலத்திற்கும் ஏற்ற இலக்கணங்கள் அல்ல. அவை ஏற்றுக் கொள்ளத்தக்கனவும் அல்ல. பாட்டியல் கூறும் இலக்கணங்களில் பெரும்பாலன, நடைமுறை வழக்கிற்கு ஒத்தனவாக இல்லை.

நன்னூல், அகப்பொருள் விளக்கம், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம் என்ற ஐந்தும், ஐந்திலக்கணமும் அறிந்து கொள்ளுதற்குரிய நூல்கள் ஆகும். இவையே தமிழ் கற்கும் மாணவர்கள் தொடர்ந்து படித்து வரும் இலக்கணங்கள். இவற்றைச் சில காலங்களுக்குமுன் 'பஞ்சலக்ஷணம்' என்று சொல்வார்கள். இவற்றுடன் நேமிநாதமும் படித்தனர். நான் பண்டிதத் தேர்வுக்குப் படிக்கும் போது நேமிநாதம் எனக்குப் பாடமாக இருந்தது. அதனைச் சின்னூல் என்றும் கூறுவார்கள்.

பிற்காலத்தில் தோன்றிய நூல்களுள், 'இலக்கணக் கொத்து' மிக அருமையான நூல். இலக்கணங்களை விரும்பிக் கற்பவர்களுக்கு அது ஒரு பழக் கொத்து என்று சொன்னால் பொருத்தமாகும். அது, மிகச் சிறிய நூல். பிற இலக்கண நூல் களிலும் உரைகளிலும் கூறப்பெறாத பல நுட்பமான கருத்துக் களை அந் நூலாசிரியார் விளக்கியுள்ளார். இதனை இலக்கணத் திறனாய்வு நூல் என்று குறிப்பிடுவது முற்றும் பொருந்தும். வடமொழிச் செல்வாக்குத் தமிழ் இலக்கணத்தில் இடம் பெற்ற மையாலும், வடமொழிக்கு முரணாகத் தமிழ் இலக்கணம் பெரும்பாலும் அமைந்து விடவில்லை என்று காட்ட எண்ணி யமையாலும் இலக்கணவுலகில் ஒப்பாய்வு போலத் தமிழ் இலக்கண நூல்கள் சில தோன்றின. அவற்றுள் இலக்கணக் கொத்து, குறிப்பிடத்தக்க நூல். இந்நூல் கூறும் இலக்கணக் கருத்துக்கள் சில, ஏற்கத்தகாதனவாக இருக்கலாம். அதற்காக இந்நூலை முற்றும் புறக்கணிக்க முடியாது. அதன் தனித் தன்மையை-இலக்கணக் கொள்கையை அறிஞர்கள் ஆராய வேண்டும்.

தொல்காப்பியத்தின் சிறப்பு

தமிழின் மிகப்பழைய நூல், தொல்காப்பியம் என்பது எல்லாரும் ஒப்புக்கொண்ட ஒன்று. இக்காலத்தில் மிகுதியாகப் பயிலக் கூடிய நூலும் தொல்காப்பியமே.

தொல்காப்பியத்திற்கு உரிய சிறப்புக்கள் பல. அவற்றுள் ஒன்று அதன் அமைப்பாகும். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம் என மூன்று பெரும்பிரிவுகளாக நூலைப் பகுத்துக் கொண்ட தொல்காப்பியர், ஒல்வொரு அதிகாரத் திற்கும் ஒன்பது ஒன்பது இயல்கள் அமைத்த அழகு, எண்ணுந் தோறும் மகிழ்ச்சியைத் தருகின்றது. அது, வரையறை மிக்க நூல் என்பதனை இவ் அமைப்பே காட்டுகின்றது என்று கூறுதல் பொருந்தும்.

குற்றியலுகரப்புணர்ச்சி, தமிழில் தனிச் சிறப்பு உடையது. அதனால் இதனை விளக்கத் தொல்காப்பியர் குற்றியலுகரப் புணரியல் எனத் தனி இயல் அமைத்தார். சொல்லதிகாரத்தில்

வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு என்று மூன்று இயல்கள் உள்ளன. இம்மூன்று இயல்களும் வேற்றுமை பற்றிக் கூறுவன. எனவே வேற்றுமையியல் என ஓர் இயல் மட்டும் இருந்தால் போதும்! ஆனால் வேற்றுமையியலில் முதல் வேற்றுமைமுதல் எழாம் வேற்றுமைவரை இலக்கணம் கூறி எட்டாம் வேற்றுமையான விளி வேற்றுமைக்குத் தனியியல் அமைத்துள்ளார். இது, இவ்வேற்றுமை அக்காலத்தில் பெற்றிருந்த இடத்தையும் சிறப்பினையும் காட்டுவதாகும். பொருளதிகாரத்தில் உவமம் பற்றிப் பேசுவது உவமவியல். இதனைச் செய்யுளியலில் கூறியிருக்கலாம். என்றாலும் உவமம் என்னும் ஒன்று, செய்யுளுக்கு அழகு தருவதாகப் புலவர்கள் படைக்கின்ற அணி ஆதலால், தனியியலில் அதனை விளக்கினார். இவ்வாறு இன்றியமையாதனவற்றைச் சிறப்பாக எடுத்துக்கொண்டு தனித் தனியே ஆராய்ந்த பெருமை, தொல்காப்பியனாரையே சாரும். பிற்கால இலக்கண ஆசிரியர்கள், இவ்வழியில் நின்றாலும், தொல்காப்பியனாரின் ஆழ்ந்த இலக்கண நோக்கினைத் தெளிவாக உணராமல் போயினர். தொல்காப்பியனார் உரிச்சொல்லுக்காகவே உரியியல்படைத்தார். நன்னூலில் உள்ள உரியியல் இவ்வாறு இல்லை என்பது வெளிப்படை. இதற்குரிய காரணங்களை அறிஞர்கள் ஆராய்ந்திருக்கிறார்கள்.

நான் தொல்காப்பியம் முழுமையும் ஆராய்ந்து ‘தொல்காப்பியச் செல்வம்’ என்னும் பெயரில், நூல் ஒன்று எழுதியுள்ளேன். அதில் எழுத்ததிகாரம், சொல்லதிகாரம் பற்றிச் சுருக்கமாகக் குறிப்பிட்டுள்ளேன். பொருளதிகாரம் பற்றி விரிவாக ஆராய்ந்துள்ளேன். பொருளதிகார இயல்கள் ஒவ்வொன்றையும் பற்றித் தனித்தனியாக விளக்கியுள்ளேன்.

தொல்காப்பியத்தில் பொருளதிகாரம், மிகச் சிக்கல்உடைய அதிகாரம். அதில் கூறப்பட்டுள்ள பல கருத்துக்கள் இன்னும் தெளிவுபடவில்லை. செய்யுளியலில் குழப்பங்கள் மிகுதியாக உள்ளன. நூற்பாக்கள் சிலவற்றிற்குப் பொருள் கொள்வதிலும் முரண்பாடுகள் காணப்படுகின்றன. இவற்றையெல்லாம் ஆராய்ந்து வெளிப்படுத்தவேண்டும். நம் பல்கலைக்கழகத் தமிழ்த் துறையில் வித்துவான் திரு.மு.அருணாசலம்பிள்ளை அவர்கள்

பணியாற்றினார்கள். நல்ல புலமையாளர். குற்றம் என்று தெரிந்தால் யாராக இருந்தாலும் எடுத்துச் சொல்லத் தயங்க மாட்டார்கள். அவர்கள் பொருளதிகாரத்தை நன்கு படித்தவர்கள். நம் மதிப்பிற்கு உரிய டாக்டர் தெ.பொ.மீ அவர்கள் மதுரைப் பல்கலைக் கழகத் துணைவேந்தராக இருந்தபோது வித்துவான் அருணாசலம்பிள்ளையைத் தக்கவகையில் பயன்படுத்திக்கொண்டு அகத்திணையியல் உரைவளம், புறத்திணையியல் உரைவளம் எழுதுமாறு செய்தார்கள். அது நல்லபணி. இதுபோன்ற ஆய்வுகளில் நம் தமிழ்த்துறை ஈடுபடவேண்டும் என்பது என் வேட்கை.

**உரையாசிரியர்கள் திறன்**

இலக்கணம் என்று சொன்னால் உரையாசிரியர்களை நீக்குதல் இயலாது. தமிழ் நூல்களில் இலக்கணத்தில் மிகுதியான பழைய உரைபெற்ற நூல், தொல்காப்பியம்; இலக்கியத்தில் திருக்குறள். இவ்வுரைகளில் பல உரைகள், முழுமையாகக் கிடைக்கவில்லை. கிடைத்த உரைகளும் இன்னும் தெளிவாக - விளக்கமாக ஆராயப்படவில்லை. உரையாசிரியர்களும் ஒரு வகையில் சிறந்த இலக்கண ஆசிரியர்கள் என்று கருத வேண்டும். தொல்காப்பியச் சொல்லதிகார உரைகளில் சேனாவரையர் உரை, மிகச் சிறந்த உரையாகும். அதனையும் ஒரு நூல்போலச் 'சேனாவரையம்' என்று சொல்வது, குறிப்பிடத்தக்கது. நான் சேனாவரையர் உரையில் மிகுந்த ஈடுபாடு உடையவன். அதற்குக்காரணம், அவருடைய அளவை முறைப்படி அமைந்த மறுப்பும், நுட்பமாக அணுகும் திறமும் ஆகும். அன்பிற்குரிய டாக்டர் வ.சுப மாணிக்கம் அவர்கள் காரைக்குடி அழகப்பா கல்லூரி முதல்வராக இருந்தபோது தமிழ் முதுகலைவகுப்பு மாணவர்களுக்குத் 'தொல்காப்பியம் நன்னூல் சொல்லதிகாரம் ஒப்பீட்டு ஆய்வு' நடத்துமாறு என்னை அழைத்தது, என் நினைவுக்கு வருகின்றது.

இக்காலத்தில் மூலம் மட்டும் படித்தால் போதும் என்று கருதுகின்றார்கள். இது, இலக்கணப் பயிற்சியில் முழுமை தராது. உரையாசிரியர்கள் எவ்வளவோ நுட்பமான கருத்துக்

களையெல்லாம் எடுத்துக்காட்டியுள்ளார்கள். தொல்காப்பியத் திற்குப்பின் வளர்ந்த இலக்கணக் கருத்துக்களை உரை யாசிரியர்களே நமக்குத் தந்துள்ளார்கள். ஆதலால் உரை யாசிரியர் பற்றிய ஆராய்ச்சி, மிகமிக இன்றியமையாதது.

### இலக்கண விளக்க ஆசிரியர்கள்

இலக்கணக் கருத்துக்களை விளக்கி அறிஞர்கள் பலர் கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளனர். பேராசிரியர் வையாபுரிப்பிள்ளை யவர்கள் 'இலக்கணச் சிந்தனை' என்னும் பெயரில் நூல் ஒன்று படைத்துள்ளார். வேங்கடராசுலு ரெட்டியார் அவர்கள், மதிக்கத்தக்க இலக்கணப் புலவர். பல கட்டுரைகள் வரைந்துள்ளார்கள். நம் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளராக இருந்த வித்துவான் பூவராகம் பிள்ளை அவர்கள் தொல்காப்பியச் சொல்லதிகாரச் சேனாவரையர் உரைக்கு விளக்கம் எழுதியிருப்பது, குறிப்பிடத்தக்கது. நம் டாக்டர் வ.சுப. மாணிக்கம் அவர்கள் தொல்காப்பியப் புதுமை என்று ஒரு நூல் ஆக்கியுள்ளார்கள். இவ்வாறு அறிஞர்கள் எழுதிய இலக்கண நூல்கள், கட்டுரைகள் பற்றிய தொகுப்புப் பட்டியல் வெளிவரவேண்டும். இவர்கள் கூறும் கருத்துக் களையும் கருத்தரங்கு ஒன்றில் ஆராயலாம். அப்போதுதான் இலக்கணம் பற்றிய தெளிவான கருத்துக்கள் வெளிவரும்.

### இலக்கணப் புலவர்கள்

இலக்கணம் கற்றுக் கொடுத்த புலவர்கள் பற்றியும் நாம் அறிந்து கொள்ளுதல் இன்றியமையாததாகும். மதுரைத்தமிழ்ச் சங்கத்தில் இருந்த திருநாராயண ஐயங்கார் அவர்கள், மிகச் சிறந்த புலவர். நான் 'பண்டிதம்' தேர்வுக்காகப் படித்த போது சேனாவரையர் உரையில் ஐயங்கள் வருமானால் எங்கள் ஊரி லிருந்து மதுரைக்கு அவரிடம் செல்வேன். எந் நூற்பாவைக் கேட்டாலும் உடனே விளக்கம் சொல்வார். உரையில் ஐயம் கேட்டால், நூற்பாவைச் சொல்லி, உரையையும் தெளிவாக விளக்குவார். புத்தகமே அவருக்கு வேண்டியதில்லை. அவ்வளவு பெரும் புலவர். இலக்கணம் கற்றுக் கொடுப்பதில் மிகத்தேர்ந்

தவர். பழமொழி நூலின் ஒருபகுதிக்கு உரை எழுதியுள்ளார். இவ்வுரையைக் கற்றவர் அனைவரும் பாராட்டிச் சிறப் பித்தனர்.

கல்லலைச் சேர்ந்த சித. நாராயணசாமி அவர்களும் இலக்கணம் கற்பிப்பதில் வல்லவர். துறவி. திருவையாற்றில் மடாதிபதியாக வீற்றிருந்தார்கள். இவர்களிடம் இலக்கணம் கற்றவர்கள் பலர்.

மாணவர்கள் பலரை உருவாக்கிய வித்துவான் மு. அருணா சலம் பிள்ளை அவர்கள், இலக்கணம் கற்பிப்பதில் பேராற்றல் படைத்தவர்.

நம் பல்கலைக்கழகத்தமிழ்த்துறையில் அண்மையில் பணி யாற்றிய மகாவித்துவான் அருணைவடிவேல் முதலியார் அவர் கள், மிகச்சிறந்த புலவர். சைவசித்தாந்தத்தில் அவர்வல்லுநர். இப்போது தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் சார்பில் இயங்குகின்ற காஞ்சிபுரம் தத்துவ மையத்தில் பணியாற்றுகின்றார்கள். வயது முதிர்ந்த அவர்களை அணுகி அரிய செய்திகளைக் கேட்டு எழுத வேண்டும். அவர்கள் அறிந்திருக்கும் செய்திகளை நாம் பயன் படுத்திக் கொண்டால் தமிழ்வளம் பெறும்.

இலக்கணம் கற்பிப்பதில் திறமை பெற்ற பலர், வாழ்ந் தார்கள். அவர்களைப் பற்றிய செய்திகளும் திரட்டி எழுதப் பெறவேண்டும், அவை இளைய தலைமுறைக்கு ஊக்கம் கொடுக்கும். வளர்வதற்கு வழி வகுக்கும்.இப் பெரும்புலவர்கள் பாராட்டப்பட வேண்டிய அளவுக்குப் பாராட்டப்படவில்லை. அவர்களை நம் பல்கலைக் கழகம் மதித்துப் போற்ற வேண்டும்.

## இலக்கணக் கல்வி

இலக்கணக்கல்வி என்பது பட்டம் பெறுவதனால் மட்டும் வந்து விடாது. நன்னூல் பொதுப்பாயிரத்தில், எப்போது புலமை நிறைவுபெறும் என்பதனைக் குறிப்பிடும் இரண்டு நூற்பாக்கள் உள்ளன.

"ஆசான் உரைத்தது அமைவரக் கொளினும்
காற்கூறு அல்லது பற்றலன் ஆகும்."

"அவ்வினை யாளரொடு பயில்வகை ஒருகால்
செவ்விதின் உரைப்ப அவ்விரு காலும்
மையறு புலமை மாண்புடைத் தாகும்."

ஆசிரியர் கூற அதனால் பெறுகின்ற புலமை கால்பங்கு. தம்முடன் பயில்கின்ற மாணவர்களுடன அக் கல்விபற்றிக் கலந்து உரையாட மற்றொரு கால் பங்கு. இப்போது அவனுடைய புலமை, அரைப் புலமை. தான் கற்றவற்றை மாணவர்களுக்கும் அவையிலுள்ளாருக்கும் ஒழுங்காக - தெளிவாக எடுத்துச் சொல்வதனால் எஞ்சிய அரைப் பங்குப் புலமை கிடைக்கும். அப்போதுதான் அவன் முழுப்புலமை பெற்றவன். ஆதலால் புலமை பெறநினைக்கும் இளைஞர்கள், இடைவிடாது கல்வியில் நாட்டம் கொள்ளுதல் வேண்டும். இலக்கணக் கல்விக்கு இது, மிகமிக இன்றியமையாதது. 'இளைய ஆசிரியர்கள், முதிய ஆசிரியர்களிடம் சென்று பாடம் படிக்க வேண்டும்' என்று நம்முடைய மதிப்பிற்குரிய அமரர் முத்தைய வள்ளல் அவர்கள், அடிக்கடி வற்புறுத்திக் கூறுவார்கள். இது புலமை பெறுதற்கு மிகவும் சிறந்த அறிவுரை.

**இலக்கண நுட்பம்**

தமிழ் இலக்கணம், மிகமிக நுட்பமும் தெளிவும் உடையது. பொருள் இலக்கணம், தமிழுக்கே உரியது என்று அறிஞர்கள் பாராட்டுவர். எவ்வளவோ நுட்பங்களை எடுத்துக் கூறலாம். சான்றாக எழுத்திலக்கணம் பற்றிய ஒன்றைக் குறிப்பிட விரும்புகின்றேன். மாத்திரை என்பது ஒரு கால அளவு. இயல்பாக ஒருவன் கண்ணிமைக்கின்ற பொழுதும், கை நொடிக்கின்ற பொழுதும் ஒருமாத்திரை என்பார்கள். கை நொடித்தல் என்றால் என்ன? அதில் ஒருமாத்திரை எவ்வாறு பிறக்கும் என்றெல்லாம் நம் முன்னோர்கள் தெளிவாகக் கூறியுள்ளார்கள்.

"உன்னல் காலே ஊறுத்தல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே"

கால் மாத்திரை, அரைமாத்திரை, முக்கால் மாத்திரை, ஒருமாத்திரை இவற்றிற்கும் விளக்கம் கூறிய நுட்பத்தை நினைத்துப் பார்க்க வேண்டும். விஞ்ஞான அறிவு வளராத காலத்தில், காலத்தையும் அளந்த தமிழ்மக்களின் பேராற்றல் வியக்கத்தக்கது. உன்னல், உறுத்தல், முறுக்கல், விடுத்தல் இத் தொழிற் பெயர்களைக் கொண்டு கைந்நொடித்தல், எத்தகைய செயற்பாடுகள் கொண்டது எனக் காட்டியுள்ளனர். இப் பொழுது கருவிகள் வந்து விட்டன. அவற்றைக் கொண்டு, கைந்நொடிப் பொழுது பற்றிக் கூறிய தமிழ்மகனின் கருத்துப் பொருத்தமானதா என ஆராய்ந்து நிறுவவேண்டும். அது பொருத்தமாகவே இருக்கும் என்பது என் எண்ணம்.

### உச்சரிப்புப் பிழை

இக்காலத்தில் ஒலிப்பிழை மிகுந்துவிட்டது. ரகரத்திற்கும் றகரத்திற்கும் உச்சரிப்பில் வேறுபாடு அறிய இயலவில்லை. அரம் என இடையின ஒலிவந்தால் ஒரு கருவி. அறம் என வல்லின ஒலி வந்தால் தருமம். இப்போது அரமும் அறமும் ஒன்றாகவே ஒலிக்கிறார்கள். ஒலியில் தவறு வந்தால் எழுத்தில் பிழைவரும். எழுத்தில் பிழை ஏற்பட்டால் கருத்து மாறுபடும்.

நண்பன் என்பதை நன் பண் என்று மாற்றி ஒலிக் கிறார்கள். எவ்வளவு கொடுமை! கொலை நடந்தது என்பதனைக் கொளை நடந்தது என்று உச்சரிக்கிறார்கள். இத்தகைய ஒலிப்பிழைகள் தோன்றாதவாறு கற்றுக் கொடுக்க வேண்டும். தொல்காப்பியர் பிறப்பியல் என ஓரியல் வகுத்ததன் நுட்பமே, ஒலிப்பில் தவறு வரக்கூடாது என்பதே. தமிழ் தோன்றி எத்தனையோ நூறாண்டுகள் ஆகிவிட்டன. எழுத்து வடிவத்தில் மாற்றங்கள் வந்துள்ளன. ஆனால் ஒலிவடிவம் மாறவில்லை. இதனைத் தொடர்ந்து காத்தல் வேண்டும். இது தமிழாசிரியர்களின் முதற்கடமை.

### இலக்கண வரலாறு

இலக்கிய வரலாறு போல இலக்கண வரலாறும் எழுத வேண்டும் என்பது என்னுடைய பெருவிருப்பம். என் தூண்டு

தலால் புலவர் சோம. இளவரசு இலக்கணவரலாறு எழுதினார். அது பயன்படத்தக்க நூல். இந் நூல் போல இலக்கணம் பற்றிய நூல்கள் பல தோன்றுதல் வேண்டும். அப்போதுதான் தமிழ், வளம் பெறும்.

**வாழ்த்து**

அண்ணாமலைப் பல்கலைக்கழகம், இலக்கணக் கருத்தரங்கு நடத்துவது மிகப் பொருத்தம். இன்னும் இலக்கணம் தொடர் பாகப் பல கருத்தரங்குகள் நடத்த வேண்டும். இசைத்தமிழ்க் கருத்தரங்கு, நாடகத் தமிழ்க்கருத்தரங்கு என்பனவும் நடை பெறவேண்டும். இப்போது நடைபெறும் கருத்தரங்கில் படிக்கப் பெறும் கட்டுரைகள், அச்சிடப் பெற்று நூல் வடிவாக வெளிவந் தால் பெரும்பயன் கிடைக்கும். ஆராய்ச்சியில் குற்றங் குறைகள் இருக்கலாம். ஆராய்ச்சி என்பதே ஆராய ஆராய உண்மை புலப்படுதல் ஆகும். 'என் ஆராய்ச்சிக் கருத்தே முடிந்த முடிபு' என்று ஒருவர் சொன்னால் அது தவறு. முன்னே அறிந்து கண்ட முடிபுகள், பின்னே ஆராயும் போது திருத்தப்படலாம்; மாற்றப்படலாம். அதுவே ஆராய்ச்சி. திருவள்ளுவனார், 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்று கூறியதை நாம் நினைவிற் கொள்ளுதல் பொருத்தமானது. ஒரு பொருளை அறிய அறிய, அறிந்தவை அறியாமையாகிவிடும் என்று திவள்ளுவனார் குறிப்பிட்ட இக்கருத்து, ஆய்வுலகத்திற்கே உரிய அருங்கருத்து. ஆதலால், இக் கருத்தரங்கில் படிக்கப் பெறும் ஆய்வுக்கட்டுரைகள், நூலாக வெளிவந்து இலக்கண ஆய்வுக்கு வித்திட வேண்டும் என்று விரும்புகின்றேன். இது போன்று மொழிக்கு வளம் தரும் கருத்தரங்குகள் தொடர்ந்து நடைபெற வாழ்த்துகின்றேன்.

# முதன்மையுரை

டாக்டர் வ.சுப. மாணிக்கம்

இலக்கியப் படைப்புக்கள் போல இலக்கணப் படைப்புக்கள் ஒரு மொழியில் பல்கிப் பெருகித் தோன்றுவதில்லை. இலக்கியத்துக்கு எப் பொருளும் பாடுபொருளாக வருமாதலின், கற்பனையாகவும் பொருட்பெருக்கம் செய்து கொள்ள வியலுமாதலின், இலக்கியங்கள் பல்வகை வடிவிலும் பல்வகை யாப்பிலும் விரைவாகத் தோன்றிவிடும். இலக்கணத்துக்கு மொழி யொன்றே பெரும் பொருளாதலின், அடுக்கடுக்காக இலக்கண நூல்கள் தோன்றும் வாய்ப்பில்லை. மேலும் மொழியின் மாற்றமும் வளர்ச்சியும் சிறிது சிறிதாக வேறுபடுமேயன்றித் திடீரெனப் பெருந்திரிபுகள் வந்து விடா. இலக்கண வரலாற்றை ஆராயும் போது, இவ்வுண்மை வெளிப்படை. ஆதித் தொல்காப்பியத்துக்கும் பின் வந்த இலக்கண நூல்கட்கும் இடைநிலை மயக்கத்தில் எவ்வகை வேறுபாடும் காணோம். மொழி முதலெழுத்துக்களிலும் மொழியிறுதி யெழுத்துக்களிலும் குறைந்த வேறுபாடுகளையே காண்கின்றோம்.

*1.* தொல்காப்பியர் சகரம் அ ஐ ஔ ஒழிய ஒன்பது உயிரோடும் மொழி முதலாகி வரும் என்றார். வீரசோழியம் நேமிநாதம் நன்னூல் சாமிநாதம் என்ற நூல்கள் சகரம் பன்னிரண்டு உயிரோடும் மொழி முதலாகும் என்ப. இலக்கண விளக்கமும் தமிழ்நூலும் பத்துயிரோடுமே (சகரம்) வரும் என்ப. இவ்வாறே யகர முதன்மொழியிலும் ஓரளவு வேறுபாடு உண்டு. எனினும் எந்த இலக்கணநூலும் தொல்காப்பியம் கூறாத புதிய ஒரு மெய்யை இதுகாறும் மொழி முதலாகும் என்று சேர்க்கவில்லை என்பது நினையத்தகும். ஏறிவரும் உயிரளவில் ஓரளவு வேறுபாடு உண்டேயன்றி மெய்ம்முதல் வரவில் புதிய சேர்க்கை இல்லை. இஃது எதனைக் காட்டு

கின்றது? எவ்வளவு வடமொழி, பிறமொழிக் கலப்பு வந்தாலும் காலந்தோறும் எழுந்த தமிழ் இலக்கண நூல்கள் தொல்காப்பிய அடிப்படையே தமிழடிப்படை என்பதனை ஏற்றுக் கொண்டன என்ற மரபு உறுதியாகின்றது.

2. மொழிமுதல் எழுத்திலும் ஈற்றெழுத்திலும் சில வேற்றுமை தோன்றின எனினும் இடைநிலை மெய்ம் மயக்கத்தில் யாதொரு ஊறும் நிகழாதபடி பின்னூல்கள் தமிழொலியமைப்பையும் சொல்லமைப்பையும் காத்துப் போற்றி யுள. ஒரு சொல்லுக்கு உறுப்பாகி வரும் எழுத்திணைப்பில் இன்ன எழுத்துக்கு அடுத்து இன்ன வெழுத்துத்தான் நட்பாகித் தொடர்ந்து வரலாம் என்ற விதியை எல்லா நூல்களும் கடைப் பிடித்துள. பின்னூல்களுள் பெரிதும் புரட்சியது என்று சுட்டத் தக்க வீரசோழியங்கூட வடசொற்கள் தமிழ்ப்படும்போது தமிழ்மையாம் விதிகளை நன்னூல் போலவே வலியுறுத்து கின்றது. (காரிகை 57, 58)

'கூட்டெழுத் தின்பின் யரலக்களி தோன்றிடிற் கூட்டிடையே
ஓட்டெழுத் தாகப் பெறுமோர் இகாரம்; வவ்வுக்
[கொருவ்வாம்;
மீட்டெழுத் துத்தமி ழல்லன போம் வேறு தேயச்சொல்லின்
மாட்டெழுத் தும்மித னாலறி மற்றை விகாரத்தினே'

என்ற காரிகையில் 'தமிழல்லன போம்' என்ற இலக்கணச் சுட்டு தன்னேரில்லா விதியாகும். வடமொழிக்கேயன்றிப் பிற வேறு மொழிகள் வரினும், தமிழ்வடிவு பெறல் வேண்டும் எனவும் அல்வடிவை ஒழிக்க வேண்டும் எனவும் புத்தமித்திரனார் ஆணையிடுவர்.

'சார்ந்த வழக்கொடு தப்பா வடவெழுத் தைத்தவிர்ந்து
தேர்ந்துணர் வார்க்கும் இனிமையைத் தந்து செய்யுட்
களினும்'

என்ற காரிகையில், வடவெழுத்துக் கலவாத தமிழ்ச் செய்யுளே இனிமை தரும் எனவும் வலியுறுத்துவர். எனவே இலக்கண நூல் களுள் சில வேறுபாடுகள் கால வயத்தால் இயல்பாக வந்த

போதும், ஒலிமொழியடிப்படையை எல்லாமே காத்துக் கன்னிமை செய்த பெற்றி தெளிவாகும். இக் காப்பாலன்றோ தமிழ் காலத்தால் உருத்திரிபு பெறா மொழியாகவும், இன்றும் தொல்காப்பியம் சங்க விலக்கியம் திருக்குறள் சிலப்பதிகாரம் பெரியபுராணம் இராமாயணம் விளங்கும் நிலையாகவும் காண்கின்றோம். இதனால் நாம் கொள்ளத் தக்க அறிவு யாது? எதிர் காலத்து வரும் இலக்கணங்களும் இந்த ஒருநிலையில் மொழியறை போதல் கூடாது என்று சுட்ட விரும்புகின்றேன்.

3. தமிழ் தொல்பண்டே அறிவியல் முறையிற் பண்பட்ட மொழியாதலின், செம்மை நோக்கில் அதிக மாற்றங்கட்கு இடனில்லை. என்றாலும் இடைக் காலத்துத் தோன்றிய இலக்கணங்கள் அவ்வக்காலத்து எழுந்த மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் தொட்டுச் சென்றிருக்கின்றன; காரிகை, வெண்பா போன்ற யாப்பு வகையிலும் நூற்பாக்கள் யாத்துள; நூலமைப்பு முறையிலும் தொகைவகை விரிவுகளில் புதுமை நாட்டியுள.

இடைக்கால இலக்கண வளர்ச்சியில் பெரும் பங்கு உரையாசிரியர்கட்கு உண்டு. உரையாசிரியர்களின் பல கருத்துக்களைத்தான் பின்னூல்கள் நூற்பா வடிவாக்கியிருக்கின்றன என்ற உண்மையை உணர்வோமாக. இவ்வுரைகள் இலக்கணக் கொள்கைகளை ஐயம் எழுப்பியும் தெளிவித்தும் மறுத்தும் நிலைநிறுத்தியும் உசாவுரை செய்திருப்பதால் ஆய்வு தழுவிய இலக்கண வளர்ச்சியைக் காண்கின்றோம்.

4. செய்யுள் வடிவில் உள்ள நூற்பாவின் உள்ளங் காண உரைநடைப்பட்ட உரை இன்றியமையாதது என்ற கோட்பாடு இடைக் காலத்து வளர்ந்து விட்டது. அதனாலன்றோ வீரசோழியத்துக்கும் யாப்பருங்கலத்துக்கும் யாப்பருங்கலக் காரிகைக்கும் தோன்றிய காலத்தே உடனுரைகளும் உறவுடையோரால் எழுதப்பட்டன. இக் கோட்பாடு பின்னும் வளர்ந்து என்னாயிற்று? நூலாசிரியர்கள் தாமே தம் நூலுக்கு உரையும் சேர்த்து வரையலாயினர்.

"நூல்செய் தவனந் நூற்குரை யெழுதல்
முறையோ எனிலே அறையக் கேள்நீ;
முன்பின் பலரே என்கண் காணத்
திருவா ரூரில் திருக்கூட் டத்தில்
தமிழ்க்கிலக் காகிய வயித்திய நாதன்
இலக்கண விளக்கம் வகுத்துரை எழுதினன்;
அன்றியும் தென்றிசை ஆழ்வார் திருநகர்
அப்பதி வாழும் சுப்பிர மணிய
வேதியன் தமிழ்ப்பிர யோக விவேகம்
உரைத்துரை எழுதினன் ஒன்றே பலவே"

என்று வரும் சுவாமிநாத தேசிகரின் உரைநூற்பா, நூலும் உரையும் உடன் பிறப்பாகிய இடைக்கால இலக்கண வளர்ச்சியை மெய்ப்பிக்கின்றது. இப்போக்கினைத் தழுவி இந்நூற்றாண்டில் 'தமிழ் நூல்' என்ற இலக்கணம் இயற்றிய சரவணத் தமிழனாரும், 'யாப்பொளி' யாத்த சீனிவாசனாரும் தாமே தம் கையுரை எழுதியுள்ளனர். ஆசிரியனே எழுதிவிடும் உடனுரையால் பொருந்திய காட்டுக்களும் விளக்கங்களும் கிடைக்குமாயினும் படிப்பார் சிந்தனை அடைப்பாகி விடுகின்றது என்ற குறைபாட்டையும் உணர வேண்டும். இப்போக்கு அந்நூலுக்குப் பிறரொருவர் உரையெழுத முன் வாராதபடி அடக்கமாகி விடுகின்றது; உரைவளர்ச்சி குன்றுகின்றது. தொல்காப்பியத்துக்குத் தொல்காப்பியரே உரையெழுதிப் போட்டிருந்தால், நன்னூலுக்குப் பவணந்தியாரே உடனுரையும் வழங்கியிருந்தால், தமிழில் இலக்கண வளர்ச்சி என்னாகியிருக்கும் என்று ஒரு கணம் எண்ணிப் பாருங்கள். ஓர் இலக்கண நூலுக்குக் காலந்தோறும் உரையெழுதிக் காணும் வளர்ச்சியும் காப்பும் புதுமையும் இல்லாதொழியுமன்றோ? ஆதலின் தமிழிலக்கண வரலாற்றில் இடைக்காலத்துப் புகுந்த இரட்டை நூலுரைக் கொள்கை அத்துணைப் பாங்கன்று என்பது என் கருத்து.

5. இடைக்காலத்தில் நாணத்தக்க பண்பற்ற வறட்டு மொழிப்பூசல் ஒன்று கிளைக்கலாயிற்று. 'ஆரியம் நன்று தமிழ்

தீது, என்பது அவ்வியக்கத்தின் வெளிப்படை. இவ்வியக்கநோய் தமிழ் நாட்டிலேயே தமிழ் கற்றாரிடையே அரும்பிப் போதாகி மலர்ந்தது. தமிழினைப் பழித்தும் இழித்தும் தூற்றியும் வட மொழிக்குத் தெய்வ நிலையும் ஏற்றமும் தலைமையும் தமிழகத்திலேயே வழங்குவது கற்றாரிடை பேரளவு வழக்காயிற்று. இலக்கியப் பனுவல்களைத் தாக்கிய இவ்வல்லியக்கம் இலக்கண நூல்களையும் உரைகளையும் உரைவிளக்கங்களையும் தாக்காமல் விடுமா?

"தமிழ்ச் சொல்லிற் கெல்லாம் வடநூலே தாயாகி நிகழ்கின்றமையின் அங்குள்ள வழக்கெல்லாம் தமிழுக்கும் பெறும்" என்று அறுதியிட்டார் வீரசோழிய வுரையாசிரியர் பெருந்தேவனார். "ஒரு சொல்லாய வழித் தமிழ்ச் சொல் வட பாடைக்கட்செல்லாமையானும், வடசொல் எல்லாத் தேயத்திற்கும் பொது வாகலானும்" என்று ஒருவழிச் செலவு கூறினார் சேனாவரையர். தமிழ்நூல் ஒன்றே வல்ல உரையாசிரியர்கள் உரை உரையாகா எனவும் வடநூல் உணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்கா எனவும் ஊறும் வீறும்பட உரைத்தார் சிவஞான முனிவர். வடமொழிக்கும் தமிழ் மொழிக்கும் இலக்கணம் ஒன்றே எனவும் தமிழும் திசைச் சொல்லேயாம் எனவும் பொதுமையும் திசைமையும் கண்டார் சுப்பிரமணிய தீக்கிதர். இவர் எல்லோரையும் விஞ்சு முகத்தான்,

"அன்றியும் ஐந்தெழுத்தால் ஒருபாடை யென்று
அறையவும் நாணுவர் அறிவுடை யோரே
ஆகையால் யானும் அதுவே அறிக"

என்று நாணப்பறை கொட்டினார் இலக்கணக் கொத்து சுவாமி நாத தேசிகர். தமிழைப் பழித்தான் தமிழ்வடுப் பெறுவான் என்பதற்கு இத் தேசிகப் பெருமகனே ஒரு கரியாவர். இவர் தம் முனைப்பு தொடர்வழுக்காயிற்று. யானும் **அதுவே** என்ற அஃறிணைப் பயனிலை பொருந்துமா? நாணுவர் அறிவுடை யோர், யானும் **அன்னன்** என்றன்றோ உயர்திணைப் பயனிலை பெற்றிருத்தல் வேண்டும்?

"நூலுரை போதகா சிரியர் மூவரும்
முக்குண வசத்தான் முறைமறந் தறைவரே"

என்ற அவர் குற்றச்சாட்டிற்கு 'யானும் அதுவே' என்ற அவர் தொடரே எடுத்துக்காட்டாகும். வடமொழியை உயர்த்தித் தமிழைத் தாழ்த்தும் முனைப்பினைப் பொறாத நாடகத்தந்தை சுந்தரனார் 'ஆரியம்போல் உலகவழக்கு அழிந்தொழிந்து சிதையா உன் சீரிளமைத் திறம்' என்று எதிர் முனைப்பில் தாய்த் தமிழினை வாழ்த்தினார்.

6. இடைக்காலத்து மேற்கண்டவாறு தோன்றி வளர்ந்த வடமொழி முனைப்பு தமிழிலக்கணக் கொள்கைகளையே மயக்கஞ் செய்வதாயிற்று.

"வடமொழி தமிழ்மொழி யெனுமிரு மொழியினும்
இலக்கணம் ஒன்றே யென்றே யெண்ணுக"

என்று இலக்கணக் கொத்தினர் இரு தேற்றேகாரம்படக் கூறுவது உண்மையாயின், ஒரே இலக்கணம் உடைய மொழி இரு மொழியாதல் எங்ஙனம்? வடமொழியைத் தெய்வமொழி எனவும் வடமொழிப் புலவோரைத் தெய்வப் புலவர் எனவும் தமிழிலக்கணிகளே பாராட்டுகின்றனர். அவ்வாறாயின் ஒத்த இலக்கணம் உடைய தமிழ் மொழியும் தெய்வமொழியாகவும் தமிழ்ப் புலவோரும் தெய்வப் புலவராகவும் பாராட்டப் பெறாமை ஏன்? அதுவும் ஒருபால் நன்றாயிற்று. தமிழ், மக்கள் மொழியாகவும் தமிழ்ப்புலவோர் மக்கட் புலவராகவும் இலங்கு வதையே நாம் விரும்புகின்றோம். அதுவே வாழ்வுக்கு உயிரியல்.

மேற்சுட்டியாங்கு இடைக்கால இலக்கண வரலாற்றில் சில இலக்கணிகளாலும் சில உரையாளிகளாலும் தமிழுக்கு விளைந்த அவமதிப்பு பொறுக்கத்தக்கதன்று; அன்னோர் வழியினர் இன்றும் நம்மிடை வாழ்கின்றனர்; என்றாலும் நம் முன்னைப் பெருமக்களின் நூல்களைப் போற்றுவதும் கருத்துக்களைப் பாங்காக வரவேற்பதும் நம்மனோர் அறிவின் கடமை. இவ்வாறு அமைதி செய்து கொண்டு வீரசோழியத்தையும்

பிரயோக விவேகத்தையும் இலக்கணக் கொத்தையும் நாம் மதித்துத் தழுவிக் கொள்ள வேண்டும்.

7. வீரசோழியம் வடமொழி தமிழ் என்ற இருமொழிகளின் ஒப்பாய்வுக்குப் பெரிதும் துணையாகும் நூல். தமிழிலக்கண மாணவர் வடமொழியிலக்கண அறிவும் பெறுவது ஓரளவு இடைக்கால வரலாற்றுத் தாக்கத்தைக் காண உதவுமன்றோ? கற்பவர்க்குத் தமிழ் முதன்மையோடு இருமொழியறிவும் பன்மொழி யறிவும் உலக வளர்ச்சியில் வேண்டியன என்பதில் ஐயமில்லை. நம் தமிழோடு முதலுறவு பெற்ற அயன்மொழி வடமொழி யாதலின், தொல்காப்பியர் வடசொல் வரவுக்கு வரம்பு கோலினர். இணைத்து ஒத்திட்டு ஆராய்வதற்கு வீர சோழியம் இருமொழிப் பாடநூலாகக் கருதலாம். பிரயோக விவேகமும் அதன் உரையும் பகுத்தறிந்து படிக்கக் கூடிய பல்வேறு குறிப்புக்கள் உடையன. இவ்விரு நூல்களையும் ஒப்பறிவுக்காகப் பயில்வதனால், தமிழின் தனித்தன்மையையும் வடமொழியின் செயற்கையையும் நாம் உணர முடியும். எதிர் காலத்தில் எவ்வாறு தமிழின் இலக்கணம் அமைய வேண்டும், அமைக்க வேண்டும் என்று தெளிவு பெறவும் இயலும். இடைக் காலத்து வலிந்து புகுத்திய விதிமுரண்களும் அவற்றால் உண்டான மதிப்பிழப்பும் மீண்டும் நுழையாவாறு அரண் செய்யவும் இயலும். ஒப்பாய்வுக்கும் தற்காப்புக்கும் இவ்விரு நூல்களும் பயன்படும் என்பது என் கருத்து.

மூன்றாவதான இலக்கணக் கொத்தோ பாயிர நூற்பாக் களிற் சில அடிகளை யொதுக்கிவிடின், நல்ல இலக்கணப் புதுமை கொண்ட நூல் என்பதைப் பலரும் ஒப்புவர். இவர் பாயிரத்திற் காட்டிய தமிழ்வெறுப்பு, நூல் வெறுப்பாக முடிந்தது. சொல்லிலக்கண வரலாற்றில் புதியனவாகக் கண்டன வற்றைத் தேனீப் போலத் தொகுத்து அரிய காட்டுக்களை வழங்கி உரிய விளக்கங்களைச் சுருங்கச் சொல்லுகிறார் சுவாமி நாத தேசிகர். இவர்தம் நூற்பாக்களும் உரைகளும் நுண் மையன. கற்பவர்க்கும் படைப்பவர்க்கும் வழிகாட்டு உத்தி களும் புதியனவே.

“வேற்றுமை யுருபுகள் அல்லா தனவும்.
வேற்றுமை யுருபுகள் போல்வெளிப் படுமே” *(19)*

“இதுவிதி யிதுமறை யென்னப் படாசில” *(75)*

என்ற நூற்பாக்கள் பெண்ணை வளர்த்தான் என்ற தொடர் மயக்கத்தையும் போ வா என்ற சொன்னிலைகளையும் நன் முறையில் தெளிவிக்கின்றன. இன்னணம் தெள்ளிது செய்யும் பூங்கொத்து மணப்பது இலக்கணக் கொத்து. ஆதலின் மாணவர்தம் நுண்மாண் நுழைபுலம் வளரக் கற்றாக வேண்டிய நூல் இது என்று சுட்டிக் காட்டுவன்.

8. என் முதன்மையுரையில் இறுதியாக நான் அறிமுகப் படுத்த விழையும் ஓர் இலக்கணம் உண்டு. அதுதான் புலவர் சரவணத் தமிழன் 1972 இல் இயற்றிய ‘தமிழ் நூல்’ என்ற படைப்பாகும். இஃது ஏழியலும் *433* நூற்பாவும் உடையது. வைத்தியநாத தேசிகர், சுப்பிரமணிய தீக்கிதர், சுவாமிநாத தேசிகர் போலச் சரவணத் தமிழன் தாமே உரையெழுதிக் காட்டியுள்ளார். மொழியின் கால வளர்ச்சி காட்டும் சில புதுவிதிகளை இந்நூலிற் காணலாம். இடைக்காலத்து வட மொழித் தாக்கம் இருந்தமையால், இலக்கணங்கள் இன்ன வட வொலி இன்ன தமிழொலியாக வரல் வேண்டும் என்று வடமொழியாக்கம் கூறின. இரு நூற்றாண்டாக ஆங்கிலத் தாக்கம் வளர்ந்து வருதலின், ஆங்கிலச் சிறப்பொலிகளும் தமிழ்மை பெறும் முறைகளை இந்நூல் குறிக்கின்றது.

9. தொல்காப்பியம் முதலான முன்னூல்களில் எழுத்தின் வரிவடிவு பற்றிச் சீரான குறிப்புண்டேயன்றி விரிவில்லை. வரிவடிவம் காலந்தோறும் கைதோறும் கருவிதோறும் மாறு படும் எனக்கருதி முன்னையோர் கருத்தூன்றவில்லை. அறுவகை யிலக்கணம் இயற்றிய தண்டபாணி சுவாமிகள் ஒவ்வோர் எழுத்துக்கும் உவமைபட வரிவடிவம் தீட்டிக் காட்டுவர். சரவணத் தமிழன் வரிவடிவு கூறுவதோடு நில்லாது எழுத் தினைக் குறைத்தலும் திருத்தலும் ஆக எழுத்துச் சீர்திருத்தம் பற்றி விதியும் அறிவுரையும் பகர்வர்.

"எதிர்கா லத்தின் முதிர்கோ லத்தில்
ஐஔ என்னும் உயிரும் அதன்வழி
உயிர்மெயும் அற்றுப் போதல் ஒக்குமே" (41)

என இருநெட்டெழுத் தொழிப்பினை வேண்டுவர். அச்சும் தட்டச்சும் பச்சைச் சிறுவர் பயிற்சியும் உட்கொண்டு, பல்வகை வடிவுத் திருத்தம் விளம்பக் காண்கின்றோம். அயல் மொழிப் பெயர்களை ஆளும்போது, மொழிமுதல் மொழியீறு மொழியிடை விதிகள் மாறலாம் என்பது இவர் கருத்து. சரவணத் தமிழனை நன்கு மதிக்கும் தேவநேயப் பாவாணர்,

"வடமொழி யெழுத்துத் திரிபைக் கூறும் பகுதி தமிழின் தூய்மையைப் போற்றலோடு முரண் படுதலின் அது கொள்ளத் தக்கதன்று. தமிழெழுத்து வரிவடிவு மாற்றமும் தமிழுக்குத் தேவையில்லை"

என்று தம் மதிப்புரையில் மறுத்துக் கூறியிருப்பதை நான் உடன்படுகின்றேன்.

ஒருவள், ஆவது, ஒருக்கால், செய்யா முன், ஆனால், தோறும், பச்சை, பேடன் பேடி, ஏடன் ஏடி, அடா அடி, சும்மா, சரி, ஊம், ஆம் என்பவை பற்றி வரும் இலக்கணங்கள் புதியனவாம். ஊர்ப்பெயர் மருவல், திருமண அழைப்பிதழ், முகவரி முறை, நாளிடல், முன்னெழுத்து, பாய் கீய் எதிரொலி, நிறுத்தக் குறிகள் இவை குறித்த புதுவிதிகளும் உள.

பழைய எடுத்துக்காட்டுக்களைத் திரும்பக் கூறாது காலம் தெரிவிக்கும் புதிய காட்டுக்களை இந்நூலிற் பரக்கக் காணலாம்.

அ) உலகம் அறிவியலில் விரைந்து ஏறுகின்றது
ஆ) சோவியத்து நாடே பொதுமை ஆட்சி சான்றது
இ) ஞாயிறு தோறும் விடுமுறை
ஈ) மறைமலையடிகளார் மகளார் நீலாம்பிகையார்
உ) இந்தியப் பெருநாடு உலகரங்கத்தில் உரிய மதிப்புப் பெறவில்லை
ஊ) மணிவாசகர் செய்த திருவாசகம் தேன்கூடு

10. தமிழ்நூல் என்னும் இப் புத்திலக்கணம் ஏனை இலக்கண நூல்களிலும் கருத்துச் செறிவால் பாராட்டத்தக்கது என்றாலும் முன்னை இலக்கணங்களிற் காண வியலாத புதிய கேடுகளும் புகுந்துள என்று சுட்டிக் காட்ட விரும்புகின்றேன். வீரசோழியத் தாக்கத்தொடு ஆங்கிலத் தாக்கமும் நிரம்ப வுண்டு. நிலையான கன்னிச் செந்தமிழுக்குப் பொருந்தாத ஒலி விதிகளும் தொடர் விதிகளும் உள. தமிழை எப்படியும் எழுதலாம், பேசலாம் என்ற விதிநெகிழ்ச்சி பெரிதும் இருக்கலாமா? நூற்பா அமைப்புக்களும் தமிழ்மை குறைவாக உள. முன்னைப்பனுவல் எல்லாம் தமிழின் மொழி முதலிடை இறுதி நிலையமைப்பையும் ஒலிப் பண்பையும் ஒலித் தொடரையும் அடிப்படை யறை போகாது காத்திருப்பவும், இத்தமிழ் நூலுடையார் நல்ல தமிழ்ப்பற்றாளராக இருந்தும் அடிப் படையைக் காற்றில் பறக்க விட்டது கனவினும் இன்னாது.

"ஹய வரிமுன் வரின்மெய் கெடுமே" *(373)*

"ஜவை யசவால் ஷவை சடவால்
ஸவை சசுவால் ஹவை அகவால்
க்ஷவை க்கட்ச இவற்றால் மாற்றுக" *(371)*

இங்ஙனம் நூற்பாவிற்குள்ளேயே அயலொலியை வைத்துப் பாடுதல் மரபுமன்று, மாண்புமன்று. "முதலொற்று இரட்டிக்கும் முப்பத்தொன்று எய்திடின்" (58) என்று வீரசோழியமும், "எட்டே யவ்வும் முப்பது சயவும்" (147) என்று நன்னூலும் எண் சுட்டி அயலெழுத்துக்களைக் கூறும் மரபினைக் காண்கின்றோம். புதுமைகள் தழுவும் போது பழைய நன்மரபுகளை மறவாது போற்ற வேண்டும். இன்றேல், தமிழ்க்காப்பு சாணேற முழம் வழுக்கிய கதையாகி விடும்.

"அரசித் தமிழோ டுரசிக் கலந்த
அயன்மொழி ஏதும் அருமைப் புணர்ச்சித்
திறமுறல் இன்மையான் தமிழொலி சிதைந்த
புணர்முறை பொதிந்த இந்நாள் மிக்க
புணர்வகை எல்லாம் பொருந்தக் கொளலே" *(261)*

என்ற நூற்பாவும் அதன் கீழ்வரும் காட்டுக்களும் அன்ன பிறவும் பொருந்துமாறில்லை. இத்தகு விதி நெகிழ்வுகள் பண்ணுறத் தெரிந்தாய்ந்த பசுந்தமிழை- இலக்கணத்தின் வரம்பால் காலனுமன் வாய்ப்படாத குமரித் தமிழை - எளிதாகச் சிதைத்து விடும். இவர்தம் உரையில் வரும் பல இலக்கணக் கொள்கைகள் மேலும் நெகிழ்வைத் தூண்டுகின்றன. புலவர் சரவணத் தமிழனாரின் இனிய புதிய முயற்சியையும் ஏற்ற தமிழாக்கத்தையும் உள்ளன்போடு வரவேற்கும் என் நெஞ்சம் உறுங்கவலையை மறைக்க இயலவில்லை.

*11.* அறிவியலும் பொதுவியலும் தொடர்பியலும் உலகளாவிய பரப்பில் கணந்தோறும் பெருகும் இந்நாளில், தொன்மையான தூய்மையான தமிழ்மொழிக்கு நெறிவழிப் பட்ட பல நோக்குப் புத்திலக்கணப் படைப்புக்கள் பெருந் தேவை. இப்படைப்புக்கள் மொழிக்காப்புக்கும் மொழி வளர்ச்சிக்கும் மொழி நிலைபேற்றுக்கும் தமிழினத்துக்கும் இன்றியமையாதவை. இப்படைப்புச் செய்யுங்கால், தமிழ் மொழியைத் தமிழ்மொழியாகவே வைத்தும், தமிழ் மொழி யாகவே வைக்கவும் செய்ய வேண்டுமேயன்றி, கண்டன கலந்து வேற்றுமொழி யாக்கி விடக்கூடாது. வேரும் நரம்பும் வரம்பும் கெடாதபடி உரமிட்டுத் தண்ணீர் பாய்ச்சவேண்டுமேயன்றி அவியுமாறு வெந்நீர் கொட்டுதல் கூடாது. தமிழுக்கு நல்ல பற்றிலக்கணம் வேண்டும். வளர்வது போல் அணுவழிக்கும் அயற்புற்றிலக்கணம் வேண்டாம். இதுவே எதிர்காலத் தமிழிலக்கணப் படைப்பியின் குறிக்கோள்.

# அவிநயம் - ஓர் அறிமுகமும் ஒரு மானுடவியல் விளக்கமும்

டாக்டர் க. ப. அறவாணன்

தமிழில் எழுத்து, சொல், பொருள் ஆகியன, பிற்கால இலக்கிய வழக்காறுகள் பெருகப் பெருக மேலும் விரிவடைந்தன. புதிய வளர்ச்சிகள் புதிய விதிகளாக இடம் பெற்றன. கி.பி. 10-ஆம் நூற்றாண்டுக்குப்பின் எழுந்த பல இலக்கண நூற்களில் காணப்படும் புதிய செய்திகளின் உரிமையாளர்கள் அந்தந்த நூலாசிரியர்களே என்று கருதப்பட்டார்கள். அவிநயம் என்ற நூல் பற்றிய செய்திகள் தெளிவாகும் வரை அவிநயம் என்ற நூல் மறைந்து போன நூலாக அமைந்தது, மேற்கண்ட பிழையான எண்ணத்திற்குக் கருவாகி விட்டது. பவணந்தி, ஐயனாரிதனார், நாற்கவிராச நம்பி ஆகியோர் கூறும் புதுச் செய்திக்கு விதைவிட்டவர் அவிநயனார் என்பது தற்போதைய அவிநய ஆய்வால் புலனாகிறது. மறைந்துபோன நூலாகக் கருதப்பட்ட அவிநயத்தின் நூற்பாக்களைப் பலவேறு உரையாசிரியர்கள், யாப்பருங்கல விருத்தி, யாப்பருங்கலக்காரிகை உரை, நேமிநாத உரை, வீரசோழிய உரை, நன்னூல் மயிலைநாதர் உரை, சங்கர நமச்சிவாயர் உரை, தக்கயாகப் பரணி உரை, நவநீதப் பாட்டியல் உரை, பன்னிரு பாட்டியல் உரை, திருக்குறள் நுண்பொருள் மாலை உரை ஆகியவற்றிலிருந்து திரட்டி 1975-ஆம் ஆண்டு அவிநயம் முதல் பதிப்பு இந்தக் கட்டுரை ஆசிரியனால் பதிப்பிக்கப்பட்டது.

அவிநயனாரின் நூல் அவிநயம் என்ற நூல் ஒன்றே என்று கொள்ளப்படும் கருத்து பிழை. அவரால் எழுதப்பட்ட நூற்கள் ஐந்து ஆகும்.

1. அவிநயம் - எழுத்து, சொல், பொருள் அடங்கியது.
2. அவிநயனார் யாப்பு - யாப்பதிகாரத்தை மட்டும் உள்ளடக்கியது.

3. அவிநயப்புறநடை அல்லது நாலடிநாற்பது – அவிநயனார் யாப்பிற்குப் புறநடை நூலாக 40 வெண்பாக்களில் எழுதப் பட்டது.

4. அவிநயனார் கலாவியல் – பாட்டியல் நூல்

5. பன்னிரு படலம் – புறப்பொருள் பற்றியது; காஞ்சிப் படலத்தை அவிநயனார் எழுதி இருக்கக் கூடும்.

**அவிநயனாரின் காலம்**

யாப்பருங்கல உரையாசிரியராகிய குணசாகரர் அவிநய நூற்பாக்களை மிகுதியாக மேற்கோள் காட்டுவார். யாப்பருங் கலத்தின் காலம் 1015 – 1040 ஆகும். எனவே இக்காலத்திற்கு முற்பட்டவர் அவிநயனார் என்பது தெளிவு. அவிநயனார், உலா விற்கு இலக்கணம் கூறுகிறார் (121). தமிழில் முதல் உலாவாகிய ஆதி உலாவின் காலம் கி.பி. 825-826. இலக்கியம் தோன்றியே இலக்கணம் எழுதுதல் தமிழ் மரபு. இம்மரபை ஒட்டிப் பார்ப்போ மேயானால் அவிநயனார் ஆதி உலாவின் காலத்திற்குப்பின் தோன்றி இருப்பார். எனவே இவரது காலம் கி.பி. 9-ஆம் நூற் றாண்டு. சூழலும் அவிநயனார் காலம் கி.பி. 9-ஆம் நூற் றாண்டை ஒட்டியதாக இருக்கும் என்று உய்த்துணர வைக்கிறது. அவிநயனார் ஜைனர். கி.பி. 5-ஆம் நூற்றாண்டு முதல் ஒடுக்கப் பட்டு வந்த ஜைனம், சோழர்களின் பிற்கால எழுச்சிக்குப் பின்புதான் சோழர்கள் பின்பற்றிய சமயப் பொதுமை காரணமாக ஓரளவு தமிழ் நாட்டில் அனுமதிக்கப்பட்டது. எனவே பிற்காலச் சோழர்களின் எழுச்சிக் காலமாகிய 9-ஆம் நூற்றாண்டு அவிநயனாரின் காலமாக இருக்கும் என்று ஊகிக்கலாம்.

சோழர்கள் காலத்தில் தமிழ்மொழி பண்பாடு நாகரிகம் இவை புத்தெழுச்சி பெற்றன. பல்லவர் காலத்தில் இருந்த சமசுக்கிரதப் பெயர்களைப் போற்றும் மரபு, பிற்காலச் சோழர்கள் காலத்தில் மெல்ல மறையத் தொடங்கியது. பரணர், கபிலர், ஔவை, சாத்தன் என்று பெயர்களை வைத்துக் கொள்ளலாயினர். தொல்காப்பியர் என்ற பெயரும் இவ்விடைக்காலத்தில் எழுந்தது. பண்டைய தொல்காப்பியத்து இல்லாத பொதுவியல் திணை

புறப்புறத் திணை என்பவற்றைத் தொல்காப்பியர் எழுதினார் என்று யாப்பருங்கல விருத்தியுரை குறிக்கின்றது. இவற்றை எழுதியவர் இரண்டாவது தொல்காப்பியராகவே இருத்தல் வேண்டும். நவநீதப் பாட்டியல் உரைகாரரும் விலங்கின் கதி நரக கதி என்ற இரண்டைக் குறிப்பிட்டதாக எழுதுவர் (21). பாட்டியல் கோட்பாடாகிய 'கதி'யை எழுதியவர் பிற்காலத் தொல்காப்பியராகவே இருப்பார். நேமிநாத உரைகாரர் ''தொல்காப்பியர் அவிநயனார்'' என்றும் (எழு. 23, சொல். 24) யாப்பருங்கல விருத்தி உரையாசிரியர் ''தொல்காப்பிய அகத்தியம் உடையார்'' என்றும் (பக். 571) குறிப்பர். தொல்காப்பியர் உள்ளிட்ட அகத்திய மாணாக்கர் பன்னிரண்டு பேர்களால் பன்னிரு படலம் என்ற புறப்பொருள் நூல் எழுதப்பட்டதாக இளம்பூரணர் உரையும், புறப்பொருள் வெண்பாமாலையும் குறிப்பிடும். இக்குறிப்புகள் அனைத்தையும் ஒருங்கு வைத்து நோக்கின் அகத்தியர், தொல்காப்பியர், பன்னிருமாணாக்கர் ஆகியோர் வரலாறு, கிட்டத்தட்ட கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டினது என்று உய்த்துணரலாம். பன்னிருவர் பட்டியலுள் இடம் பெற்றுள்ள அவிநயனார் காலமும் இக்கருத்தில் பொருந்தி வருகிறது. கி.பி. 8-ஆம் நூற்றாண்டினதான அருங்கலச்செப்பு என்ற சைன நூலில் 'அவிநயம்' என்ற பெயர், மும்முறை இடம் பெற்றுள்ளது (39, 40, 42). எனவே இக்குறிப்பும் இவர் காலத்தைக் கி. பி. ஒன்பதாகக் குறிக்கலாம் என்று உணர்த்துகிறது.

**அவிநயனார் என்ற பெயர்**

ஜைன தத்துவத்தில் நவபதார்த்தங்கள் என்பனவே அடிப்படை அலகுகள். நவபதார்த்தங்களின் உண்மையைத் தெரிந்து கொள்வது நல்லறிவு ஆகும். இவற்றின் தன்மையை ஐயமின்றி உணர்ந்து நம்புதல் நற்காட்சி ஆகும். நல்லறிவு, நற்காட்சி என்ற இரண்டையும் ஒரு தன்மையனவாகக் கொண்டு ஒழுகுவது நல்லொழுக்கம் ஆகும். இம் மூன்றையும் 'மும்மணி' என்பர் ஜைனர். மும்மணிகளுள் ஒன்றாகிய நற்காட்சியை அடையத் தீக்குணங்கள் அகலுதல் வேண்டும். இத்தீக்குணங்களே, 'அவிநயம்' என்று ஜைனத்தில் சுட்டப்படும்.* இப்பெயரை ஒட்டி இவருக்கு இப் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

* ஐந்து மூட நம்பிக்கைகள் = மித்யாத்வம் (1) ஏவாந்தம் (2) விபரீதம் (3) விநயம்(4) சம்சயம் (5) அஞ்ஞானம்

ஜைன மரபில் 'விநயம்' எனக்கண்மூடி வணக்கங்கள் குறிக்கப் படும். கண்மூடி வணக்கங்கள் இல்லாமை அவிநயம் என்றும், இல்லாதாரை 'அவிநயன்' என்றும் குறிப்பர். அவிநயனார் என்ற பெயர், இவ்வடிப்படையில் தோன்றியது என்பது மிகப்பொருத்தம்.

அவிநயனார்வழி அறியலாகும் முதன்மைச் செய்திகள்

கிடைத்த 130 நூற்பாக்கள் வழி, அவிநயனார் அறிவிக்கும் செய்திகளுள், முதன்மையானவை வருமாறு:

1. தமிழில் சார்பெழுத்துக்கள் 228
2. குற்றியலுகரம் ஏழு
3. சகர ஒற்று, அனைத்து உயிர்களின் மேலும் வரும்
4. 'கால' விகுதி, இருதிணை மேலும் வரும்
5. அகப்புறத்திணை என்ற பிரிவு
6. நூறு வண்ணங்கள்
7. உயிர் எழுத்துக்களின் ஈற்றிலும், மெய் எழுத்தின் தொடக் கத்திலும் ஆய்தம் இடம் பெறும்
8. ஆய்தத்தின் மாற்றொலி யகர மெய்
9. தமிழின் சிறப்பு எழுத்துக்களை முதன்முதல் பட்டியலாக் கியவர்

அவிநய உரை

இராசபவித்திரப் பல்லவதரையன் என்ற கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்த அரச மரபினர், அவிநயம் எழுதப்பட்ட காலத்திலேயே உரை எழுதி இருத்தல் வேண்டும். உரையாசிரியரின் பெயர், மயிலைநாதரின் நன்னூல் உரை (359) யால் புலனாகிறது.

தொல்காப்பியர்க்கும் நாற்கவிராசநம்பிக்கும் இடையே தோன்றிய அகத்திணை ஆசிரியர்களுள் இறையனாரும் (களவியல்), அவிநயனாரும் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்களுள் அவிநயனார் களவுமணம் பற்றி எழுதும் நூற்பா கவனத்துக்குரிய ஒன்றாகும். மாந்தவியல் பார்வையில் இவர்கூறும் நூற்பாச் செய்தி தனிப் பார்வைக்கு உரியது.

களவு என்றால் என்ன என்பதை விளக்கும் முகமாக அவிநயனார் பின்வரும் நூற்பாவை உரைத்துள்ளார்.

''மலறைய அவர்க்கு மாண்டதோர் இடத்தில்
மெய்யுறு வகையுமுள் ளல்ல துடம்படாத்
தமிழியல் வழக்கமெனத் தன்னன்பு மிகைபெருகிய
களவெனப் படுவது கந்தருவ மணமே''

(யா.வி. ஒழிபியல் 95. ப. 576.)

களவுக் காலத்தில் உடல்உறவு உண்டா? இல்லையா? என்ற விவாதத்தை மேற்கண்ட அவிநய நூற்பா எடுத்துக்கொண்டு களவுக்காலத்து உடல் உறவு உண்டு என்று முடித்திருக்கிறது. ஆணும் பெண்ணும் தாம் சந்தித்த தனிஇடத்தில்— யார் பார்வையும் படாத மறைவிடத்தில் தம் அன்பு மிகப் பெருகி மெய்யுறத் தழுவுவர். இதனைத் தமிழியல் வழக்கம் என்றும் களவு என்றும் கந்தருவ மணம் என்றும் குறிப்பர் என்பது நூற்பாவின் பொழிவு.

'உள்ளப்புணர்ச்சியும் மெய்யுறுபுணர்ச்சியும் கள்ளப் புணர்ச்சியுள் காதலர்க்குரிய' என்ற நாற்கவிராச நம்பியின் நூற்பா (அகத்திணை-34) அவிநயனார் கொடுத்த அடிப்படையில் எழுந்ததுவே ஆகும். ''பிறர் அறியாமை இருவரும் கரந்த உள்ளத்தராய்க் கூடுதலாக, களவியல் என்றது என்க'' (''பின் கற்பின் வழி நின்று விளங்குதலான் குற்றமின்று எனக்கொள்க'') என்ற தஞ்சைவாணன் கோவை உரையாசிரியர் குறிப்பும் இதனையே உறுதி செய்கின்றது.

களவில் உடலுறவு இருக்கக்கூடாது என்று இன்றைய அறவியல் பார்வையில் அன்றைய சமூகமுறையைப் பார்ப்பதும்

பார்த்து முடிவு உரைப்பதும் பிழை. உடலுறவு இருந்ததா இல்லையா என்பதை வரலாற்றுப் பார்வையோடும் மாந்தவியல் நோக்கோடும் பார்ப்பதுதான் முறை.

திருமணம் என்பது மனித இனவரலாற்றில் நிகழ்ந்த ஒரு பெரிய வளர்ச்சிக் கட்டமாகும். இந்த வளர்ச்சிக் கட்டத்தை அடைவதற்கு முன்பு திருமண முறை மனித சமூகத்தில் இல்லை. கூட்டமாக ஆணும் பெண்ணும் சேர்ந்து ஒழுகும் கூட்டத்திருமண முறையே பழங்காலத்தில் இருந்தது. இதனுடைய தேய்வாக ஒரு குடும்பத்துச் சகோதரர்கள் இன்னொரு குடும்பத்துச் சகோதரிகளை மணந்து கொள்ளும் முறை தோன்றியது. பெண்களின் எண்ணிக்கை குறைந்த நிலையில் பல கணவ முறையும் (பாண்டவர், தோடர் முதலானோர்) ஆண்களின் எண்ணிக்கை குறைந்த நிலையில் பல மனைவி முறையும் தோன்றின. திருமணத்தில் சமூகஇயல் உணர்வுடன் தார்மீக உணர்வு இடம்பெற்று மனித இனம் பண்பாட்டின் ஒரு சிறந்த கட்டத்தை எய்திய பொழுதே, ஒருவன் ஒருத்தி என்ற மணமுறை தோன்றி நிலைபெறத் தொடங்கியது.

முறைபாரா உறவு கொண்ட மனித இனம், திருமணம் என்ற அமைப்பின் மூலமாக ஒரு முறைக்குள் அடங்கியது எனினும் ஆதியில் திருமணச்சடங்கு எதுவும் இல்லை. குறிப்பிட்ட ஒருத்தியோடு சேர்ந்துவாழ்ந்தான். இவ்வாறு வாழ்வதில் பொய், ஏமாற்று முதலியன நேர்ந்தன. இந்தக் கட்டத்திலேயே திருமணம் என்ற ஒரு சடங்கு பெரியோர்களால் அறிமுகப்படுத்தப்பட்டது. இதனைக் கரணம் என்று தொல்காப்பியர் குறிப்பிடுவர்.

''பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
ஐயர் யாத்தனர் கரணம் என்ப''

(தொல்காப். கற். 1)

திருமணச் சடங்கு உள்ளிட்ட கற்பியல் மணமுறைக்கு முன்பு, சடங்கில்லாமல் பெண்ணைக் கவர்ந்து கடத்திச் சென்று களவு செய்து வாழ்ந்த திருமணமுறை பழம் சமூகத்தில் இருந்தது என்பதைப் பழங்குடி ஆராய்ச்சி காட்டுகிறது. நாகர்கள் என்ற திராவிட இனக் குழுவினரிடமும் இப்பழக்கம் இருந்தது. ஹோ

என்ற பழங்குடியினரிடமும் பெண்ணைக்கவர்ந்து சென்று வாழும் முறை, (Oportipi) ஒப்பேர்திபி என்று வழங்கப்பட்டது. திராவிட மொழிபேசும் கோண்டு (Gond) என்ற பழங்குடியினரிடம் 'பொசி ஒதர்' (posiothur) என்று பெண்டிரைக் கவர்ந்து செல்லும் முறை குறிக்கப்பட்டது. பலபோது, கோண்டு பழங்குடி இனத்தைச் சேர்ந்த பெற்றோர்களே மாப்பிள்ளைமாரையும் அவர்தம் பெற்றோர்களையும் கடத்திச் செல்லுமாறு (திருடிச் செல்லுமாறு) தூண்டுவார்களாம். மாப்பிள்ளைக் குழுவினர் பெண்ணைக் கடத்திச் செல்லும்போது பொய்ச் சண்டை (mock fight) நடக்கும். பெண் அந்தச் சமயத்தில் பொய்யாக ஒப்பாரிவைத்து அழ வேண்டும் என்று எதிர்பார்க்கப் படுவாள். முதுவன் என்ற திரா விடப் பழங்குடியினரிடமும் இப்பழக்கம் உள்ளது. மாப்பிள்ளை, தண்ணீர் அல்லது விறகு எடுக்கச் செல்லும் பெண்ணைக் கடத்திக் கொண்டு, காட்டுக்குள் ஓடிவிடுவான். சில நாட்கள் சென்று அவர்கள் தம்பதிகளாகத் திரும்புவர்.

உண்மையான கடத்தல் போலிக்கடத்தலாகிப் போலிக் கடத்தல் சில இடங்களில் சடங்குக் கடத்தலாக நிகழ்வதை வேறு சில பழங் குடி மக்களின் பழக்கங்கள் காட்டுகின்றன. கரியா (Kharia) பீர்தோர் (Bhirthor) என்ற பழங்குடி மக்களிடம் இத்தகு சடங்குக் கடத்தல் நிகழுகிறது. ஒரு பெண்ணை மணந்து கொள்ள விரும்பும் மணவாளன் சாதிலிங்கத்தை (vermilion) எண்ணெய் யுடன் கலந்து மணப்பெண்ணை ஒரு பொது விடத்தில் சந்திக்கும் போது நெற்றியில் வைத்துவிடுவான். அந்தப்பெண் அவனால் கடத்தப்பட்டாள் என்று பொருள்.

அஸ்ஸாம் மாநிலத்தில் ஓர் ஊராரே இன்னொரு ஊர்ப் பெண்ணைக் கடத்தி வருவதில் மாப்பிள்ளையுடன் ஈடுபடுவர். நடு இந்தியப்பகுதி மாநிலங்களில் ஊர்த் திருவிழாக்கள் நடக்கும் போது இத்தகு பெண் களவுகள் நடக்கும். உண்மையான குறும் போர் கூட, கள்ளையும் மதுவையும் அருந்திவிட்டு நிகழ்த்தப் பெறும். பின்பு குறும்போர் நிகழ்ச்சி பெரிதெனக் கருதப்படாமல் பெரும் விருந்து நடக்கும்.

வடஆர்க்காடு மாவட்டத்தில் ஏலகிரி ஜவ்வாது மலைப்பகுதிகளில் வாழும் மலையாளிகள் என்ற பழங்குடிகளிடம் பெண்ணைக் களவு செய்யும் பழக்கம் இன்றும் உள்ளது. முறைப் பெண்ணைக் கடத்திச் சென்றும் திருமணம் முடிக்கலாம் என்ற தமிழகச் சிற்றூர்களில் இன்றும் உள்ள பழக்கம், பழைய களவு நிகழ்ச்சிகளின் தேய்வே ஆகும். விவாகம் என்ற (இந்திச்) சொல்லின் சொற்பொருள் 'கடத்திச் செல்லுதல்' என்பதே ஆகும்.

ஆப்பிரிக்காவில் சில்லுக் (Shilluk) என்ற இனக்குழுவினர் வாழ்கிறார்கள். திருமணத்தின்போது மாப்பிள்ளை மணப்பெண்ணின் விலையாகப் பத்துப் பசுக்களை மாமனார் வீட்டிற்குக் கொடுக்க வேண்டும். தொடர்ந்து மாமனாருக்கும் மாமியாருக்கும் பலவகை உணவுப் பொருள்களைப் பரிசளிக்க வேண்டும். சிறிது காலம் சென்ற பின் மாப்பிள்ளை பெண்ணை அழைத்துச்செல்ல வேண்டும் என்பர். அப்போது இருவீட்டாருக்கும் இடையே குறும்போர் நிகழும். அதன்பின்புதான் பெண், மாப்பிள்ளையால் கடத்தப்படுவாள்.

திங்கா (Dinka) என்ற ஆப்பிரிக்க இனக்குழுவிடம் வேறொரு வியப்பான வழக்கம் உள்ளது. பெண் வீட்டின் பின்சுவர் துளை இடப்படும். அத்துளையின் வழியாகப் பெண் கடத்தப்படுவாள். அப்போது இருவீட்டாருக்கும் பொய்ச் சண்டை நிகழும்.

கென்யாவில் வாழும் கிகியூ (Gikuyu) என்ற இன மக்களிடம் பெண் களவு ஒரு சாதாரண பழக்கமாகும். மாப்பிள்ளையின் விருப்பத்திற்கிணங்க இரு குடும்பத்தினரும் கூடுவர். திருமணநாள் நிச்சயிக்கப்படும். திருமணநாளைப் பெண் அறியாதவாறு இரகசியமாக வைத்திருப்பர். மணநாள் அன்று, மாப்பிள்ளையின் பெண் உறவினர்கள் பெண்வீட்டிற்கு வந்து சேர்வர். மணப்பெண்ணின் போக்குவரத்தைக் கவனித்துக் கொண்டே இருப்பர். அவள் ஒரு தோட்டத்துள் இருப்பாள், அல்லது விறகு பொறுக்கக் காட்டுக்குச் சென்றிருப்பாள்; அவள் இருக்கும் இடத்தை அறிந்த மாப்பிள்ளை வீட்டார் பெண்ணைக் கவர்ந்து தோளில் சுமந்து கொள்வர். அப்போது பெண் உரக்கச் சத்தம் போடுவாள்; அழுவாள். பெரும் கூக்குரல் எழுப்புவாள். (எல்லாம் நடிப்புக்குத்தான்) உடனிருக்கும் பெண்

டிரோ மகிழ்ச்சி ஆரவாரமிடுவர்; பாடுவர்; ஆடுவர். இதனை உண்மையான கடத்தல் என்றே அறியாது ஆங்கிலேயப் பயணிகள் எழுதிவிட்டார்கள்.

சில சமயங்கள் இருவீட்டுப் பெண்களுக்கு இடையே பெரிய பொய்ச் சண்டை நடைபெறும். பெண் கத்த, பெண் வீட்டார் கத்த பெண்ணைத் தோளில் சுமந்து கொண்டே மாப்பிள்ளை வீட்டார் மணமகன் வீடுவரை செல்வர். அதுவரை கூப்பாடும் சண்டையும் தொடரும். வீட்டைச் சேர்ந்த பின் பாட்டுக்கள் பாடப்பட்டுக் குலவை இடப்படும். பின்னர் பெரும் விருந்து தொடரும்.

உடன்போக்கு

பெண்களின் தொடர் நிகழ்ச்சிதான் உடன் போக்கு. பண்டைய சமூகத்தில் உடன் போக்கு ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்றாக இருந்தது. இதனைச் சங்க இலக்கியங்கள் காட்டுகின்றன. தொல்காப்பியம் காட்டுகின்றது. கொடுப்போர் கொள்வோர் இல்லாத திருமணம் உடன்போக்கு என்று சுட்டிக்காட்டுகின்றது தொல்காப்பியம் (கற்பியல்.2). பழங்குடி மக்களின் வாழ்க்கை, உடன் போக்கு நிகழ்ச்சியை மெய்ம்மைப்படுத்துகின்றது.

செஞ்சு என்ற பழங்குடியினர் கர்னூல், நெல்லூர் மாவட்டத்தில் வாழுகின்றனர். அவர்களிடம் உடன்போக்கு மணமுறை இயல்பாக உள்ளது. ஆடவன், தான் விரும்பும் பெண்ணை அழைத்துக் கொண்டு ஓடிவிடுவான். ஓர் இரவு, ஊரார் அறியாமல், சேர்ந்து இருந்து விட்டு ஊர் திரும்புவான். திரும்பும் இருவரையும், அவர்தம் பெற்றோர் மகிழ்வுடன் வரவேற்பர்; நண்பரை, உறவினரை அழைப்பர். உடன்போய் வந்த மணமக்கட்குப் புத்துடை நல்குவர்; மணவினை நிகழ்த்துவர்; மகிழ்வர்.

சோழகர் என்ற பழங்குடியினரிடமும் இப்பழக்கம் உள்ளது. உளமார விரும்பும் ஓர் ஆணும், பெண்ணும் ஒருநாள் காட்டுக்குள்ளே ஓடிவிடுவர். மூன்று நாட்கள், கானகத்துள் தங்கிக் களிப்பர். நான்காம் நாள் ஊரார் பறை அடித்து வரவேற்பர்.

வேறு பல இசைக்கருவிகளை இசைப்பர்: அனைவரும் திரளுவர்; கானகத்துள் செல்வர்; காதலரைத் தேடுவர்; செல்லும்போது பறைகளைப் பலரும் அடித்து முழக்குவர்; பல இசைக்கருவிகளை இசைப்பர். காதலர் இருவரையும் கண்டறிந்து மணம் முடிப்பர். மனம் களிப்பர்.

இன்றும் சில இனத்தாரிடம் காணப்படும் மாப்பிள்ளை குதிரையில் செல்வது போன்ற ஊர்வலமும், பெண்ணை மாப்பிள்ளை விட்டார் பேருக்குத் தோளில் சுமப்பது போன்ற சிறு சடங்கும் முற்காலத்தில் பெண்ணைக் குதிரையில் கடத்திச் சென்ற நிகழ்ச்சியையும், தோளில் சுமந்து கொண்டு கடத்திச் சென்ற நிகழ்ச்சியையும் குறிப்பாக நினைவு படுத்தும்.

களவு என்று தமிழ் இலக்கணங்களிலும் இலக்கியங்களிலும் காதல் சூழலில் ஆளப்படும் சொல்லைப் பெண்ணைக் கடத்திச் செல்லுதல் என்ற சொற்பொருளின் பின்புலத்தில் பார்த்தலே சமூக இயலுக்கும் மாந்தர்இயலுக்கும் பொருத்தமானதாகும்.

கற்பு என்ற திருமணச் சடங்குடன் கூடிய பின்நிகழ்ச்சிக்கு, முன் நிகழ்ச்சியாகக் 'களவு' 'களவியல்' ஆகியன விளக்கப் படுகின்றன. இவ்விளக்கம் இன்றைய பார்வையில் பொருந்தலாம்; இலக்கியப் பார்வையில் பொருந்தலாம். ஆனால் சமூகஇயல் பார்வையில் பொருந்தாது; காரணம் மிகப் பண்டைய நாளில் களவு அனைத்தும் கற்பியலின் முன் நிகழ்ச்சியாக இருந்ததற்கு வாய்ப் பில்லை. களவுக்கு ஒத்த பொருளுடையதாகக் களவியலில் சுட்டப்படுகிறது.

'அன்பின் ஐந்திணை களவெனப் படுவது
அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள்
கந்தருவ வழக்கம் என்மனார் புலவர்

(இறையனார் களவியல்1.)

அவிநயனாரும் (44) இவ்வாறே காந்தருவ மணத்துடன் இணைத்துக் காட்டுகிறார்.

காந்தருவ மணம் என்பது ஆரியத் திருமண முறை எட்டனுள் ஒன்றாகும். மனுஸ்மிருதியும், அர்த்த சாஸ்திரமும் வாத்சாயனரின் காம சூத்திரமும் காளிதாசரின்படைப்பும் காந்தருவ வழக்கத்தை எடுத்துக் காட்டியுள்ளன. தமிழ் இலக்கணியரும் களவு என்றும், யாழோர் கூட்டம் என்றும் போற்றி உள்ளனர். காந்தருவம் என்றால் என்ன? மனமொத்த இருவர் கூடும் கூட்டம். ஆனால் கூடிய இருவரும் மணம் முடித்தே தீர வேண்டும் என்பது கட்டாயமில்லை. எனவே ஒரு காலத்தில் களவு அனைத்தும் கற்பாகத் தொடர வேண்டும் என்று இல்லை. திருமணம் என்பது களவு என்ற அளவில் இருந்தது என்பது ஒரு கட்டம். பல காலம் வெறும் களவாகஇருந்த நிலை மாறி, வளர்ந்து திருமணம் என்ற சடங்கு தோற்றுவிக்கப்பட்டுக் கற்பு மணம் உருவானது மனித இயலின் பிறிதொரு காலமும் பிறிதொரு கட்டமும் ஆகும். இரண்டும் வேறு வேறுகாலத்தில் முகிழ்த்தவை. வேறு வேறு கட்டத்தில் தோன்றியன. எனவே கற்பின் முன் னிகழ்ச்சி களவு என்று ஒட்டு மொத்தமாகக் கூறுவதற்கு இடமில்லை. பல களவு மணங்கள் பொய்யாகவும் வழுவாகவும் போயிருக்கின்றன என்பதைக் காந்தருவம் என்ற வடமொழிப் பெயர்க்குறியீடு மட்டுமன்றிப் பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் என்ற தொல்காப்பியச் சூத்திரமும் உறுதி செய்கின்றது. எனவே களவின் பின்னிகழ்ச்சி கற்பு என்பதும் கற்பின் முன்னிகழ்ச்சி களவு என்பதும் ஒருபுடை பொருந்துவனவே தவிர முழுமையும் பொருந்துவன ஆகா.

புறத்திணைப் போர்முறைகளுள் முதலாவதாக இருக்கும் வெட்சிப்போர், பின்வரும் பெரும் போர்களுக்கு முன்னிகழ்ச்சி என்று விளக்கப்பட்டது. அவ்விளக்கம் சரியன்று. வெட்சி என்ற ஆனிரை கவரும் போர் முறை, முன்முறை என்பதனாலேயே புறப்போரில் முதலாவதாகக் கூறப்பட்டது. முன்னிகழ்ச்சி என்பது அன்று; காலப்பழமை என்பதாலேயே முன் கூறப்பட்டது என்பது அண்மை ஆராய்ச்சியின் முடிபு. இதனைப்போலவே களவு என்பதைக் கற்பு என்ற திருமண நிகழ்ச்சியின் முன் நிகழ்ச்சி என்று கொள்வது பிழை. பழங்காலத் திருமண முறை என்பது கருதியே முதலில் கூறப்பட்டது என்பதே முறை.*

*க.ப. அறவாணன்-அற்றைநாட் காதலும் வீரமும் பக். 236-37

அவிநயம் உள்ளிட்ட இலக்கண நூல்களும், சங்க இலக்கியப் பாக்களும் களவுபற்றிப் பேசுவது திருமண உறவில் மூன்றாம் கட்டம் அல்லது மூன்றாம் காலப் போக்கு என்று கருதுதல் வேண்டும்.

1. சமூகத்தில் பெண்ணைக் களவாடுவது உண்மையான களவாகவே இருந்த நிலை முதல் நிலை; முதல் கால கட்டம்.

2. களவு, பொய்ச்சண்டையாகவும், வெறும் சடங்காகவும் மாறிய நிலை, இரண்டாவது கால கட்டம்.

3. களவு என்பது தனக்குரிய சொல் நிலையிலும், பொருள் நிலையிலும் தேய்ந்து காதல் என்ற நிலைக்கு (Human Love) மாறியது மூன்றாவது கால கட்டம்.

இந்தக் கால கட்டத்தையே சங்க இலக்கியப் பாக்களும் அக இலக்கியத் துறைகளும் குறிக்கின்றன. எனினும் களவு என்ற சொல்லின் உண்மையான சொற்பொருளை மனித இயல் பார்வையோடு அறிவதற்கு அவிநயனார் அகத்திணை நூற்பா, குறிப்பு நல்குகிறது.

துணை நூற்பட்டியல்


1. K.P. Saravanan — 'Anthropological Studies on the Dravidio fricans' 1986 September
2. John Lewis — 'Anthropology' - made simple-1961
3. Krishna Iyer. L.R., Bala Ratnam. K. — Anthropology in India-1961
4. Majumdar L.N., Madan. T.N. — An Introduction to Social Anthropology 1973
5. Thurston. B. — Ethnographic Notes in Southern India-1975.

# காக்கை பாடினியம்

இரா. இளங்குமரன்

தேனும் பாலும் ஊட்டி, ஊனும் உயிரும் கலந்த இன்ப அன்பால் தம் மகாரைப் போற்றும் தெய்வத் தாய்மார்பலர், இலக்கியப் பயிரையும் பேணி வளர்த்தமையைச் சங்க இலக்கியம்[1] நன்கு விளக்குகின்றது. அத்தாய்மாருள் ஒருவர், இலக்கணப் பயிரையும் இனிது வளர்த்ததைக் காக்கை பாடினியம் கைம்மேல் கனியாகக் காட்டுகின்றது.

## நூல் நிலை

காக்கை பாடினியம், இப்போது இல்லை[2] என்றும், 'மறைந்து போனது' [3] என்றும் முடிவு செய்யப்பெற்ற நூல். யாப்பருங்கல விருத்தியுரையார் திருவருளால், பெரிதும் சிதைவிலா முழு நூலாகக் கிடைக்கப்பெற்றுத் தமிழுலகில் நடைபெறுகின்றது.

## நூலளவு

காக்கை பாடினியார் நூற்பாக்கள் எனத் தெரிந்தவற்றை எல்லாம் ஒருங்கமைத்துப் பார்க்க, அவர் யாப்பிலக்கணம் மட்டுமே செய்தார் என்பது வெளிப்படுகின்றது[4]. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பா, இனம், ஒழிபு என அந்நூற்பாக்களை அடைவுசெய்து நோக்க, தொடைகளுள் சிலவற்றுக்கும், நேரிசை ஆசிரியப்பா, ஆசிரியத் தாழிசை, குறட்டாழிசை முதலியவற்றிற்கும் மட்டுமே அவர் நூற்பாக்கள் கிட்டிற்றில. இவற்றை, 'முன்னோர் மொழியைப் பொன்னேபோற்போற்றுதல்' என்னும் முறைமைப்படி இயைக்கக் காக்கை பாடினியம் 89 நூற்பாக்களில் 233 அடிகளால் இயல்கின்றது. இவற்றுள் காக்கை பாடினியார் வாக்காக அமைந்த நூற்பாக்கள் 76; இவற்றின் அடிகள் 216.

தொகுத்தல்

தொகுத்தல், விரித்தல், தொகைவிரி, மொழிபெயர்ப்பென வழிநூல் வகை நான்கு கூறுவார் தொல்காப்பியர்[5]. தொகுத்தல், விரித்தல், பகுத்தல் என மூவகையாக நூல்களைச் சுட்டுவாரும் இருந்தனர். அவர், காக்கைபாடினியார் தொகுத்துரைத்ததாகக் குறிப்பர்.[6] அது,

''தொல்காப்பியப் புலவோர் தோன்ற விரித்துரைத்தார்;
பல்காயனார் பகுத்துப் பண்ணினார் - நல்யாப்புக்
கற்றார் மதிக்கும் கலைக்காக்கை பாடினியார்
சொற்றார்தம் நூலுள் தொகுத்து''

என்பது.

யாப்பு நூல்

காக்கை பாடினியார் யாப்பிலக்கணம் ஒன்றுமே செய்தார் என்பதும் அந்நூல் கற்றார் மதிக்கும் கவினுடையதாக இருப்பது என்பதும் அவர் கலைநலஞ் செறிந்த காரிகையார் என்பதும் ''நல்யாப்புக் கற்றார்மதிக்கும் கலைக்காக்கை பாடினியார்'' என்பதால் சுட்டினாராம். ஆசிரியர் தொல்காப்பியனார்க்கும், பல்காயனார்க்கும் தொடைநலம்பட அடைமொழி சுட்டாது, காக்கை பாடினியாரை இங்ஙனம் விதந்துரைத்தற்கு ஒரு காரணம் இருத்தல் வேண்டுமன்றோ! அது, யாப்பருங்கலம் யாப்பருங்கலக் காரிகை ஆகிய நூல்களுக்கு முந்து நூலாக இருந்தமையேயாம். அதனை மேலே காண்போம்.

அகத்தியர் மாணவர்

'அகத்தியனார் மாணவர் பன்னிருவர்'[7] என்றும், 'அவருள் தலையாயவர் தொல்காப்பியனார்' என்றும்' 'அவர்தம் ஒருசாலை மாணவர்களுள் காக்கை பாடினியாரும் ஒருவர்'[8] எனறும், பிற்கால நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் பரக்க உரைக்கின்றனர். ஆனால், இக்குறிப்புகட்குத் தொல்காப்பியத்திலோ பனம் பாரனாரால் பாடப்பட்ட தொல்காப்பியப் பாயிரத்திலே எச்சான்றும் இல்லை,

இலக்கண நாற்கூறு

தொல்காப்பியம், ''எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச் செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு, முந்துநூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலந்தொகுத்த போக்கறு பனுவல்[9]'' ஆகும். அதனால், அக்காலத்தில் இயற்றமிழ் இலக்கணம் எழுத்து சொல் பொருள் என்னும் முக் கூறுபடவே இயங்கியதாம். அவர்க்குப் பின்னே செய்யுளியலை மட்டும் வாங்கிக்கொண்டு, அதனைத் தனி அதிகாரமாக்கி 'யாப்பதிகாரம்' எனப்பெயர் சூட்டி இயற்றமிழ் இலக்கண முக் கூறுகளை நாற்கூறுகள் ஆக்கினர்.

இதனை, ''இனி நாடு நாடாயிற்றாகலின் நூல் வல்லாரைக் கொணர்க என்று எல்லாப் பக்கமும் ஆட்போக்க எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் யாப்பதிகாரமும் வல்லாரைத் தலைப்பட்டுக் கொணர்ந்து 'பொருளதிகாரம் வல்லாரை எங்கும் தலைப் பட்டிலேம்' என்று வந்தார். வர, அரசனும் புடைபடக் கவன்று, என்னை, எழுத்தும் சொல்லும் யாப்பும் ஆராய்வது பொருளதி காரத்தின் பொருட்டன்றே; பொருளதிகாரம் பெறேமேயெனின் இவை பெற்றும் பெற்றிலேம்'' எனவரும் இறையனார் களவியல் உரையானும்,[10]

''நாட்டியல் வழக்கம் நான்மையிற் கடைக்கண்
யாப்பின திலக்கணம் அறைகுவன் முறையே''

எனவரும் சிறுகாக்கை பாடினியார் நூற்பாவானும் அறியலாம்.

''கூறிய குன்றினும் முதனூல் கூட்டித்
தோமின் றுணர்தல் தொல்காப் பியன்தன்
ஆணையில் தமிழறிந் தோர்க்குக் கடனே''

என்பது பல்காப்பியப் புறநடை. இதனால், தமிழ்இலக்கணம் கூறும் நூல்கள் தொல்காப்பிய நெறியில் இயல்வன என்றும், இயலவேண்டும் என்றும் பல்காப்பியனார் கருதியமை தெளிவாகும்.

**வழிநூல்**

ஒரு முதனூற் கருத்தை அப்படியே வழிமொழிதல் வழிநூல் வழக்கன்று; முறைமையும் அன்று. முதனூலின் அடிப்படை மாறாமல் பழையன கழித்துப் புதுவன புதுக்கி[13] மரபு நிலை திரியா மாண்பொடு[14] செய்யப்படுவதே வழிநூலாகும். ஆக, ஒரு முதனூல் வழியே வழிநூல் கிளைத்தற்குத் தக்க கால இடைவெளி ஒன்று வேண்டும் என்பது தெளிவு. ஒரு காலத்தில் ஒரு சாலை மாணவரானோர் முதனூலும் வழிநூலும் செய்தனர் என்பது வழக்கொடுபட்ட வகைமை அன்றாம். ஆகலின், காக்கை பாடினியார் தொல்காப்பியனாரின் ஒரு சாலைமாணவர் என்பது அடிப்படையற்ற செய்தி எனத் துணியலாம்.[15]

**பாவினம்**

''ஆசிரியம் வஞ்சி வெண்பா கலியென
நாலியற் றென்ப பாவகை விரியே''

எனப் பா வகைகளைச் சுட்டினார் தொல்காப்பியர்.[16] அவர் காலத்தில் பாவினங்கள் தோன்றின அல்ல.[17] ஆனால், காக்கை பாடினியாரோ

''விருத்தம் துறையொடு தாழிசை என்றா
இனச்செய்யுள் எல்லா அடியினும் நடக்கும்''

என்றும்,

''வெண்பா விருத்தம் துறையொடு தாழிசை
என்றிம் முறையின் எண்ணிய மும்மையும்
தத்தம் பெயரால் தழுவும் பெயரே''

என்றும்[18] கூறியதுடன், கலி, வஞ்சிப்பாக்களின் இனங்களைத் தனித்தனி நூற்பாக்களில் விரித்தும் உரைத்தார்.[19] இவற்றால், பாவினங்கள் பல்கி வளர்ந்த காலத்தேதான் காக்கைபாடினியார் இருந்து நூல் செய்தாராதல் வேண்டும். என்னெனின், 'இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்'[20] முறைமையாகலின்.

காலம்

பிற்காலத்தெழுந்த பாவினங்களுள் தாழிசை, துறை என்பன கலிப்பாவின் உறுப்புகளாக முந்து இருந்தவற்றை வாங்கிக் கொண்டனவே. விருத்தம் ஒன்றுமே புதுவது கிளந்ததாம். இவ்விருத்தத்தின் இலக்கணம், காக்கை பாடினியம், சிறுகாக்கை பாடினியம், அவிநயம் முதலிய நூல்களில் வருதலால் இவை கி.பி. பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தன[21] என்பர். அவரே, சங்க காலத்தின் பின்வந்த பல்லவர் காலத்தில் தோன்றியிருக்கலாம்[22] என்றும் கூறுவர்.

அப்பரடிகள், ஆளுடையபிள்ளையார் ஆகியோர் காலத்திலேயே நரிவிருத்தம், எலிவிருத்தம், கிளிவிருத்தம் என்னும் நூல்கள் இருந்ததற்கான குறிப்புகள் இருத்தலால், விருத்த இலக்கணம் அமைந்திருத்தல் கொண்டு இவரைப் பத்தாம் நூற்றாண்டுக்குக் கொண்டு வருதல் முறையன்று. இனிக் குண்டலகேசிக்குக் குண்டலகேசிவிருத்தம் என்னும் பெயருண்மையும், திருத்தக்கதேவர் இயற்றியதாக நரிவிருத்தம் என்னும் பெரிய நூலொன்றுண்மையும் இவண் எண்ணத்தக்கன. இவற்றால் காக்கை பாடினியார் கி.பி இரண்டாம் நூற்றாண்டை அடுத்து ஏழாம் நூற்றாண்டு எல்லைக்குள் இருந்தவராகக் கொள்ளலாம்.

இனி, விருத்தம் என்பதற்கு 'வரலாறு' எனப் பொருள் கொள்வாரும் உளர்.[23] நரிவிருத்தத்தில் உள்ள பாடல்கள் 51உம் விருத்தப்பாக்களாக இருத்தல், அது யாப்பின் வழிவந்த பெயர் என்பதை விளக்கும்.

பெயர்

காக்கை பாடினியார் பெண்பாற் புலவர் என்பது அவர்தம் பெயராலே விளங்கும். பாடுவதையே தொழிலாகக்கொண்ட பழந் தமிழ்க் குடியினர் 'பாணர்' எனப்பட்டதும், 'பாணன்' என்னும் ஆண்பாற் பெயர்க்கு அமைந்த பெண்பாற்பெயர் 'பாடினி' எனப்பட்டதும் அறிந்தனவே. இதனைப், 'பாணன் சூடான் பாடினி அணியாள்'' எனவரும் குடவாயிற் கீரத்தனார் பாட்டும்[24] பிறர் பாடல்களும்[25] தெளிவாக்கும்.

கலைத்திறத் தேர்ச்சியும் நிலைத்தரு புகழும் வாய்ந்த இப் பாணர் குடியில் தோன்றிய புலவர் பெருமாட்டி ஒருவர் இருந்தார். அவர் நச்செள்ளை என்னும் இயற்பெயரினர். அவர், 'விருந்து வரக்கரைந்த காக்கையைப் பாடியமையால்[26] காக்கைபாடினியார் நச்செள்ளையார்' எனப்பட்டார்.

குடிப்பிறப்புக் கருதாமல் காக்கையைப் பாடியது கொண்டே காக்கை பாடினியார் எனப்பட்டார் எனல் முறைமையன்று. அவ் வாறாயின், காக்கைபாடிய நச்செள்ளையார் என்றே பெயர் பெற் றிருப்பார். கோடைபாடிய பெரும்பூதனார், பாரதம் பாடிய பெருந்தேவனார், பாலைபாடிய பெருங்கடுங்கோ, மடல்பாடிய மாதங்கீரனார், மருதம் பாடிய இளங்கடுங்கோ என்னும் சங்கச் சான்றோர் பெயர் கொண்டு தெளிக.

இங்கெடுத்துக் காட்டப்பட்ட புலவர் பெருமக்கள், ஆடவர். இவர் பெண்டிர்; ஆகலின் 'பாடிய' என்னாமல் 'பாடினி' எனப் பெற்றார் என்பார் உளரேல், 'வெறிபாடிய காமக்கணியார்' என்னும் புலவர் பெருமாட்டியார் பெயரை நினைவாராக.

காக்கைபாடினியார் நச்செள்ளையார் நாடறிந்த பெரும் புலவராக விளங்கியவர். ஆடுகோட்பாட்டுச் சேரலாதனை ஆறாம் பத்தால் பாடிக் 'கலன் அணிக' என ஒன்பது காப்பொன் பரிசு பெற்றவர். இயற்பெயர் ஒழிந்து காக்கை பாடினியார் என வழங்கும் புகழ் பெற்றவர்: அவர் பெயரைத் தமிழ்ச்சான்றோர் தம் மகளிர்க்கு இட்டு வழங்கும் பெருநிலையில் அமைந்த நல்லியல் மெல்லியலாரே காக்கை பாடினியம் இயற்றியவராம்.

அடிவகை

ஆசிரியர் தொல்காப்பியனார் தொல்லியல் முறைப்படியே நாற்சீர் அடியுள் நான்கெழுத்து முதல் ஆறெழுத்தளவும் அமைந்த மூன்றடியையும் 'குறளடி' என்றும், ஏழெழுத்து முதல் ஒன்பதெழுத் தளவும் அமைந்த மூன்றடியையும் 'சிந்தடி' என்றும், பத்தெழுத்து முதல் பதினான்கெழுத்தளவும் அமைந்த ஐந்தடியையும் 'நேரடி' என்றும், பதினைந்தெழுத்து முதல் பதினேழெழுத்தளவும் அமைந்த மூன்றடியையும் 'நெடிலடி' என்றும், பதினெட்டெழுத்து முதல்

இருபதெழுத்தளவும் அமைந்த மூன்றடியையும் 'கழிநெடிலடி' என்றும் எழுத்துகளின் அளவினால் பெயரிட்டு வழங்கினார்[27]. இவ்வழக்கம் சங்கச் சான்றோர் காலத்திலேயே வீழ்ந்து விட்டது.

இதனை, ''இந்நூல் செய்த காலத்தில் தலைச்சங்கத்தாரும் இடைச்சங்கத்தாரும் கட்டளையடி பயின்று வரச் செய்யுள் செய்தார் என்பது இச்சூத்திரங்களால் (தொல். செய். 50, 51) பெறுதும். பின்பு கடைச்சங்கத்தார்க்கு அஃதரிதாதலில் சீர்வகையடி பயிலச் செய்யுள் செய்தார் என்றுணர்க'' என்னும் நச்சினார்க்கினியத்தால் நன்கறியலாம்.

காக்கை பாடினியார்,

''குறள்சிந் தளவு நெடில்கழி நெடிலென்
றைவகை மரபின அடிவகை தானே''

என்று சுட்டி,

''இருசீர் குறளடி; சிந்தடி மூச்சீர்;
அளவடி நாற்சீர், ஐஞ்சீர் நெடிலடி;
அறுசீர் கழிநெடில் ஆகும் என்ப''

''எண்சீர் எழுசீர் இவையும் கழிநெடிற்
கொன்றிய வென்ப உணர்ந்திசி னோரே''

என்று விரித்துரைத்து, எட்டிறந்த சீர்களையும், 'சிறந்தன அல்ல' என்று ஏற்றுக் கொள்வார்[28].

எழுத்து

அசைக் குறுப்பாம் எழுத்துகளை எழுத்ததிகாரம் நோக்கி அறியக்கூறினார் தொல்காப்பியர். அவ்வெழுத்துகள் பதினைந் தென்றார் பேராசிரியர். 'பதினாறெழுத்து என்பாரும் உளர்' என்றும் குறித்தார்[29].

காக்கை பாடினியார்,

''குறில் நெடில் அளபெடை உயிர்உறுப் புயிர்மெய்
வலிய மெலிய இடைமையோ டாய்தம்
இஉ ஐயென் மூன்றன் குறுக்கமோ
டப்பதின் மூன்றும் அசைக்குறுப் பாகும்''

எனப் பதின்மூன்று என்றார்[30]. 'எழுத்துப் பதின்மூன்று' என இவர் வழியைத் தழுவிக் கொண்டார் அமிதசாகரர்[31].

அசை

அசைகளை நேர், நிரை, நேர்பு, நிரைபு என நான்காகக் கொண்டார் தொல்காப்பியர்[32]. காக்கைபாடினியார் நேர் நிரை (தனி, இணை) என்னும் ஈரசைகளையே கொண்டார். நேர்பு நிரைபுகளைக் கொண்டிலர். ''நேர்பசை நிரைபசையெனக் காக்கை பாடினியார் முதலாகிய ஒருசார் ஆசிரியர் கொண்டிலர்'' எனச் சுட்டுவார் இளம்பூரணர்[33]. அமிதசாகரர் முதலாகிய யாப்பாசிரியர் பலரும் காக்கைபாடினியார் வழியையே தழுவிக் கொண்டனர்.

நாலசை

நாலசைப் பொதுச்சீர் கொள்ளுதல் தொல்காப்பியத் தில்லை. ''ஈரசை கொண்டும் மூவசை புணர்த்தும் சீரியைந் திற்றது சீரெனப் படுமே'' என்றார். நாலசைச் சீர் வருதலை மறுத்துரைக்கும் பேராசிரியர், ''எனப்படும் என்பதே பற்றி நாலசைச் சீர் கொண் டாரும் உளர். ஐயசைச் சீர் கொண்டாரைக் கண்டிலம் என்க'' என்றார்[34]. நச்சரும் நாலசைச்சீர் வருதலை மறுத்தார். ஆனால், காக்கை பாடினியார், ''நாலசையானும் நடைபெறும்'' என்றதுடன், ''நாலசை யானடை பெற்றன வஞ்சியுள் ஈரொன் றிணைதலும்'' ஏற்றுக்கொண்டார்.[35] இவ்வழக்கே பின்னூலாரால் மேற்கொள்ளப்பட்டது.

''காக்கை பாடினியார் முதலிய தொல்லாசிரியர் தம் மதம்பற்றி ஈண்டு நாலசைச்சீர் எடுத்தோதினார்'' என்றார் யாப்பருங்கல விருத்தியுரையார்[36].

**வெண்பா**

நான்கடியான் அமைந்த வெண்பாவை 'ஒத்தது' என்றும், நான்கடியின் மிக்க வெண்பாவை 'நெடுவெண்பாட்டு' என்றும், நான்கடியிற் சுருங்கிய வெண்பாவைக் 'குறுவெண்பாட்டு' என்றும், தொல்காப்பியனார் வழங்கினார்[37]. காக்கை பாடினியார் நெடு வெண்பாட்டைப் பஃறொடை வெண்பா என்றும், குறுவெண் பாட்டைக் குறள் வெண்பா என்றும், ஒத்ததை நேரிசை வெண்பா இன்னிசை வெண்பா என்றும் குறியிட்டு அவற்றின் இலக்கணமும் விரித்தோதினார்[38].

**வண்ணகம்**

தொல்காப்பியர் சுட்டும் வண்ணகம் என்பதைக் காக்கை பாடினியார் 'அராகம்' என்றார். இதனைப் பேராசிரியர் "இனி, வண்ணகம் என்பது அராகமென உரைத்து அவ்வுறுப்புடையன வண்ணக ஒத்தாழிசை எனவும் சொல்வாரும் உளர்"[39] என்றார். அமிதசாகரர் அராகத்தைத் தழுவிக் கொண்டார்.

**பொதுச்சீர்**

வெண்பாவினுள் அளபெழுந்தால் நாலசைப் பொதுச்சீர் வரும் என்பது ஒருசார் ஆசிரியர் கொள்கை. காக்கைபாடினியார் கொள்கை அன்ன தன்று என்றும், அதுவே அமிதசாகரர் கொள்கை என்றும் குணசாகரர் குறிக்கிறார்[40].

"ஒரு சாரார் வெண்பாவினுள் அளபெழுந்தால் நாலசைப் பொதுச்சீர் வருமென்பார் உளராயினும், அவ்வாறு அலகிட்டு உதாரண வாய்பாட்டான் ஓசையூட்டும் பொழுது செப்பலோசை பிழைக்கும் என்பதூஉம், ஆண்டுச் சீரும் தளையும் சிதைய வாரா மையின் அளபெடுப்பனவும் அல்ல; அளபெடுப்பினும் அளபெடை கள் அலகு காரியம் பெறுவனவும் அல்ல என்பதூஉம் காக்கை பாடினியார் முதலாகிய தொல்லாசிரியர் துணிவு. அதுவே இந் நூலுடையார்க்கும் உடன்பாடு" என்பது அது.

**முதனினைப்பு**

ஓர் இலக்கணத்தைக் கூறி அதற்குரிய இலக்கிய முதனி னைப்புக் காட்டல் காக்கைபாடினியார் மதம் என்பதைக் குண

சாகரரும், மயிலைநாதரும் எடுத்துக்காட்டுடன் விளக்குவர்[41]. அம் முறையே முறையாய்க் காரிகை இயலுதல் கற்றோர் அறிந்ததே.

ஐகாரக் குறுக்கம்

தன்னைச் சுட்டும் இடத்தன்றிச் சொல்லின் மூவிடத்தும் ஐகாரம் குறுகும் என்பார் நன்னூலார்[42]. காக்கை பாடினியார் சொல்லின் முதல் ஒழிந்த இடை கடை என்னும் ஈரிடத்துமே குறுகும் என்பார்[43]. இல்லாக்கால் ''ஐயப் படாஅ தகத்த துணர் வானை'' என வருவது போன்றவை தளை தட்டுப்பட்டுப் பிழை பட்டுப் போய் விடுமாம்[44].

சொல்லாட்சி

இனி, நேரசை நிரையசை என்பவற்றைத் தனியசை, இணையசை என்றே ஆள்வார் பாடினியார். இது பெயர் கூறு மாற்றானே இலக்கணம் கூறும் சிறப்பாக அமைதல் அறிக. எனினும் இவ்வாட்சி பின்வந்த பெருமக்களால் ஆளப்பெறாமல் நேர் நிரை என்பவையே ஆளப்பெற்று வருகின்றன.

தெளிவு

இலக்கணத்தைக் கற்பார் இடர்ப்பாடும் ஐயமும் இன்றிக் கற்றல் வேண்டும் என்று கருதியவர் காக்கை பாடினியார் என்பது,

''நெடிலொடு நெடிலும் நெடிலொடு குறிலும்
இணையசை யாதல் இலவென மொழிப''

என்னும் நூற்பாவால் விளக்கமாம்.[46]

நேர் நேர் நிரை நிரை என்பவற்றை, ''ஒரோ அசையினால் ஆகிய ஈரசைச் சீர்'' என்று அவர் கூறுவது நுண்மை மிக்கதாம்.[47]

புதுமை

மேலும் புணர்ச்சியைத் 'தலைப்பெயல்' எனப் பரக்க ஆட்சி செய்வதும், சுரிதகத்தைச் 'சுழியம்' என்பதும், மெய்யெழுத்தை 'உறுப்பு' என்பதும், நெட்டெழுத்தை 'நெடுஞ்சினை' என்பதும், குற்றியலிகர குற்றியலுகரங்களை 'இ உ குறுக்கம்' என்பதும் இவர்தம் சொல்லாட்சித் திறனைச் சொல்வனவாம்[48].

பாயிரம்

''வடக்கும் தெற்கும் குணக்கும் குடக்கும்
வேங்கடம் குமரி தீம்புனற் பௌவமென்
றந்நான் கெல்லையின் அகவயிற் கிடந்த
நூலதின் நுண்மை வாலிதின் விரிப்பின்''49

எனவரும் காக்கை பாடினியச் சிறப்புப் பாயிரம் முற்றாகக் கிட்டியிருப்பின் தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் போல அரிய செய்திகள் சிலவற்றை அறிந்து கொள்ள வாய்த்திருக்கும். அஃதின்மை முதற் குறையாய் அமைந்து இனைவு உறுத்துவதாம்.

புதையல்

காக்கை பாடினியத்தை நாம் கண்டடைய உதவியவர்கள் பண்டைய உரையாசிரியப் பெருமக்களே ஆவர். யாப்பருங்கல விருத்தியுரையார், காரிகையுரையார், தொல்காப்பிய உரையாளர்கள், நன்னூல் உரையாளர் மயிலை நாதர், இறையனார் களவியல், வீரசோழிய உரையாசிரியர்கள் ஆகியோர் தம் உரையிடைப் பொதிந்து வைத்த நூற்பாக்களே புதையலெனக் கிட்டி நூலுருப் பெற வாய்த்தனவாம்.

புகழ்வரவு

இவ்வுரையாசிரியர்களுள்ளும், யாப்பருங்கல விருத்தியுரையாரே பெரும் பாராட்டுக்குரியர். தம் பாராட்டுக்குரிய அவர், ''காக்கைபாடினியார் முதலிய தொல்லாசிரியர் என்றும், காக்கை பாடினியார் முதலிய மாப்பெரும் புலவர் என்றும், காக்கைபாடினியார் முதலாகிய மாக்கவிப்புலவோர் என்றும், நல்யாப்புக்கற்றார் மதிக்கும் கலைக்காக்கை பாடினியார் என்றும் இவரைப் பாராட்டுதல்[50] அவர்தம் பெருந்தகைமையையும் ஈடுபாட்டையும் இனிதின் விளக்கும்.

மேற்கோள் குறிப்பு

1. சங்க இலக்கியம் -பக். 1430-பெண்பாற்புலவர்

2. கலைக்களஞ்சியம் - தொ. 3

3. மறைந்து போன தமிழ் நூல்கள்

4. காக்கைபாடினியம் – ஆராய்ச்சி முன்னுரை

5. தொல். மரபு. 99

6. யா.வி. 1.மேற்

7. பன்னிருபடலம், தொல். மரபு. 94 பேரா. பு. வெ. மா. நம்பி அக. சிறப்புப்பா

8. தொல், செய்.1. நச்

9. மேற்படி–சிறப்புப்பாயிரம்

10. களவியலின் வரலாறு

11. தொல். மரபு. 95 பேரா. மேற்

12. தொல். மரபு. 94 பேரா. மேற்

13. நன். 95

14. தொல். மரபு. 13

15. தொல். செய். 1.நச்

16. தொல். செய். 105

17. தொல். செய். 149 நச்; பேரா.

18. கா.பா. 28, 53

19. கா.பா. 64-67, 79–81, 84-85

20. நன். 462

21. தமிழ்ப்புலவர் வரலாறு: ந.சி.க

22. தமிழ்ப்புலவர் வரலாறு - ந.சி.க

23. நரிவிருத்தம் - முகவுரை

24. புறம். 242

25. புறம். 11, 319, 361, 364

26. குறுந். 210

27. தொல். செய்.35.9

28. கா.பா. 21-24

29. தொல். செய். 2 பேரா.

30. கா. பா-1

31. யா.கா. 44

32. தொல். செய். 3,4

33. தொல். செய். 4

34. தொல். செய். 11

35. தொல். செய். 12

36. யா.வி. 10

37. தொல். செய். 114

38. கா.பா. 48-52

39. தொல். செய். 140

40. யா.கா. 8

41. நன். 268

42. நன். 95

43. கா.பா. 7

44. திருக். 702

45. கா.பா. 5

46. கா.பா. 6

47. கா.பா. 8

48. கா.பா. 16, 17, 20, 75, 1, 7, 3

49. இறை. அக. உரைப்பாயிரம்

50. யா.வி. (கழகம்) பக். 58, 101, 430, 19

# புத்தமித்திரனாரின் இலக்கணக் கோட்பாடு

டாக்டர் கோ. விசயவேணுகோபால்

## முன்னுரை

தொல்காப்பியத்திற்குப்பின் தமிழ் இலக்கணக் கோட்பாடுகளில் பல மாற்றங்கள் நிகழ்ந்துள்ளன. யாப்பருங்கலவிருத்தியுரை கற்பார்க்கு இவ்வுண்மை எளிதில் புலனாம். தொல்காப்பியத்திற்குப்பின் அவிநயனாரின் இலக்கணக்கோட்பாடு எங்ஙனம் புகழ்பெற்று விளங்கியது என்பதனை இவ்விருத்தியுரையின் வழி நன்கறியலாம்.[1] தமிழிலக்கணக் கோட்பாடும் பகுதி பகுதியாகப் பிரிந்து தனி இலக்கணக்கோட்பாடுகளாக வளர்ந்தது. களவியல், களவியற்காரிகை போன்றவை பொருளதிகாரக் கோட்பாட்டின் வளர்ச்சியினையும் யாப்பருங்கலம், யாப்பருங்கலக் காரிகை போன்றவை யாப்புக் கோட்பாட்டின் வளர்ச்சியினையும் சுட்டி நிற்கின்றன. இவற்றோடு வடமொழி இலக்கணக்கோட்பாடுகளும் தமிழகத்தே விரவத் தொடங்கின. யாப்பருங்கலவிருத்தி இக்கோட்பாடுகளைப் பின்பற்றுவோரை "வடநூல்வழித் தமிழாசிரியர்" எனக் குறிப்பிடுதல் நோக்கத்தக்கது. வைதீக, சமண, பௌத்த சமயங்களின் தொடர்பு இவ்வகை வளர்ச்சிக்கு அடிப்படையாக அமைந்தது. தமிழகத்தே பௌத்த, சமணச் சமயங்களின் செல்வாக்கு ஞானசம்பந்தர் முதலான நாயன்மார்களாலும் திருமங்கையாழ்வார் முதலான ஆழ்வார்களாலும் பெருமளவுக்குக் குறைக்கப்பட்டாலும் இவ்விருசமயங்களின் தொடர்ச்சி அறுபடாமல் நாட்டில் ஆங்காங்கே இருந்து வந்துள்ளது. சோழப் பேரரசன் முதலாம் இராசராசன் காலத்தே கடாரத்தரசனின் துணையோடு புத்த விகாரம் ஒன்று நாகப்பட்டினத்தில் கட்டப்பட்ட செய்தியும் அவ்விகாரையிலிருந்த பல புத்தசமய ஆசிரியர்கள் நூல்கள் பல எழுதியமையும் இங்கு நினைவுகூரத்தக்கன.[2] முதலாம் இராசராசனுக்குப் பின் வந்த முதலாம் இராசேந்திரன், அவன் மகன் வீரராசேந்திரன்

காலத்திலும் புத்த சமயத்திற்கு ஆதரவு தரப்பட்டுள்ளது. இக்காலச் சூழ்நிலையில்தான் புத்தமித்திரனாரின் வீரசோழியம் என்னும் நூல் எழுதப்பெற்றது. ''தேமே வியதொங்கற் றேர்வீர, சோழன் திருப்பெயராற் பூமேலுரைப்பன்,''[3] எனவும் ''மேவிய வெண் குடைச் செம்பியன் வீரராசேந்திரன்றன் நாவியல் செந்தமிட் சொல்லின்'' எனவும்[4] ஆசிரியர் புத்தமித்திரனார் குறிப்பிடுவதால் இந்நூல் வீரராசேந்திர சோழன் காலத்தே (கி.பி. 1063-9) தோன்றிய நூல் என்பது தெளிவு. இந்நூல் விளக்கும் இலக்கணக் கோட்பாட்டினை ஆய்ந்தறிவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**வீரசோழிய அமைப்பு**

இந்நூல் அதிகாரம் என்னும் பெரும் பிரிவினையும் படலம் எனும் உட்பிரிவுகளையும் கொண்டுள்ளது. எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங்காரம் என 5 அதிகாரங்கள் உள்ளன. இவற்றுள் சொல்லதிகாரம் மட்டுமே ஆறுபடலங்களைக் கொண்டுள்ளது; ஏனைய ஒவ்வொரு படலத்தையே கொண்டுள்ளன. அவை வருமாறு:

1) எழுத்ததிகாரம்: சந்திப்படலம்

2) சொல்லதிகாரம்; வேற்றுமைப்படலம் உபகாரப்படலம், தொகைப்படலம், தத்திதப்படலம், தாதுப்படலம், கிரியாபதப்படலம்.

3) பொருளதிகாரம்: பொருட்படலம்

4) யாப்பதிகாரம்: யாப்புப்படலம்

5) அலங்காரம்: அலங்காரப்படலம்

பிற்காலத்தே 'ஐந்திலக்கணம்' எனச் சுட்டப்படும் மரபில் முதன் முதலில் ஐந்திலக்கணமும் விளக்கும் நூல் இதுவேயாகும். என்றாலும் 'ஐந்திலக்கணம்' என்ற கோட்பாட்டை இந்நூலாசிரியரே உருவாக்கினார் எனக் கொள்ளவியலாது. தமக்கு முன்பே இம்மரபினைப் ''பஞ்ச அதிகாரம்'' என்று சுட்டும் வழக்கினைப்

புத்தமித்திரனாரே தம் பாயிரத்துள் எடுத்துக் காட்டுகின்றார். எனவே தொல்காப்பியத்திற்குப் பின் இலக்கணக் கோட்பாடு தனித்தனியே பொருள், யாப்பு எனப் பிரிந்தமை போலவே இவ்வாறு பிரிந்தவற்றை இணைத்து மீண்டும் ஓரிலக்கணக் கோட்பாடாகக் கருதும் மரபும் வீரசோழியத்துக்கு முன்பே வளர்ந்திருந்தமையை இது காட்டுகிறது எனலாம்.

**படலங்களில் காணப்படும் செய்திகள்**

முதலாவதாகிய சந்திப்படலத்துள் 28 கட்டளைக் கலித்துறைகளில் தமிழ் எழுத்திலக்கணம் விளக்கப்பட்டுள்ளது. எழுத்துக்களது பெயர், தொகை, வகை, விரி ஆகியன முதல் 5 பாடல்களில் கூறப்பட்டுள்ளன. எழுத்துக்களது பிறப்பு (6) மொழி முதல் வருவன (7) ஈற்றில் வருவன (8) பின்னர் விளக்கப்பெற்றுள்ளன. 9-ஆம் பாடல் தொடங்கி 28-ஆம் பாடல்வரை புணர்ச்சியிலக்கணங்கள் கூறப்பெற்றுள்ளன. இவற்றுள் 10, 11, 12 ஆகிய பாடல்கள் வடமொழிச் சந்தி மரபுகளை எடுத்துக்கூற ஏனையவை தமிழ்ப் புணர்ச்சியிலக்கணங்களை எடுத்துக் கூறியுள்ளன. இவ்வமைப்பே இவ்வாசிரியர்க்கு எழுத்திலக்கணத்தை விரிவாகக் கூறுவதைவிட அவற்றின் புணர்ச்சியிலக்கணத்தையே விளக்குவதில் உள்ள ஆர்வத்தினைப் புலப்படுத்துகின்றது. இயல் தலைப்பாகிய 'சந்திப்படலம்' என்பதும் இக்கருத்தினை உறுதிசெய்கிறது.

இரண்டாவதாகிய சொல்லதிகாரத்துள் (29 முதல் 83 வரை) தமிழ்ச் சொல்லிலக்கணங்கள் முழுக்க வடமொழி இலக்கணக் கோட்பாட்டின் வழியே விளக்கப்பெற்றுள்ளன. இலக்கணக் கலைச் சொற்களும் கரணக் காரகம், உபகாரகம், கிரியாபதம், பிரத்தியயங்கள் எனப் பெரும்பான்மையும் வடமொழி இலக்கணக் கலைச் சொற்களாகவே பயன்படுத்தப் பெற்றுள்ளன. இவ்வதிகாரத்திலேயே ஆசிரியர் வடமொழி இலக்கணக் கோட்பாட்டையே முன்மாதிரியாகக் கொண்டு தமிழ்மொழி அமைப்பினையும் அதனிலக்கணத்தையும் விளக்க முயன்றுள்ளார். தாதுப் படலம் என்ற 5-ஆவது படலத்தில் ஆசிரியர் முதன்முறையாகத் தமிழ்வேர்ச் சொற்களைப் பாகுபாடு செய்து காட்டுகிறார். தொல்காப்பியத்துள்

காணப்பெறாத கருத்து இது. வரலாற்று முறையில் தமிழ்ச் சொல்லமைப்புப் பற்றி ஆய்வார்க்கு இப்பகுதி பெரிதும் பயன்படும். இதுபோலவே வேர்ச்சொல், அடிச்சொல் ஒழிந்த பிறவற்றை இவர் ஒருசேர எடுத்துக்கூறும் முறையும் புதியது. உண்டான் என்ற சொல் இவர் இலக்கணத்தின்படி உண் தான் எனப் பிரிக்கப் பெறும். காலக்கிளவியையும் திணை-பால்-எண்-இடம் சுட்டும் விகுதியையும் இவர் சேர்த்தே வழங்குவர். இவ்வாறு வடமொழி இலக்கணக் கோட்பாட்டை மேற்கொண்டமையினால் இவர் தமிழ்ச் சொல்லமைப்பினை முதன் முதலில் புதிய முறையில் விளக்கியவர் ஆகிறார். இவ்விளக்கமுறை தொல்காப்பிய விளக்க முறைக்கு முற்றிலும் மாறுபட்டதாகும்.

மூன்றாவதாகிய பொருளதிகாரம் (84 முதல் 104 வரை) தொல்காப்பியரது பொருளதிகாரக் கோட்பாட்டினின்றும் வளர்ச்சி பெற்ற நிலையை எடுத்துக்காட்டுகின்றது. தொல்காப்பியர் அகம், புறம் எனப்பிரித்துரைக்க அவிநயனார் அகம், புறம், அகப்புறம் என்று மூவகைப்படுத்தமையை யாப்பருங்கலவிருத்தி மேற்கோள் காட்டியுள்ளது[6]. "இந்நூலாசிரியர் இம்மூன்றோடு" "வென்றி போற்றும் புறப்புறம்" என்று நான்காக்கிப் பொருளிலக்கணத்தை விளக்கியுள்ளார்[7]. இம்மரபும் இவர் காலத்திற்கு முன்பே வழக்கிலிருந்த ஒன்றாகும். எனவே தொல்காப்பியர் காலத்திற்குப் பின்னர் எழுந்த கோட்பாடுகளையெல்லாம் தழுவி இவர் இந்நூலை யாத்துள்ளார் என்பது தெளிவாகிறது. அகத்திணைக்குரிய 'உரைகள்' என 27 உறுப்புக்களை இவர் சுட்டியுள்ளமை புதுவது. இவை முறையே சட்டகம், திணை, கைகோள், நடை, சுட்டு, இடம், கிளவி, கேள்வி, மொழி, கோள் (பொருள்கோள்), உட்பெறு பொருள், சொற்பொருள், எச்சம், இறைச்சி, பயன், குறிப்பு, மெய்ப்பாடு, காரணம், காலம், கருத்து, இயல்பு, விளைவு, உவமம், இலக்கணம், புடையுரை, மொழிசேர் தன்மை (தொகை), பொருளடைவு எனக் கூறப்பெற்றுள்ளன. இவ்வாறு ஏனைய பாகுபாடுகட்கு (புறம், அகப்புறம், புறப்புறம் ஆகியவற்றிற்கு)ச் சுட்டப்பெறவில்லை. எனவே இந்நூலார் கருத்துப்படி இவை அகத்திணைக்கேயுரியன என்பது தெளிவு. தமிழ் இலக்கியமரபு அகத்திணை மரபே என்று ஆசிரியர் கருதுகின்றார் எனக் கொள்ளலாம்போல்

உள்ளது. மேலும் கவிதையின் உள்ளடக்கத்தை விளக்கும் உத்தி வகைகளாகக் கோள், உட்பெறுபொருள். சொற்பொருள், எச்சம், இறைச்சி, குறிப்பு, கருத்து என்ற பாகுபாடுகளை அகத்திணை மரபோடு சேர்த்திருப்பது இவ்வாறு வருவனவற்றையே கவிதையாகக் கொள்கின்றாரோ இவ்வாசிரியர் என எண்ணத் தோன்றுகிறது. என்றாலும் ஆசிரியரின் கவிதை பற்றிய கோட்பாடுகள் முழுக்க முழுக்க வடமொழி இலக்கியக் கோட்பாடுகளை—குறிப்பாகத் தண்டியாரின் காவ்யாதர்சக் கோட்பாடுகளைத் தழுவியனவாகவே உள்ளன. எனவே தொல்காப்பியரது பொருட்கோட்பாடும் வடமொழியாசிரியர்களின் கோட்பாடுகளும் விரவிய இலக்கணக் கோட்பாடாக இவை இலங்குகின்றன. ஒரு கோட்பாடு என்று சொல்லுகிறபோது கோட்பாட்டின் உட்பிரிவுகளிடையே ஓரிலணக்கமும், பொருள் முரணின்மையும் உறுப்பியும் உறுப்புக்களும் போன்ற ஒரு பிரிபடாநிலை இருத்தல் வேண்டும். ஆனால் இவ்விலக்கணத்தில் அத்தகுநிலை இல்லை என்றே சொல்ல வேண்டும்.

அகத்திணையில் கைகோள் என்ற உரையினைக் கூறியிருந்த போதிலும் அதனை விரித்துக் களவு, கற்பெனத் தொல்காப்பியர் போல இந்நூலாசிரியர் விளக்காது விட்டுள்ளமை குறிப்பிடத் தக்கது. இதற்கான காரணம் விளங்கவில்லை.[8]

அடுத்த அதிகாரம் யாப்பதிகாரம். (105 முதல் 140 வரை). இப்படலத்தில் அசைபற்றிய கோட்பாடுகள் தொல்காப்பியத்தைப் பின்பற்றியன. எனினும் தொல்காப்பியர் சுட்டிய நேர்பு நிரைபு ஆகியவற்றை இவர் எடுத்துக்கூறவில்லை. தொல்காப்பியருக்குப் பின்னர் எழுந்த யாப்பிலக்கணக் கோட்பாடுகள் குறிப்பாகக் காக்கைபாடினியார் போன்றோரது கோட்பாடுகள் இதற்குக் காரணமாகலாம். அடிகளை விளக்கும்போது சீர்களை அடிப்படையாகக் கொண்டு இருசீரால் வந்த அடி, முச்சீரான் வந்த அடி நாற்சீரான் வந்த அடி, ஐஞ்சீரான் வந்த அடி, ஐஞ்சீரின் மிக்கு வந்த அடி எனப் பகுக்கின்றார். தொல்காப்பியர் எழுத்துக்களை அடிப்படையாகக் கொண்டே அடிகளைப் பாகுபாடு செய்வர். இவற்றிற்குப் பெயரிடும்போது குறளடிக்கு (இரு சீரான் வந்தது) அந்தரம் (ஆகாயம்) என்றும், சிந்தடிக்குக் கால் (காற்று) என்றும் அளவடிக்குத் தீ என்றும், நெடிலடிக்குப் புனல் என்றும், கழிநெடி

லடிக்கு மண் என்றும் குறிப்பர். இம்மரபு தமிழகத்தில் இருந்தமையை நிகண்டு நூல்கள் குறித்துள்ளன. எடுத்துக்காட்டாகப் பிங்கலநிகண்டு[9] நீர், நிலம், தேயு, வாயு, அந்தரம், இயமானன், சந்திரன், சூரியன் என எண்வகைக் கணங்களாகக் குறிப்பிடுகிறது. நேர் நிரை நிரை என்பன நீர்க்கணம் எனவும் நிரை நிரை நிரை வரின் நிலக்கணமெனவும் இவ்வாறே சுட்டிச் செல்வர். இத்தகு மரபுகளைப் பின்பற்றி இவ்வாசிரியரும் பாகுபாடு செய்திருக்கலாம். இப்படலத்திலேயே வடமொழி இலக்கியக் கோட்பாட்டைப் பின்பற்றிச் செய்யுளைப் பத்தியம் கத்தியம் எனப் பிரித்துக் கூறுகிறார். வடமொழி மரபில் பத்தியம் பாட்டையும் கத்தியம் உரைநடையையும் குறிக்கும். இந்நூலாசிரியர் பத்தியம் பாதங்களால் (செய்யுளடிகளால்) வந்தியலும் என்றும் கட்டுரை, செய்யுளின் போலி ஆகியன கத்தியம் என்றும் விளக்குவர். உரை நடையோடு செய்யுட் போலியையும் இவர் கத்தியத்துள் அடக்குவது குறிப்பிடத்தக்கது. இவர் கருத்துப்படி தாழிசை, துறை, விருத்தங்கள் கத்தியமாகக் கருதப்படல் வேண்டுமென்பது தெரிகிறது. என்றாலும் இவற்றைப் பத்தியமாகக் கருதுவாரும் உளர் எனச் சுட்டிச் செல்கின்றார். இவ்வாறு கருதுவோர் தமிழ் யாப்பிலக்கணவாசிரியர்களே.

தொல்காப்பியத்தில் ஆசிரியம் வெண்பா முதலான உருவங்கட்கும் (form) இவற்றுள் பாடப்பெறும் உள்ளடக்கங்கட்கும் (consent) உள்ள இயைபு சுட்டப்படுகின்றது. இந்நூலாசிரியர் இத்தகைய உருவஉள்ளடக்க இயைபினைச் சுட்டவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் பத்தியத்தின் வகைகளாகக் குறள், சிந்து, திரிபாதி, வெண்பா, திலதம், விருத்தம், சவலை என்பனவற்றை அடக்கிக் காட்டியுள்ளார். இவற்றுள் மிக்கும் குறைந்தும் வருவனவற்றிற்குப் 'போலி' என்ற பெயர் தருவர். இப்பாகுபாடு புதியதாகும்.

விருத்தம், தாண்டகம் ஆகியவற்றின் இலக்கணங்களும் இவர் புதியனவாக விளக்குவன. இவற்றிற்கான அடிப்படைகளை விளக்கும்போது வடமொழியாப்புக் கோட்பாட்டினை அடியொற்றி இலகு, குரு என்ற கோட்பாடுகளை விளக்கியுள்ளார். இலக்கணக்

கோட்பாடு இங்கேயும் ஒருங்கிணைந்த கோட்பாடாகக் காட்டப்படவில்லை என்றே சொல்ல வேண்டும். தாண்டகம் பற்றிய கோட்பாடுகள் (வடிவம், இலக்கணம் ஆகியன) வடமொழி மரபினை அடியொற்றியன எனப் பொதுவாகக் கூறுவதுண்டு. ஆனால் வடமொழி யாப்புப் பற்றிய நூல்களில் இத்தகு இலக்கணம் காணப்படவில்லை என இதன் வரலாறு பற்றி ஆய்ந்தோர் குறிப்பிட்டுள்ளனர்[10]. எனவே தேவாரங்களிற் காணப்படும் தாண்டகப் பாடல் மரபினை இலகு, குரு போன்ற வடமொழி இலக்கண அடிப்படை அலகுகளைக் கொண்டு விளக்கியுள்ளார் என்று கருத இடமிருக்கிறது. பின்னர்ச் சந்தங்களைப் பற்றிய விளக்கத்திலும் இவ்வாறே குரு, இலகு ஆகியவற்றின் அடிப்படையில் விளக்கியுள்ளார். இங்கெல்லாம் வடமொழி யாப்பு மரபுகளை முன்மாதிரியாகக் (model) கொள்ளப்பெற்றுத் தமிழ் யாப்புவகைகள் விளக்கப்பெற்றுள்ளன.

இறுதியாக வண்ணங்கள் பற்றிய விளக்கம் தொல்காப்பியரின் கோட்பாட்டடிப்படையில் 20 வகைகளாக விளக்கப்பெற்றுள்ளன.

இறுதியாக வரும் அலங்காரப்படலத்துள் (141 முதல் 181 வரை) செய்யுட்கள் எனும் அலங்காரங்களையும், அவற்றுள் பயன்படுத்தப்பெறும் அணிவகைகளையும் விளக்கியுள்ளார். 'தண்டி சொன்ன நூலின்படியே உரைப்பன்' என்று தாம் மேற்கொண்ட கோட்பாட்டினைச் சில வேறுபாடுகளோடு விளக்கியுள்ளார். முதலில் சொல் உடலாகவும் பொருள் உயிராகவும் கொண்டது செய்யுள் என்ற விளக்கத்தைத் தந்து பின்னர் இச்செய்யுளே அலங்காரம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளார்.

வடமொழி இலக்கியக் கோட்பாட்டாளரிடையே நெடுங்காலம் நடந்து வந்த பூசல் ஒன்றுண்டு. அணிகள் செய்யுட்குப் புறம்பானவையென்றும் அவை பொருந்தியனவே செய்யுட்கள் என்றும் இருவேறு கோட்பாடுகள் வடமொழி மரபிலே உண்டு. தண்டியார் இவற்றுள் பிந்திய கருத்தினர். இவர் கருத்தினை ஒட்டியே இந்நூலாசிரியரும் அலங்கார இலக்கணத்தை விளக்கியுள்ளார். குணம், குற்றம் என்ற இருகோட்பாடுகளும் (guna dosa) வடமொழி இலக்கியக் கோட்பாட்டாளரிடையே காணப்படுவன[11].

பரதர் தம் நாட்டிய சாத்திரத்துள் இலட்சணங்கள், கணங்கள் முதலானவற்றை விரித்துரைப்பர். எனினும் பிற்காலத்து வந்த வடமொழி இலக்கியக் கோட்பாட்டாளர் இவற்றை அலங்காரங்கள் எனவே கொண்டுள்ளனர். செய்யுட்களில் வரும் குற்றமில்லாத சொற்கள் என்றும் குற்றமுடைய சொற்கள் என்றும் இவர் பாகு படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது. வடவெழுத்தைத் தவிர்த்து வழக்கொடு தப்பாதனவாய் உள்ள சொற்கள், உணர்வார்க்கு இன்பம் பயப்பனவாய் நிரலே பொருள்தந்து அலமையும் என்பர். வடநூல் எழுத்துக்களோடு பயின்றுரையின் பொருண்மருட்சியைத் தரும் என்பது இவரின் கருத்து. இவை போலவே உயிரெனப்பட்ட பொருளும் கேட்டவர்க்கின்பத்தினைத் தருவதாய்க் குற்றத்தைக் கடந்ததாய் இருத்தல் வேண்டுமெனவும், அரிதுணர் பொரு ளாகவும் குற்றமுடைய பொருளாகவும் மற்றும் பொருளுண்டென்று மருளச் செய்தலில்லாததாகவும் அமைதல் வேண்டும் என்றும் சுட்டிச்சென்றுள்ளார். பொருளையே உயிராகக் கொண்டமையால் அதனையே அலங்காரம் எனச் சுட்டுவதும் இவர் கருத்தாகும். பொருள் அணிகளை விளக்கியபின் சொல்லணிகளை விளக்கி யுள்ளார். அதன் பின்னர்ச் சித்திரக்கவி, விரவியல், மணிப்பிரவாளம், கிளவிக்கவி, துறைக்கவி, பிரளிகை என்னும் செய்யுள் வகை களைச் சுட்டிச் செய்யுளின் பயன் அறம் பொருள் இன்பம் வீடு என முடிக்கின்றார்.

இவ்வாறு தொல்காப்பியரது காலத்திற்குப் பின்னெழுந்த இலக்கணக் கோட்பாடுகளையும் வடமொழி மரபில் காணப்பெறும் இலக்கணக் கோட்பாடுகளையும் தழுவித் தமிழ் மொழி, இலக்கிய மரபுகளைச் சுருக்கமான அளவில் விளக்க முயன்றுள்ளார். இதனைத் தம் பாயிரத்துள் ''எழுத்துச்சொல்நற்பொருள் யாப்பலங் காரமெனும் பாமேவு பஞ்சவதிகாரமாம் பரப்பைச் சுருக்கித் தேமேவிய தொங்கற் றேர்வீர சோழன் திருப்பெயராற் பூமே லுரைப்பன் வடநூன் மரபும் புகன்றுகொண்டே'' என எடுத்துக் காட்டியுள்ளார். தும்பைத் திணையின் வகைகளை விளக்கும் பாடலிலும் (பாடல் 103) ''தொன்மைமிக்க தலையாய நூலவை தன்னினுங் கண்டிங் கொழிந்த வெல்லாஞ் சிலையாரு நன்னுதல்

மாதே! அறிந்துகொள் செப்பிடவே'' எனத் தாம் சுருங்கச் சொல்லியவற்றை முந்துநூல் கண்டு முழுவதுமாக விளங்கிக் கொள்க என வழிகாட்டுகிறார். எனவே தமிழ்மொழி இலக்கிய மரபுகளைச் சுட்டிக் கூடவே வடமொழி மரபினையுஞ்சுட்டிச் செல்லுதல் இவர்தம் கோட்பாடு என்பது தெளிவாகிறது. இவ்வழி இருமொழி மரபுகளும் இணையாகச் சொல்லப்படுகின்றனவேயன்றி இணக்கமுற்ற இயைபுடைய ஒரு கோட்பாடாக ஆசிரியர் ஆக்கிக் காட்டவில்லை என்பது தெளிவு. வடமொழி மரபுகளை எடுத்துக் காட்டுகின்ற போதும் 'தண்டியார் சொன்னபடி உரைப்பன்' எனச் சொனனாலும் பரதர், பாடகர் போன்ற பிற இலக்கணவாசிரியர் களது கோட்பாடுகளையும் தழுவியே அமைந்துள்ளது இவரது விளக்கம். இந்நிலையில் இவரது இலக்கணத்தில் அமைந்த இரு மொழி மரபுகளையும் பயன்படுத்தித் தமிழ் மொழி, இலக்கிய மரபு களைப்புரிந்து கொள்ள உதவும் ஒரு சிறு நூலாக இது அமைக்கப் பெற்றுள்ளது எனலாம். புத்த விகாரையில் சமயக்கல்வி முதலியன வற்றைக் கற்க வருவோர்க்கு இருமொழி இலக்கிய இலக்கண மரபுகளை எடுத்துக்கூறும் ஒரு கையேடாக (Handbook) உதவத் தக்க வகையில் இந்நூல் தொகுக்கப்பட்டிருக்கலாம் எனக் கருத லாம். மேலும் தமிழ் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அலங் காரம் எனும் ஐந்து பகுதிகளிலும் வடமொழி இலக்கணமரபுகளை எங்ஙனம் பயன்படுத்திப் புரிந்து கொள்ளலாம் என்ற வகையில் அமைந்த முதல் முயற்சி என்றும் முடிவு செய்யலாம்.

மேற்கோள் நூல்களும் குறிப்பும்

1. G. Vijayavenugopal. A Modern Evaluation of Nannul, Annamalai University, 1968.p.5-6.

2. Nilakanta Sastri K.A., -The Colas, University of Madras (Reprint) 1975,p: 185

3. வீரசோழியம், பாயிரம் 3-ஆம் பாடல், கழகப்பதிப்பு, சென்னை, 1970. பக். 1.

4. மேற்படி பக். 7

5. அலங்கார அதிகாரம் என்றல்லாது அலங்காரம் எனவே தலைப்பிடப் பெற்றுள்ளது. சொல்லின்பம் நோக்கி இவ்வணம் அமைக்கப்பெற்றதென்பர் பதிப்பாசிரியர்:பக். 198.

6. யாப்பருங்கல விருத்தியுரை பக். 532.

7. ''சமய உணர்வு வளர்ந்த காலத்தில் வீ. சோ. தோன்றிய காரணத்தால்'' இவை நான்காயின என்பர் ச. வே. சுப்பிர மணியன். வீரசோழியம், தமிழ்ப்பதிப்பகம், சென்னை, 1979, பக், 25

புறப்புறம் என்ற பாகுபாடு நிகண்டு நூல்களிலும் சுட்டப்பட் டுள்ளது. பிங்கல நிகண்டு பக், 218. ''வாகை பாடாண் பொதுவியற்றிணையெனப் போக்கிய மூன்றும் புறப்புற மாகும்.''

8. ச. வே. சுப்பிரமணியன், இந்நூலாசிரியரின் சமயச்சார்பும். துறவுநிலையும் இதற்குக் காரணங்களாகலாம் என ஐயுறுவர். மேற்படி நூல் பக். 26,

9. பக்: 189, 190.

10. டி. எஸ். கிரிப்பிரகாஷ், 'தாண்டகம் – வடமொழியிலும் தமிழிலும்' -எங்கள் பல்கலைக்கழக ஒப்பிலக்கியக் கருத்தரங்கில் படிக்கப்பட்ட அச்சேறாக் கட்டுரை.

11. S.K. De, History of Sanskrit Poetics, Firma KLM (P) Ltd., Calcutta, 2nd Edn. Reprint, 1976

R.V. Kane, History of Sanskrit Poetics, Motilal Banarsidas, Delhi, 4th Edition, 1971.

# நேமிநாதம்

டாக்டர் வெ. பழநியப்பன்

நேமிநாதம் குறித்த இக்கட்டுரை 'நேமிநாதம் – எழுத்ததிகாரம்' என்ற அளவில் வரையறுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கண வரலாற்றில் வீரசோழியத்தை அடுத்து எழுந்த இந்நூல் எழுத்து, சொல் என்ற பகுப்பினது: சமண சமயத் தீர்த்தங்கரராகிய நேமிநாதர் திருப்பெயரால் செய்யப் பெற்றமையின் 'நேமிநாதம்' எனப்பெயர் பெற்றது. நேமிநாதரைக் குறித்து அவிரோதி யாழ்வார் திருநூற்றந்தாதி என்ற நூலினை இயற்றியுள்ளார். 'திருவெம்பாவை' என்ற நூலொன்றும் பாடப் பெற்றுள்ளது.

இந்நூலின் ஆசிரியர் களந்தை என்னும் ஊரினைச் சார்ந்த குணவீரபண்டிதர், 'நேமிநாதம்' என்னும் நூலினை இயற்றியமையால் நேமிநாதர் எனவும் அழைக்கப் பெற்றார். தமிழ் நாவலர் சரிதை இவரைப் பேராசிரியர் என அழைக்கின்றது. இவர் எழுதிய மற்றொரு இலக்கண நூல் வச்சணந்திமாலைஎன்னும் வெண்பாப் பாட்டியல். இவர்தம் ஆசிரியர் வச்சணந்தி முனிவர்.

இவர் சமண சமயத்தவர் என்பதனை இவர்தம் பெயரே இனிது விளக்கும். நேமிநாதம் எழுத்ததிகாரம்[1], சொல்லதிகாரம்[2], வெண்பாப்பாட்டியல்[3] தொடக்கங்களில் அமைந்த பாயிரங்களும் இதனை வலியுறுத்தும்.

வச்சணந்திமாலை திரிபுவனதேவன்காலத்தில் இயற்றப் பெற்றது என்பது அதன் உரைக்குறிப்பால் அறியப்பெறுகின்றது. திரிபுவனதேவனை மூன்றாம் குலோத்துங்கன் எனக்கொண்டு குணவீரபண்டிதரின் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி என்பர்[4] வரலாற்று அறிஞர் சதாசிவ பண்டாரத்தார்.

## நேமிநாதத்தின் வேறுபெயர்

நேமிநாதத்தின் மற்றொரு பெயர் 'சின்னூல்' என்பதாகும். 'சின்னூல் உரைத்த குணவீரபண்டிதர்' என்ற தொண்டைமண்டல சதகத் தொடரால் இதனை அறிகின்றோம். பதிற்றுப்பத்தின் பழைய உரைகாரர் "சின்மையை, சின்னூல் என்றது போல ஈண்டுச் சிறுமையாகக் கொள்க"[5] எனச் சின்னூல் என்னும் பெயரினை எடுத்தாளுகின்றார். நேமிநாதம் சுருக்கநூல் ஆதலின் இப்பெயர் பெற்றிருக்கலாம். பெயருக்கேற்ப இந்நூல் இருபத்துநான்கே வெண்பாக்களில் எழுத்திலக்கணத்தை எடுத்துரைக்கின்றது.

நன்னூல் தோன்றுவதற்குமுன் தொல்காப்பியம் படிப்பவர் முதலில் இந்நூலினைக் கற்றுப் பின்னரே தொல்காப்பியம் கற்று வந்தனர். தொல்காப்பியக்கடலைக் கடக்க நேமிநாதம் படகாகப் பயன்பட்டது என்பதனை இந்நூலின் சிறப்புப் பாயிர வெண்பாவால் அறிகிறோம்.

## நூலமைப்பு

எழுத்து, சொல் என்ற அதிகார அமைப்பினது; எழுத்ததிகாரம் 24 வெண்பாக்கள்; சொல்லதிகாரம் 70 வெண்பாக்கள்; இவையே யன்றிச் சிறப்புப்பாயிரச் செய்யுள் இரண்டும், எழுத்ததிகாரத்தில் பாயிரச் செய்யுள் ஒன்றும், அவையடக்கத்தில் செய்யுள் ஒன்றும், சொல்லதிகாரத்தில் தற்சிறப்புப் பாயிரச் செய்யுள் ஒன்றும் ஆக 5 வெண்பாக்கள் காணப்பெறுகின்றன.

இலக்கண நூல்களில் நூற்பாக்கள் அனைத்தும் ஆசிரியப் பாவால் அமைபவை. ஆனால் இந்நூலின் நூற்பாக்கள் வெண்பா வினால் இயன்றவை; இவ்வாறு அமைவது ஏற்புடையது என்பர் பேராசிரியர்.[6]

## எது முதல் நூல்?

இந்நூலுக்கு முதல்நூல் தொல்காப்பியம் என்றும், வீரசோழியம் என்றும் இருவேறுபட்ட கருத்துக்கள் உண்டு. இந்நூலின் சொல்

லதிகாரச் சிறப்புப் பாயிரம் இந்நூல் தொல்காப்பியக் கடலைக் கடக்கப் படகாகப் பயன்படுகிறது என்று கூறுவதால் தொல் காப்பியமே முதல்நூல் என்பர். இக்கருத்து நூல் முழுமைக்கும் ஏற்புடையதன்று. சொல்லதிகாரம் என்ற அளவிலேயே பொருத்த முடையது. நேமிநாதச் சொல்லதிகாரம் தொல்காப்பியக் கருத் தையும் அமைப்பையும் தழுவியுள்ளதோடன்றி இயல் அமைப்புக் களின் எண்ணிக்கை மற்றும் பெயர்களிலுங்கூட ஒற்றுமையுடைய தாகவுள்ளது.

| தொல்காப்பியம் – சொல்லதிகாரம் | நேமிநாதம் – சொல்லதிகாரம் |
|---|---|
| 1. கிளவியாக்கம் | 1. மொழியாக்கம் |
| 2. வேற்றுமையியல் | 2. வேற்றுமை மரபு |
| 3. வேற்றுமை மயங்கியல் | 3. உருபுமயங்கியல் |
| 4. விளிமரபு | 4. விளிமரபு |
| 5. பெயரியல் | 5. பெயர்மரபு |
| 6. வினையியல் | 6. வினைமரபு |
| 7. இடையியல் | 7. இடைமரபு |
| 8. உரியியல் | 8. உரிமரபு |
| 9. எச்சவியல் | 9. எச்சமரபு |

நேமிநாதச் சொல்லதிகாரம் தொல்காப்பியச் சொல்லதி காரத்துடன் ஒற்றுமை உடையதெனினும், எழுத்ததிகாரம் வீர சோழியத்தைப் பின்பற்றியது என்பதற்குப் பல்வேறு ஆதாரங்கள் உள. புணர்ச்சி பற்றிய நேமிநாத நூற்பாக்கள் பதினைந்தில் பத்துநூற்பாக்கள் வீரசோழியத்தைத் தழுவியன என்று பி.சா. சுப்பிரமணிய சாஸ்திரியார் கூறுவது ஈண்டுக் குறிப்பிடத் தக்கது. மேலும் எழுத்துக்களை நெடுங்கணக்கு வரிசை எண்ணால் குறிக்கும் முறையும் வீரசோழியத்தில் காணப்படுவதே.

வீரசோழியம் போலவே நேமிநாதத்திலும் எழுத்ததிகார நூற் பாக்களில் ஓர் இயைபைக் காண இயலவில்லை. மேலும் அந் நூலினைப் பின்பற்றியே நேமிநாதமும் இலக்கணக் கருத்துக்களைத் தொகுத்துச் சொல்லும் போக்குடையதாக உள்ளது. மேலும் கருத் தினை வெளிப்படுத்துவதிலும் பெரும்பான்மையும் வீரசோழிய முறையையே பின்பற்றுகிறது.

தொல்காப்பியர் எழுத்துக்களை 'அகர இகரம்' என்றும் 'ய, ர, ழ' என்றும் எழுத்தின் பெயரால் சுட்டுகின்றார். நன் னூலார் தமிழ் எழுத்துக்களை எழுத்தின் பெயரால் சுட்டி, வட மொழி எழுத்துக்களை ஏழாம் உயிர் 'எட்டேயவ்வும்' என எண் ணிக்கையில் சுட்டுகிறார். நன்னூலுக்கு முன் தோன்றிய வீர சோழியம் தமிழ் எழுத்துக்களின் புணர்ச்சி விதிகளை வகுக்கும் நிலையில் 'மூன்றொடு நான்கு ஒன்பதாம் உயிர்' என எண்ணிக் கையில் வைத்துப் பேசுகிறது. இம்மரபினைப் பின்பற்றியே நேமி நாதமும் 'மூன்று நான்கு ஒன்பான் உயிர்ப்பின்னும்' என்று சுட்டுகின்றது.

வீரசோழியம் வடமொழி மரபினைப் பின்பற்றி இன எழுத்துக் களை 'வன்மையில்வருக்கத்து' என 'வர்க்கம்' என்று குறிப்பிடு கின்றது. அதனைப் பின்பற்றியே நேமிநாதமும் வல்லொற்று, மெல்லொற்று, வர்க்கம் என வகைப்படுத்துகின்றது.

இக்கருத்துக்களையெல்லாம் தொகுத்து 'எழுத்ததிகாரம் உட் பிரிவு இல்லாமல் இருத்தல், புணர்ச்சிபற்றிய நூற்பாக்களின் விதிகள், எழுத்துக்களை எண்ணிக்கையால் சுட்டுதல், 'வர்க்கம்' எனக் குறிப்பிடுதல் போன்றவற்றால் நேமிநாத எழுத்ததிகாரம் வீரசோழியத்தை அடியொற்றிச் செல்லுதலை அறியலாம்'[7] எனப் பேராசிரியர் சோம. இளவரசு கூறுவது ஈண்டு நினைவுகூரத் தக்கது. எனவே நேமிநாதம் எழுத்திலக்கண நிலையில் வீரசோழி யத்தையும் சொல்லிலக்கண நிலையில் தொல்காப்பியத்தையும் முதல் நூலாகக் கொண்டது எனலாம். ஒரு நூல் இரு நூல்களை முதல் நூல்களாகக் கொள்வதிலும் தவறில்லை.

தொல்காப்பியரின் இலக்கணக் கருத்துக்கள் நன்னூலுக்குப் பின்தோன்றிய இலக்கண நூல்களிலும் செல்வாக்குப் பெற்றன என்பது வெளிப்படை. இந்நிலையில் நன்னூல், இலக்கணவிளக்கம் முத்துவீரியம் என்பன தொல்காப்பியத்தையே பெரிதும் பின்பற்றிய நூல்களாகும். தொல்காப்பிய முறைக்கு மாறுபட்டு வடமொழி இலக்கணமரபைப் பின்பற்றி எழுந்த நூல் வீரசோழியம். இந் நூலின் கருத்துக்களை, குறிப்பாக எழுத்ததிகாரக் கருத்துக்களைப் பெரிதும் பின்பற்றிய ஒரே நூல் நேமிநாதமேயாகும்.

இலக்கணநூலின் சுருக்கம் கருதி நேமிநாதம் இலக்கண வளர்ச்சியைப் புலப்படுத்தத் தவறிவிட்டது என்றே கருதவேண்டும். ''அகநிலையிலும் புறநிலையிலும் தனிநிலையிலும் கூட்டு நிலையிலும் புணர்ச்சி என்ற செயல் சொல்லின் கண்ணே நிகழ் வதை மிகத் தெளிவாக அறிவுறுத்துவது தொல்காப்பியமே. முத்து வீரியம் இதை நன்குணர்ந்து தொல்காப்பியத்தை முழுதும் பின் பற்றிச் செல்கிறது. மற்ற நூல்கள் தொல்காப்பிய விதியைக் குறைத்ததாலும், சுருக்கியதாலும் பெற்ற பயன் மிகமிகக் குறைவு'[8] என்பர் பேராசிரியர் டாக்டர் ச.வே. சுப்பிரமணியம்.

எழுத்திலக்கணப் பகுப்பு

| தொல்காப்பியம் | வீரசோழியம் | நேமிநாதம் | நன்னூல் | இலக்கண விளக்கம் | தொன்னூல் விளக்கம் | முத்துவீரியம் | சுவாமிநாதம் |
|---|---|---|---|---|---|---|---|
| நூன்மரபு - 33 | | | எழுத்தியல் -72 | எழுத்தியல் -37 | எழுத்தியல்-2 | எழுத்தியல்- 114 | எழுத்தாக்க மரபு 10 |
| மொழிமரபு - 49 | | | | | எழுத்தின் பகுப்பு-17 | மொழியியல் 44 + 1 | பதமரபு -5 |
| பிறப்பியல் - 21 | | | | | எழுத்தின் விகாரம்-20 | புணரியல் 297+1 | புணர்ச்சி மரபு-5 |
| புணரியல் - 40 | சந்திப்படலம்-28 | | | | | | |
| தொகைமரபு - 30 | | எழுத்ததிகாரம் 24 | | | | | |
| உருபியல் - 30 | | | பதவியல் -23 | பதவியல்-15 | | | |
| உயிர்மயங்கியல்-93 | | | உயிரீற்றுப் புணரியல்-53 | உயிரீற்றுப் புணரியல்-66 | | | |
| புள்ளிமயங்கியல் - 110 | | | மெய்யீற்றுப் புணரியல்-36 | மெய்யீற்றுப் புணரியல்-29 | | | |
| குற்றியலுகரப்புணரியல் -77- | | | உருபுபுணரியல் - 18 | உருபுபுணரியல் - 11 | | | |
| இயல்கள் 9 | 1 | 1 | 5 | 5 | 3 | 3 | 3 |
| நூற்பாக்கள்-483 | 28 | 24 | 202 | 158 | 39 | 455+2 | 20 |

தமிழ்இலக்கண நூல்களுள் எழுத்திலக்கணத்தைச் சிறப்பித்துக் கூறும் நூல்கள் தொல்காப்பியம், வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம் என்ற எட்டு நூல்களேயாகும். இவை எழுத்திலக்கணத்தை எவ்வாறு பாகுபாடு செய்து கொண்டுள்ளன என்பதனை மேலே காட்டிய அட்டவணை விளக்கும்.

தொல்காப்பியர் தமது இலக்கண நூலினை 3 அதிகாரங்களாகவும், ஒவ்வொரு அதிகாரத்தையும் 9 இயல்களாகவும் வகுத்துக் கொண்டுள்ளார். ''இது ஒரு பொதுப் பாகுபாடேயன்றி எழுத்ததிகாரச் சிறப்புப் பாகுபாடாகக் கொள்ள இயலாது. அவர் தம் எழுத்திலக்கணக் கோட்பாட்டைப் புரிந்து கொள்ள நூன்மரபு, மொழிமரபு என்பனவற்றை எழுத்தியல் என்று பொதுமைப்படுத்தி விடலாம். தொல்காப்பிய எழுத்ததிகாரம் எழுத்தியல், பிறப்பியல், புணரியல் என்ற மூன்று பெரும் பிரிவாக அமைந்துள்ளது என்று கொள்வது அவருடைய இலக்கணக் கோட்பாட்டை விளக்குவதாக அமையும்'' என்பர் பேராசிரியர் டாக்டர் எஸ். வி. சண்முகம். இக்கோட்பாடு பொதுவாக எல்லாத்தமிழ் இலக்கண நூல்களுக்கும் பொருந்தும்.

தொல்காப்பியர் எழுத்திலக்கணத்தைச் சிறப்பு முறையில் பகுத்துக் கூறாவிடினும், இளம்பூரணரும், நச்சினார்க்கினியரும் எட்டுவகையானும், எட்டிறந்த பலவகையானும் உணர்த்தினார் என்பர்.

உரையாசிரியர்கள் கூறிய எண், பெயர், முறை, அளவு, பிறப்பு, புணர்ச்சி, வடிவு, தன்மை என்பனவும், பிறவும் தனித்தனி உறுப்புக்கள் என்ற அளவினவேயன்றிப் பெரும் பிரிவாகப் பிரிக்க முடியாதவை. எவ்வாறாயினும் தொல்காப்பியர் 9 இயல்களில் 483 நூற்பாக்களில் எழுத்திலக்கணத்தை விரிவாகக் கூறியுள்ளார் என்பது வெள்ளிடைமலை.

இக்கால இலக்கண நூல்களுள் அவிநயனார் எழுத்திலக்கணத்தை ஏழு வகையாகப் பகுப்பர். நன்னூலாரே எண்ணிக்கை முறையில் எழுத்திலக்கணத்தை முழுமையாகக் கூறிய பெருமைக்குரியவர் ஆவர். இவர் எழுத்ததிகாரத்தை

'எண்பெயர் முறை பிறப்புருவ மாத்திரை
முதலீ றிடைநிலை போலி என்றா
பதம்புணர்பெனப் பன்னிருபாற்றதுவே' (நன்-நூல். 57)

எனப் பன்னிரண்டு பிரிவாகப் பிரித்துக்கூறுகிறார். எண் முதல போலி இறுதியான ஒன்பதும் ஒருபகுப்பு. இப்பகுப்பை உரையாசிரியர்கள் எழுத்தியல் எனப் பெயரிட்டு உள்ளனர். பதம்-பதவியல் என்றும், புணர்ச்சி-உயிரீற்றுப்புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என்று மூன்று பிரிவாகவும் பகுத்துக் காட்டுகின்றனர். எனவே நன்னூல் எழுத்ததிகாரத்தை இவர்கள் ஐந்து பெரும் பிரிவாகக் கருதுகின்றனர் என்பது தெளிவு. இதனை யொட்டியே இலக்கண விளக்கமும் எழுத்திலக்கணத்தைப் பகுத்துக் கொண்டுள்ளது.

தொன்னூல் விளக்கம் எழுத்ததிகாரத்தை மூன்று பெரும் பிரிவாகவே பிரித்திருந்தாலும் அதன் பகுப்பு முறை ஏனைய இலக்கண நூல்களிலிருந்து வேறுபட்டது.

'தோற்றமும் வகுப்பும் தோன்றும் விகாரமும்
சாற்றுளித் தோன்றும் தான்எழுத்து இயல்பே'

என்பது இந்நூலின் முதல் நூற்பா. எனவே இவர் தோற்றம், வகுப்பு, விகாரம் எனப் பிரித்துள்ளார் எனலாம். ஆனால் பதிப்பாசிரியர்கள் இதனைக் கருத்தில் கொள்ளாமல் எழுத்தியல், எழுத்தின் வகுப்பு, எழுத்தின் விகாரம் எனத் தலைப்பிட்டுள்ளனர்.

முத்துவீரியம் எழுத்ததிகாரப் பாகுபாடு ஒன்றையும் குறிப்பிடவில்லை. எனினும் பதிப்பாசிரியர்கள் எழுத்தியல், மொழியியல், புணரியல் என்று மூன்றாக வகுத்துக் காட்டியுள்ளனர்.

சுவாமிநாதம் நன்னூலைப் போலவே எழுத்ததிகாரத்தைப் பன்னிரண்டு பிரிவாகப் பிரித்துள்ளது. ஆனால் அவர் 'இலக்கண விரிவை ஒவ்வொரு மூன்று இயலால் அடக்கி மொழிந்தவன்' என்று கூறுகிறார். ஒவ்வொரு அதிகாரத்தையும் மூன்று பெரும் பிரிவுகளாக ஆசிரியர் அமைத்துக்கொள்கிறார் என்பது தெளிவு. இப்பகுப்பில் எழுத்ததிகாரம் எழுத்ததிகாரமரபு, பதமரபு, புணச்சிமரபு என்று சிறப்புப் பெயர் பெற்றுள்ளது.

இவ்விலக்கண நூல்களில் வீரசோழியமும், நேமிநாதமும் தனிப் போக்குடையனவாக உள்ளன.

வீரசோழியம் 'சந்திப்படலம்' என்ற ஒரே இயலாக எழுத்திலக் கணத்தை விவரிக்க, நேமிநாதமும் அதனைப் பின்பற்றி எழுத்ததி காரத்தை உட்பிரிவின்றி ஒரே இயலாகவே கூறியுள்ளது.

இரண்டு நூல்களுமே எழுத்திலக்கணத்தை உட்பிரிவின்றி எழுத்தியல், புணரியல் என்ற வகையில் கூறியுள்ளன. பிறப்பியல செய்திகள் பொதுநிலையிலேயே கூறப்பெற்றுள்ளன. அச்செய்தி கள் நன்னூலில் இருப்பது போல எழுத்தியலுக்குள் அடங்கி யுள்ளன. ஆதலால் தொல்காப்பியம் கூறுவது போல எழுத்தியல், பிறப்பியல், புணரியல் என்று மூன்று பெரும் பிரிவாகக் கொள்ள முடியாது.

நேமிநாதம் – எழுத்திலக்கணக்கருத்துக்கள்

1. முதலெழுத்து

தமிழ் இலக்கணங்கள் தமிழ் எழுத்துக்களை முதலெழுத்து சார்பெழுத்து என்று பகுத்துரைக்கும் மரபினைக் காண்கின்றோம். தொல்காப்பியர் உயிர் – 12, மெய் – 18 ஆக 30 எழுத்துக்களையும் முதலெழுத்து என்பர். நேமிநாதம் உயிர்-12, ஆய்தம்- , மெய்- 18 ஆக 31-ஐயும் குறிப்பிட்டு 'நண்ணு முதல் வைப்பு ஆகும் நன்கு' (நேமி-1) என்று சுட்டுகிறது. நேமிநாதர் முதல் என்பதனை முதல்வைப்பு என்று சுட்டுவதோடு சார்பாகிய ஆய்தத்தை முதலாக எண்ணுவதும் சிந்திக்கத்தக்கது.

நேமிநாத உரையாசிரியர் மேற்கோளாகக் காட்டும் நூற்பாவும்

'அகரம் முதலாக ஆய்தம் இடையா
னகரம் ஈறாக முதல் வைப்பு'

என முதல் வைப்பு என்ற பெயரையே ஆள்கின்றது. முதல் வைப்பு என்று குறிப்பிட்ட நேமிநாதர் இரண்டாம் வைப்பு என்ற ஒன்றைக் கூறவில்லை. ஆனால் உரையாசிரியர் இரண்டாம்

வைப்பு என்று உயிர் மெய்யெழுத்து, அவற்றுள் குற்றெழுத்து, நெட்டெழுத்து, ஒற்றளபெடை, உயிரளபெடை ஆகியவற்றைக் குறிப்பிட்டுள்ளார். "இம்முதல் வைப்பு, இரண்டாம் வைப்பு என்பன முதல்தரம், இரண்டாம்தரம் என்னும் பொருளிலேயே ஆளப்படுகின்றன. இக்காலத்தாரும் சார்பெழுத்துக்களை இரண்டாம் தர ஒலிகள் என்பர்"[10]. முதல்வைப்பு, இரண்டாம் வைப்பு என்ற பாகுபாட்டை விளக்க முயலும் பேராசிரியர் டாக்டர் எஸ். வி. சண்முகம் "தனிவரிவடிவு உடையனவற்றை முதல் வைப்பு என்றும், ஏனையவற்றை இரண்டாம் வைப்பு என்றும் கருதியிருக்க வேண்டும்"[11] என்பர். இக்கருத்தினை ஏற்றால் தொல்காப்பியர் காலத்தில் தனிவடிவு பெறாத ஆய்தம் குணவீரபண்டிதர் காலத்தில் தனிவரிவடிவுடையதாக இருந்திருக்கும்.

முதல்வைப்பு என நேமிநாதர் குறிப்பிடும் ஆய்தத்தை முதலெழுத்தாகக் கொள்ள முடியாது. முதல் என்பது அடிப்படை என்ற பொருள்பயக்கும். தொல்காப்பியர் ஆய்தத்தைச் சார்பாகவே கொண்டார். முதல், சார்பு என்ற பாகுபாட்டைத் தெளிவாகக் கூறிய நன்னூலாருங்கூட ஆய்தத்தைச் சார்பெழுத்து என்றே வகுத்தார். "தாமே தமித்து நிற்கையின் முதலெழுத்து என்றாயின; அவையே தம்மொடு தாம் சார்ந்தும் இடம் சார்ந்தும், இடமும் பற்றுக்கோடும் சார்ந்தும் விகாரத்தால் வருதலின் சார்பெழுத்து என்றாயின"[12] என்பர் மயிலைநாதர். எனவே சார்ந்து வரும் ஆய்தம் சார்பெழுத்தே. முதல் வைப்பிற்குரியதன்று.

2. எழுத்துக்களின் அளவு

தொல்காப்பியர் குற்றெழுத்து, நெட்டெழுத்து, அளபெடை, உயிர்மெய், மெய்யெழுத்து, குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம், மகரக்குறுக்கம் ஆகியனவற்றிற்கே நூன்மரபில் கால அளவு கூறுகின்றார். மொழிமரபில்

'ஓரள பாகும் இடனுமா ருண்டே
தேருங் காலை மொழிவயி னான'

என்பர். இந்நூற்பா ஐகார ஔகாரக்குறுக்கங்களுக்கு மாத்திரை கூறுவது எனக் கொண்டு இக்குறுக்கங்கள் ஒருமாத்திரைபெறும்

என்பர் நச்சினார்க்கினியர். இளம்பூரணரோ இந்நூற்பா ஐகாரக் குறுக்கம் மட்டுமே கூறுவது என்பர். நன்னூலார் ஐகார ஔகாரக் குறுக்கங்களுக்கு ஒரு மாத்திரை அளவு கூறுகின்றார். வீரசோழியமும் நேமிநாதமும் இக்குறுக்கங்களுக்கு ஒன்றரை மாத்திரை எனக் கூறுகின்றன. சிவஞான முனிவர் "இக்குறுக்கங்கள் ஒன்றரை மாத்திரை பெறுமானால் அவை முனிவர்களால் இயற்றப்பட்ட நூல்களில் அருகிவந்து செய்யுள் வழுவமைதியால் முடிவன"[13] என்பர். காரிகை உரையாசிரியர் இக்குறுக்கங்கள் ஒன்றரை மாத்திரையாயும், ஒருமாத்திரையாயும் குறுகும் என்பர்.[14]

3. எழுத்துக்களின் வடிவம்

வீரசோழியம், நேமிநாதம் இரண்டும் எ,ஒ, மெய் ஆகிய மூன்று எழுத்துக்களும் புள்ளிபெறும் என்று கூறுகின்றன. ஆனால் ஏனைய வடிவங்களைப் பற்றிக் குறிப்பிடவில்லை.

'எகர ஒகர மெய்யில் புள்ளிமேவும்' (வீரசோ-3)
'ஏதமிலா எஒ மெய் புள்ளிபெறும் என்ப' (நேமி-9)

தொல்காப்பியர் மெய்யெழுத்துக்களும், எகரம், ஒகரம் ஆகிய குற்றெழுத்துக்களும், ஆய்தம், மகரக் குறுக்கம், குற்றியலுகரம் ஆகிய சார்பெழுத்துக்களும் புள்ளிபெறும் எனக்கூறுவதால் குறைந்த மாத்திரையுடைய எழுத்துக்கள் புள்ளி பெற்றன என்பது அவர்தம் கொள்கை.

4. முற்றியலுகரம் – குற்றியலுகரம்

'நெட்டெழுத்திம்பரும் தொடர்மொழியீற்றும்
குற்றியலுகரம் வல்லா றூர்ந்தே' (தொ. மரபியல் நூ. 3)

இந்நூற்பா தனிமொழிக் குற்றியலுகரத்திற்கு இடனும் பற்றுக் கோடும் உரைப்பது. இந்நூற்பா உரையில் முற்றியலுகரத்தின் முன் உயிர்வரின் அவ்வுயிர் ஏறிமுடியாது. குற்றியலுகரத்தின் முன் உயிர்வரின் அவ்வுயிர் ஏறிமுடியும் என நச்சினார்க்கினியர் வேறுபாடு காட்டுகின்றார்.

நேமிநாதம், முற்றியலுகரத்திற்கு முன் உயிர் வந்தாலும் ஏறி முடியும் என இலக்கணம் கூறுகின்றது.

'முற்றுகரத் தன்மையும் போம் ஆவியினைச் சார்ந்து'
(நேமி-14)

இதனைப் பின்பற்றி நன்னூல்

'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டோடும்
யவ்வரின் இய்யாம்; முற்றும் அற்று ஒரோவழி'
(நன். நூ. 164)

என விதி செய்கிறது. இதனால் புணர்ச்சியில் முற்றியலுகரமும் குற்றியலுகரத் தன்மை பெறும் என்பது நேமிநாதத்தின் கொள்கையும் நன்னூலின் கொள்கையுமாகும். இக்கொள்கையில் இவ்விரண்டு நூல்களும் தொல்காப்பியத்திலிருந்து வேறுபட்டுச் செல்லக் காரணம் என்ன? தொல்காப்பியர் காலத்திற்குப்பின் முற்றியலுகரமும் ஒலி நிலையில் குற்றியலுகரமாக ஒலிக்கப் பெற்றது என்பதேயாகும். இன்றும் 'கதவு', 'மண்ணு' போன்ற முற்றியலுகரங்களை முற்றியலுகரமாக ஒலிக்காமல் குற்றியலுகரமாக ஒலிக்கிறோம்.

5. ஆய்தக் குறுக்கம்

தொல்காப்பியர் ஆய்தக்குறுக்கம் பற்றிக் கூறவில்லை. ஆனால் 'ஆய்தம் அஃகாக்காலையான' என்று குறிப்பிடுவதால் 'ஆய்தம் அஃகும்' என்ற உணர்வை அதுதோற்றுவிக்கிறது என்பர்[14] டாக்டர் ச. வே. சுப்பிரமணியம்.

'காலாம் குறுகும் அவ்வாய்தம்' (நேமி) என நேமிநாதம் ஆய்தக்குறுக்கத்தை உடன்படுகிறது.

ஆய்தக்குறுக்கம் இன்றெனின் நேமிநாதம் இதனைத் தனியாகக் கூறும் காரணம் என்ன? தனிமொழியில் வரும் ஆய்தத்திற்கும் தொடர்மொழியில் வரும் ஆய்தத்திற்கும் ஒலிவேறுபாடு உண்டு எனக் கருதியே தொடர்மொழியில் வரும் ஆய்தத்தினை

ஆய்தக்குறுக்கம் என்றார். இத்தகைய ஒலிவேறுபாடு இருந்ததற்கு வேறுசான்றுகள் எதுவும் கிடைக்கவில்லை என்பர்[15] பேராசிரியர் டாக்டர் எஸ். வி. சண்முகம். இக் கருத்து மேலும் சிந்திக்கத்தக்கது.

வேங்கடராசுலு ரெட்டியார் உருவினும் இசையினும் அருகித் தோன்றும் ஆய்தத்தினை மட்டும் ஆய்தக்குறுக்கம் எனலாம் என்பர்.

6. மொழி முதல் எழுத்துக்கள்

சகரமெய் அ, ஐ, ஔ என்னும் மூன்று உயிர்களும் நீங்கலாக ஒன்பது உயிர்களுடன் கூடி மொழிமுதலில் வரும் என்பர் தொல்காப்பியர். ஆனால் வீரசோழியம், நேமிநாதம், நன்னூல், முத்து வீரியம் ஆகியன சகரமெய் பன்னீருயிரோடும் கூடி மொழி முதலாகும் எனக் குறிப்பிடுகின்றன. தொல்காப்பியருக்குப்பின் மொழியில் ஏற்பட்ட மாற்றத்தையே இது காட்டுகிறது.

7. மொழியிறுதி எழுத்துக்கள்

தொல்காப்பியர் உயிர் 12, மெய்யெழுத்துக்களுள் 'ங' கரம் நீங்க 11, குற்றியலுகரம் 1, ஆக 24 –ம் மொழியிறுதி எழுத்துக்கள் என்றார்.

வீரசோழியம் எ, ஒ நீங்கலாக உயிரெழுத்து 10–ம், ன், ம், ண், ய், ர், ல், ழ், ள், என்னும் மெய் – 8 – ம் ஆக 18ம் மொழியிறுதியில் வருவன என்று கூறும்.

நேமிநாதம் எ,ஒ, ஔ என்னும் உயிர் நீங்கலாக ஏனைய – 9– ம், ண், ன், ம், ய், ர், ல், ழ், ள், என்னும் – 9 –ம் இறுதியில் வரும் என்று கூறும்.

வீரசோழிய ஆசிரியர் ஔகாரம் வரும் என்றார். நேமிநாதர் அதனை விலக்கினார். வீரசோழியர் வகரமெய்யை நீக்கினார். நேமிநாதர் அது இறுதியில் வரும் என்றார்.

வீரசோழியமும் நேமிநாதமும் குற்றியலுகரத்தினை இறுதி எழுத்துக்களுள் ஒன்றாகக் கூறாவிட்டாலும் குற்றியலுகரத்தினை உடன்படுவதால் இறுதியில் வரும் என்பதனையும் உடன்பட்டன எனலாம்.

8. உயிரளபெடை

ஓசை குறைந்த சொற்களில் நெட்டெழுத்துக்குப்பின்னர் இனக் குற்றெழுத்து வந்து ஓசையை நிறைவு செய்யும் என்பர் தொல் காப்பியர். குறைந்த ஓசையை நிறைவு செய்வது இனக் குற்றெழுத்து எனபதனைக் குறிக்கவே 'ஒத்தகுற்றெழுத்து இசை நிறைக்கும்' என்றார் தொல்காப்பியர். வீரசோழிய ஆசிரியர் 'நெடுநீர்மை அளபு' (2)எனக்குறிப்பிடுவதால் *நெட்டெழுத்தை நீட்டிச் சொல்ல உயிரளபெடை தோன்றும் (நேமி – 3) என்று கூறுகிறார். நன்னூலார் நெடில் அளபெழும் எனத் தெளிவாகக் கூறுகிறார். சிவஞானமுனிவரும் இக்கருத்தினரே.

ஓரெழுத்து மூன்று மாத்திரையாக ஒலிக்காது என்றமையால் இரண்டு எழுத்துக்கள் கூடி அவ்வாறு ஒலிக்கும் என்பது வெளிப்படை. எனவே நெட்டெழுத்தும் குற்றெழுத்தும் சேர்ந்ததே அளபெடை.

நேமிநாதர், நன்னூலார் கருத்துப்படி அளபெடையில் நெட்டெழுத்தே மூன்று மாத்திரையாக ஒலிக்கும் என்றால் இந்த நெட்டெழுத்து இரண்டு மாத்திரையுடைய நெட்டெழுத்திலிருந்து வேறுபட வேண்டும். எனவே நெட்டெழுத்தே நீண்டு இசைக்கும் என்பது பொருந்தாது.

நேமிநாத முறையில் குறைகள்

வீரசோழியமும், நேமிநாதமும் எழுத்ததிகாரத்தை ஒரே இயலாக விவரித்துள்ளன, இவைதொகுநிலைமுறையின என்பதைக் காட்டுகின்றன. இலக்கணக்கருத்துக்களின் தொகுப்பும் தொடர்பு இல்லாமலும் பொருத்தம் இல்லாமலும் உள்ளன.

---

* நெட்டெழுத்தே அளபெடுக்கும் என்ற கொள்கையர் ஆவர் நேமிநாதர்.

வீரசோழியம் போல நேமிநாதத்திலும் தொடர்பற்ற முறையில் நூற்பாக்கள் அமைந்துள்ளன. ''குற்றியலிகரம், குற்றியலுகரம் கூறும் சூத்திரத்தில் (4) உயிர் ஈறும் மெய் முதலும் பெறும் புணர்ச்சி வருணிக்கப்படுகிறது. உடம்படுமெய் விவரிக்கும் சூத்திரத்திலேயே (13) மகர ஈற்றுச் சொற்கள் உயிர் முதன் மொழியோடு புணரும் புணர்ச்சி மாற்றம் ஆகியன விளக்கப்பட்டுள்ளன. புணர்ச்சி பற்றிய பிற சூத்திரங்கள் அகரவரிசைப் படுத்தப்படவில்லை''[16] என்பர் பேராசிரியர் டாக்டர் எஸ். வி. சண்முகம். இக்கருத்து முழுமையாக ஏற்கத்தக்கதாகும்.

தொகுப்புரை

1. நேமிநாத நூற்பாக்கள் வெண்பாவால் அமைந்துள்ளமை ஏற்புடையதே.
2. நேமிநாதம் வீரசோழியத்தையும், தொல்காப்பியத்தையும் முதனூலாகக் கொண்டது.
3. மிகுந்த சுருக்கம் கருதி நேமிநாதம் இலக்கண வளர்ச்சியைப் புலப்படுத்தத் தவறிவிட்டது.
4. நேமிநாதம் பிறப்பியல் செய்திகளைப் பொதுநிலையில் கூறுவதால், அச்செய்திகள் நன்னூலில் இருப்பது போல எழுத்தியலுக்குள் அடங்கியுள்ளன. எனவே தொல்காப்பியம் போல எழுத்தியல், பிறப்பியல், புணரியல் என்று மூன்று பெரும் பிரிவாகக் கொள்ள முடியாது.
5. முதல் வைப்பு என நேமிநாதர் குறிப்பிடும் ஆய்தத்தை முதலெழுத்தாகக் கொள்ள முடியாது.
6. புணர்ச்சியில் முற்றியலுகரமும் குற்றியலுகரத் தன்மை பெறும் என்பது நேமிநாதத்தின் கொள்கை. இக்கொள்கை தொல்காப்பியர் காலத்திற்குப்பின் முற்றியலுகரமும் ஒலிநிலையில் குற்றியலுகரமாக ஒலிக்கப்பெற்றது என்பதைக் குறிக்கிறது.
7. தனிமொழியில் வரும் ஆய்தத்திற்கும் தொடர்மொழியில் வரும் ஆய்தத்திற்கும் ஒலிவேறுபாடு உண்டு எனக் கருதியே தொடர்மொழியில் வரும் ஆய்தத்தினை நேமிநாதர் ஆய்தக்குறுக்கம் என்றார்.

8. சகர மெய் பன்னீருயிரோடுங்கூடி மொழி முதலாகும் என நேமிநாதம் குறிப்பிடுவது தொல்காப்பியருக்குப் பின்பு மொழியில் ஏற்பட்ட மாற்றத்தைக் காட்டுகிறது.

9. மொழியிறுதி எழுத்துக்களில் குற்றியலுகரமும் ஒன்று என்பது நேமிநாதத்திற்கும் உடன்பாடு.

10. உயிரளபெடையில் நெட்டெழுத்தே மூன்று மாத்திரையாக ஒலிக்கும் என்ற நேமிநாதக்கருத்துப் பொருந்தாது.

11. இலக்கணக்கருத்துக்களைத் தொகுத்துரைப்பதில் தொடர்பும் பொருத்தமுமில்லை.

அடிக்குறிப்பு

1. ''பூவின் மேல் வந்தருளும் புங்கவன்தன் பொற்பாதம்''
2. ''தாதார் மலர்ப்பிண்டித் தத்துவனை வந்தித்து''
3. ''மதிகொண்ட முக்குடைக்கீழ் வாமன் மலர்த்தாள் துதி கொண்டு''
4. சதாசிவ பண்டாரத்தார், டி.வி. பிற்காலச்சோழர் சரித்திரம் பகுதி 11 பக். 165
5. பதிற்றுப்பத்து, 76. உரை
6. பேராசிரியர்-தொல்காப்பிய மரபியல் நூ. 100 உரை.
7. இளவரசு, சோம - தொல்காப்பியம் எழுத்ததிகாரம், நச்சினார்க்கினியம்-அஞ்சல் வழிப்பாடக்குறிப்பு
8. பேராசிரியர் டாக்டர் சுப்பிரமணியம், ச.வே.-இலக்கணத் தொகை. எழுத்து. முன்னுரை-பக். 13
9. பேராசிரியர் டாக்டர் சண்முகம், எஸ்.வி. எழுத்திலக்கணக் கோட்பாடு. பக். 30
10. தொல்காப்பிய மொழியியல், பக். 95
11. பேராசிரியர் டாக்டர் சண்முகம், எஸ்.வி. எழுத்திலக்கணக் கோட்பாடு-பக். 110
12. மயிலை நாதர்-நன்னூல் நூ. 60 உரை.
13. சிவஞானமுனிவர்-நன்னூல் நூ. 99 உரை
14. யாப்பருங்கலக்காரிகை, காரிகை 4 உரை.
15. பேராசிரியர் டாக்டர் சுப்பிரமணியம், ச.வே. இலக்கணத் தொகை-எழுத்து. பக். 28
16. பேராசிரியர் டாக்டர் சண்முகம், எஸ்.வி. -இலக்கணக் கோட்பாடு. பக். 275.

# இலக்கண விளக்கம்

டாக்டர், சொ. சிங்காரவேலன்

## 1. குட்டித் தொல்காப்பியம்

உயர்தனிச் செம்மொழியாகிய செந்தமிழ்க்குத் தொல்காப்பியம் முதல் காலந்தோறும் மலர்ந்து வரும் இலக்கண நூல்கள் நல்லணிகளாகத் திகழ்ந்து வருகின்றன. அரிய இலக்கண நுட்பங்கள் பலவற்றை நம்மொழியிற் கண்டு அவற்றைப் படைத்துப் புதுப் புனுவல்கள் ஆக்கும் அருந்திறம் பெற்ற பெரும்புலவர் பலர் ஆவர். ''இலக்கணவிளக்கம்'' என்னும் இன்றமிழ்த் திருநூல், அந்நெறியில் திருவாரூர் வைத்தியநாத தேசிகராற் செய்யப்பெற்ற பெரு நூல் ஆகும்; ''குட்டித் தொல்காப்பியம்'' என்று புலவர் உலகத்தால் பாராட்டப்பெறும் இதன் பொருளமைப்புப்பற்றி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும். கி.பி. 17ஆம் நூற்றாண்டில் தோன்றிய இவ்விலக்கண நூல் தொல்காப்பியத்திற்குப் பிறகு. பல நூற்றாண்டுகளுக்குப் பின்னே, தனிமுழுமுதல் நூலாகத் தோன்றியமை தமிழர் தவப்பேறே எனலாம்.

## 2. பதிப்புநலம்

இலக்கண விளக்க முதற்பதிப்பு, யாழ்ப்பாணம் திரு .சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்களின் முழுமுயற்சியின் பயனாகக் கி.பி. 1889ல் வெளிவந்தது; இலக்கண விளக்க ஆசிரியர் பரம்பரையில் வந்த திரு.ச. சோமசுந்தரதேசிகர் அவர்களாற் 'பொருளதிகாரம்' மட்டும் பின்னர் வெளிவந்தது; கி.பி. 1941ல் வெளிவந்த இப்பதிப்பிற்குச் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராக இருந்த தமிழறிஞர் பெருந்தகை திரு. வையாபுரிப்பிள்ளை அவர்கள் உதவினர். சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் வழிப் புலவர் சேயொளி அவர்கள் கி.பி. 1973 இல் 'எழுத்து'

'சொல்' அதிகாரங்களைப் பதிப்பித்தனர். தஞ்சை சரசுவதி மகால் நூலகவழித் திரு. வே. கோபாலையர் அவர்களின் பதிப்பு 1973-இல் வெளிவந்தமையைத் தமிழ் உலகு இனிது உணரும். தமிழ்ப் புலவர் உலகின் பாராட்டுதலுக்குரிய திருவாரூர் வைத்தியநாத தேசிகர் அவர்களின் இவ்விலக்கணப் படைப்பு இனிய தமிழ் உலகத்தில், தொல்காப்பியத்தின் பின் தோன்றி மலர்ந்த பல்வேறு மாற்றங்களைத் தழுவியும், தள்ளியும் ஆய்ந்த முடிவுகள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டது ஆகும். "இன்றைய ஆராய்ச்சியாளர், தமிழ் மொழியின் எவ்வகை ஆய்விற்கும் தொல்காப்பியத்தையே கருவிநூலாகக் கொள்வர். உரையாசிரியர், இளம்பூரணர். சேனாவரையர், பேராசிரியர், நச்சினார்க்கினியர், கல்லாடர், தெய்வச்சிலையார் மற்றும் பழைய உரையாசிரியர்கள் பலரும் உரை வகுத்துழிப் பலப்பல உரைவேற்றுமைகளைக் காட்டி விளக்கியுள்ளனர். அவ்வுரைகளில் திகழும் நயங்கள், அவற்றால் விளங்கும் பொதுமைக் கருத்துக்கள், தேர்ந்த பாடல்கள் ஆகியவற்றை எடுத்துக் காட்டவும், நன்னூல் அன்ன பன்னூல்களிடத்தும் அவற்றின் உரைகளிடத்தும் காணப்படும் பொருந்தாதனவற்றை விலக்கி, ஒவ்வன விளக்கித் தொகுத்துரைக்கவும் இந்நூல் எழுந்ததாதலின், இந்நூல் தொல்காப்பியத்தை அடுத்து நின்று சிறந்த கருவிநூலாக இன்றைய இலக்கண, இலக்கிய, மொழிநூல், திறனாய்வு ஆகிய பலதுறைகளை ஒரோவழிவிளக்கி நிற்றலான் ஆராய்ச்சியாளர்கட்கெல்லாம் பெருவிருந்தாய் அமைந்து வழிகாட்டும் என்பதில் எட்டுணையும் ஐயமின்று" என்று பாராட்டுவர் புலவர் சேயொளி அவர்கள்; இப்பாராட்டுப் புனைந்துரையன்று, முற்றும் மெய்ம்மையே என்பது இந்நூலினை ஆய்வோர் கூறும் தெளிவுரை.

3. மூலமும் உரையுமாக ஆசிரியரே எழுதும் புதிய முறை

இந்நூலாசிரியர் கயத்தாற்றில், மதுரைத் திருமலைநாயக்கர் செயற்குழுத் தலைவராகிய மாதைத் திருவேங்கடநாதரின் மக்களுக்குத் தமிழ்கற்பித்துவந்த ஞான்று. அவரது வேண்டுகோளுக்கிணங்கி இந்நூலைப் படைத்தனர் என்பது இந்நூற் சிறப்புப் பாயிரத்தால் விளங்குகின்றது; "முன்னோர் நூலின் முடிவு நோக்கிச், சொல்லும் பொருளும் ஒல்வன தழீஇப், பல்சுவைக

கரும்பின் ஒருவட்டு ஏய்ப்ப, இலக்கண விளக்கம் என்று ஒரு பெயர் நிறீஇப், புலப்படுத்தியலுறப் பொருள் விரித்துரைத்தனன்'' என்பன பாயிரவரிகள். வரலாற்று முறை மொழியியல் (Historical Linguistics) நோக்கில் இந்நூல் எழுந்தது எனல் இதனால் விளங்கும். தாம் வரைந்த இந்நூலுக்குத் தாமே உரையும் வரைந்தனர் என்பது, ''பொருள் விரித்துரைத்தனன்'' என்ற தொடரால் இனிது விளங்கும். உரையாசிரியர்களால் மூலநூலாசிரியரின் கருத்து வெவ்வேறு வகையில் திரிதலைக் காலப்போக்கில் கண்ட தேசிகர், தம் நூல்உணர்த்தும் கருத்தும் பிற்காலத்துத் தெள்ளிதின் தோன்றற் பொருட்டு உரைப்பகுதியையும் தாமே புனைந்தனராதல் வேண்டும். இஃது ஓர் இனிய புதிய முறை என்பது உணரத்தக்கது.

4. அமைப்பு நலம்

இந்நூல் மூன்று அதிகாரங்களை உடையது; (எழுத்து, சொல், பொருள்) எழுத்து அதிகாரம் 158 நூற்பாக்களைக் கொண்டது; சொல்லதிகாரம் 214 நூற்பாக்களை உடையது; பொருள் அதிகாரம் 388 நூற்பாக்களை உடையது; பாட்டியல் 181 நூற்பாக்களால் ஆகியது; ஆக 941 நூற்பாக்களை உடைய உரையிடையிட்ட இலக்கண நூலாக இவ்வாறு இதனைத் தேசிகர் படைத்துள்ளார். ஏறத்தாழ ஓராயிரம் நூற்பாக்களை உடைய இவ்விலக்கண விளக்க நூலைக் கற்போர் தமிழ்மொழியின் தனிப் பேரிலக்கண நுட்பங்களைத் தக்காங்கு உணர்ந்தோர் ஆவர். (இதனைத் தமிழகப் பல்கலைக்கழகங்கள் தமிழ் பயிலும் மாணாக்கர்கட்கு மீண்டும் பாடப் பகுதியாக அமைத்தால், இதனைக் கற்போர் தொகை மீண்டும் பெருகும் என்பதையும், அருகி வழங்கும் இலக்கண நூல் பெருகி வழங்கும் பெரு நூலாக மீண்டும் வாழ்வு பெறும் என்பதனையும் இக்கருத்தரங்கிற் சுட்டிக் காட்டுவது தவறாகாது.)

4.1. இயல்வகை

எழுத்ததிகாரம் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபுபுணரியல் என்று ஐந்து இயல்களாகவும், சொல் அதிகாரம் பெயரியல், வினையியல்,

இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல், பொதுவியல் என்று ஐந்து இயல்களாகவும் பிரிக்கப்பட்டுள்ளன. பொருள் அதிகாரம் அகத் திணையியல், புறத்திணையியல், யாப்பு, அணி, பாட்டியல் என்று ஐந்து இயல்களாகவும் அமைக்கப்பட்டுள்ளது. 'பாட்டியல்' என்ற பகுதி எழுத்து முதல் ஐந்திலக்கணங்களோடு இணைத்துப் பேசப் பட்டுள்ளமை இந்நூலின் சிறப்பியல்.

## 4.2. கடவுள் வணக்கமும் கருத்தும்

எழுத்ததிகாரக் கடவுள் வணக்கம் ''மலைமகள் ஒருபால் மணந்துலகளித்த தலைவனை வணங்க'' வதாக அமைந்துள்ளது[3]; சொல்அதிகாரம், ''உமையவளொடு கலந்து உலகு புரந்தருளும் அமைவனது அடிபணி'' வதாக அமைகின்றது : பொருள் அதி காரக் கடவுள் வணக்கம், ''உமையுரு வுருமடுத்து உலகு இளைப் பொழிக்கும் இமையவன் அடிபணி'' வதாகத் திகழ்கின்றது[5]. ''மலையரசன் மகளாகிய உமாதேவியைத் தனது ஒருகூற்றின் கண்ணே கலந்து உலகத்தைப் படைத்த இறைவன்'' என்றும், ''உமாதேவியோடு பொருந்தி உலகத்தைக் காத்துநிலைபெறச் செய்யும் இறைவன்'' என்றும், ''உமாதேவியினது திருவுருவைத் தனது திருவுருவின்கண்ணே அடக்கி உலகத்து இளைப்பினை ஆற்றும் இறைவன்'' என்றும் இம்மூன்று நூற்பாக்களிலும் சிவபிரான் சேவடிகளை இவ்வாசிரியர் ஏத்துகின்றமை, இவரது சிவநெறிப்பற்றினை இனிது உணர்த்துகின்றது. ''அம்மையப்பரே உலகுக்கு அம்மையப்பர் என்று அறிக'' என்று சித்தாந்தசைவ மேலோர் உணர்த்தும் திருக்கோலத்தையே தேசிகர் ஏத்தினர்[6]; இது ''ஈரெழிற் கோலம்'' என்றும், ''தொன்மைக் கோலம்'' என்றும் சைவ குரவராற் போற்றப்பெற்ற திருக்கோலம்[7]. அன்றியும், ''நீலமேனி வாலிழை பாகத்து ஒருவன்'' என்று சங்கச் சான்றோர் சாற்றிய தகையெழிற் கோலமும்[8] இதுவே ஆதலின், தேசிகர் இதனைப் போற்றுவதுடன் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழிற்கும் முதல்வன் சிவபிரானே என்ற தம் கோட் பாட்டை முதற்கண் எடுத்து ஓதி இலக்கணம் உரைக்கப் புகுவா ராயினர். ''மலரோன் செயலும் இவன் செயல் என்பார் ''உலக ளித்த'' என்றும், யாவர்க்கும் உயர்ந்தோன் என்பார் ''தலைவன்'' என்றும், மனத்தால் துணிவு தோன்ற நினைத்தலும், மொழியாற்

பணிவு தோன்ற வாழ்த்தலும், தலையாற்றணிவு தோன்ற இறைஞ்சலும் அடங்கப் பொதுப்பட ''வணங்கி'' என்றும் அவ்வாறு வணங்கியோனால் யாதும் முடிபெய்தலிற் ''சாற்றுவன்'' என்றும் கூறினார்'' எனவரும் உரைப்பகுதி தேசிகரின் திருவுளத்துச் சிவபிரான் தலைமை பெற்றுச் சிறத்தலைத் தெளிவாக்கும்[9]. ''மாயோன்செயலும் இவன் செயல் என்பார்'' உலகுபுரந்தருளும் என்றும்'' என்று சொல்லதிகாரத்தும், எழுதும் பகுதியை நோக்குக[10].

## 4.3. இயல்புகள் சில

தொல்காப்பிய நூற்பாக்களையும், நன்னூல் நூற்பாக்களையும், தண்டியலங்கார நூற்பாக்களையும் தேசிகர் அவ்வாறே முழுமையாக எடுத்தாளும் இயல்பும்[11], கருத்துக்களை உரைக்கும் இயல்பும்[12], சில சொற்களையும், தொடர்களையும எடுத்து அமைக்கும் இயல்பும்[13], ஒருபகுதியை அப்படியே தழுவிக் கொள்ளும் இயல்பும் உடையவர் என்பது இந்நூலைக் கூர்ந்து நோக்குவார்க்குப் புலனாம்.

## 5. கருத்து நுட்பங்கள்: 1. எழுத்து

எழுத்து இன்னது எனக் கூறவந்த தேசிகர், ''மொழிக் காரணமாம் நாதகாரிய ஒலி எழுத்து''என்றனர்[15]; ஒலி அணுவினால் எழுத்து ஒலிகள் பிறக்கின்றன எனபது நன்னூலார் கருத்தும், அவிநயர் கருத்தும் ஆம். இஃது சமணர் கொள்கை; தேசிகர் இதனை மாற்றி, நாத காரிய ஒலியே எழுத்து என்று வரையறுக்கின்றனர். கூத்தப் பிரானது திருக்கையில் விளங்கும் துடியினின்றும் முதன்முதல் ஒலியும், அதன் வழித்தாகிய மொழிகளும் படைக்கப்பட்டன என்ற சித்தாந்த சைவ மெய்கண்ட நூல் முடிவே தேசிகராற் பின்பற்றி மொழியப்பட்டமை தெளிவு,[16]

## 5.2. முதலும் சார்பும் பற்றி

இனி, எழுத்துள் முப்பது முதலெழுத்து என்றும், இருநூற்று நாற்பது சார்பெழுத்து என்றும் தேசிகர் உரைப்பர்,[17] (நேமிநாத நூலார் ஆய்தத்தையும் முதல் எழுத்தாக்கி முப்பத்தொன்றாக உரைத்தல் அறிஞர் உலகம் அறிந்ததே. ''அகர முதலாக ஆய்தம்

இடையா, னகரமீறாகு முதல் வைப்பு'' என்பது நேமிநாதம்.)[18] தமிழ் இருநூற்றெழுபது எழுத்துக்களை உடையது என்ற தேசிகர் கொள்கையே, தமிழ்விடு தூது ஆசிரியரால் பின்பற்றப்பட்டமை ஒப்பு நோக்கத் தக்கது. (''ஏற்ப முதல்முப்ப தெழுத்தாய்ச் சார் பிருநூற்று, நாற்பதெழுத்தால் கனிபிறந்தாய்'' என்பது தமிழ் விடுதூது)[19] சார்புஎழுத்து மூன்று என்ற தொல்காப்பியர் பின் ஏனையாறனையும் ஒருவாற்றால் தழுவிக் கொள்ளுதலால், தாமும் சேர்த்துத் தொகைப் படுத்தியமையைத் தேசிகர் உரையுள் தெளி வுறுத்துகின்றார்.

நன்னூலார் சார்பெழுத்தின் விரியாக ஆய்தக்குறுக்கம் ஒன்ற னையும் கூட்டிச் சார்பெழுத்துப் பத்தென்றதனை இவர் மறுக் கின்றார். 'ஆய்தக் குறுக்கம் என்று ஒன்று இல்லை' என்பது இவர்கொள்கை. சார்பெழுத்துப் பற்றிய இலக்கண நூலார் கொள்கைகளில், தேசிகர் கொள்கையாக இது மதிக்கத் தக்கது.[20] (சார்பெழுத்துப் பற்றிய இலக்கண நூலார் கொள்கைகள் ஒப்பீட்டாய்விற்காக இக்கட்டுரையின் பிற் சேர்க்கையிற் காட்டப் பெறும்.)

## 5.3. எழுத்துக்களின் பெயர்க்காரணமும் முறைவைப்பும்

தமிழ் எழுத்துக்களில், 'உயிர்' முதலாகக் குறிக்கப்பெறும் பெயர்க்குறியீடுகள் அனைத்திற்கும் காரணத்தை விளக்குகின்றார் பிறிதொரு நூற்பாவில். அனைத்தும் காரணக்குறியே என்ற கருத்தைத் தெளிவுறுத்தும் பகுதியாக இஃது அமைகின்றது.[21] இவ்வாறே முறைவைப்பிற்கான காரணங்களைத் தம் நுண்மாண் நுழைபுலம் தோன்ற விளக்கும் பகுதியும் படித்துணரத் தக்கது[22]. ''ஈண்டுக்காட்டிய ஏதுக்களேயன்றிப் பிறவருவன உளவேனுங் கொள்க'' என்ற தொடர் இவ்வாசிரியரின் பெருந்தன்மைப் போக்கிற்குச் சான்றாகப் பிறங்குகின்றது[23]. ஐகாரத்திற்கு இகரமும், ஔகாரத்திற்கு உகரமும் இனமென்று கூறுதல் பொருந் தாது; ஒத்த குற்றெழுத்தில்லாத ஐகார ஔகாரங்களுக்கு இசை நிறைப்பவை பற்றிய தொல்காப்பிய நூற்பாவை இனம் சுட்டிய தாகக் கொள்ளலாகாது என்ற உரை நுட்பமாக உணரத்தக்கது[24].

5.4. வைகரி வாக்கு

பிறப்பின் பொதுவியல்பு கூறியவிடத்து, ''வேறுவேறு வகைப் பட்டு எழுத்தோசையாய்ச் செவிப்புலனாக வெளிப்படுதல் எழுத்துக் களது பிறப்பாமெனவே பரை, வைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நால்வகை வாக்கினுள், அகத்தெழுவனவாகிய பரை முதன் மூன்றனையும் ஒழித்தெழுத்து புறத்திசைப்பதாகிய வைகரி வாக்கினையே ஈண்டிவர் எழுத்துக்களது பிறப்பாமென்றா ரென்பதும் பெற்றாம்; அவற்றின் விகற்பமெலாம் சைவாகமத் தானுணர்க'' என்றெழுதுவது இவரது தனித்தன்மை விளங்கும் பிறிதோரிடமாம்.[25]

5.5. ஆய்தவெழுத்துப்பற்றி

''ஆய்தவெழுத்து நெஞ்சின்கண் நிலைபெற்று ஒலிக்கும் ஓசையானும், அங்காந்து கூறும் முயற்சியானும் பிறக்கும்'' என்பது இ.வி. ஆசிரியர் கொள்கை; ஆய்தம் தலையில் பிறக்கும் என்பர் பவணந்தியார்; உந்தியில் பிறக்கும் என்பர் முத்துவீரிய ஆசிரியர்[26].

5.6. போலி பற்றி

மொழிப் போலி என்பது, ஓர் இயற்சொல்லினது எழுத்தொலி போலவே பொருள் வேறுபடாது ஒலிக்கப்படும் பிறிதொரு சொல்லைக் குறிக்கும்; ''சில எழுத்துக்கள் கூடிச் சில எழுத்துக்கள் போல இசைக்கும்; அது கொள்ளற்க என விலக்கும் எழுத்துப் போலி'' என்பர் இ.வி.ஆசிரியர்[27].

''அம்முன் இகரம் யகரம் என்றிவை
எய்தின் ஐயொத் திசைக்கும் அவ்வோடு
உவ்வும் வவ்வும் ஔவோ ரன்ன
இகர யகரம் இறுதி விரவும்
புகரின் றுணர்ந்தோர் வரைந்தனர் போற்றல்''

''குற்றமின்றி எழுத்திலக்கணத்தை உணர்ந்தோர் அவ்விகாரங் களைக் கொள்ளாது கடிந்து பாதுகாக்க'' என்று இந்நூற்பா

இறுதித் தொடர்க்குத் தாமே உரை விரித்தனர். "இவை கடிதல் வேண்டுமென்றறியாதார் இவற்றைக் கொள்ளற் பாலதாம் போலி என மயங்குப" என்றும் நூற்பா இறுதியில் முடித்தனர். இக்கால மொழியியலார் "Free variation" என இப் போலியைக் குறிப்பர்; போலி கொள்ளாவிடத்து இலக்கண வழுக்கள் பல சான்றோர் வாக்குகளில் தோன்றுமாதலின் இதனை ஏற்றல் வேண்டும்; ஆதலின் போலி பற்றிய இ.வி. ஆசிரியர் கருத்துப் பொருத்தமுடைத்தன்று.

## 5.7. 'உயர்திணை' வினைத்தொகை எனல்

"உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே"

என்ற நூற்பா உரையில், "உயர்திணை என்பது இறந்த கால வினைத்தொகை" என்றனர் இ.வி. ஆசிரியர்[28]. 'உயர்ந்த திணை' என அதனை விரித்தும் காட்டினர்; இளம்பூரணர், நச்சினார்க்கினியர், கல்லாடர், மயிலை நாதர் ஆகியோரும் இக்கருத்துடையவர்களே. சங்கர நமச்சிவாயரும், சிவஞான முனிவரும், இராமானுசக் கவிராயரும் இதனைப் பண்புத்தொகை என்றனர்; 'உயர்வாகியதிணை' என்று பண்புத் தொகையாகக் கொள்ளுதலே பொருத்தம் உடையது; 'அத்திணை யல்லவாகியதிணை' என்று அஃறிணைக்கு உயர்திணைக்குப் பொருள் கொள்ளுதலைப் போன்றே கொள்ளலாம்; பண்பின் வழிப்பட்ட பெயர்வழக்காதலின் பண்புத்தொகை என்று கொள்ளுதலையே தக்கார் விழைவர்.

## 5.8. செந்தமிழ் நிலம் எது?

செந்தமிழ் நிலமாவது, வைகையாற்றின் வடக்கும், மருதயாற்றின் தெற்கும் கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்கும் என்பர் இ.வி.ஆசிரியர்[29], இவ்வாறு எல்லையைச் சுருக்கிக் கொள்ளுதலை விடச் 'செந்தமிழ்வழங்கும் தமிழக முழுவதையுமே' கொள்ளலே பொருத்தமானது; அவரவர் தம் தம் பிறப்புச் சார்பு நோக்கிச் செந்தமிழ் நிலத்தைச் சோழநாடு என்றோ, பாண்டியநாடு என்றோ கொள்ளுதல் தக்கதன்று.

### 5.9. வடசொல்: பொருந்நா விளக்கம்

வடசொல் குறித்த நூற்பாவின் உரையில், ''இவ்வாரியச் சொல் ஒரு நிலத்திற்கே உரித்தன்றிப் பதினெண்நிலத்திற்கும் விண்ணிற்கும் புவனாதிக்கும் பொதுவாய் வருதலிற்றிசைச் சொல்லுள் அடங்காமையான் வேறு கூறினார்'' என்று எழுதும் இ.வி. ஆசிரியர் கொள்கை நடுவுநிலைமை உடையதன்று. ''அற்றேல் வடசொல் என்றது என்னையெனின் ஆண்டு வழக்குப் பயிற்சி நோக்கி என்க'' என்றும் தம் கருத்தை நாட்டினர்[30]. தமிழொடு வந்து கலந்தது ஆரியச்சொல் ஒன்றே ஆதலின் அது பற்றித் தொல்காப்பியனாரும் சிறப்பாகக் கூற நேர்ந்தது என்று கொள்ள வேண்டுமேயன்றி அது எல்லா உலகுக்கும் பொதுச் சொல் என்று கூறுவது மொழியுலகின் கோட்பாடுகளுக்குப் பொருந்தாமை காண்க.

### 5.10. வினைச்சொல் வரையறை

வினைச்சொல்லிற்கு இலக்கணம் கூறவந்தவிடத்து ''வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது, நினையுங்காலைக் காலமொடு தோன்றும்'' என்று கூறி முடிக்காமல், ''பொருட்புடை பெயர்ச்சி புலப்படுத்தே'' என்று விளக்கி முடித்தது 'இலக்கண விளக்கம்' என்ற பெயர்க்கேற்ற பல்வேறு நிலைகளில் ஒன்று என்று கூறலாம்[31]; உண்மை, பண்பு, குறிப்பு என்பவற்றிற்கு இ.வி.ஆசிரியர் தரும் பொருள் வரையறை, நோக்கி உணர்தற்குரியது: ''உண்மையாவது பொருள்கட்குக் கேடு பிறந்தக்காலும் தனக்குக் கேடின்றித் தான் ஒன்றேயாய்ப் பலவகைப்பட்ட பொருடோறும் நிற்பது; பண்பாவது ஒருபொருள் தோன்றுங்காலத்து, உடன்தோன்றி அது கெடுந்துணையும் நிற்பது; குறிப்பாவது ஒரு பொருட்குப் பின்தோன்றிச் சிறிது பொழுது நிகழ்வது[32]''

### 5.11. ''பொருள்கோள்'' வகை

செய்யுளின் பொருளை அறியும் வகையைக் காட்டுவதே ''பொருள் கோள்'' எனப்படும். தொல்காப்பியர் மொழிபுணர் இயல்பாகிய இப்பொருள்கோள் நால்வகைத் தென்று நவிலவும், இ.வி.ஆசிரியர் எட்டென்று இயம்புவர். நேமிநாதம் ஒன்பது

வகையாய் உரைக்கும். யாப்பருங்கலவிருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகை உரைகளும் ஒன்பது வகைப் பொருள்கோள்களையே காட்டும். இவர் கொண்ட எட்டுப் பொருள்கோள்களாவன[33]:

''யாற்றுநீர் மொழிமாற்று நிரனிறை விற்பூண்
தாப்பிசை அளைமறி பாப்புக் கொண்டுகூட்டு
அடிமறி மாற்றெனப் பொருள்கோள் எட்டே''

### 5.12. ''அகத்திணை'' ''புறத்திணை'' இயல்களில்

பொருளதிகார அகத்திணை புறத்திணை இயல்களைத் தொல்காப்பியம், நாற்கவிராச நம்பியகப் பொருள் விளக்கம், புறப் பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களின் அடிப்படையில் அமைத்துக் கொண்ட ஆசிரியர் சங்க இலக்கியம், புறப்பொருள் வெண்பாமாலை முதலியவற்றினின்றும் பொருத்தமான எடுத்துக் காட்டுக்களையும் காட்டி உரைப்பகுதியைத் தெளிவுபடுத்தியுள் ளார்.

### 5.12.1. ''திருக்கோவையார்'' ஆட்சி

அகத்திணையியல் நூற்பாக்களுக்கு எடுத்துக்காட்டுக்களாகத் திருக்கோவையார்ப் பாட்டுக்கள் பலவற்றைக் காட்டுகின்றார் ஆசிரியர்[34]; முதற்கோவை நூலாக அமைந்த இந்நூலிலிருந்து இனியபாட்டுக்களைத் தேர்ந்து இலக்கண விளக்க நூல் அமைப்புள் சேர்த்தமை, ஆசிரியரின் சிவநெறிப் பற்றுக்கு எடுத்துக்காட் டென்று கூறலாம்.

### 5.13. அணியியல் அமைப்பு

இலக்கண விளக்க அணியியற் பகுதி, தொல்காப்பிய உவமவியல் செய்திகளையும், தண்டியலங்காரத்தையும் பெரும் பாலும் அடியொற்றியே செல்கின்றது[35]. இலக்கண விளக்க ஆசிரியர் குறிப்பிடாத பொருளணி சொல்லணிகளை மாறன் அலங்காரம், தொன்னூல் விளக்கம், அணியிலக்கணம், சந்திரா லோகம், குவலயானந்தம், முத்துவீரியம் ஆகியவற்றின் அடிப் படையில் தம்பதிப்பில் பிற்சேர்க்கையாகத் தந்துள்ளார், தஞ்சை

சரசுவதிமகால் நூல்நிலையப் பதிப்பாசிரியர்[36]. தண்டியாசிரியர் குறிப்பிடும் முப்பத்தைந்து அணிகளையே இலக்கண விளக்கமும் இயம்புகின்றது. முத்தகம் முதலிய செய்யுள்களின் பாகுபாடுகள், செறிவு முதலிய குணவணிகள், தன்மை முதலிய முப்பத்தைந்து பொருளணிகள், அடியையும், சொல்லையும், எழுத்தையும் உட்கொண்டு வரையறுக்கப்பட்ட பல்வகை மடக்கு அணிகள், கோமூத்திரி முதலிய இருபது சித்திரகவிகள், பிரிபொருள் சொற்றொடர் முதலிய ஒன்பது வழுக்கள், அவற்றின் வழுவமைதிகள், இடமலைவு முதலியஆறு மலைவுகள், அவை ஏற்புடையவாகக் கொள்ளப்படும் இடங்கள் ஆகியவை இ.வி. ஆசிரியராற் பேசப் பட்டுள்ள அணியியற் செய்திகள் என்று தொகுத்துக் கூறலாம்.

5.13 1. அணி இன்னது எனல்

அணி என்பது பொருளை விளக்கி நிற்பது என்றும், பொருள் அகப்பொருளும் புறப்பொருளும் என முன்னே கூறப்பட்ட பொருளாம் என்றும், அப்பொருட்பகுதி இரண்டிற்கும் இடம் செய்யுளாதலின் அதனை விளக்கி நிற்பதும் அணியின் இயல்பு என்றும் இ.வி.ஆசிரியர் கொண்ட கருத்துக்களைப் பின்வரும் இரு நூற்பாக்களும் உணர்த்தும்[37].

''அணியெனப் படுவது துணிபுறக் கிளப்பின்
குணம் அலங்காரம் என இரு திறத்தால்
பொருள் புலப்படுப்பது என்மனார் புலவர்''

''பொருட்கு இடம் செய்யுளாதலின் அதனைத்
தெரிப்பதும் அதனது திறன் எனல் வரையார்''

6. செய்யுளியல் அமைப்பு

செய்யுளியல் என்ற தமது இயலில் இ.வி.ஆசிரியர் யாப்பருங் கலவிருத்தி நூற்பாக்கள் பலவற்றை உருமாற்றாமலும், சிறிது திரித்தும் கொண்டுள்ளார் எனினும், யாப்பருங்கலக்காரிகையை ஒட்டியே அமைத்துக் கொண்டுள்ளார். எடுத்துக்காட்டுக்கள் பெரும்பாலும் யாப்பருங்கலக் காரிகையிற் காட்டப்பட்டனவே[38].

இ.வி. ஆசிரியர் பிற யாப்பிலக்கண நூற்பாக்கள் பலவற்றைத் தம் செய்யுளில் நூற்பாக்களாகக் கொண்டு தாமேயும் சில நூற்பாக்களைத் தெளிவும் சிறப்பும் கருதி இயற்றியுள்ளார்[39]. இலக்கண விளக்கம் என்ற பெயருக்கேற்ப முந்தைய இயல்களிற் போன்றே இந்த இயலமைப்பும் இவ்வாறு அமைந்துள்ளது. காலப்போக்கில விளக்கம் பெறத் தக்கனவும், விரிவாகச் சிந்திக்க வேண்டியனவும் இவ்வாறு ஆசிரியரால் அமைக்கப் பெற்றமை இலக்கண ஆய்வாளர்க்கு இனபம் ஊட்டுவது எனலாம்.

## 7. பாட்டியல் மாண்புகள

சங்ககாலத்திற்குப் பிறகு பாட்டியல் இலக்கணம் விரிவாக இயற்றப் பெறலாயிற்று; பாட்டியல் நூல் அமைக்கப் பெறுவதில, அகத்தியநெறி, இந்திரகாளிய நெறி என்ற இருவகை நெறிகள் நிலவியிருந்தன என்பர் அறிஞர்[40]. பல பாட்டியல் நூல்கள் வழக்கொழிந்து போயின. பன்னிருபாட்டியல், வெண்பாப் பாட்டியல், நவநீதப்பாட்டியல், சிதம்பரப் பாட்டியல். பிரபந்த மரபியல், தொன்னூல் விளக்கம், பிரபந்த தீபிகை, முத்துவீரியப் பாட்டியல் ஆகியவற்றைப் போன்றே இலக்கண விளக்கப் பாட்டியலும் இன்று வழக்கில் அறிஞரால் ஆய்ந்து இன்புறும் நூலாக இருந்து வருகின்றது. இவ்வியலை, ''பாட்டியல் நூல் களில் மிகத் தெளிவாகவும் சிறப்பாகவும் அமைந்து ஆசிரியரா லேயே உரையும் வரையப்பெற்ற சிறப்பினை உடையது'' என அறிஞர் பாராட்டுவர்[41]. இவ்வுரை மெய்ம்மையே என்பது பாட்டியலை ஒருமுறை கூர்ந்து நோக்கினார் உணர்வர். 181 நூற்பாக்களில் அமைந்துள்ளது இவ்வியல். ''பலபகுதியாகப் பரந்துபட்ட பொருளிலக்கணத்தைச் சொற்களின் துணைகொண்டு இத்துணைத்து என்று வரையறைப்படுத்து உணர்த்துதல் இயலாது எனினும், சொல்லப்பட்டவற்றைக் கொண்டு அவற்றொடு தொடர் புடைய ஏனையவற்றையும் கூறவல்ல சான்றோர்கள் இவ் வையகத்தில் கதிரவனைப் போன்ற பேரொளியுடன் கலைமகளும் திருமகளும் தம்மிடத்தே நிலைபெற மலைமகளைத் தன்னொரு பாகமாகக் கொண்டுள்ள சிவபிரானைப்போல உலகிற்கு இன்பம் செய்து நெடுங்காலம் வாழ்வர்'' என்று இவ்வியற் புறனடை நூற்பாவில் மொழிகின்றனர் ஆசிரியர்[42].

7.1. பாட்டியற் பாகுபாடுகளில்

அகலக் கவியுள் பிள்ளைத்தமிழ் முதலாகக் காப்பியம் ஈறாகக் கூறப்படும் ஐம்பத்தைந்தும் அவைபோல்வன பிறவும் கூறப் பட்டுள்ளன. தனிநிலைச் செய்யுளில் வளமடல் முதலாக மஞ்சரி யீறாக இருபத்திரண்டு வகைகள் பேசப்பட்டுள்ளன. தொல்காப்பிய நூற்பாக்களில் 37 இவ்வியலுள் எடுத்தாளப்பட்டுள்ளன[43]. அனைத்துமாகத் தொகுத்துக் காணுங்கால் பிள்ளைக்கவி முதல் தூது ஈறாக 75 பிரபந்த வகைகள் இந்நூலுள் விளக்கப்பெற் றுள்ளன. சிதம்பரப் பாட்டியல், பன்னிருபாட்டியல், நவநீதப் பாட்டியல், முத்துவீரியம் ஆகிய பாட்டியல் நூல்களுள், இலக்கண விளக்கத்தாற் கூறப்படாத 55 பிரபந்த வகைகள் மேலும் பேசப் பட்டுள்ளமையை ஒப்பாய்வு மூலம் உரைப்பர் அறிஞர்[44].

8. செய்யுளியலுள் சிறப்பான உரைப்பகுதி

செய்யுள் செய்யும் புலவர்க்கு வேண்டுவதாகிய ஒழிபுச் செய்தி யாக 'அவையடக்கம்' கூறுகின்றார்; அவையடக்கியல் பற்றிய தொல்காப்பிய நூற்பாவை முழுதும் கையாண்டுள்ளார்[45]. முதனூலுக்குத் தொல்காப்பியர் கூறிய நூற்பா இலக்கணத்தை அவ்வாறே கொண்டனராயினும், அதற்கு இ.வி. ஆசிரியர் தரும் இலக்கணப் பொருண்மை தனித்தன்மை வாய்ந்தது; ''அநாதியே அவிச்சை காரணமாக வரும் இருவினைப் பந்திப்பினின்றும் நீங்கி, இறைவனது அருளான் தன்னை அறிவதாக அறியும் பரஞானத் தான் உளதாய சீவன் முத்தி பெற்றோனால் செய்யப்படுவது முதனூலாம்'' என்பது இவர் தரும் இந்நூற்பாப் பொருள். ''என்றது யோக முயற்சியின் தலைநிற்க, மெய்யுணர்வு பிறந்து, யான் எனது என்னும் செருக்குகள் அற்று, இருவினைப் பயனினும் சமம் செய்கோல்போலப் புடைபெயர்ச்சி இன்றி ஒரு நிலையின் மேல்நோக்கிய வழி, இறைவன் அருள் வதிய, அதனான் விரிந்த மெய்ஞ்ஞானம் விளங்குதலாம்'' என்று விரித் துரைப்பர். ''இறைவன் அருளால் அறிவு விளங்கும் என்பது என்னை? ''காட்டாதன எல்லாம் காட்டிச் சிவங்காட்டித் தாட்டா மரை காட்டித் தன்கருணைத் தேன்காட்டி'' எனத் தென்னவன் பிரமராயரும், ''மயரற மதிநலன் அருளினன் எவனவன்'' எனக்

குநூலரும் பொருண்மொழிக்காஞ்சி கூறியவாற்றான் அறிக'' என்ற உரைநிறைவுப் பகுதி, சைவ வைணவக் காழ்ப்பின்றித் திருவாசகத்தையும் திருவாய்மொழியையும் ஒப்ப எடுத்தாண்ட சிறப்புடன் உள்ளது. இந்நூற்பாவிற்கு இதற்கு முன் உரைகண்ட நல்லோர் விளக்கத்தினும் இவ்வுரை வேறுபட்டுத் தனித்திறத்துடன் நிற்றல் தெளிவு. சீவன் முத்தன் (''முனைவன் போன்று நிற்றலின் முனைவன் என்றார்; அஃது உபசார வழக்கு - தேசிகர்'' செய்வதே முதனூல் என்பது இவர்கருத்தாயிற்று[46].

8.1. மந்திரம் பற்றிய கொள்கை

''நிறைமொழி'' எனத் தொடங்கும் நூற்பா உரையில், ''அருளிக் கூறினும் வெகுண்டு கூறினும் அவ்வப்பயன்களைப் பயக்கும் நிறைந்த மொழியை உடைய குரவர் தாம் அனுபவத் தான் அறிந்த பொருளைப் பிறருக்கு உணர்த்தல் ஆகாமையான், அவர்க்குப் பயப்பாடு நோக்கி, ஆக்கினையான் மறைந்த பொருளைக் கூறப்பட்ட செய்யுளே மந்திரச் செய்யுள்'' எனப் பொருள் உரைத்தனர்; ''செய்தலினால் சொல்லும் செய்யுளாதல் பெற்றாம்: சொல் எனவே ஓரெழுத்தொருமொழியும், ஈரெழுத் தொருமொழியும் தொடர்மொழியும் கொள்க; அவை மந்திரமொழி வல்லார் வாய்க் கேட்டுணர்க'' என விளக்கினர். பேராசிரியர் தம் உரையில் கூறும் வசைப்பாடல்களை விடுத்து, ''உலக நல்வாழ்விற்குக் கூறியவற்றையே இவர் மந்திரம்'' என்று வரையறுத்துக் கூறியமையும், மந்திரங்கள் உபதேச முறைமையினால் அறியப்படுவன ஆதலின் ''வல்லார் வாய்க் கேட்டுணர்க'' என்றமையும் இவர்தம் கொள்கைத் திறத்தை உணர்த்துவன எனலாம்[47].

குறிப்புமொழி இலக்கணம் கூறிய, ''எழுத்தொடும் சொல் லொடும்'' எனத் தொடங்கும் நூற்பாவின் உரைவிளக்கம் ஓர்ந்து உணரத்தக்கது; உபதேச வாயிலாக உணரப்படும் மந்திரம் சொல்லைக் கருவியாக உடையது; குறிப்புமொழி சொல்லையும் கடந்து மனத்தான் உணரப் படுவது. இதனை ஒருபாடலின் வாயிலாக இந்நூலாசிரியர் இனிது உணர்த்திய திறம் நோக்கி இன்புறுதற்குரியது[48].

## 9. பாட்டியல் பதிகக் குறிப்பு

தமிழிலக்கணப் பரப்பையெல்லாம் நன்கு ஆராய்ந்து நோக்கித் தொல்காப்பியம், நன்னூல் முதலியவற்றிற் கமைந்த உரைகளை யெல்லாம் சுற்று, ஆங்காங்குச் சிதறிக் கிடக்கும் இலக்கண உண்மைகளையெல்லாம திரட்டித் தம் கொள்கைகளையும் அவற் றொடு திட்பமுறை விரவி இந்நூலைப் படைத்தனர் தேசிகர்; அக்கட்டுரையில் சில கூறுகளே எடுத்துக் காட்டப்பட்டன. ஒவ் வொன்றாகத் தனித்தனியே ஆராய்தலுறின் விரியுமாதலின், ஓர் அறிமுக அளவிலேயே இங்குச் சுட்டப்பட்டன. பொன்மலை நின்று தென்மலையுற்ற, அகத்திய முனிவன் சகத்தவர்க் காகச் செந்தமிழ் இலக்கணம் முந்துநூல் கிளப்பப், பல்கா லுன்னித் தொல்காப்பிய முனி, இயற்றமிழ் முதலினின் றெடுத்துரைத் திடஅதன், ஒட்பம் கண்டு தட்பம் கூராது, ஐந்தியலும் தம்புந்தியின்வேறு கொண்டு, உரைத்த புலவர் வரைத்த உரையான், முதலும் முடிவும் சிதர்தரப் பலவாய்க், கிடந்தவியலைத் தொடர்ந்தொரு வழிப்பட, ஈட்டலான் இலக்கண விளக்கம் என்ன, நாட்டினன் வைத்தியநாத தேசிகன்'' என்ற பாட்டியற் பதிக வரிகள் இந்நூல் எழுச்சிக் குற்ற காரணத்தைப் புலப்படுத்துவதுடன், அமைப்பின் திறத்தையும் இனிது உணர்த்துகின்றன[49].

## 10. இலக்கணவிளக்கத் தனித்திறன்

விளக்கவியல், வரலாற்றியல், ஒப்பியல் என்னும் மொழியியற் பிரிவுகள் மூன்றும் விரவ இந்நூல் விளங்குகின்றது என்று சுருங்கக் கூறலாம்[50]. ஆக்கும்நெறி, வகுக்கும்நெறி, சுட்டும்நெறி, மறுக்கும் நெறி ஆகிய நால்வகை நெறிகள் இவ்விலக்கண விளக்கத்தாற் புலப்படும் நெறிகள் என்றும் கூறலாம். இதனைக் கற்றுணர்ந்து தமிழிலக்கணச் செந்நெறி நிற்றலே, இதன் ஆசிரியர் வைத்தியநாத தேசிகர்க்குச் செய்யும் கைம்மாறு என்று தமிழ் மாணாக்கர்களுக்குச் சுட்டிக்காட்டுவதே இச்சிற்றாய்வு நோக்கம்.

## அடிக்குறிப்புகள்

1. இலக்கணவிளக்கம், (எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்), சைவ சித்தாந்த நூற்பதிப்புக்கழகம், சென்னை; முதற்பதிப்பு (1973); ஆராய்ச்சி முன்னுரை, பக்கங்கள்-15-16.

2. மேற்படி நூல் - சிறப்புப்பாயிரம் - வரிகள் 17-21

3. மேற்படி நூல் - நூற்பா - 1

4. மேற்படி நூல் - நூற்பா - 159

5. இலக்கணவிளக்கம், (பொருளதிகாரம்), சைவசித்தாந்த நூற் பதிப்புக் கழகம், சென்னை; முதற்பதிப்பு (1976); நூற்பா - 373.

6. திருக்களிற்றுப்படியார் - 1

7. திருஞானசம்பந்தர் தேவாரம் - 319 - 9; திருவாசகம் - திருக் கோத்தும்பி 18.

8. ஐங்குறுநூறு - கடவுள்வாழ்த்து - 1

9. இலக்கணவிளக்கம் (மேற்படி நூல்) - நூற்பா 1 உரைப்பகுதி.

10. மேற்படி நூல் - நூற்பா 373 உரைப்பகுதி.

11. அ) தொல்காப்பிய நூற்பாக்களை முழுமையாக எடுத்தாளல்: மேற்படி நூல் - 14, 62, 63, 126, 186, 291, 292, 293, 294, 397 முதலியன.

    ஆ) நன்னூல் நூற்பாக்களை முழுமையாக எடுத்தாளல்: மேற்படி நூல் - 25, 28, 48, 58, 79, 91, 130, 131, 163, 164, 235, 240, 247, 311 முதலியன.

    இ) தண்டியலங்கார நூற்பாக்களை முழுமையாக எடுத் தாளல்: இலக்கணவிளக்கம் (அணியியல்) தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையப் பதிப்பு, தஞ்சை, முதற் பதிப்பு (1973) பக்-465.

12. இலக்கணவிளக்கம் (கழகப்பதிப்பு-1973) 44, 47, 124 முதலியன.

13. மேற்படிநூல் 145, 170, 206, 207, 236 முதலியன.

14. மேற்படிநூல் – 43, 50, 81, 170, 193, 204 முதலியன.

15. மேற்படிநூல் – 3

16. மேற்படிநூல் - பக்.19; அடிக்குறிப்புக் காண்க

17. மேற்படிநூல் - பக். 5

18. மேற்படிநூல் – பக். 20; அடிக்குறிப்புக் காண்க

19. மேற்படிநூல் - பக். 21; அடிக்குறிப்புக் காண்க

20. மேற்படிநூல் – 5ஆம் நூற்பா உரைப்பகுதி

21. மேற்படிநூல் – 7ஆம் நூற்பா உரைப்பகுதி

22. மேற்படிநூல் - 8ஆம் நூற்பா உரைப்பகுதி

23. மேற்படி நூல் - 8ஆம் நூற்பா உரைப்பகுதி

24. மேற்படிநூல் – மேற்படி நூற்பா உரைப்பகுதி

25. மேற்படிநூல் - 9ஆம் நூற்பா உரைப்பகுதி

26. மேற்படிநூல் – 13ஆம் நூற்பா

27. மேற்படிநூல் – 36ஆம் நூற்பா

28. மேற்படிநூல் - 162ஆம் நூற்பா உரைப்பகுதி

29. மேற்படிநூல் - 172ஆம் நூற்பா உரைப்பகுதி

30. மேற்படிநூல் - 173ஆம் நூற்பா உரைப்பகுதி

31. மேற்படி நூல் - 227ஆம் நூற்பா

32. மேற்படிநூல் - 228ஆம் நூற்பா உரைப்பகுதி

33. மேற்படிநூல் - 361ஆம் நூற்பா

34. மேற்படிநூல் - 507ஆம் நூற்பா உரையில், திருக்கோவையார் 67, 70, 9, 50, 51, 55, 56, 52, 53, 54, 57, 58, 60, 61, ஆகியவை காட்டப்பட்டன. 507ஆம் நூற்பா உரையில், திருக்கோவையார் 63, 100, 107, 129, 108, 73, 99, 98, 91, 93, 74, 76, 78, 77, 80, 104, 97, 105, 106, 110, 82, 85, 114, 102, 84, 88, 116, 119, 120, 124, 125, 127 ஆகியவை காட்டப்பட்டன.

35. இலக்கண விளக்கம் (அணியியல்), தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையப்பதிப்பு, (முதற்பதிப்பு, 1973) பக்.2

36. மேற்படிநூல் - பிற்சேர்க்கை - பக்கங்கள் 1 - 100; பதிப்பாசிரியர் பண்டித வித்துவான் திரு.தி.வே. கோபால ஐயரவர்களின் அரியமுயற்சி பாராட்டத்தக்க ஆழமும் அருமையும் உடையது.

37. மேற்படிநூல் - 620, 621 ஆம் நூற்பாக்கள்

38. இலக்கண விளக்கம் (செய்யுளியல்) தஞ்சை சரசுவதி மகால் நூல்நிலையப்பதிப்பு (முதற்பதிப்பு 1974) பக்கங்கள் 22-26.

39. மேற்படிநூல் – பக்கங்கள் 28-33 (51 நூற்பாக்கள்)

40. இலக்கணவிளக்கம் (பாட்டியல்) தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையப்பதிப்பு (முதற்பதிப்பு 1974) முன்னுரை - பக். 1

41. மேற்படிநூல் – முன்னுரை - பக். 2

42. மேற்படிநூல் – 941 ஆம் நூற்பா

43. மேற்படி நூல் – பக்கங்கள் 37-43

44. மேற்படி நூல் – பக்கங்கள் 68–70

45. மேற்படி நூல் - 888ஆம் நூற்பா

46. மேற்படி நூல் - 900ஆம் நூற்பாவும் உரைப்பகுதியும்

47. மேற்படி நூல் - 906ஆம் நூற்பாவும் உரைப்பகுதியும்

48. மேற்படி நூல் - 907ஆம் நூற்பாவும் உரைப்பகுதியும்

49. மேற்படி நூல் - பக் 384

50. Descriptive Study, Historical Study and Comparative study

## பிற்சேர்க்கை

### சார்பெழுத்துக்கள் - இலக்கண நூற்கொள்கைகள்

| | உயிர்மெய் | ஆய்தம் | உயிரளபெடை | ஒற்றளபெடை | குற்றியலிகரம் | குற்றியலுகரம் | ஐகாரக்குறுக்கம் | ஔகாரக்குறுக்கம் | மகரக் குறுக்கம் | ஆய்தக் குறுக்கம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| இலக்கண விளக்கம் | 216 | 1 | 7 | 11 | 1 | 1 | 1 | 1 | 1 | |
| தொல்காப்பியம் | | 1 | | | 1 | 1 | | | | |
| வீரசோழியம் | | | 7 | | 1 | 1 | 1 | 1 | | |
| நேமிநாதம் | 216 | | 7 | 11 | 1 | 1 | 1 | 1 | 1 | 1 |
| நன்னூல் | 216 | 8 | 21 | 42 | 37 | 36 | 3 | 1 | 3 | 2 |
| தொன்னூல் விளக்கம் | 216 | 8 | 21 | 42 | 37 | 36 | 3 | 1 | 3 | |
| முத்துவீரியம் | 216 | 1 | | | | | | | | |

# நவநீதப் பாட்டியல்

சு. சுவாமிஐயா

நவநீதப் பாட்டியல் நவநீதநடன் என்பவரால் இயற்றப் பட்டது. இவர் நூல் செய்த காலத்தில் இதனைக் 'கலித்துறைப் பாட்டியல்' என்னும் பெயரால் அமைத்திருக்க வேண்டும். ஏனெனில் இந்நூல் முடிவில் 'நவநீத நடனார் அருளிச் செய்த கலித்துறைப்பாட்டியல் .முற்றும்' என்னும் தொடர் காணப்படு கிறது. இந்நூலின் நூற்பாக்கள் கட்டளைக்கலித்துறையால் அமைந்தவை. தமிழில் கட்டளைக் கலித்துறையால் இலக்கண நூல் செய்யும் வழக்கினை அமிதசாகரரே முதன் முதலில் ஏற்படுத்தி னார் என்பதனை, ''இந்நூல் யாவராற் செய்யப்பெற்றதோ எனின் ஆரியம் என்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப் படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிதசாகரர் என்னும் ஆசிரியராற் செய்யப்பெற்றது'' என்னும் பகுதியால் உணரலாம். அதன்பின்னர் வீரசோழியம், களவியற்காரிகை போன்ற நூல்களும் கட்டளைக் கலித்துறையால் செய்யப் பெற்றவையே.

நூலாசிரியர்

நவநீதன் நவநீதநடன் என்னும் பெயரால் அழைக்கப்பெறும் இவ்வாசிரியர் ஆடலாசிரியராக இருந்திருக்கலாம் எனக் கருதலாம். 'சிறப்புப் பாயிரத்திற் காணப்படும் 'வேதத்தவன்' என்ற சொல் இவர் அந்தணராவர் என்பதனைக் காட்டும்' என டாக்டர் உ. வே. சாமிநாதையர் நூல்நிலைய வெளியீட்டு நூலாசிரியர் வரலாற்று முன்னுரையில் கூறப்பெற்றுள்ளது. சிறப்புப் பாயிரத்தில் காணப்பெறும் 'நாட்டிய வேதத்தவன்' என்னும் தொடர் நாட்டிய இலக்கண நூல் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளதே தவிர வேதங்களை அறிந்தவர் என்னும் பொருளில் ஆளப்பட்டுள்ளதாகக் கொள்ள இயலவில்லை, 'பரதநாட்டியத் தொழிலைக் குலத்

தொழிலாக ஏற்றுக் கொண்ட குலம் என ஒருவாறு ஏற்றுக் கொள்ளலாம்[3]' என்னும் பேராசிரியர் வையாப்புரிப்பிள்ளை அவர்களின் கருத்து ஏற்றுக் கொள்ளத்தக்கது. நவநீதன் என்பது கண்ணனைக் குறிக்கும் பெயர்களுள் ஒன்று. நவநீதநடன் வெண்ணெய்க்காக ஆடியவன் என்று பொருள்படும். இவர் வைணவ சமயத்தைச் சார்ந்தவர் என்பது, "கார்கொண்ட மேனிக் கறைகொண்ட நேமிக் கமலக்கண்ணன், பார்கொண்ட பாதத்தை யேத்திப் பகருவன் பாட்டியலை" என்னும் அடிகளாலும், 'அரியத்தன்' என்னும் உரைக்குறிப்பாலும் விளங்குகின்றது.

இவர் வாழ்ந்த நாட்டை 'நவநீதநாடு' என்றே இதன் பழைய உரையாசிரியர் குறித்துள்ளார். 'இது திருவெண்ணெய் நல்லூரைத் தலைநகராகக் கொண்ட தொண்டை நாடு என ஊகிக்கலாம்5' எனக்கூறுவர். அவ்வாறு கூறுவதற்குச் சான்றேதும் காணப்படவில்லை.

## காலம்

இந்நூல் வச்சணந்தி மாலைக்குப் பின்னர்த் தோன்றியது என்பது பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை அவர்களின் கருத்து[6]. எனவே இந்நூல் 13ஆம் நூற்றாண்டளவில் அல்லது அதன்பின்னர்த் தோன்றியதாகக் கருதலாம்.

## நூல் அமைப்பு

இந்நூல் முதன்மொழியியல், செய்யுள் மொழியியல், பொது மொழியியல் என முப்பகுதிகளாக அமைக்கப்பெற்றுள்ளது. பொது மொழியியலில் சிறப்புப்பாயிரம் நீங்கலாக இருபத்துநான்கு காரிகைகளும், செய்யுள் மொழியியலில் நாற்பத்துமூன்று காரிகைகளும், பொது மொழியியலில் முப்பத்தேழு காரிகைகளும் அமைந்துள்ளன.

மற்றைய பாட்டியல் நூல்களைப் போன்றே மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம், நாள், கதி, கணம் எனப் பத்துப் பொருத்தங்களை இந்நூல் கூறியுள்ளது. பின்னர்த் தசாங்கங்களாக மலை, ஆறு, நாடு, ஊர், தார், பரி, யானை,

கொடி, முரசு, ஆணை என்பனவற்றைக் கூறியுள்ளார்[7]. தசாங்கம் பாடுங்கால் அவற்றின் அயல் கொலைச் சொல் நீக்கிப்பாடுதல் வேண்டும் என்பர்[8]. தசாங்கங்களைப் பாடுங்கால் ஒவ்வொன்றும் ஒவ்வோர் சீரில் வருதல் சிறப்புடையது எனவும் வகையுளியாக இருசீரிடத்தில் தசாங்க உறுப்புக்கள் வரல் ஆகா எனவும் இவர் குறிப்பிடுகின்றார்[8].

இந்நூலுள் ஆசிரியர் அங்கமாலை, அட்டமங்கலம், அந்தாதி, அரசன் விருத்தம், அலங்காரபஞ்சகம், ஆற்றுப்படை, ஆனைத் தொழில், ஆனைவிருத்தம், இணைமணிமாலை, இருபாஇருபது, உலா, ஊர்வெண்பா, ஒலியந்தாதி, கலம்பகம், காப்புமாலை, குடைவிருத்தம், குதிரைவிருத்தம், குழமகன், கேசாதிபாதம், கைக்கிளை, கோல்விருத்தம், கோவை, சிறப்புப்பாயிரம், சிறு காப்பியம், சின்னப்பூ, தசப்பிராதுற்பவம், தசாங்கத்தியல், தசாங்கம், தற்சிறப்புப்பாயிரம், தாழிசைக்கவி, தூது, தொகை நிலைச் செய்யுள், தொகைவெண்பா, நகரவிருததம், நயனப்பத்து, நவமணிமாலை, நாட்டுவிருத்தம், நாமமாலை, நாழிகைக்கவி, நான்மணிமாலை, பயோதரப்பத்து, பரணி, பல்சந்தமாலை, பறந்தலைச்சிறப்பு, பன்மணிமாலை, பாதாதிகேசம், பிள்ளைத் தமிழ், புகழ்ச்சிமாலை, பூவைநிலை, பெருங்காப்பியம், பொதுப் பாயிரம், பொன்னூஞ்சல், மடல், மருட்பாப்பிரபந்தம், மும்மணிக் கோவை, மும்மணிமாலை. மெய்க்கீர்த்தி, வஞ்சிமாலை, வண்ண விருத்தம், வாள்விருத்தம், வில்விருத்தம், வேல்விருத்தம் என்ப வற்றின் இலக்கணங்களைப் பேசியுள்ளார்.

பாட்டியல் நூல்களில் கூறப்பெற்ற பத்துப்பொருத்தங்களில் பெரும்பான்மையானவற்றைப் பின்பற்றும் வழக்குப் புலவர்களிடத் தினின்றும் அகன்றுவிட்டது. மங்கலச் சொல் அல்லது மங்கல மொழியை இன்றுவரை பலர் செய்யுள் தொடக்கத்தில் கருது கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. மற்றையஒன்பதும் சிற்றிலக் கியங்களில் பின்பற்றப்பட்டுப் பின்னர்க் கைவிடப்பெற்றவை. அவ்வாறு கைவிடப்பெற்றமைக்குப் பல காரணங்கள் உண்டு. பாட்டியல் நூல்கள் அவற்றை ஒரே அமைப்பில் கூறவில்லை. பாட்டு டைத் தலைவனது பெயரின் முதல் எழுத்தையும், செய்யுளின்

தொடக்கத்தையும் இணைத்துப் பார்த்துப் பாலன், குமரன், அரசன், மூப்பு, மரணம் என்றநிலையில் மூப்பு, மரணம் என்பன ஆகா என்று கூறுவர். இவ்வகைப் பொருத்தங்கள் பிற்காலத்தெழுந்த நூல்களில் பின்பற்றப்படவில்லை. நாட்பொருத்தம் என்பது எழுத்துக்களுக்குரிய விண்மீன்களை அமைத்து முதன்மொழியிலும், தலைவன் பெயரிலும் அமைந்துள்ள நாள் பொருத்தமுற அமைகிறதா என்று பார்ப்பது. பாட்டுடைத்தலைமகன் இயற்பெயரெழுத்து நாள் முதல மங்கலச் சொல்லெழுத்து நாள் அளவும் எண்ணினால் ஒன்று, மூன்று, ஐந்து, ஏழு, ஆகா என்றும், இரண்டு, நான்கு, ஆறு, எட்டு, ஒன்பது நன்றாம் எனவும் கூறுகின்ற நவநீதப்பாட்டியல் பாட்டுடைத்தலைவனின் நாள் ராசிக்கு மங்கலச் சொல்லின் நாள்ராசி எட்டாம் ராசியாய்வரின் அட்டமராசி ஆகாது எனவும் கூறுகின்றது. எட்டு என்பதனை ஆகும் என்றும் ராசி அளவில் எட்டு அட்டமராசி என விலக்குவதும் ஒருவகை முரணாகக் காணப்படுகின்றது.

'சொல்லிய நாள் இருபத்தேழையும், ஒன்பதாக மூன்று கூறாக்கிப் பாட்டுடைத்தலைமகன் இயற்பெயரின் முதலெழுத்தின் நாளைத் தொடங்கிக் கூறுகளை யெண்ண ஒன்று, மூன்று, ஐந்து, ஏழ்வரின் பொருந்தா[10]' என்று கூறுகின்ற வெண்பாப்பாட்டியல், உபசன்மம் அல்லது மூன்றாம் ஒன்பதில் மூன்றும், ஐந்தும், ஏழும் பொருந்துமெனக் கூறுகின்றது. இவற்றையெல்லாம் நோக்கும் பொழுது இவை எவ்வெவ்வடிப்படையில் வகுக்கப்பெற்றன என்பது விளங்கவில்லை. ஒரு பாட்டியலுள் முரணும், வேறு பாட்டியல்களோடு முரணும் என்ற இருவகை முரண்களால் எதனைப் பின்பற்றுவது எதனைவிடுவது என்பது பெருங்குழப்பமாக இருந்திருக்கவேண்டும். எனவே முதன் மொழியியல் அல்லது பொருத்தவியலில் கூறப்பெற்றவற்றைப் புலவர்கள் பின்பற்ற இயலாதநிலை ஏற்பட்டிருக்க வேண்டும். பொருத்தவியலில் கூறப்பெற்ற பொருத்தங்களைப் பின்பற்றாத நிலையில் ஏற்பட்ட குறைபாடுகள் ஒன்றுமில்லை என்பதையும் மக்கள் உணர்ந்திருக்கவேண்டும்.

செய்யுள் மொழியியலில் கூறப்பெற்ற இலக்கணங்கள் போற்றப்பெற்று வந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. அதனுள் காணப்பெறுகின்ற சிற்றிலக்கியங்களுக்குரிய இலக்கணங்கள்

என்றும் கொள்ளத்தக்கவையாய் உள்ளன எனினும் கோவை விருத்தம், நகரவிருத்தம், நாழிகைக்கவி, வஞ்சிமாலை, வண்ண விருத்தம் போன்ற அரிதான நூல்களுக்கு இலக்கணம் கூறப்பெற்றுள்ளது. நவநீதப்பாட்டியலில் பொருநர், பாணர், கூத்தர், இவர்களைப் புலவர்கள் ஆற்றுப்படுப்பது ஆற்றுப்படையின் இலக்கணம் என்று கூறப்பெற்றுள்ளது. இதனைப் "புலவர்கள் வாழ்த்துநலம் நிறைந்த பொருநரைப் பாணரைக் கூத்தரை நீணிதியம் பெறும்படி யாற்றுப் படுப்பன வாசிரியம் பெறுமே''[11] எனக் கூறுவதால் அறியலாம். இக்காரிகையின் உரை கூறவந்த உரையாசிரியர் "ஆறு அகவற் கவியாகப் பாடுவது ஆற்றுப்படையென்னும் பிரபந்தமாம்'' என்று கூறியுள்ளமை வியப்பாக இருக்கின்றது. பத்துப் பாட்டிலுள்ள ஆற்றுப்படை நூல்கள் இவ்வாறு ஆறு ஆசிரியப்பாவால் அமைந்தனவாகக் காணப்பெறவில்லை என்பது சிந்திப்பதற்குரியது.

அறம், பொருள், வீடு மூன்றையும் பழித்து இன்பமே பொருளாகக் கருதி, அவ்வின்பத்துக்கிடமான சிறப்பினையும் வைத்துப் பாட்டுடைத் தலைமகன் பேருக்கியைந்த எதுகை அமையக் கலிவெண்பாவினால், தலைமகன் தூறையிரந்து குறைபெறாது மடலேறுவதாய் ஈரடியெதுகை வரப் பாடுவது மடல் என்று இவ்வாசிரியர் கூறுகின்றார்[12]. இவ்வகை நூலை மடல் என்றே பிரபந்தத்திரட்டும், வச்சணந்தி மாலையும் கூறுகின்றன. இதனை வளமடல், உலாமடல் என்று கூறுகின்ற நூல்களும் உள. பாட்டியல்கள் இருவகை நெறிகளைப் பின்பற்றுவனவாகக் கூறப்பெறும். அவற்றுள் ஒன்று அகத்தியர் பாட்டியல்நெறி என்றும், மற்றொன்று இந்திரகாளிய நெறி என்றும் கூறப்பெறும். நவநீதப்பாட்டியல் அகத்தியர் நெறியைப் பின்பற்றி யமைக்கப்பெற்றதாக இதன் பாயிரங்கூறுகின்றது. வச்சணந்தி மாலை இந்திர காளிய நெறியைப் பின்பற்றியது என்று கூறப்பெறுவது. எனினும் சில இடங்களில் நவநீதப் பாட்டியலும், வச்சணந்தி மாலையும் ஒத்துக் காணப்பெறுகின்றன.

வஞ்சிப்பாவில் அமைந்த முழுநூல் ஒன்றும் இதுவரை கிடைத்திலது. பத்துப்பாட்டுப் பாடல்களுள் வஞ்சிநெடும் பாட்டாகவும், இடையிடையே வஞ்சியடிகள் விரவிய ஆசிரியப்பாக்களை

மட்டிலுமே காண இயல்கின்றது. ஆனால் பாட்டியல் நூல்கள் வஞ்சிப்பாக்களினால் அமைந்த சிற்றிலக்கியங்களைச் சுட்டி யுள்ளன. வெண்பாப்பாட்டியல் யானை வஞ்சி என்ற நூலைக் குறிப்பிடுகின்றது. எல்லாவடியும் மயங்கிய வஞ்சிப்பாவால் ஆடவரைப் புகழ்ந்து பாடுதல் நாமமாலை எனவும், பெண்களைப் புகழ்ந்து பாடுதல் புகழ்ச்சிமாலை எனவும், மற்றெல்லாம் பொரு ளாகும் வஞ்சிப்பாவிற் பாடினால் வஞ்சிமாலை எனவும் நவநீதப் பாட்டியல் கூறுகின்றது[13].

தொல்காப்பியர் மருட்பாவின் இலக்கணங்கூறுங்கால்,

''புறநிலை வாயுறை செவியறி வுறூஉவெனத்
திறநிலை மூன்றுந் திண்ணிதின் தெரியின்
வெண்பா வியலினும் ஆசிரிய வியலினும்
பண்புற முடியும் பாவின வெண்பா'' 14

எனக் கூறுகின்றார். இம்மருட்பாவின் இலக்கணத்தை யாப்பருங் கலம், யாப்பருங்காரிகை போன்ற நூற்கள் அப்படியே அடியொற்றி யுள்ளன. பாட்டியல் நூல்களும் இவ்விலக்கணத்தை ஒட்டிச் சிற் றிலக்கிய நூலாகக் கூறுகின்றமை நினைக்கத்தக்கதாகும். புற நிலை வாழ்த்து, செவியறிவுறூஉ, கைக்கிளை, வாயுறை என்னும் நான்கு பொருளின் மேலும் மருட்பா வரும் என்பதூஉம் அவ்வாறு வருவதனை மருட்பாப்பிரபந்தம் எனவும் கூறுகின்றார்.

பெருங்காப்பிய இலக்கணத்தையும், காப்பிய இலக்கணத் தையும் நவநீதநடன் தண்டியலங்காரத்தை அடியொற்றியமைத் துள்ளார்.

சித்திரச் செய்யுட்களைக் கூறுங்கால் முந்திரியார் வஞ்சினம், விதான வருக்கம் போன்ற நூல்களை உரையாசிரியர் குறிப்பிட் டுள்ளார். இந்நூல்கள் என்ன என்பது விளங்கவில்லை.

தலைவியின் கண்ணைப்பற்றி ஆசிரிய விருத்தத்தினாலோ கட்டளைக் கலித்துறையினாலோ பத்துப்பாடல்களைப் பாடுவது நயனப்பத்து என்றும் தலைவியின் தனத்தைப்பற்றி மேற் கூறி யவாறு பாடுவது பயோதரப்பத்து என்றும் வெண்பாப்பாட்டியல் கூறுகின்றது.

"அரசர் விருத்தம் கலித்துறை யீரைந்து கண்முலைமேல்
பரசி னயனம் பயோதரஞ் சேர்ந்த விருத்தமென்ப[15]"

என நவநீதப்பாட்டியல் நயனவிருத்தம், பயோதர விருத்தம் எனப் பெயர் கொடுத்துள்ளமை நினைக்கத்தக்கது. கலித்துறையினாலும் பாடலாம் என்று அமைத்த ஆசிரியர் விருத்தம் எனப்பெயர் முடிவு கூறியுள்ளார்.

பொதுப்பாயிரம், சிறப்புப்பாயிரம், நூலின் இயல்பு போன்றவற்றுக்குப் பொது மொழியியலில் தொல்காப்பியரையும், நன்னூலாரையும் பின்பற்றி இலக்கணம் அமைத்துள்ளனர்.

அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் இயல்புகளையும் பாக்களின் சாதிகளையும் பொதுமொழியியலில் அமைத்துச் செல்கின்றார். கவிஞர்களையும், கவிகளையும் பிறபாட்டியல் நூல்களை மனத்துட் கொண்டு கூறியுள்ளார். இவ்வாறு கூறப்பெற்ற கவிகளுள் கள்ளக்கவி என்ற ஒன்றைக் கூறியுள்ளார். கள்ளக் கவிக்கு விளக்கம் தரும் வகையில் உரையாசிரியர் பருணர் பாட்டியலினின்றும் ஒரு நூற்பாவைச் சான்று காட்டியுள்ளார்.

"கள்ளக் கவியே கவிஞன் றனைமகற்குக்
கள்ளத் தொடுபெயர் களைந்தே யாக்கி
ஒருவர்க் கியம்பும் மாணி லோனே[16]"

என்னும் நூற்பாவை எடுத்துக் காட்டியுள்ளமை சிந்திக்கத்தக்கது. சார்த்துக்கவி, வெள்ளைக்கவி, பிள்ளைக்கவி எனக் கவிஞர்களைக் கூறியுள்ளமையும் மனங்கொள்ளத்தக்கது.

நல்லவை, நிறையவை, தீயவை, குறையவை என அவைகளைப் பாகுபடுத்தியுள்ளார்.

"அறந்திறம் பாநல் லறிவோ ரறுபத்து நாற்கலையும்
திறந்தெரிந் தோர்சினஞ் செற்றம்பொய் காமம் சிதைக்குஞ் சித்தம்
மறந்தொரு காலு மொருபாற் படாதவர்மற்றுங் குற்றம்
துறந்தவர் தாங்களும் நல்லவை யாமென்று சொல்லுவரே"[17]

என நல்லவையின் இலக்கணத்தைக் கூறுகின்றார்.

அரசனை முதலாகக் கொண்டு அந்தணர், வணிகர், வினைஞர் கூட்டம் அமைந்து ஒருபாற் கோடாது எல்லாப் பொருள் களும் முற்றக் கற்றார் ஆயினும் அவரவர் உரைக்குமாறு முற்றக் கேட்போர் அவை நிறையவை எனப்படும்.

உரைத்த கருத்துணர்த்தி அச்சொற்களால் ஆகும் பொருள் காண்பார் வாய் தடுமாற்றச் சொல்லினையும் குற்றமாக எடுத்து நாட்டுவோர், உரைத்த பொருள் முடிவு பாராதே உத்தேசத்தைக் கொண்டு ஒரு பக்கம் சாரத் தமது மேற்கோள் முடியநில்லாது வேண்டியவை வந்ததுரைப்போர், மறமும் சினமும் மிக்கிருப் போர் இருப்பது தீயவையாம் என்பர்.

பொருள்படுத்துவாரை வாதித்துப் பலகால் நகைபெய்து ஒரு திறம் பழித்துப் பாங்காக வுரைத்து அங்கங்களாலே நாடக முத்திரை காட்டித் தம்மில் ஓர் நாயக மின்றிப் பலரும் நாயகமாய், இருவரும் உரைக்கும் நூல் பண்டு தாங்கள் அறிவதுமன்றிப் பகை செய்வதே மிகுந்து தருமநெறி விட்டிருந்தோர் தம்முள்ளே சங்கேதம் செய்து பொய்யுரைப்பது குறையவை எனக் கூறியுள்ளார். அவைகளைப் பற்றிக்கூறும் இவ் விடங்களில் ஆசிரியர் தருக்க நூலையொற்றிச் சில கருத்துக்களைக் கூறியுள்ளார். இத்தகைய அவைகளை நாம் இன்று காண்கின்றோம் என்பதும் குறிப்பிடத்தக்கது. இதே போன்று வாதினில் வல்லவர் இலக்கணத்தையும், வாதத் தொலை வின் இலக்கணத்தையும் தருக்கநூலை ஒட்டியே அமைத்துள்ளார். செய்யுட் செய்ய வல்லார், செய்யலாகாதார், கேட்பிக்கும் நெறி ஆகிய பல கருத்துக்களைப் பொது மொழியியலில் கூறியுள்ளார்.

மகடூஉ முன்னிலை

இந்நூல் செய்யுட்கள் பெரும்பான்மையும் மகடூஉ முன்னிலை யாக அமைந்துள்ளன. மகடூஉ முன்னிலை என்பது ஒரு பெண்ணை விளித்துச் சொல்வதுபோன்று சொல்லப்படுவது என்னுங் கருத்தினி னின்றும் வேறோர் கருத்தை இதன் உரையாசிரியர் கூறியுள்ளார். ''இதனுள் மகடூஉ முன்னிலை என்று சொல்லப்படுவது யாரையோ வெனின், சக்தி தேவியைச் சேவிக்கப்பட்ட பெண்கள் பதினாறு பேருண்டு; அவர்கள்பேர் மாலினி, மோகினி, யோகினி, போகினி, வீணி, பராயணி, கபாலி, கபாலயோசனி, அற்புதை, விந்தை,

அனிதை, வனிதை, வாசலை, மாயி, வராகி, நாரணி இப்படிச் சொல்லப்பட்ட சக்திகளில் அதிபாக்கியமுள்ள மாலினி சத்தி என்பாளையே இலக்கணங்களுக்கு முன்னிலையாக வைப்பது என்று அறிக''[18] எனக் கூறுவது கருதத்தக்கது. எதனையும் கடவுள் நோக்கில் வைத்துச் சிந்தனை செய்யும் போக்கு இருந்துள்ளமையை இதனால் அறியலாம். குறிப்பாகத் தாய்த் தெய்வவழிபாடு சிறப்புற்றோங்கிய காலத்தில் இத்தகைய கருத்திருந்திருக்கலாம் எனக் கருத இடமிருக்கின்றது.

இதற்கு உரை எழுதிய ஆசிரியர்கள் மூவர். அவர்களுள் காலத்தால் முற்பட்டவர் இருவர். அவர்கள் உரை மிக விரிவாகக் காணப்படுகின்றது. மிக ஆழமான, பரந்துபட்ட புலமை உடையவர்களாக இவர்கள் காணப்படுகிறார்கள். பல்வேறு இலக்கணநூல்களினின்றும் எடுத்துக் காட்டைத் தந்துள்ளனர். அவற்றுள் காலத்தால் மறைந்தன பல. அவர்களின் எடுத்துக்காட்டுகளில் இடம் பெற்ற நூல்கள்:

1. அகத்தியனார் ஆனந்தவோத்து (84)
2. அணியியல் (105)
3. அவிநயனார் கலாவியல் (96)
4. இந்திரகாளியம் (6, 22-3, 92)
5. கல்லாடம் (35, 88, 93)
6. கல்லாடனார் கலாவியல் (92)
7. கல்லாடனார் வெண்பா (92)
8. செய்யுள்வகைமை (33, 36, 42, 68, 96, 99, 104)
9. திருப்பிரவாசிரியர் தூக்கியல் (104)
10. தொல்காப்பியர் பாட்டியல் (21)
11. தொல்லாசிரியர் செய்தது (101)
12. பரணர் பாட்டியல் (3, 7, 26, 31, 73, 84, 87, 104-, 5)

13. பிங்கலசரிதை (66)

14. பொய்கையார் (10, 31, 44, 75, 81, 92)
பொய்கையார் பாட்டியல்
பொய்கையார் கலாவியல்

15. மாமூலம் (5, 6, 22, 35, 68, 82, 87, 104)

16. முந்திரியார் வஞ்சினம் (67)

17. முள்ளியார் கவித்தொகை (34-6, 38, 40, 48)

18. வாமன சரிதை (66)

19. பன்னிருபாட்டியல் (பல இடங்கள்)

நவநீத நடனார் செய்த நவநீதப்பாட்டியல், பாட்டியல் நூல்கள் சிறப்புற்றிருந்த காலகட்டமாகிய பதின்மூன்றாம் நூற்றாண்டில் செய்யப்பெற்றது. இவர் வேதம் வல்ல அந்தணர் அல்லர். நாட்டிய வேதம் வல்ல நட்டுவனாராக இருக்கலாம். பல பாட்டியல் நூல்களில் உள்ளமை போன்றே முதன் மொழியியலைச் செய்துள்ளார். அவை பெரும்பாலும் காலத்தோடு பொருந்தாதவை. பல சிற்றிலக்கியங்களின் இலக்கணங்கள் இந் நூலில் கூறப்பெற்றுள்ளன. அவற்றுள் சில அரியனவாகக் காணப் பெறுகின்றன. அவையின் இலக்கணத்தை மிக விரிவாகக் கூறுகின்றார். தொல்காப்பியம் முதலாகப் பல்வேறு நூல்களைத் தழுவி இவர் நூல் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. தருக்கநெறி நின்று இவர் பல இலக்கணங்களைக் கூறியுள்ளார் என்பது சிந்திக்கத்தக்கது. உரையாசிரியர் ஆழ்ந்த பரந்த தமிழ் நூற் புலமை மிக்கவர். அவர் காட்டியுள்ள எடுத்துக் காட்டுக்களினால் பல மறைந்து போன இலக்கண நூல்களை அறிய முடிகின்றது.

அடிக்குறிப்புக்கள்

1. யாப்பருங்கலக்காரிகை — பாயிரம் உரை
2. நவநீதப்பாட்டியல் — பாயிரம்

3. நவநீதப்பாட்டியல், முன்னுரை, பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை, பக்கம் XII
4. நவநீதப் பாட்டியல்-பாயிரம்
5. சோம. இளவரசு — இலக்கணவரலாறு
6. நவநீதப்பாட்டியல், முன்னுரை, பேராசிரியர் எஸ். வையாபுரிப்பிள்ளை
7. நவநீதப்பாட்டியல், நூ. 1
8. நவநீதப்பாட்டியல், நூ. 24
9. நவநீதப்பாட்டியல், நூ. 19
10. வெண்பாப்பாட்டியல் நூ. 18.
11. நவநீதப்பாட்டியல் நூ. 18
12. நவநீதப்பாட்டியல் நூ. 47 உரை
13. நவநீதப்பாட்டியல் நூ. 48
14. தொல். நூ. 1417
15. நவநீதப்பாட்டியல் நூ. 51
16. நவநீதப்பாட்டியல் நூ. 87 எடுத்துக்காட்டு நூற்பா
17. நவநீதப்பாட்டியல் நூ. 88
18. நவநீதப்பாட்டியல் தற்சிறப்புப் பாயிரம் — உரை.

# பிரயோக விவேகம்

கு. சுந்தரமூர்த்தி

வாழ்க்கையிலிருந்து எழும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்டற்கும் வாழ்க்கையை நெறிப்படுத்துதற்கும் சட்டஇயல் இன்றியமையாதது ஆதல் போல, மொழியிலிருந்து எழும் சிக்கல்களுக்குத் தீர்வு காண்டற்கும் மொழியை நெறிப்படுத்துவதற்கும் இலக்கணம் இன்றியமையாதது ஆகின்றது. இத்தகைய இலக்கணம் நம் தமிழ் மொழியில் மிகத் தொன்மையான காலத்திலிருந்தே தோன்றி வளர்ந்துள்ளது.

நம் தமிழ்மொழியின்கண் உள்ள இலக்கணத்தை இருவகையாகப் பகுத்துக் காணலாம். ஒன்று, மொழிதழுவிய இலக்கணம். பிறிதொன்று, சமுதாய நெறிதழுவிய இலக்கணம். இவ்விரண்டனுள் முன்னையது இருவகைப்படும். ஒன்று, சொற்கு உறுப்பாய் எழுத்திலக்கணம் பற்றிக் கூறுவது. பிறிதொன்று, சொற்கு இலக்கணம் கூறுவது. இரண்டாவதாக எண்ணப்பட்ட சமுதாய நெறிபற்றிய இலக்கணம் பொருள் இலக்கணம் எனப்படும். மக்கள் தாமும் தம் குடும்பமுமாக வாழும் நெறிபற்றிய அகப்பொருள் இலக்கணமும், தம்மளவிலின்றிச் சமுதாயத்தோடு பழகும் வகையில் தமக்கும் நாட்டிற்கும் பயன்படவாழும் நெறிபற்றிய புறப்பொருள் இலக்கணமும் இப் பொருளதிகாரத்தின் பாற்படும். இவையன்றிப் பேச்சு வழக்கிலும் செய்யுள் வழக்கிலும் கொள்ளத்தக்க நெறிமுறை பற்றிய இலக்கணமும் இதன்கண் காண்டற்குரியனவாய் உள்ளன. இவ்வகையில் அமைந்ததே தொல்காப்பியமாகும்.

தொல்காப்பியர் காலத்திலேயே செய்யுள் இலக்கணம் அதன் இன்றியமையாமை கருதித் தனித்தும் இருந்தது. இவ்வாறே அகப்பொருள் இலக்கணமும் புறப்பொருள் இலக்கணமும் அக்காலத்தை அடுத்துத் தனித்து எழுந்தன. அகப்பொருள் இலக்கண வளர்ச்சியில் நம்பியகப் பொருளும்[1], புறப்பொருள் இலக்கண

வளர்ச்சியில் புறப்பொருள் வெண்பாமாலையும்[2], யாப்பிலக்கண வளர்ச்சியில் யாப்பருங்கலம்[3] யாப்பருங்கலக்காரிகைகளும்[3] குறிப்பிடத்தக்கன. செய்யுட்கண் அமைந்த பொருளமைதியும் சொல்லமைதியும் கண்டு மகிழ்ந்த உணர்வால் அதன் சுவையமைப்புக்களைப் பாகுபடுத்திக் கண்டோர் அணியிலக்கணம் என்ற ஒன்றையும் வகுத்தனர். அவ்வகையில் வீரசோழிய[4] அணியியலும், தண்டியலங்காரமும், மாறனலங்காரமும்[5] குறிப்பிடத்தக்கன. இவ்வணி இலக்கணத்திற்குத் தொல்காப்பிய உவமவியல் முன்னோடியாக அமைந்திருப்பினும் இவ்வணியிலக்கண நூல்கள் வடமொழியின் வழிநூல்களாகவே அமைந்துள்ளன. மொழிஇலக்கண வகையில் எழுத்துச் சொல்பற்றி வளர்ந்த நூல்கள் நேமிநாதமும்[7], நன்னூலும்[8], ஆகும். ஐந்திலக்கணமும் தழுவி எழுந்த நூல்களில் வீரசோழியத்துக்குப் பின் தொன்னூல் விளக்கமும், முத்துவீரியமும் காணக்கிடக்கின்றன. மொழியிலக்கணத்தில் எழுத்திலக்கணத்தினும் சொல்லிலக்கணமே சிறந்தது என்னும் வடநூலார் கொள்கையைத் தழுவி எழுந்தனவே பிரயோக விவேகமும்[11], இலக்கணக் கொத்தும்[12] ஆகும். 17ம் நூற்றாண்டில் ஒன்றை ஒன்று அடுத்து வந்த இவ்விருநூல்களும் ஒரு நெறியிலேயே அமைந்துள்ளன.

பிரயோகவிவேகம்

பிரயோகம் - பயன்படுத்துதல். விவேகம் – அறிவு. எனவே சொற்களை அதன் நெறியறிந்து பயன்படுத்துதற்கு உரிய அறிவு என்பது இதன் பொருளாகும். ஈண்டு அவ்வறிவு அதனை வழங்கும் நூலுக்கு ஆயிற்று. வடமொழி தென்மொழி ஆகிய இரு மொழிகளிலும் காணும் ஒத்த இலக்கணக் கூறுகளைப் பெரும்பாலும் இந்நூல் எடுத்தியம்புவதுடன் சிறுபான்மை அவற்றிடையே காணும் வேறுபாட்டையும் எடுத்தியம்புகிறது. எனினும் இலக்கணக் குறியீடுகளும் விளக்கமும் பெரிதும் வடமொழி தழுவியே எழுதப்பட்டுள்ளன. வடமொழிக்குரிய எழுத்துக்கள் ஐம்பத்தொன்றாகும். அத்தொகையை உளங்கொண்டே ஆசிரியர் இந்நூலை ஐம்பத்தொரு காரிகைகளால் செய்துள்ளார்.

இந்நூல் காரகப்படலம், சமாசப்படலம், தத்திதப்படலம் திங்குப்படலம் என நான்கு படலங்களை உடையது. நூல்சுருங்கியதாய் இருப்பினும் பல அரிய கருத்துக்களை ஆசிரியர் இந்நூலின்கண் விளக்கியுள்ளார்.

விளிவேற்றுமை நீங்கலாக ஏனைய ஏழுவேற்றுமைகளையும் ஏற்கும் சொற்கள் வினைகொண்டு முடியுமேல் அவை காரகம் எனப்படும். எனவே இவ்வியற்கண் ஆசிரியர் பெரிதும் வேற்றுமை களைப் பற்றிக் கூறுகிறார் என்பது தெளிவாகும்.

இதன்கண் அமைந்த முதல் மூன்று காரிகைகள் ஆசிரியர் தம்மைப்பற்றிக் குறிப்பிடுவனவாகும். மகேச்சுரன், பாணினி, வரருசி, பதஞ்சலி, இந்திரன், பாரதி ஆகிய இவர்களின் தாள் வணங்கி இந்நூலை இயம்புவதாக முதற்காரிகையில் கூறியுள்ளார்.

''தொல்காப்பியரும் நன்னூலாரும் வடமொழிச் செய்தி-யையும், ஆரியச்சொற்கள் தமிழில் இயல்பாயும் திரிந்தும் வரு மாற்றையும் தம்நூலில் சிறுபான்மையே கூறினர். யாம் அவற்றைப் பெரும்பான்மையும் கூறுகின்றாம். காரணம் வட மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இலக்கணம் ஒன்று என்பது அறியாது குறியீட்டு வேறுபட்டாலும் மொழி வேற்றுமையானும் இகழ்ந்து வேறு என்பாரை நோக்கி என்க. இந்நூல் செய்த தற்கும் இதுவே பயன்'' என இரண்டாவது காரிகையில் கூறி யுள்ளார்.

இவ்வாறு கூறும் இவரே,

''சாற்றிய தெய்வப் புலவோர் மொழிக்கும் தமிழ்மொழிக்கும்
வேற்றுமை கூறின், திணைபால் உணர்த்தும் வினைவிகுதி
மாற்றரும் தெய்வமொழிக்கு இல்லை; பேர்க்கு எழுவாய் உருபும்
தேற்றிய லிங்கம் ஒருமூன்றும் இல்லை செழுந்தமிழ்க்கே''[13]

என இந்நூல் 49வது காரிகையில் கூறுவதாலும், அதனைத் தழுவி எழுதிய இலக்கணக் கொத்து ஆசிரியரும்,

"அன்றியும் தமிழ்நூற்கு அளவிலை; அவற்றுள்
ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ
அன்றியும் ஐந்தெழுத் தால்ஒரு பாடைஎன்று
அறையவே நாணுவர் அறிவுடை யோரே'
ஆகையால் யானும் அதுவே அறிக."[14]

"வடமொழி தமிழ்மொழி எனுமிரு மொழியினும்
இலக்கணம் ஒன்றே என்றே எண்ணுக."[15]

எனக் கூறித் தமது உரையில்,

"இனிச் சிறுபான்மை மிகவும் அருகி இலக்கணமும் வேறுபடும் என்பது தோன்று எண்ணுக என்றாம்." என்று கூறி, மேற்கூறிய பிரயோக விவேகம் கூறிய வேறுபாட்டையும் காட்டி, வேறு பாடுண்மை ஆண்டாண்டுக் காட்டுதும் எனக் கூறுவதாலும், சிவஞானமுனிவர் தமது பாயிர விருத்தியில்,

"தொல்காப்பியன் தன்நூலை ஐந்திரம் நோக்கித் தொகுத் தான் எனின், தமிழ்மொழிப் புணர்ச்சிக்கண்படும் செய்கைகளும் குறியீடுகளும், வினைக்குறிப்பு வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும், உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும், அகம் புறம் என்னும் பொருட்பாகு-பாடுகளும், குறிஞ்சி வெட்சி முதலிய திணைப்பாகுபாடுகளும், அவற்றின் பகுதிகளும், வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும், இன்னோரன்ன பிறவும் வடமொழியில் பெறப்படாமையானும் இவையெல்லாம் தானே படைத்துக் கொண்டு செய்தான் எனின் முந்துநூல் கண்டு என்பதனோடு முரணுதலானும் முற்காலத்து முதல் நூல் அகத்தியம் என்பதூஉம், அதன்வழித்தாகிய தொல் காப்பியம் அதன்வழிநூல் என்பதூஉம் துணியப்படும் என்க." என்று மறுத்தமையானும் இக்கருத்து ஏற்புடைத்தன்றாம்.

மூன்றாவது காரிகையில் "பெரும்புங்கவர் புகழ் போதாயனி சுப்பிரமணியன்" எனத் தம்மைக் கூறிக்கொள்ளும் இவர், "பிரயோக விவேகந்தன்னைக் கரும்பும் கனியும் எனப் பாடினான் தமிழ் கற்பவர்க்கே" எனத் தன்னைப் பிறன்போலக் கூறுவதற்கு

விளக்கமாக ''வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வர்; அதுபோல யாமும் பதிகமும் உரையும் செய்து உதாரணமும் காட்டினாம்'' எனக் கூறுகின்றார். மேலும், ''சம்பந்தர் சடகோபர் முதலாயினாரும் திவாகரரும் பதினெண்கீழ்க்கணக்குச் செய்தாரும் முன்னாகப் பின்னாகப் பதிகம் கூறுவதும் காண்க'' எனக் குறிப்பிடுகின்றார்.

அடுத்துள்ள பதினான்கு காரிகைகளில் வடமொழியிலுள்ள எழுத்துக்கள், அவற்றின் பெயர்கள், அளபெடை, வேற்றுமைகள், அவற்றின் மயக்கம் ஆகியவற்றை விரிவாகக் கூறுகின்றார்.

அவ்வகையில் குறிக்கும் செய்திகள் சில:-

1. அளபெடையை இயற்கை அளபெடை என்றும் செயற்கை யளபெடை என்றும் கூறும் இவர், அதனைத் தமிழ்நூலார் கருத்து என்றும் கூறுகின்றார், 'குன்றிசை மொழிவயின் நின்றிசை நிறைக்கும்' என்பது செயற்கை யளபெடைக்கல்லது இயற்கையள பெடைக்குப் பொருந்தாது என்றும், இயற்கையளபெடைக்கு வடநூலார் சொன்ன வண்ணமேயாம் என்றும், 'அளபிறந்துயிர்த் தலும் என்னும் சூத்திர விதி சிறுபான்மை பொருந்தில் பொருந்தும் என்க' என்றும் கூறுகின்றார். 16.அ

அளபெடை இயற்கை செயற்கை என இருவகைப்படுதலைத் தமிழ் நூலார் கருத்து என்னும் இவர் இயற்கை யளபெடை வட நூலார் சொன்ன வண்ணமேயாம் என்றும், அளபிறந்துயிர்த் தலும் என்னும் நூற்பா பொருந்தில் பொருந்தும் என்றும் கூறுவது மாறுகொளக் கூறலாயுள்ளது.

2. வடநூலார் துதியை, திருதியை, சதுர்த்தி என்றாற் போலத் தொல்காப்பியரும் 'இரண்டாகுவதே' 'மூன்றாகுவதே' 'நான்காகுவதே' என மொழி பெயர்த்துக் கூறுவர். 16.ஆ

ஒருசெய்தி பலவகைப்படும் எனவுரைக்கும் பொழுது எண் குறித்துச் சொல்லல் மரபு.

''உழவர் உழாதன நான்குபயன் உடைத்தே
ஒன்றே, சிறியிலை வெதிரின் நெல்விளை யும்மே
இரண்டே, தீஞ்சுளைப் பலவின் பழம்ஊழ்க் கும்மே''16 இ

எனப் புறத்திலும் வருதல் காண்க. இப்படியே வேற்றுமையும் ஒன்று முதலாகக் கணக்கிடப்படுதலின் இரண்டாகுவதே மூன்றாகு வதே என்றதல்லது வடமொழியைப் பெயர்த்துச் செய்தார் என்றற்கில்லை.

3. கிராம மகச்சத்–கிராமாய கச்சத் என்பதற்கு ஊரைச் சென்றான் ஊர்க்குச் சென்றான் என வடமொழியில் இருந்த வண்ணமே தமிழ் உரைகாரரும் மொழிபெயர்த்து உதாரணம் காட்டினர் என்பர்.[17] அ

ஊரைச்சென்றான், ஊர்க்குச் சென்றான் என்பன உலகில் வழங்கும் மொழி நடையேயாகும். அவ்வாறாக மொழிபெயர்த்துச் செய்தார் என்றற்கில்லை.

4. அறிவுடை அந்தணன் அவளைக் காட்டு, [17]ஆ செய்யவள் தவ்வையைக் காட்டிவிடும் என்று நான்காவது வடநூலார் கூறாத இரண்டனொடு வந்தது என்பர்.[18] அ

5. வடநூலுள் மூன்றாம் விபத்தி (வேற்றுமை) ஒன்றல்லது இரண்டில்லை. தமிழ் நூலுள் ஆன் ஒடு என மூன்றாவதற்கு இரண்டுருபு வருமாயினும் பொருள் வேறுபாடு இன்மையின் ஒன்றே எனச் சேனாவரையரும் கூறுவர். [18] ஆ

6. ஒருவினை ஒடுச்சொல் 'ஆன்றாரொடும் ஒப்பர் நிலத்து'[19] என ஒப்புப்பொருளிலும் 'எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே'[20] என்று வேற்றுமையின்மையாகிய அபேதத்தோடு 'வேலொடு நின்றான்' [21] அ எனக் கொண்டுஎன்னும் எச்சப்பொருளொடும் வரும் என்பர். [21] ஆ

7. தொல்காப்பியர் கூறிய ஒருவினை ஒடுச்சொல் உயர்பின் வழித்தே என்ற நியமம் தப்பி, ''மனத்தொடு வாய்மை மொழியின் தவத்தொடு தானம் செய்வாரில் தலை'' [22], ''மகன் தாயொடு கலாய்த்த கலாம்'' என்பன வந்தன. பாணினி ஒடு ஏற்ற சொல் சிறப்பில்லது எனவும் வினையொடு முடிந்த சொல்லே சிறப் புடையது எனவும் கூறுவர்.

தெய்வச்சிலையார் மட்டும் பாணினியார் கருத்தைத் தழுவி இந்நூற்பாவிற்கு உரைகாண்பர். உயர்பின் வழியது எனவே சிறப்பில்லாதது என்றார். எனினும் இது பொருந்துவதன்றாம்.

சமாசப்படலம்

இப்படலத்துள் தொகைச் சொல் இலக்கணம் கூறப்படுகிறது. 18முதல் 28வரை உள்ள 11 காரிகைகளால் இப்படலத்தின் கருத்து விளக்கப்பெறுகிறது.

இவ்வகையில் குறிக்கும் செய்திகள் சில:—

1. எழுவகைப் பொருள்கோளும், செய்யுள் விகாரமும் விருத்த ரத்னாகர விதியாகலின் வடநூலார் சப்தநூலில் கூறார்.

2. பண்புத்தொகை செந்நிறம் மாசித்திங்கள் வாளைமீன் சாரைப்பாம்பு எனச் சிறப்பும் பொதுவுமாகிய பெயராக வருவதொடு அமையாமல், வேதத்தில் கன்னியாகுமரி எனவும், வான்மீகத்தில் கும்பகடம் எனவும், வியாசபாரதத்தில் மருதந்வா எனவும் ஒரே பொருளில் இருசொல் ஒட்டிப் பண்புத்தொகையாய் வருதல் போலவே தமிழிலும் பெருமலைச்சிலம்பு, ''உவகை மகிழ்ச்சியில் சோர்வு'' [23] ''ஆடகச் செம்பொற்கிண்ணம்'' [24] ''அளறுமுந்நீர்த் தடங்கடல்'' [25] என ஒருபொருட்கு இருபெயர் பிரியாது நின்று பண்புத்தொகை வரும் என்பர்.

3. வடமொழியாளரில் பலர் உம்மைத் தொகையின் புறத்து அன்மொழித் தொகை பிறக்கும் என்று கொள்ளார். தமிழ் நூலுள்ளும் அதற்கு எடுத்துக்காட்டுத் தகரஞாழல் வந்தாள் என்பது ஒன்றுமே எனக் கூறுவர்.

''பண்பு வேற்றுமை ஆகிய இருதொகைவழி வரும் அன்மொழித் தொகையிலும் உம்மைத் தொகைவழி வரும் அன்மொழித் தொகை சிறுபான்மையே'' என்பதைச் சேனாவரையரும் எண்ணி யுள்ளார். [26]

தத்திதப்படலம்

பெயர் ஏற்கும் விகுதிகள் இப்படலத்தில் கூறப்படுகின்றன. இவ்விகுதிகளை ஏற்றுவரும் குறிப்புவினை முற்றுப்பெயர்கள்

தத்திதாந்தப் பதம் எனப்படும். 29 முதல் 34 வரையுள்ள 6 காரிகைகளில் இப் படலக் கருத்து விரித்துரைக்கப்படுகிறது.

தனது தமது என அஃறிணைக்கண் இருமையினும் வேறு வந்தாற்போல, உயர்திணைக்கண் தனன் தமன் என வெவ்வேறு வாராமையானும் சிவன்தமர், மணிவண்ணன் தமர் ''கல்லாமாவன்னார் தமர்''[27] என ஒருமையிலும் பன்மையிலும் தமர் என்பது முதலாகிய சொற்கள் வருவதாலும் தொல்காப்பியனார் ''த ந நு எ எனும் அவை முதலாகிய கிளைநுதற் பெயரும் பிரிப்பப் பிரியா'' எனச் சூத்திரம் செய்தார் என்பர்.

**திங்குப்படலம்**

வினைவிகுதி பற்றிக் கூறுவது இப்படலம் ஆகும். 35 முதல் 51 வரை உள்ள 17 காரிகைகளால் இப்படலச்செய்தி விரித்துரைக்கப் படுகிறது.

இவ்வகையில் குறிக்கும் செய்திகளில் சில:—

1. பலபொருள் ஒரு சொல் என்பது இன்று. ஒவ்வொரு சொல்லும் தனித்தனியே ஒவ்வொரு பொருளையே தரும். ஒவ்வொரு பொருள் தரும் போதும் ஒரு சொல்லே எழுத்தொற்றுமை பற்றியே பலபொருள் ஒருசொல் எனப்படுகிறது. இதனை உட்கொண்டு ''தெவ்வுக் கொளற் பொருட்டே''[28] ''தெவ்வுப் பகையாகும்''[29] எனத் தொல்காப்பியர் கூறினார்.

''தெவுக் கொளற் பொருட்டே'' என்பதே பாடமாகும்.

2. சுரிதகம் என்பது நலிதல் ஓசையை ஈறும் ஈற்றயலுமாக வுடைய செய்யுளுறுப்பு. அதனைத் தமிழ் நூலார் சுரிந்து இறுதலின் சுரிதகம் எனல் பொருந்தாது என்பர்.

3. முன்கூறாமலேயே கூறியது போலப் பின்னர்க்கூறும் மரபு அநுவாதத்தில் உண்டு.

4. சத்துவகுணத்தைப் புல்லிங்கம் என்றும் ரசோகுணத்தைத் திரீலிங்கம் என்றும் தமோ குணத்தை நபுஞ்சகலிங்கம் என்றும் இவை சாத்திரலிங்கம் என்றும் கொள்வர். (பத்னி–திரீலிங்கம். தாரம் - புல்லிங்கம். களத்திரம் – நபுஞ்சகலிங்கம். இம்மூன்றும் மனைவி என்று பொருள் படுவன)[30]

இந்நூலுள் தோன்றும் ஐயங்கள் வடமொழி வல்லாராகிய தமிழ் அறிஞர்களாலேயே களையப்படும்.

பிரயோகவிவேகமும் இலக்கணக்கொத்தும்

பிரயோக விவேகம் தோன்றிய காலத்தை அடுத்து இலக்கணக் கொத்துத் தோன்றியது. பிரயோக விவேகத்தைத் தழுவி அதன்கண் உள்ள கருத்துக்கள் பலவற்றையும் நல்ல தமிழில் விளக்கிய சிறப்பு இந்நூற்கு உரியதாகும். இவ்வகையில் பிரயோக விவேகத்தை விளங்கிக் கொள்வதற்கு இந்நூல் பெரிதும் பயன்படுவதாகும். வடமொழிவல்லார் தமிழிலக்கணம் உணர இலக்கணக்கொத்தும் பயன்படும் என்பர். ஆதலின் இந்நூலோடு ஒப்பிட்டுச் சில கருத்துக்களைத் தருதல் தகும்.

1. வடமொழி தமிழ் மொழி என்னும் இருமொழிக்கும் இலக்கணம் ஒன்றே என்ற அடிப்படைக் கொள்கையில் இருவரும் ஒத்துள்ளனர்.

2. இலக்கணக்கொத்துப் பாயிரம் நீங்கலாக மூன்று இயல்களில் அமைந்திருப்பினும் பிரயோக விவேகத்தில் கூறப்பட்ட நான்கு படலங்களின் கருத்துக்களும் அவற்றில் காணப்படுகின்றன.

| பிரயோகவிவேகம் | இலக்கணக்கொத்து |
|---|---|
| 1. காரகப் படலம் | வேற்றுமையியல், ஒழிபியல் |
| 2. சமாசப்படலம் | ஒழிபியல் |
| 3. தத்திதப்படலம் | ஒழிபியல் |
| 4. திங்ஙுப்படலம் | வினையியல், ஒழிபியல் |

3. பிரயோக விவேகத்தில் ஐந்தாவது காரிகையில் கூறப்பெறும் அளபெடைகள் பலவும் இலக்கணக்கொத்துள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

''இயற்கை அளபெடை செயற்கை அளபெடை
எழுத்துப்பே றளபெடை இசைநூல் அளபெடை
ஒற்றுப்பே றளபெடை ஒரோவழிக் கூடில்
ஐந்தென மொழிப அளபெடை; அவைதாம்
குற்றெழுத் தளபெடை நெட்டெழுத் தளபெடை
ஒற்றெழுத் தளபெடை எனஒரு மூன்றாய்
மொழிமுதல் இடைகடை மூன்றினும் வருமே[31]''

என்பது இலக்கணக் கொத்தாகும்.

4. எழுவகை வேற்றுமை உருபுகளும் ஒரு சொற்றொடரில் வருதலைப் பிரயோக விவேகம் கூறுகிறது.

''இந்திரன் தாமரை யைக்கரத் தாற்கொய் திறைவனுக்குத்
தந்திருங் குற்றத்தி னீங்கிவிண் மேலிருந் தான்எனலும்
வந்தரும காரக மெல்லாம் பிறக்குமோர் வாக்கியத்துள்
சிந்துர வாணுதல் செவ்வாய்க் குறுநகைத் தேமொழியே''[32]

இவ்வாறே,

''நாரா யணன்பூ ஓரா யிரத்தைக்
கரத்தாற் கொய்துஓர் அரற்கே கொடுத்துச்
சக்கரச் சிறுமையின் நீங்கி நற்சுவைப
பாற்கடற் கண்ணே பள்ளிகொண் டான்எனக்
காரகம் முழுதும் வந்தன காண்க''[33].

என இலக்கணக் கொத்தும் கூறுகின்றது.

இவ்வாறே பிரயோக விவேகத்தில் 11, 12, 13, 17 முதலிய காரிகைகளிலும் உரைகளிலும் காணப்படும் கருத்துக்கள், இலக்கணக்கொத்து 26, 27, 28, 31, 42, 36, 40 ஆகிய நூற்பாக்களில் கூறப்பட்டுள்ளன.

தொல்காப்பியமும் பிரயோகவிவேகமும்

வடமொழி இலக்கணத்தோடு ஒத்தும் மாறுபட்டும் இருக்கும் தொல்காப்பிய நூற்பாக்கள் பலவற்றையும் காட்டும் இவர் அது பற்றித் தாம் கருதும் கருத்துக்களையும் ஆங்காங்கு விளக்கியுள்ளார்.

அவற்றுள் சில:-

1. 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என வருதலின் தொல்காப்பியத்துக்கு முதல் நூல் ஐந்திரம் என்க[34].

சிவஞானமுனிவர் மறுப்பு முன்னர்க் காட்டப்பட்டது.

2. தொல்காப்பியர் மாத்ரா என்ற ஆரியச் சொல்லை மாத்திரை என்று தற்பவமாக்கிப் பயன்படுத்தியுள்ளார்.[35]

3. ''உப்ப காரம் ஒன்றெனமொழிப
இருவயின் நிலையும் பொருட்டாகும்மே''[36]

தபு என்ற சொல் நீ சா என்றும் நீ ஒருவனைச் சாகச் செய் என்றும் தன்வினை பிறவினை இரண்டன் கண்ணும் வரும். பிற வினைக்கண் வரும் வழித் தபுவி என்பதன் இவ்விகுதி மறைந் திருப்பது வடமொழிக்கண் அந்தர்ப்பாவிதணிச் என்று கூறப்படும். இச்சூத்திரத்தால் தொல்காப்பியர்க்கு அந்தர்ப்பாவிதணிச் என்பது உடன்பாடாதல் பெறப்படும்.[37]

இருமொழியிலும் ஒத்த கருத்துண்மை இதனால் புலனாகும் என்பதே கருதத்தக்கது.

4. ''இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்[38] கிளத்தல் என்ற லோட்டு விதிப்பொருட்கண் வந்தது.[39]

5. ''மன்னாப் பொருளும் அன்ன இயற்றே''[40] இன்மை அன்மை எதிர்மறை மூன்றினும் வரும் ஞஞ்னு, இன்மையாகிய தத்அபாவத்தில் வந்ததற்கு எடுத்துக்காட்டு.[41]

''மன்னாப்பொருள் - இல்லாத பொருள்'' என்பது இவர் கருத்தாகிறது. நிலையாப் பொருள் எனப் பொருள் காண்பர் தெய்வச்சிலையாரும், நச்சினார்க்கினியரும். நன்னூலார் ஈருரையும் தருவர்.

6. ''ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப
மிக்கோ னாயினும் கடிவரை இன்றே''[42]

இரண்டாம் வேற்றுமையும் கருமமும் கருத்தாவும் தடுமாறி நிற்றலும் உண்டு என்றற்கு இது எடுத்துக்காட்டாம். கிழவன் கிழத்தியைக் காண்டலும் கிழத்தி கிழவனைக் காண்டலும் என எழுவாயும் செயப்படுபொருளும் தடுமாறி நிற்றலைக் காண்க.[43]

திருக்குறளும் பிரயோகவிவேகமும்

இந்நூலுரையில் 221 திருக்குறள்கள் எடுத்தாளப்பட்டுள்ளன. இவற்றான் பல இலக்கண விதிகளும், இந்நூலாசிரியர்தம் கருத்தும் ஆங்காங்குத் தெரியவருகின்றன.

அவற்றுள் சில:-

1. ஒரு பொருளை முன்னர் எடுத்துக் கூறுவது புரோவாதம். அதனை ஒருநிமித்தத்தால் பின்னரும் எடுத்துக் கூறுவது அநுவாதம்.[44]

''சிறப்பீனும் செல்வமும் ஈனும் அறத்தினூஉங்கு
ஆக்கம் எவனோ உயிர்க்கு''[45]

''அறத்தினூங்கு ஆக்கமும் இல்லை அதனை
மறத்தலின் ஊங்கில்லை கேடு''[46]

ஈண்டு அறத்தினூங்கு ஆக்கமுமில்லை என்பது அநுவாதம்.

2. ''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''[47]

இது ஏழாம் வேற்றுமையில் பிரித்துக் கூட்டற்கு எடுத்துக் காட்டாம்.[48]

3. ''தெய்வம் தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள்
பெய்யெனப் பெய்யும் மழை''[49]

தொழுது எழுவாள் என்பது எழுந்து தொழுவாள் என முன்பின்னாக நின்றது. பரிமேலழகர் தொழாநின்று எனத் துணைவினையாய் உரைப்பர். எழுதல், துயில் ஒழிதல் ஆகலின் எழுந்து தொழுவாள் என முன்பின்னாகப் பொருள் படுதலன்றி நகுபுவந்தான், ஓடி வந்தான் என்பன போலத் தொழாநின்று துயிலொழிதல் கூடா தென்க.

"வைகறை யாமம் துயிலெழுந்து தான் செய்யும்
நல்லறமும் ஒண்பொருளும் சிந்தித்து—வாய்வதின்
தந்தையும் தாயும் தொழுதெழுக"[60] என்பது

துயிலொழிந்து பின் தந்தையையும் தாயையும் தொழுது பின் காரியத்தில் செல்க எனப் பொருள்பட்டு வருதலானும் அவர்உரை அசம்பாவிதம் என்க.[61]

எழுதல்--துயில் ஒழிதல் எனப் பொருள் காண்கின்றார் இவர். எழுதல்–படுக்கையினின்றும் எழுதல் என்பதே கருத்து. சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறவாய் என்பதுபோல் எழும்பொழுது தொழுது கொண்டே எழுவாள் என்பது கருத்தாகும்.

4. "எனைத்துணைய ராயினும் என்னாம் தினைத்துணையும்
தேரான் பிறனில் புகல்"[52]

தேரான்பிறன் தேராத பிறன் என முற்றுப் பெயரெச்சமாய்ப் பொருள்திரிந்தது. தேரான்பிறன்—தன்னை ஐயுறாத பிறன்.[53]

பரிமேலழகர் உரையிலேயே பிறர்கருத்தாக இக்கருத்துக் கூறப்பட்டுள்ளது. இதன்கண் ஒருமை பன்மை மயக்கம் இன்மை அறிக என இதன் நயம் பாராட்டுவர் நுண்பொருள் மாலை உரையாசிரியர்.

5. "குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே
உடம்போ டுயிரிடை நட்பு"[54]

நட்பு என்பது குறிப்புமொழி. இவ்வாறு பெயரடியாகத் தோன்றிய குறிப்பை அபிதாமூலத்தொனி, விருத்தலக்கணை என்று கூறுவர். அரக்கரைப் புண்ணியசனம் என்பதும் அது.[55]

நட்பு என்பது ஈண்டுக் குறிப்புமொழியாய் நட்பின்றிப் போதலையுணர்த்தி நின்றது என்பர் பரிமேலழகர். அதனையே இவரும் தழுவினார்.

6. "கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியும் ஐம்புலனும்
"ஒண்டொடி கண்ணே உள[56]."

அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் என்பதுபோல ஒன்று பல அடுக்கினாற்போல இங்கு வேறுபல அடுக்கல் வந்தது[57].

''பன்முறை யானும் வினைஎஞ்சு கிளவி
அடுக்குநவரினும் சொன்முறை முடியாது
முன்னது முடிய முடியுமன் பொருளே[58]''

எனவரும் தொல்காப்பிய விதியுள் இது அடங்கும்.

திருக்கோவையாரும் பிரயோகவிவேகமும்

திருக்குறள் போலத் திருக்கோவையாரும் இந்நூலாசிரியரின் உளங்கவர்ந்த நூலாகும்.

1. ''ஈசற்கு யான்வைத்த அன்பின் அகன்று அவன் வாங்கிய என்
பாசத்திற் காரென் றவன்தில்லை யின்னொளி போன் றவன்தோள்
பூசத் திருநீ றெனவெளுத் தாங்கவன் பூங்கழல்யாம்
பேசத் திருவார்த்தை யிற்பெரு நீளம் பெருங் கண்களே''[59]

ஈச என்பது ஈசன் எனத் தமிழ்ச்சிறப்பெழுத்தாகிய னகரம் பெற்றது[60].

2. குறப்பாவை நின்குழல் வேங்கையம் போதொடு கோங்கம்விராய்
நறப்பா டலம்புனை வார்நினை வார்தம் பிரான்புலியூர்
மறப்பான் அடுப்பதொர் தீவினை வந்திடிற் சென்று சென்று
பிறப்பான் அடுப்பினும் பின்னும்துன் னத்தகும் பெற்றியரே'[61]'.

புனைய நினைவார் என்னும் செயவென் எச்சம் புனைவார் நினைவார் என முற்றாய்த் திரிந்தது. இவ்வாறு வரும் முற்றுக் களை முற்றாகவே பொருள் உரைக்கின் ஏக வாக்கியமாகாது பின்னவாக்கியமாகிப் பொருள் சித்தியாதென்க[62].

3 "மயிலெனப் பேர்ந்துஇள வல்லியின் ஒல்கிமென் மான் விழித்துக்
குயிலெனப் பேசும்எம் குட்டன்எங் குற்றதென் நெஞ்சகத்தே
பயிலெனப் பேர்ந்தறி யாதவன் தில்லைப்பல் பூங்குழலாய்
அயிலெனப் பெருங்கண் ணாய்என் கொலாம்இன் நயர்கின்றதே"[63]

மயிலெனப் பேர்ந்து எனத் திருக்கோவையாரில் மயிலை நடைக்கு உவமையாக்கலின் நடைமயிலே என்றாம்.[64]

சேனாவரையரும் பிரயோகவிவேகமும்

வடநூற்கடலை நிலைகண்டுணர்ந்தவர் சேனாவரையர் ஆவர் ஆகலின் இவ்வாசிரியர் அவர் மேல் மிகவும் பற்றுடையவராயுள்ளனர். 27 இடங்களில் சேனாவரையர் உரையை எடுத்துக் காட்டியுள்ளார் இவ்வாசிரியர்.

அவ்விடங்களுள் சேனாவரையரை மறுக்கும் இடம் ஒன்றேயாகும். மக்கட் சுட்டு என்பது அன்மொழித்தொகை என்பர் சேனாவரையர். இவர் பின்மொழி ஆகுபெயராய் நின்ற இரு பெயரொட்டுப்பண்புத்தொகை எனக் கூறி அவரை மறுத்துள்ளார்[65].

இரண்டாம் வேற்றுமையை இயற்றப்படுவது, வேறுபடுத்தப் படுவது, எய்தப் படுவது எனப் பகுத்துக்கூறும் கருத்தையும்[66], பொருள் மயக்கம், உருபுமயக்கம் ஆகியவற்றுக்குத் தரும்[67], விளக்கத்தையும் இவை போல்வன சிலவற்றையும் இவர் பெரிதும் ஏற்பர்.

நச்சினார்க்கினியரும் பிரயோகவிவேகமும்

உச்சிமேல் புலவர் கொள் நச்சினார்க்கினியர் என இவர் பாராட்டப்படுவர். இவர் கருத்தைச் சிலவிடங்களில் ஏற்றும் பலவிடங்களில் மறுத்தும் இவர் விளக்கியுள்ளார்.

1 பெண்மை ஆண்மைகளுக்குப் பொருள் கட்புலனாகிய அமைதித்தன்மை, ஆளுந்தன்மை எனப் பொருள்காண்பர் நச்சினார்க்கினியர். இது பொருந்தும் என்பர் இவ்வாசிரியர்.[68]

2 தொல்காப்பியம் கபிலம் என்பனவற்றை ஈறுதிரிந்த ஆகுபெயர் என்பர் நச்சினார்க்கினியர். ஈறுதிரிதல் ஆகுபெயர்க்கு ஆகாது என மறுப்பர் இவ்வாசிரியர்.[69]

நன்னூலும் பிரயோகவிவேகமும்

முன்னூலை ஒழியப் பின்னூல் பலவினுள் எந்நூலாரும் நன்னூலார்க்கு இணையோ என்னும் துணிபே மன்னுக எனப் பாராட்டப்பெறும் சிறப்பு நன்னூலார்க்கு உண்டு. அவர்தம் நூற்பாக்கள் பலவற்றை இவ்வாசிரியர் எடுத்தாண்டுள்ளார்.

1 ''புள்ளிவிட் டவ்வொடு முன்னுரு வாகியும்
ஏனை உயிரோடு உருவுதிரிந்தும்
உயிரள வாய்அதன் வடிவொழித் திருவயின்
பெயரொடும் ஒற்றுமுன் னாய்வரும் உயிர்மெய்''[70]

வடிவெழுத்து, ஒலிஎழுத்து ஆகிய இரண்டற்கும் இலக்கணம் கூறிற்று என்பர் இவ்வாசிரியர்.[71]

2 ''இரண்டா வதன்உருபு ஐயே அதன்பொருள்
ஆக்கல் அழித்தல் அடைதல் நீத்தல்
ஒத்தல் உடைமை ஆதி ஆகும்''[72]

நன்னூலார் ஆக்கல் அழித்தல் அடைதல் முதலாகச் சைனேந்திரன் மதம்பற்றிப் பலவாக்கினர்[73] என்பர்.

நிறைவாக,

''சீதள சந்த்ரமுக ராமபத்திர தீக்கிதர்க்குப்
போதொடு சென்று புகல்வோம்; அவர்க்குப் பொழுது இல்லையேல்
மேதினியில் தமிழ்செய் பிரயோக விவேகம் தன்னைப்
பேதம் இலாத பதஞ்சலிபால் சென்று பேசுவமே

பேர்கொண்டு நின்ற பிரயோக விவேகத்தைச்
சீர்கொண்ட ராமபத்திர தீக்கிதன்தான் — நேர்கொண்டு
கேட்டான் இனிக்கண்ணாற் கேட்கும் பதஞ்சலிதான்
கேட்டாலென் கேளாக்கால் என்

உப்பர்க் குரியபிர யோக விவேகத்தை
ஐம்பத் தொருகவியா லுரைத்தான் – செம்பொற்சீர்
மன்னும் மதில்குருகூர் வாழ்சுப் பிரமணியன்
என்னு மொருவே தியன்

எனவரும் நூற்பாக்களால் ஆசிரியரின் பெயரும் செய்த செய்யுள் தொகையும் தெரிய வருகின்றன.

அடிக்குறிப்புக்கள்

1. நம்பியகப்பொருள்: கி.பி. 13ஆம் நூற்றாண்டின் தொடக்கம் (இலக்கிய வரலாறு – மு.அ. 13ஆம் நூற். பக். 183)
2. புறப்பொருள் வெண்பாமாலை: கி.பி. 9ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி (இலக்கிய வரலாறு – மு.அ. 9ஆம் நூற்.பக். 28)
3. யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை – கி.பி. 11ஆம் நூற்றாண்டு (இலக்கிய வரலாறு – மு.அ. 11ஆம் நூற். பக். 115)
4. வீரசோழியம்: கி.பி. 11ஆம் நூற்றாண்டு (இலக்கிய வரலாறு – மு.அ. 11ஆம் நூற்.பக் 128)
5. தண்டியலங்காரம்: கி.பி. 12ஆம் நூற்றாண்டு (இலக்கிய வரலாறு – மு.அ. 12ஆம் நூற். பக்கம். 649)
6. மாறனலங்காரம்: கி.பி. 16ஆம் நூற்றாண்டு (இலக்கிய வரலாறு – மு.அ. 16ஆம் நூற்.)
7. நேமிநாதம்: கி.பி. 12ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி (இலக்கிய வரலாறு – மு.அ. 12ஆம் நூற். பக். 654)
8. நன்னூல் - கி.பி. 13ஆம் நூற்றாண்டின் முற்பகுதி (இலக்கிய வரலாறு – மு.அ. 13ஆம் நூற்.பக். 17)
9. தொன்னூல் விளக்கம்: கி.பி. 18ஆம் நூற்றாண்டு (கலைக் களஞ்சியம் – பகுதி 6, பக். 250)
10. முத்துவீரியம்: கி.பி. 19ஆம் நூற்றாண்டு (கழகப்பதிப்பு)
11. பிரயோகவிவேகம்: கி.பி. 17ஆம் நூற்றாண்டு (கலைக் களஞ்சியம் பகுதி 5, பக். 65)
12. இலக்கணக்கொத்து – கி.பி. 17ஆம் நூற்றாண்டு (கலைக் களஞ்சியம் – பகுதி. 2, பக். 103)
13. பிர. விவே. 49
14. இலக். கொத்து நூற். 7–3

15. இலக். கொத்து நூற். 7-4
16. அ. பிரயோகவிவேகம் - 5வது காரிகை - உரை
16. ஆ. மேற்படி 6வது காரிகை - உரை
16. இ. புறநானூறு -
17. அ. பிரயோகவிவேகம் 14 காரிகை உரை
17. ஆ. கலித்தொகை - 72
18. அ. குறள் - 127
18. ஆ. பிரயோகவிவேகம் - 15 காரிகை உரை
18. இ. பிரயோகவிவேகம் - 16 காரிகை உரை
19. குறள் - 413
20. தொல். சொல். சூ. 401
21. அ. குறள் - 552
21. ஆ. பிரயோக விவேகம் - 16 காரிகை உரை
22. குறள் - 295
23. குறள் - 53.
24. சீவ.சிந். 512
25. சீவ.சிந். 2851
26. தொல். சொல். எச். சூத். 22 உரை.
27. குறள் - 814
28. தொல். சொல். உரி. சூ. 345
29. தொல். சொல். உரி. சூ. 346
30. பிர. விவே. காரிகை. 43 உரை
31. இலக்கணக்கொத்து. நூ. 90
32. பிர. விவே. காரி. 10
33. இலக். கொத். நூ. 15
34. பிர.விவே. காரி. 1
35. பிர.விவே. காரி. 2
36. தொல். எழு.நூ. 76
37. பிர. விவே. கா. 35
38. தொல்.சொல். நூ. 19
39. பிர.விவே.கா. 41
40. தொல். சொல். நூ. 34
41. பிர.விவே. கா. 21
42 தொல்.பொருள். 93,

43. பிர.விவே. கா. 11
44. பிர.விவே. கா. 50
45. குறள் - 31
46. குறள் - 32
47. குறள் – 50
48. பிர.விவே. கா.13
49. குறள் - 55
50. ஆசாரக்கோவை – 4
51. பிர.விவே.கா: 39
52. குறள்–144
53. பிர.விவே.கா 39
54. குறள்-338
55. பிர.விவே.கா.50
56. குறள்-1101
57. பிர.விவே.கா. 39
58. தொல்.சொல். நூ 228
59. திருக்கோவையார்-109
60. பிர.விவே.கா.2
61. திருக்கோவையார்-205
62. பிர.விவே.கா. 39
63. திருக்கோவையார்—224
64. பிர.விவே.கா.42

''அடைமொழி யாம்தொகை, தத்திதன், காரகமாம் சுபந்தம்
நடைமயிலே வினைஎல்லாம் திங் அந்தம் நற்றாது வினை
புடைபெயர்ந் தும்தனைச் சொல்பெயர் பாவம்; பொதுவில் நிற்கும்
இடைநிலை, யார், உண்டு இல், வேறு, எச்சம் அவ்வயம் என்றறியே

65. பிர.வே.கா.22

66. பிர.விவே.கா. 12

67. பிர.விவே.கா. 15.

68. பிர.விவே.கா. 34.

69. பிர.விவே.கா. 30

70. நன்னூல். நூ. 89

71. பிர.விவே.கா. 21

72. நன்னூல் நூ. 296

73. பிர.விவே.கா. 12

# பிரபந்த மரபியல்

டாக்டர் அ. மா. பரிமணம்.

வாழும் உயர்தனிச் செம்மொழிகளுள் ஒன்றாய்த் திகழும் தமிழ் அதன் பல நிலைகளிலும் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வந்துள்ளது. பன்னூறாண்டுகட்கு முன்னரே செம்மையாக அமைக்கப்பெற்ற தொல்காப்பியங் கூறும் இலக்கணச் செய்திகளுள் பல, காலப்போக்கில் வளர்ச்சியும் மாற்றமும் எய்தியுள்ளன. எழுத்து, சொல் ஆகிய இலக்கணங்களில் தோன்றிய வளர்ச்சி-மாற்றங்களிலும் பொருள் இலக்கணத்தில் தோன்றியுள்ள வளர்ச்சி-மாற்றங்கள் எண்ணிக்கையிலும், பரப்பிலும் அதிகமாகும் என்பதனைத் தொல்காப்பியத்திற்குப் பின்னர்த் தோன்றிய இலக்கண இலக்கியங்கள் காட்டி நிற்கின்றன. பொருளதிகாரப் பகுதிகளில் ஒன்றாய் விளங்கும் செய்யுளியல் தனியே வளர்ந்து யாப்பதிகாரம் என்றும், பிறிதொரு பகுதியான உவமவியல் வளர்ச்சியுற்று அணி இலக்கணம் என்றும் தனித்தனியாக வளர, அதனால் 'ஐந்திலக்கணம்' என்று கூறும் மரபும் தோன்றியது. செய்யுளியலின் ஒரு கூறாகிய வண்ணம் வளர்ச்சியுற்று 'வண்ணத் தியல்பு' என்னுமோர் இலக்கண நூலும், அறுவகை இலக்கணம் என்று கூறும் புதுமரபும் தோன்றலாயின[1].

தனிநிலைச் செய்யுட்கு விரிவாக இலக்கணங்கூறிய தொல்-காப்பியர் தொடர்நிலைச் செய்யுட்குக் குறிப்பால் உணருமாறே இலக்கணங் கூறியுள்ளார். அஃதுணர்ந்த அடியார்க்கு நல்லார், தாம் உரை வகுக்கும் சிலப்பதிகாரம், 'இழுமென்மொழியால் விழுமியது நுவலும் தோலென்னும் வனப்பில் அமையும் தொடர் நிலைச் செய்யுளாகும்' என்பதனை நன்கு விளக்கியுள்ளார்[2]. தொல்காப்பியத்தில் குறிப்பாக உணர்த்தப்பெற்ற தொடர்நிலைச் செய்யுள் அமைப்பு, காப்பிய காலத்தில் சிலப்பதிகாரம், மணி மேகலை, சீவகசிந்தாமணி முதலிய பெருங்காப்பியங்கள் தோன்று தற்கு அடிப்படையாயிற்று. மக்களைப் பாடுவது என்னும் சங்க

காலப் பாடுபொருள் மையம் மாறித் தெய்வங்களைப் பாடுவது என்னும் நிலை தோன்றிய பின்னர்ச் சொற்றொடர்நிலையாகவும், பொருட்டொடர்நிலையாகவும் குறியனவும் நெடியனவுமாய்ப் பல் வேறு வகையான இலக்கியங்கள் தோன்றலாயின. அத்தகைய இலக்கியங்களின் - செய்யுள் நூல்களின் - தோற்ற வளர்ச்சிக்குத் தமிழகத்தில் காப்பிய காலத்தை அடுத்துச் செழித்த பக்தி இயக்க வளர்ச்சி அரிய வாய்ப்பாக அமைந்தது.

இவ்வாறு தோன்றிய நூல்கள் பிரபந்தங்கள் எனப்பெற்றன. பிரபந்தம் என்னும் வடசொல் செம்மையாகச் செய்யப்பட்டது என்னும் பொருளுடையது. இவற்றைத் தமிழ்ப்பெயரால் வழங்க விரும்பியவர்கள் இவ்வகையிலமைந்துள்ள நூல் அளவின் குறுமை கருதி இவற்றைச் சிற்றிலக்கியங்கள் என்றழைக்க, அப்பெயரும் இன்று நடைமுறையில் பெருவழக்காக வழங்கப்பெற்று வருகின்றது. எனினும் காப்பியம், பெருங்காப்பியம், புராணம் ஆகியவற்றையெல்லாம் பிரபந்த வகையில் சேர்த்துள்ளமையால் சிற்றிலக்கியமென இவற்றைக் கூறுவது ஏற்புடையதாகாது என்று கருதுவாருமுளர்.[3] செய்யுள் - பாட்டு - எவ்வாறு அமையும் என்று இலக்கணங்கூறும் பகுதி செய்யுளியல் என்று கூறப்பட்டது போலப் பாட்டு (செய்யுள்) களினால் ஆகும் நூல் (பிரபந்தம்) எவ்வாறமையும் என்று இலக்கணங்கூறும்பகுதி பாட்டியல் என்று கூறப்படுகின்றது பாட்டியல் என்பதனைப் பிரபந்த இலக்கணம் கூறும் நூல் என்று தமிழ்ப் பேரகராதி குறிப்பிடுகின்றது[4]. தொல்காப்பியத்தில் இடம்பெறாது, அதன் செய்யுளியலின் பிற்கால வளர்ச்சியாக அமைந்த இப்பாட்டியல் இலக்கண நூல்களும், அப் பிரபந்த வகைகளைப் போலவே மிகுதியாகத் தோன்றலாயின.

பொதுவாகப் பாட்டியல் நூல்களின் முற்பகுதி பொருத்தங்கள் பற்றியும், இடைப்பகுதி பிரபந்தங்களின் இலக்கணம் பற்றியும், இறுதிப்பகுதி நூல் மரபு பற்றியும் கூறுவனவாக அமையும். கி.பி. 8-ஆம் நூற்றாண்டு கி.பி. 20-ஆம் நூற்றாண்டு ஆகிய இவற்றின் இடைப்பட்ட காலப்பகுதியின் பல்வேறு அமையங்களில் தோன்றி விளங்குவனவாக இந்திரகாளியம் முதல் யாப்பு நூல் ஈறாக 17 பாட்டியல் நூல்களை மருதூர்த் திரு அரங்கராசன் தம் பாட்டியல்

நூல்கள் என்னும் ஆய்வு நூலில் பட்டியலிட்டுக் காட்டியுள்ளார். 5அ. பெயரளவால் அறியப்பட்டனவும், அச்சேறாதனவும் சில பகுதிகளே கிடைத்துள்ளனவுமாக மேலும் 16 பாட்டியல் நூல்களை அவர் நிரல்படுத்திக் காட்டியுள்ளார் 5ஆ. இப்பாட்டியல் நூல்களின் யாப்பும் நூற்பா, வெண்பா, கட்டளைக்கலித்துறை, விருத்தம் எனப் பல்வேறு வகையில் அமைந்து வந்துள்ளது.

**பிரபந்த எண்ணிக்கை**

பாட்டியல் நூல்கள் கூறும் பிரபந்தங்களின் எண்ணிக்கை போலவே அவை கூறும் பிரபந்தங்களின் பெயர்களும் வேறுபட்டுள்ளன. இவ்வெண்ணிக்கை வேறுபாடுகளுக்கிடையே பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்னுமொரு மரபு தோன்றி வழங்கியுள்ளது கி.பி. 17-ஆம் நூற்றாண்டினராகக் கருதப்பெறும் சிவந்தெழுந்த பல்லவராமன் என்னும் வள்ளலைப் படிக்காசுப் புலவர் தாம் பாடிய உலாவில் ''தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள் கொண்டபிரான்'' என்று பாராட்டியுள்ளதாக டாக்டர் உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார்[6]. இதுவே தொண்ணூற்றாறு பிரபந்தங்கள் என்னும் மரபிற்கமைந்த முதல் இலக்கியச் சான்றாகும். கி.பி. 16-வது நூற்றாண்டினதாகக் கருதப்படும் பிரபந்த மரபியல்,

> ''பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாகத்
> தொண்ணூற் றாறெனும் தொகைய தான
> முற்பகர் இயல்பு முன்னுறக் கிளக்கும்
> பிரபந்த மரபியல்''

என்று[7] முதன்முதலாகப் பிரபந்தங்கள் 96 எனக் குறிப்பிட்டு அவற்றின் இலக்கணங்களை நிரல்படக் கூறியுள்ளது. இதனையடுத்துப் பிரபந்தத்திரட்டு (18-19. நூ.) போன்ற வேறு சில பாட்டியல் நூல்களும் குறிப்பிட்டுள்ளன. இவ் வரையறைக்குக் காரணம் கூற இயலவில்லை. ஒரு தொகைஎண் ஒரு துறையில் செல்வாக்குப் பெற்றால், அதனை ஒட்டிப் பிறவற்றிலும் அந்தத் தொகை எண் அடிப்படையில் செய்திகள் உருவாவது இயல்பு. சைவ உலகில் தத்துவங்கள் 96 (தத்துவம் 36-தத்துவகம் 60) என்பது முன்பே விளக்கமுற்ற செய்தியாகும். அடியார்க்கு நல்லார், 'பாசண்ட

மாவது தொண்ணூற்றாறு வகைச் சமய சாத்திரக்கோவை என விளக்கி, அதற்கு வளையாபதியினின்று மேற்கோளும் காட்டியுள்ளார்[8]. விசயாலய சோழன் தொண்ணூற்றாறு விழுப்புண் பெற்றவன் என்பதனைத் தம் உலாக்களில் கூறியுள்ளார்[9]. இவ்வாறமையும் இத் தொகைஎண்ணின் செல்வாக்கு, பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்னும் மரபிற்கு ஏதுவாக இருக்கலாம்.

பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்று தொகை செய்யப் பெற்றிருப்பினும் பாட்டியல் நூல்கள் தோன்றுவதற்கு முன்னரே தமிழில் தோன்றியுள்ள திருத்தாண்டகம், பதிகம், திருவெழு கூற்றிருக்கை போல்வன பிரபந்த மரபியலில் இடம் பெறவில்லை. தொண்ணூற்றாறு எனத் தொகை செய்யப்பெற்றுள்ள பிரபந்தங் களிற் சிலவற்றிற்கு இக்காலத்தில் இலக்கியம் கிடைப்பதில்லை. தொண்ணூற்றாறுக்கு மேலாகவும் பல பிரபந்தங்கள் காலப் போக்கில் தமிழில் தோன்றி வளர்ந்து வருகின்றன. இவற்றால் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்னும் தொகை மரபு, இன்று பெயரளவில் தமிழ் இலக்கிய வரலாற்றில் இடம்பெற்றுள்ள ஒரு செய்தியாகவே கருதப்படுகின்றது.

சதுரகராதிக்குப் பின்னர்த் தோன்றிய அகராதிகளும் சில நிகண்டுகளும் தொண்ணூற்றாறு பிரபந்தங்களின் பெயர்களைத் தொகுத்துச் சுட்டும் பணியை மேற்கொண்டுள்ளன. 96-க்கும் மேலாகப் பிரபந்த எண்ணிக்கை நீண்டபோதிலும் பின்வந்த பிரபந்த நூல்கள் அவற்றை நூலிற் சேர்க்கவில்லை. எனினும் பிரபந்த தீபம் என்னும் பாட்டியல் நூல் மட்டும் 97 பிரபந்தங் களைக் குறிப்பிட்டிருப்பது ஆராயத்தக்க விதிவிலக்காக உள்ளது.

### பிரபந்த மூலங்கள்

பாட்டியல் நூல்களில் தொகுக்கப்பட்டுள்ள பிரபந்தங்களிற் சிலவற்றிற்குரிய மூலங்களைத் தொல்காப்பியப் பொருளதிகாரத் தில் நேராகவும், சிலவற்றிற்குரிய மூலங்களைக் குறிப்பாகவும் அறிந்து கொள்ளமுடிகின்றது. பாட்டியல் நூல்களில் காலத்தான் மூற்பட்டது எனக் கருதப்படும் பன்னிரு பாட்டியலில் இடம்பெற் றுள்ள ஆற்றுப்படை, கண்படைநிலை, துயிலெடைநிலை, மருட்பா, குடைமங்கலம் செருக்களவழி, கையறுநிலை, மடல்

போன்ற பிரபந்தங்கட்குத் தொல்காப்பியப் பொருளதிகாரத் துறைகள் நேரே மூலங்களாக அமைகின்றன[10]. தொல்காப்பியப் புறத்திணையிலுள்ள 'ஊரொடு தோற்றமும் உரித்தென மொழிப' 'குழவி மருங்கினும் கிழவ தாகும்' என்னும் பகுதிகள் முறையே உலா, பிள்ளைத்தமிழ் ஆகிய பிரபந்தங்களுக்கு வித்தாக அமைந்துள்ளன[11].

## பிரபந்த மரபியல்

இடைக்காலத்தெழுந்த பாட்டியல் நூல்களில் ஒன்றான பிரபந்த மரபியல் தனிச் சிறப்புடையதொன்றாகும். பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்னும் தொகை வரையறையினை இலக்கணத்தில் முதன்முதலாகக் குறிப்பிட்ட சிறப்பு இந்நூற்குஉண்டு என்பது முன்னரே காட்டப்பட்டது. தன் கருத்துப்படி 96 பிரபந்தங்களுக்கான இலக்கணத்தினையும் கூறும் இந்நூல், நூற்பா யாப்பில் அமைந்துள்ளது.

## பதிப்புக்கள்

இதனை 1976-இல் திரு. அருணாசலம் அவர்கள் முதன் முதலில் தமிழ்நாடு அரசு வெளியீடாகப் பதிப்பித்துள்ளார். பாட்டியல் தொடர்பான அரிய பல செய்திகளடங்கிய நெடிய ஆராய்ச்சி முன்னுரையோடும், குறிப்புக்களோடும் வெளியிடப் பட்டுள்ள இவ்வெளியீட்டினைப் 'பொடிந்துள்ள ஏட்டைப் பார்த்து எழுதிய திருத்தமில்லாத காகிதப்பிரதியை' ஆராய்ந்து வெளியிட்டதாகக் குறிப்பிட்டுள்ளார்.[12]. தஞ்சைச் சரசுவதி மகால் வெளியீடான இலக்கண விளக்கப் பாட்டியலைப் பதிப்பித்துள்ள திரு. தி. வே. கோபாலையர் அப் பதிப்பின் பின்னிணைப்பாகப் பிரபந்த மரபியல் நூற்பாக்களைச் சேர்த்துள்ளார்.[13]. இவரும் இந் நூற்பாக்களைத் திரு. அருணாசலம் அவர்களிடமிருந்த பிரதியைப் பார்த்தே பதிப்பித்துள்ளதாகக் குறிப்பிட்டபோதிலும் இரண்டு பதிப்பிலுமுள்ள பாடங்களுக்கிடையே பலவேறுபாடுகள் காணப்படுகின்றன. ஏடு பொடிந்தமையால் இடையீடுபட்ட இடங்களை இருவரும் தத்தம் ஊகப்படி நிரப்பிக் கொண்டமையே இவ் வேறுபாட்டிற்குக் காரணமாகும்.

## வேறுபாடுகள்

திரு. அருணாசலம் அவர்கள் 35 நூற்பாக்களாக நூலைப் பதிப்பிக்க, அதே பகுதியைத் திரு. கோபாலையர் 60 நூற்பாக்களாக அறுத்துப் பதிப்பித்துள்ளார். கவிஞன் இலக்கணம் கூறும் ஒரு நூற்பாவிற்கு 28,29 என்று இரண்டு எண் இட்டுள்ளார் பதிப்பாசிரியர் அருணாசலமவர்கள். இந்நூற்பாவின் இடையில் வரிகள் விடப்பெற்று அவ்விடத்தில் 28-ம் நூற்பா முடிந்து அடுத்து 29-ஆம் நூற்பா தொடங்கியிருக்காலம் என்று அமைதி காட்டியுள்ளார். இந்நூலில் இலக்கணம் கூறப்பெற்றுள்ள பிரபந்தங்களின் எண்ணிக்கை 63,66,70 ஆகும் என்று வெவ்வேறு அறிஞர் கருதுகின்றனர். 'தொண்ணூற்றாறெனும் தொகையதான முற்பகர் இயல்பை முன்னுறப்பாடும்' எனறு நூலின் முதற் நூற்பா உரைத்தலினால் இந்நூலில 96 வகைப்பிரபந்த இலக்கணம் கூறப்பட்டிருக்கவேண்டும எனக் கொண்டு திரு. அருணசலம் அவர்கள் 96 பிரபந்தங்களின் பெயர்ப்பட்டியலை இந்நூலிற் கண்டு காட்டியிருப்பது பொருத்தமாக உள்ளது. 'கருதுபொருள் இடம்'[14] எனத்தொடங்கும் நூற்பாவில் 24 பிரபந்தங்கள் குறிக்கப் பெற்றுள்ளனவாகவும், ஆற்றுப்படை (புலவர், பாணர், கூத்தர், பொருநர்) நான்கும் தனித் தனிப் பிரபந்தங்களாகவும் இவர் கருதியுள்ளார். அலங்கார பஞ்சகம் என்னும் பிரபந்தம் பற்றிக் கூறும்போது திரு. அருணாசலம் பதிப்பில் '...மனவிருத்தத்தொடு இசைய ஈரைந்தின் அலங்காரத்து அந்தாதித்துப் பாடுவது' என்று உள்ளது.[15]. இதில் ஈரைந்து என்றிருப்பது பொருந்தாது. திரு. கோபாலையர் இதனை 'இயைய ஐந்தின் அலங்காரத்து' என்றே பதிப்பித்துள்ளார். ஒப்புநோக்க வேறு ஏடு இல்லாமல், பொடிந்த ஏட்டின் வாசகத்தினைத் தாம் தாம் வேண்டியவாறு ஊகம் செய்து நிரப்பிப் பதிப்பித்தமையே இத்தகு வேறுபாடுகட்குக் காரணமாகும்.

நூலாசிரியர் பெயர், புராணத் திருமலைநாதர் என்று கூறமுற்பட்ட போதிலும் திரு. அருணாசலம் அவர்கள் 'நூலின் முழுப் பகுதியும் கிடைக்காதபோது ஆசிரியரைக் குறித்து எச்செய்தியும் விளங்காமலிருப்பதில் வியப்பில்லை' என்று வெளியிட்டுள்ள கருத்து ஏற்புடைத்தாகத் தெரிகின்றது.[16] பெயர் தெளிவாக

அறியப் பெறாத இந்நூலாசிரியர் கி.பி. 17–ஆம் நூற்றாண்டினைச் சார்ந்தவராவர். நூலின் இறுதியில் 'முருகனே தெய்வம்' என்னுங் குறிப்புண்மையால் இவர் முருக வழிபாடுடையவர் என்று கருதலாம். இவ்வாறு முடிப்பவர் கடவுள் வாழ்த்துக் கூறாமல் நூலைத் தொடங்கார் என்பதனாலும், நூலின் இறுதியில் 'ஆகஇயல் ஐந்திற்குப் பாயிரம் செய்யுளியல்பு...மூலபாடம் முற்றும்' என்று கூறியிருத்தலாலும் இப்போதுள்ள இந்நூலை நிறைவுடையதாகக் கொள்ளுதற்கில்லை.

நூலமைப்பும் நுவல் பொருளும்

நூலில் குறிப்பிடும் 96 பிரபந்தங்களுக்கு இந்நூலாசிரியர் தாமே 'பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாக' என்று ஒரு தோற்றமும் முடிவும் குறிப்பிட்டுத் தொகை சுட்டியுள்ளார். இம்முறை வைப்பினைப் பிற பாட்டியல் நூல்களிற் காண இயலாது. பிரபந்த மரபியல் என்றே ஆசிரியர் இந்நூற்குப் பெயரிட்டு வழங்கியமை, 'தொண்ணூற்றாறெனும் தொகையதான முற்பகரியல்பை முன்னுறப்படும் பிரபந்த மரபியலது பிரபந்த மரபியலே' என்று கூறுவது கொண்டறியலாம்.[18] இந்நூலிற் கூறப்படும் பொருளைப் பின்வருமாறு பகுத்துக் காணலாம்.

பகுதி-1 நூற்பெயரும் பிரபந்தத் தொகையும்

நூற்பா-1.

பகுதி - 2 நூற்பா-2-22. பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறான 96 பிரபந்த இலக்கணம்,

பகுதி - 3

நூற்பா-22. நூற்குப் பெயர் எய்தும் முறை

23. கையறத்திற்கு ஆகாததும் வாழ்த்திற்குரியதுமாகிய பா.

24. நாற்சாதிக்குரிய பாக்கள்

25-27. நூற்பாவுக்குரிய நிலம், நிறம், நாள், இராசி, கோள் ஆகியன.

28-30. கவிஞன் இலக்கணமும், நால்வகைக் கவிஞரும்.

31. நூலரங்கேற்றம்.

32-33. தமிழ்க்குலப் பெண்ணும் சுற்றமும்.

34. பரிசில் வழங்காதான் அழிபு.

35. குற்றமில்லாத பாட்டும், குற்றமுடைய பாட்டும், அவற்றின் பயனும்.

96 வகைப் பிரபந்தங்கள

பிள்ளைக்கவி
கலம்பகம்
பன்மணிமாலை
வெண்பா அந்தாதி
கலித்துறை அந்தாதி
வருக்கக்கோவை
அகப்பொருட்கோவை
இரட்டை மணிமாலை
இணை மணிமாலை
10 மும்மணிக்கோவை

ஒலியந்தாதி
இருபாஇருபஃது
பயோதரப்பத்து
நயனப்பத்து
தசாங்கப்பத்து
சின்னப்பூ
குடைவிருத்தம்
செங்கோல் விருத்தம்
நாடு விருத்தம்
20 ஊர்விருத்தம்

சிலைவிருத்தம்
வாள் விருத்தம்
வேல்விருத்தம்
பரி விருத்தம்
யானை விருத்தம்
ஊசல்
வருக்கமாலை
மும்மணிமாலை
நான்மணிமாலை
30 அலங்காரபஞ்சகம்

அட்டமங்கலம்
நவமணிமாலை
ஒருபாஒருபது
பல்சந்தமாலை
ஆற்றுப்படை– புலவர்
பாணர்
கூத்தர்
பொருநர்
பாதாதிகேசம்
40 கேசாதிபாதம்

அங்கமாலை
மங்கலவெள்ளை
மெய்க்கீர்த்திவஞ்சி
பெருமகிழ்ச்சி மாலை
நாமமாலை
கைக்கிளை மாலை
குழமகன்
உலா
இன்பமடல்
50 உலாமடல்
அனுராகமாலை
தூது
பொருள்மாலை
இடமாலை
காலமாலை
தொழில்மாலை
பொருள்மஞ்சரி
இட மஞ்சரி
கால மஞ்சரி
60 தொழில் மஞ்சரி
பொருள் காஞ்சிமாலை
இடக்காஞ்சிமாலை
காலக்காஞ்சிமாலை,
தொழில் காஞ்சிமாலை
பொருள் முல்லை
இட முல்லை
கால முல்லை
தொழில் முல்லை
பொருட் கலி
70 இடக்கலி
காலக்கலி
தொழில்கலி
பொருள் சதகம்
இடச்சதகம்
காலச்சதகம்
தொழில் சதகம்
வெட்சி மாலை
கரந்தை மாலை
வஞ்சி மாலை
80 காஞ்சி மாலை
நொச்சி மாலை
உழிஞைமாலை
தும்பை மாலை
வாகை மாலை
தானை மாலை
தாரகை மாலை
தசப்பிராதுற்பவம்
நாழிகை வெண்பா
செருக்களவஞ்சி
90 வரலாற்று வஞ்சி
ஆனைத்தொழில்
பரணி
பெருங்காப்பியம்
காப்பியம்
புராணம்
96 கையறம்

பிற செய்திகள்

பிள்ளைக்கவி முதல் புராணம் ஈறாக 96 பிரபந்தங்கள் என்று ஆசிரியர் கூறியுள்ளபோதிலும் நூலின்கண் இவற்றுக்கிடையே 95 பிரபந்தங்களே கூறப்பட்டுள்ளன. பொதுவியற் பகுதியில் (மூன்றாம் பகுதி) கூறப்பட்ட கையறத்தைச் சேர்க்க 96 என்னும் எண்ணிக்கை நிறைவுறுகின்றது[19]. பட்டியலிலுள்ள பிரபந்தங்களை வகைப்படுத்திக் காணுங்கால் சில செய்திகளை உய்த்துணர முடிகின்றது. இப் பிரபந்தப் பெயர்களில் 30 மாலையெனவும், 4 மஞ்சரி எனவும், 3 கோவையெனவும், 3 அந்தாதி எனவும், 9 விருத்தம் எனவும் முடிந்துள்ளன. மாலைகளிற் சில இருமணி, மும்மணி, நான்மணி, பன்மணி என்னும் தொடக்கமுடையன. இவற்றை நோக்கும்போது இப் பிரபந்தங்களிற் பெரும்பாலன பொருள் தொடர்நிலையாக அமையாமல் சொற்றொடர்நிலைப் போக்குடையன என்பதும், முதன்மைப் பாக்களிலும் மிகுதியாகப் பாவின நாட்டமும், அதனினும் மிகுதியாக விருத்தப்பா நாட்டமும் கொண்டன என்பதும் புலனாகின்றன.

ஆற்றுப்படை, வருக்கமாலை, மடல், உலா, தூது, பாதாதி கேசம், கேசாதி பாதம் போன்ற பிரபந்தங்கள் ஒவ்வொன்றும் நெடிதாக அமைந்த ஒரே செய்யுளால் உருவாவனவாகும். 5 செய்யுட்கள், (பஞ்சகம்), 9 செய்யுட்கள் (நவமணி மாலை), 10 செய்யுட்கள் (நயனப்பத்து, ஒருபாஒருபஃது), 20 செய்யுட்கள் (இரட்டை மணிமாலை, இருபாஇருபஃது), 27 செய்யுட்கள் (தாரகை மாலை), 30 செய்யுட்கள் (மும்மணிக்கோவை), 40 செய்யுட்கள் (நான்மணிமாலை), 100 செய்யுட்கள் (சதகம்) கொண்ட பிரபந்தங்கள் பலவுள்ளன. பாடப்பெறும் தலைவரின் வருணத்திற்கேற்ப ஒரேவகைப் பிரபந்தம், வெவ்வேறு எண்ணிக்கையில் பாடல்களைப் பெறுகின்றது. கோவை, பரணி போன்ற சில பிரபந்தங்களே சில நூறு பாக்கள் கொண்டனவாக உள்ளன. காப்பியம் பெருங்காப்பியம் புராணம் ஆகியன மிகுதியான அளவுடைய பாடல்களைக் கொண்டுள்ளன. பிரபந்தங்களிற் பெரும்பாலன சிறிய எண்ணிக்கையுடைய செய்யுட்களைக் கொண்ட நூல்களாக இருத்தலினால் இவற்றைத் தமிழ்ப்பெயராற்

குறிப்பிட விரும்பியவர்கள் சிற்றிலக்கியம் என்று குறிப்பாராயினர். மேலும் இதனால் காப்பியம் பிரபந்தம் புராணம் ஆகியவற்றைப் பிரபந்த வகையாகக் கொள்வது பொருந்தாது எனக் கருதுவாரும் உளராயினர் என்பது முன்னருங் கூறப்பட்டது.

இப்பிரபந்தங்களில் கோவை, உலா, இன்பமடல், கைக்கிளை மாலை, உலாமடல், தூது, அனுராகமாலை போன்றன அகப் பொருளும் பிள்ளைத்தமிழ், செருக்களவஞ்சி, வரலாற்று வஞ்சி, ஆனைத்தொழில், பரணி, ஆற்றுப்படை போன்றன புறப்பொருளும் கலம்பகம், காப்பியம், பெருங்காப்பியம் போன்றன அகம், புறம் ஆகிய இருபொருளும் நுதலி அமைந்துள்ளன. திணை அடிப் படையில் அகப்புறப்பொருள்களைப் பாடும் சங்ககால மரபு பிற் காலத்தில் மாறுபட்ட போதிலும், தமிழ்க்கவிதை உலகில் திணைப் பாடல் மரபு நாட்டம் முற்றிலும் மறைந்துவிடவில்லை என்பதனை வெட்சி மாலை, கரந்தை மாலை, கைக்கிளை மாலை போன்ற பிரபந்தங்கள் காட்டி நிற்கின்றன.

பிரபந்த மரபியல் பொருத்தம் பற்றிக் கூறவில்லை. எனினும் வருண அடிப்படையில் நால்வகைச் சாதி பற்றிய கருத்துடைய வராகவே இதன் ஆசிரியர் காணப்படுகின்றார். நூலின் தொடக் கமே ‘வானவர் ஏத்தும் மறையோர் முதலிய மக்கள் இன்னோர்க்கு’ என்றுள்ளது[20]. பிள்ளைக்கவியின் பாடல் தொகை கூறும்போதும் இந்நிலை காணப்படுகின்றது. கலம்பகப்பாடல் தொகை கூறும் போதும், ‘நூறுதேவர் தொண்ணூற்றைந்து பார்ப்பார்க்கு அரசர் தொண்ணூறு, அமைச்சர்க்கு எழுபஃது ஐம்பான் வைசியர்க்கு ஆறைந்து சூத்திரர்க்கு’ என்றும், பா உரிமை கூறுங்கால் ‘மறை யவர் முதல் நான்மரபின் வந்தோர்க்கு’ என்றும் கூறியிருப்பது இந்நூலாசிரியர் அக்காலச் சமுதாயத்தில் நிலவிய வருணாசிரம முறைச் செல்வாக்கினின்றும் விடுபட இயலாத்தன்மையைக் காட்டு கின்றது.

ஆண் பெண் வேறுபாட்டிற்கேற்ப அமையும் பருவங்களின் வேறுபாடன்றி அவர்கள் மீது பாடப்படும் பிள்ளைக்கவி (பிள்ளைத் தமிழ்) எனும் பெயரில் வேறுபாடு கூறப்படுவதில்லை. ஆனால், வஞ்சிப்பாவில் பெண்ணைப் பாடினால் பெருமகிழ்ச்சி மாலை

என்றும் அப்பாடலில் ஆணைப் பாடினால் நாம மாலை என்றும் இந்நூல் விதிக்கின்றது. ஒரே பெயருடைய பிரபந்தத்தின் இலக்கணம் வெவ்வேறு பாட்டியல் நூல்களில் வெவ்வேறாகக் கூறப்பட்டுள்ளது. தாரகை மாலை என்னும் பிரபந்தம் சிலேடை அமைந்த 27 செய்யுட்கள் கொண்டது எனப்பன்னிருபாட்டியலும்[21], கற்புடைய பெண்டிரின் பண்பினைப் பாடுவது என்று வேறு சில பாட்டியல் நூல்களும் கூறப் பிரபந்த மரபியலில், 'தூசிப்படைச் சிறப்பினை 27 விண்மீன்களுடன் பொருத்தி[22] வாழ்த்துவது' என்று இலக்கணம் கூறப்பட்டுள்ளது.

கூறும் யாப்பு வேறுபட்டாலும் பிரபந்தமரபியலிற் கூறப்படும் பிரபந்த இலக்கணமும் சிதம்பரப்பாட்டியல் கூறும் இலக்கணமும் பெரும்பாலும் ஒத்திருக்கின்றன. அதனால் இந்நூலைப் பதிப்பித்தவர் இடையறவு பட்ட நூற்பாப் பகுதிகளைச் சிதம்பரப் பாட்டியலின் துணையால் நிறைவு செய்து பதிப்பித்துள்ளார்.

கருதுபொருள் எனத்தொடங்கும் 16-வது நூற்பாவில் அமைந்துள்ள 'முல்லைக்கலி' என்னும் தொடரைப் பதிப்பாசிரியர் அருணாசலமவர்கள் முல்லை, கலி என முடியும் இருவகைப்பிரபந்தமாகக் கூற, பேராசிரியர் டாக்டர் ச.வே.சு. அவர்கள் அதனை ஒரு பிரபந்தத்தின் பெயராகக்கருதி, அது பிரபந்த மரபியலில் மட்டும் இடம் பெற்றிருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.[23]. ஒன்றாகக் கொண்டால், இந்நூலில் 96வகைப் பிரபந்தங்களும் கூறப் பட்டுள்ளன என்னும் கருத்து, பிழைபட்டதாகும். முல்லைக்கலி என்னும் பெயரில் பிற்கால இலக்கியம் இன்மையாலும், அப்பெயர் சங்ககாலக் கலித்தொகையின் ஒரு பகுதிக்குரிய பெயராக இருத்தலானும் அதனை முல்லை, கலி என முடியும் இரு பிரபந்தப் பெயராகக் கொள்வதே ஏற்புடையதாகத் தெரிகின்றது.

இந் நூலாசிரியர் பரிசில் வழங்காதான் அழிவு கூறுங்கால் 'இருக்கினும் கிளையொடும் இறுதி யாவனென்று ஓதினது அகத்தியர் உண்மை நூல் நெறியே' என்று[24] முடித்திருப்பது கொண்டு இதன்கண் விளக்கப்பெறும் பாட்டியல் இலக்கணநெறி அகத்தியர் நெறியைப் பின்பற்றி அமைந்ததாகும் என ஆய்வாளர் கருதுகின்றனர்.

நூலின் இறுதிப்பகுதி

பிரபந்த மரபியலின் மூன்றாவது பகுதி நூல், கவிஞன், கவி, அரங்கேற்றம் போன்ற சில பொது இலக்கணங்களை உணர்த்து கின்றது. கையறத்திற்கு ஆகாத பாவெனக் கலியும் வஞ்சியும் விலக்கப்பட்டுள்ளன. இப் பொதுவிலக்கணபபகுதியில கூறப்பட்ட கையறத்தையும் சேர்த்தால்தான் 96 என்னும் பிரபந்தத்தொகை எண் நிறைவுறுகின்றது.

நால்வகையான கவிஞர்களை விளக்குங்கால் ஆசுகவி முதல் நால்வகைப் பாடலையும் பாடவல்லோன் கவி என்றும், அரும் பொருள், செம்பொருள் நடையாக்காட்டி விவகரிப்போன் கமகன் என்றும், ஏதுவும் மேற்கோளும் காட்டித் தன்கோள் நிறுவிப் பிறர் கோள் மறுப்பவன் வாதி என்றும், அறமுதல்நான்கினையும் திறம் படப் புனைவோன் வாக்கி என்றும் வகைப்படுத்தியுள்ளார்.[25] இதனைப் போல்வன தமிழ்க் கவிதையுலகில் வடமொழிச் செல் வாக்கின் விளைவுகளாகும்.

விரிவாகக் கூறப்பட்டுள்ள நூலரங்கேற்றம் பற்றிய செய்திகள் கவிஞன் உருவாக்கும் நூற்படைப்பினைச் சமுதாயம் எப்படி ஏற்றுக் கொண்டது என்பதனை விளக்குவதாக அமைந்துள்ளது.

தமிழை ஒரு குலப்பெண்ணாக உருவகப்படுத்திக் காட்டி யிருப்பது பிறபாட்டியல்களிற் காணப்பெறாத சிறப்பாகும். குழந்தை உருவாவதற்கு முந்திய நிலைகள் பல முற்றுருவக அமைப்பில் காட்டியுள்ள ஆசிரியர் அப்பெண்ணின் தந்தை புலவன், தாய் வறுமை, கேட்போர் மாதவர், படிப்போன் தமையன், புகழ்வோர் உறவின் முறையார், கேட்டுப் பரிசு கொடுப்போன் பர்த்தா (கணவன்) என்று விளக்கியிருப்பது நயமிக்கதாக உள்ளது.[26].

எந்தவொரு முயற்சிக்கும் பயன் இருத்தல் வேண்டும் என்பது இடைக்காலத்திற் பெருகிய மனநிலையாகும். முயற்சியின் விளைவு கவிதையாயின் அதனைப் பெறுவோர் கேட்போர்க்கும் பயன் கூறும் போக்கு உருவாகியது. 'தொடையின் முறையில் நிற்கக் கேட்கச் செல்வமும் கீர்த்தியும் சிறக்கும்' என்று இந்நூல்

குற்றமில்லாப் பாட்டின் பயன் கூறுவதோடு குற்றமுடைய பாட்டாயின் அதனால் 'செல்வம் அகலும் தீராநோயுறும் சுற்றமும் புகழும் சூனியமாகும் காலமிகுத்தும் கடுகி வந்திடும்' என்று தீய பயனையும் உடன் கூறியுள்ளது.[27]. இவைகொண்டு அக்காலத்தில் பாடுவோர் பாடப்படுவோர் ஆகியோரைச் சமுதாயம் எப்படி நினைத்தது என்பதனை உய்த்துணரக்கூடும். மேலும் இதனால், 'புலவர் பாடும் புகழுடையோர் விசும்பில் வலவன் ஏவா வானவூர்தி எய்துவர்' என்றும், 'புலவர் பாடாது வரைக என் நிலவரை' என்றும் கருதிய சங்ககாலப் புலவர் புரவலர் மனநிலையில்[28] காலப் போக்கில் ஏற்பட்ட நெகிழ்ச்சியினையும் ஒருவாறு எண்ணிப் பார்க்க முடிகின்றது.

முடிப்புரை

தமிழிலக்கிய வரலாற்றில் காப்பிய காலத்தை அடுத்துத் தோற்றங்கொண்டு பெருகிய பிரபந்தங்களை வகைசெய்து இலக்கணங்கூறும் முயற்சி பலகாலங்களில பலரால் மேற்கொள்ளப் பெற்றுப் பாட்டியல் நூல்களாக வெளிவரலாயின. பாட்டியல் நூல்களில் பிரபந்தத்தொகுப்பு முயற்சிகளெல்லாம் 'தொகுப்பின் எஞ்சும் விரிப்பின் அகலும்' என்னுமளவிலேயே அமைந்தன. இதுகாறும் இந்நூல்களில் தொகுக்கப்பட்டுள்ள பிரபந்தங்களைக் காட்டிலும் இவற்றில் தொகுக்கப்பெறாது நிலவும் பிரபந்தங்களே பலவாகும். இத்தொகுப்பு முயற்சியில் பிரபந்தங்கள் தொண்ணூற்றாறு என்னும் வரையறை பலபாட்டியல் நூல்களில் பின் பற்றப் படாவிட்டாலும் அங்ஙனம் கூறும் மரபு தமிழ் இலக்கிய வரலாற்றில் நிலையான இடம் பெற்றுள்ளது. பிரபந்தங்கள் 96 என்னும் வரையறையினை முதன்முதலிற் கூறிய பாட்டியல் நூல் பிரபந்த மரபியலாகும். ஆனால் இந்த நூலுள்ளும் 96 பிரபந்தங்கள் வலிந்து எண்ணிக்கொள்ளுமாறு அமைந்துள்ளமை வியப்பாக உள்ளது. தமிழ் இலக்கிய வானில் பாரதியின் தோற்றத்திற்குப் பின்னர், பாடுபொருளிலும் யாப்பிலும் தோன்றிய புதிய வளர்ச்சிகளை நோக்குங்கால் அவை பாட்டியல் நூல்களின் பயனை மேலும் குறைத்துவிடக்கூடுமோ என்ற ஐயம் எழுவது இயல்பே யாகும். மரபு மாறிய புதிய பிரபந்தங்கள் தோன்றி 96 என்னும்

பழைய தொகையுள் இடம்பெற முயலுமோ என்ற எண்ணம் ஆய்வாளர்தம் சிந்தனைக்குரியதாகும்.

### அடிக்குறிப்புக்கள்

1. வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகள் நூல்கள்.
2. சிலம்பு, அடியார்க்கு-உரைப்பாயிரம்
3. பிரபந்த மரபியல், முன்னுரை, பக். 6
4. தமிழ் லெக்சிகன் பகுதி-5 : 2589
5. அ. பாட்டியல் வரலாறு. பக். 73.
5. ஆ. மேற்படி பக். 392
6. பிரபந்த மரபியல், முன்னுரை, பக்.7
7. மேற்படி நூற்பா -1.
8. சிலம்பு, அடியார்க்கு – கனாத்திறம். 15
9. பாட்டியல் வரலாறு, பக். 92
10. தொல். புறம். அகம். 54; புறம் : 17, 19, 29, 30; செய்யுள் 154.
11. தொல. புறம். 25, 24.
12. பிரபந்த மரபியல், முன்னுரை, பக். 33.
13. இலக்கணவிளக்கம், பாட்டியல்-பின்னிணைப்பு. 2
14. பிரபந்த மரபியல், நூற்பா-16
15. மேற்படி-11
16. மேற்படி, முன்னுரை, பக்: 35
17. மேற்படி, நூற்பா - 35
18. மேற்படி-1
19. மேறபடி–23
20. மேற்படி,நூற்பா-
21. பன்னிரு பாட்டியல்
22. பிரபந்த மரபியல், நூற்பா-17
23. பிரபந்த தீபம்

24. பிரபந்த மாபியல், நூற்பா-34

25. மேற்படி. 30

26. மேற்படி. 32, 33

27. மேற்படி. 35

28. புறநானூறு. 27, 72

# பிரபந்த தீபம்

டாக்டர் இரா. சாரங்கபாணி

'தெரிமாண் தமிழ் மும்மைத் தென்னம் பொருப்பன்' என்னும் பரிபாடல் திரட்டின் அடியால் பண்டே தமிழ் இயல், இசை, நாடகமென மூன்று வகையினதாக இருந்தமை அறியலாம். அம் மூன்றனுள் ஒன்றாகிய இயற்றமிழின் வளர்ச்சியை அறிய நமக்குத் தொல்காப்பியம் உறுதுணையாக உள்ளது. தொல்காப்பியம் இயற்றமிழை எழுத்து, சொல், பொருள் என மூவதிகாரமாகப் பாகுபடுத்து இலக்கண இலக்கியங்கள் பற்றிய செய்திகளை விரித்துக் கூறும். மூவகையாகக் கருதப்பெற்ற இலக்கணம், காலப் போக்கில் வளரத் தொடங்கியது. யாப்பினை நாலாவது வகை யாகவும், அணியை ஐந்தாவதாகவும், பாட்டியலை ஆறாவதாக வும், நிகண்டு முதலியனவற்றை ஏழாவதாகவும் பிற்கால அறிஞர் கருதினர். யாப்பு, அணி, பாட்டியல், நிகண்டு அனைத்துக்கும் அடிப்படையாகத் தொல்காப்பியச் செய்யுளியல் விளங்குகிறது.

சங்க காலத்துக்குப் பின் பிரபந்தங்கள் எழுந்தன. புரவலர் களையும் அரசர்களையும் தலைவராக வைத்துச் சில புறத்துறை களில் புகழ்ந்திருப்பதைப் புறநானூறு, பதிற்றுப்பத்து ஆகிய நூல் கள் உணர்த்தும். பத்துப்பாட்டில் ஆற்றுப்படை நூல்கள் வள்ளல் களைப் புகழ்ந்து பாராட்டும். ஆனிரை கவர்தல், மீட்டல், மதிற் போர், யானைப்போர் முதலியன பற்றிப் பாடல்கள் அமைத்து வீரரை ஏத்தினர். இவற்றைப் பற்றிப் பல பாடல்கள் அமையவே தனி இலக்கியங்கள் உருவாகும் போக்கு எழுந்தது. இயன்மொழி வாழ்த்து, கையறுநிலை, கண்படைநிலை, துயிலெடை நிலை முதலிய துறைகள் தனியிலக்கியமாகத் தோன்றின. கைக்கிளை, வெட்சி, கரந்தை, உழிஞை முதலிய திணைகள் பற்றியும் தனி இலக்கியங்கள் மலர்ந்தன. நாயன்மார்களும் ஆழ்வார்களும் பின் வந்த அடியார்களும் இரட்டைமணிமாலை, அந்தாதி, திரு அங்க

மாலை, எழுகூற்றிருக்கை, திருமடல், திருப்பல்லாண்டு. திருப் பாவை, உலா, கோவை முதலிய இலக்கியங்கள் இயற்றினர். இந்நிலை கண்டு இலக்கியங்களுக்கு இலக்கணம் அமைக்கும் எண்ணம் எழவே பாட்டியல்கள் தலையெடுத்தன. பிரபந்த இலக்கணம் கூறுவதே பாட்டியலாகும். பாட்டியல் என்பதில் பாட்டு என்பது ஆகு பெயராய் இலக்கியத்தைக் குறிக்கும். இயல் என்பது இலக்கணத்தைக் குறிக்கும். ஆகவே, இலக்கியங்களின் இலக்கணம் இயம்புவது பாட்டியல் என்பது போதரும். யாப்பு பாவகைகளுக்கும் பாவினங்களுக்கும் இலக்கணம் கூற, பாட்டியல் இலக்கியங்களின் பாடுபொருள், பாடு முறை, பாக்களின் எண்ணிக்கை, பாடப்பெறும் யாப்புவகை முதலியன குறித்த இலக்கணம் கூறும். பொதுவாகப் பாட்டியல் முதல் மொழியியல், செய்யுள் மொழியியல், பொது மொழியியல் என மூவகைப்படும். முதலியல் பொருத்தமும், இரண்டாவது இலக்கியங்களின் இலக்கணமும், மூன்றாவது ஒழிபான செய்தியும் கூறும்.

தமிழில் பிரபந்தவகை தொண்ணூற்றாறு என்பது பலரது கருத்தாகும். பிரபந்தம் என்பது வடசொல். செம்மையாக யாக்கப் பெற்றது என்பது அதன்பொருள். பிரபந்தத்தைச் சிற்றிலக்கியம் என அழைக்கும் வழக்காறு காணப்படுகிறது. பிரபந்தம் பெருங் காப்பியம், காப்பியம் முதலியவற்றுக்கும் இலக்கணம் கூறுதலான் சிற்றிலக்கியம் எனும் ஆட்சி பொருந்தாது எனத் திரு.மு. அருணாசலம் மொழிவர் (பிரபந்தமரபியல் பக். 6), எனவே, இலக்கியம் என்னும் ஆட்சியே பொருந்துவதாகும். இவ்விலக்கியங் களைத் தொல்காப்பியர் கூறும் 'விருந்து' என்பதில் பேராசிரியர் அடக்குவர் (தொல்-செய்யுளியல் 237).

பிரபந்தம் 96 வகை என முதலிற் குறிப்பிட்டவர் படிக்காசுப் புலவர் என்று கூறித் 'தொண்ணூற்றாறு கோலப் பிரபந்தங்கள் கொண்ட பிரான்' என்று அப்புலவர் தம்மைப் புரந்த சிவந்தெழுந்த பல்லவராயனைக் குறிப்பிட்டுள்ளதைச் சான்றாகக் காட்டியுள்ளார் உ.வே.சா; ஆகவே பிரபந்தம் 96 வகை என்னும் வழக்கு 17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலுள்ளமை அறியலாம். அதற்கு முன்னரே அவ்வழக்கு இருந்ததை 16 ஆம் நூற்றாண்டு எனக் கருதப் பெறும் பிரபந்த மரபியல் சுட்டுகிறது.

பிள்ளைக் கவிமுதல் புராணம் ஈறாகத்
தொண்ணூற் றாறெனும் தொகைய தான
முற்பகர் இயல்பு முன்னுறக் கிளக்கும்
பிரபந்த மரபியல்''

இவ்வெண்ணிக்கையைச் சதுரகராதி, நிகண்டுகளும் குறிக்கின்றன. எனினும் 96 வகை எனக் கூறுவது பொருத்தமாகப் படவில்லை.

பிரபந்த இலக்கணம் கூறும் நூல்கள், இலக்கிய எண்ணிக்கையில் வேறுபடுகின்றன. பன்னிரு பாட்டியல் 61, வெண்பாப் பாட்டியல் 53, நவநீதப் பாட்டியல் 45, பிரபந்த மரபியல் 63, சிதம்பரப் பாட்டியல் 59, இலக்கண விளக்கப்பாட்டியல் 64, தொன்னூல் விளக்கம் உரைப்பகுதியுடன் 91, முத்து வீரியம் 90, பிரபந்த தீபிகை 77, சுவாமி நாதம் 37, பிரபந்ததீபம் 97, இலக்கியங்களுக்கு இலக்கணம் கூறுகின்றன. பிரபந்த இலக்கணம் கூறும் நூல்கள் மொத்தம் 14. அவை தரும் நூல்களின் எண்ணிக்கை மொத்தம் 203 என டாக்டர் ச. வே. சுப்பிரமணியன் தம் பிரபந்த தீபப் பதிப்பின் இறுதியில் பட்டியல்களின் வழியே காட்டியுள்ளார். மேலும் பாட்டியலில் கூறப் பெறாத வாய்மொழியிலக்கியங்கள் எத்துணையோ உள்ளன. அவையெல்லாம் இப்பொழுது ஆய்வு செய்யப் பெற்று நூல் வடிவில் வெளிவருகின்றன. தாலாட்டு, ஏற்றப்பாட்டு, ஒப்பாரி முதலியனவும் இலக்கிய வகையாகக் கொள்ளற்குரியன. அண்டகோசம், ஆடாமணி, ஆண்கூடல், இலக்குமி விலாசம், களவு கண்ணி, கன்னிமயக்கம், காமரசமாலை, கானவேட்டம், சிந்து மோகினி, சிலேடா சாகரம், தள சிங்காரம், தாமரை நோன்பு, துனி விசித்திரம், பண்ணை விசித்திரம், புறநாட்டுச் செய்கை, மதன சிங்காரம், வதன சந்திரோதயம், விசயவித்தாரம், வேடர் விநோதம் போன்ற நூல்கள் பாட்டியல் நூல்களில் இடம் பெறாத இலக்கியங்கள் என இலக்கண வரலாறு–பாட்டியல் நூல்கள் (ப.62) என்னும் தம் நூலில் மருதூர் ச. அரங்கராசன் குறித்துள்ளார். கீர்த்தனை, சிந்து, தெம்மாங்கு, விற்பாட்டு, வரிப்பாட்டு முதலிய இசைவகைப் பாடல் கொண்ட இலக்கியங்களும் பிரபந்த வகையில் சேர்க்க வேண்டியவையாகும். 14 பாட்டியல் தரும் இலக்கியங்களைத் தொகுத்தெண்ணின் 203 வரும். பாட்டியல் கூறாத இலக்கிய வகைகள் நூற்றுக்கு மேல் காணப்படுகின்றன.

தமிழிலுள்ள இலக்கிய வகைகள் அனைத்தையும் தொகுத்து வகுத்து ஆராய்ந்த திரு மு. சண்முகம்பிள்ளை 367 பிரபந்தங்களைச் சுட்டுவர். (தமிழிலக்கியக் கொள்கை-தொகுதி 2- சிறு பிரபந்தங்கள் பக். 123-127).

பாட்டியலிற் குறிக்கப் பெற்றும் இலக்கியம் பெறாமல் சில காணப்பெறுகின்றன. அவை சாதகம், பல்சந்தமாலை, ஒலியந்தாதி, யானைத் தொழில், தசப்பிராதுற்பவம், ஊரின்னிசை, தாரகை மாலை முதலியன.

பாட்டியல்களுள் காலத்தால் முந்தியது பன்னிரு பாட்டியலாகும் (கி.பி.10). அது 61 வகைப் பிரபந்தங்களைக் கூறுகிறது. ஆனால் கி.பி.12இல் எழுந்த வெண்பாப்பாட்டியல் 53 வகைகளையும் கி.பி. 14 இல் தோன்றிய நவநீதப் பாட்டியல் 45 வகைகளையும் குறிப்பிடும். காலப்போக்கில் இலக்கியங்கள் மிகுதல் இயல்பு. அங்ஙனமாக, பின் தோன்றிய பாட்டியல்கள் மிகுதியான பிரபந்தங் களுக்கு இலக்கணம் கூறாதது என் என நோக்குங்காலை, தம் காலத்து வழக்குள்ள இலக்கியங்களைமட்டும் கூறி வழக்கிழந்த வற்றை விட்டிருக்கலாமா என எண்ணத் தோன்றுகிறது. பன்னிரு பாட்டியல் பலர்தம் பாக்களின் தொகுப்பாதலின் எண்ணிக்கை மிகுந்திருக்கலாம். பன்னிருபாட்டியல் இலக்கணம் கூறும் சில பிரபந்தங்களுக்குச் சான்றாக நூல்கள் கிடைத்தில. அதனால் வருங்காலத்தில் புதுப்படைப்புக்கள் தோன்றுவதற்கு வாய்ப்பாகச் சிலவற்றுக்கு இலக்கணம் கூறியிருக்கலாம் என அறிஞர் சிலர் கருதுகின்றனர்.

அகத்தியர், தொல்காப்பியர், அவிநயர், கோவூர்கிழார், பெருங்குன்றூர் கிழார், மாபூதனார் முதலியோர் பெயரால் பாட்டியல் குறித்த தனி நூற்பாக்கள் சில காணப்படுகின்றன. அவை அப்பெயர்கள் தாங்கிய பிற்காலத்து வாழ்ந்தோரால் இயற்றப் பெற்றவை எனக் கருதுதல் வேண்டும். செய்யுள் வகைமை, திணை நூல், தூக்கியல், பாட்டியல் மரபு, மாமூலர் பாடிய மாமூலம், முள்ளியார் கவித்தொகை முதலிய பாட்டியல் நூல்கள் மறைந்தன என உரையாசிரியர் குறிப்பு அறிவிக்கும். பாட்டியல்கள் மட்டும் கூறாது ஐவகை இலக்கணம் கூறும்

இலக்கண விளக்கம், முத்து வீரியம், சுவாமிநாதம் போன்றவையும் பிரபந்த இலக்கணம் நுவல்கின்றன. அக்காலத்திருந்த அவ்விலக்கியங்களின் செல்வாக்கே அந்நூல்கள் பிரபந்த இலக்கணம் கூறக் காரணமாகும். அதனாலேதான் திவாகர நிகண்டு பிங்கல நிகண்டு முதலியனவும் பிரபந்தச் செய்திகளைத் தருகின்றன.

பிரபந்தங்களின் பெயர்கள் பாடு பொருள், யாப்பு, எழுத்து, பாடலின் தொகை, ஓசை, திணைதுறைப் பெயர்கள், அமைப்பு முதலிய அடிப்படையில் அமைந்துள. 96 இலக்கிய வகைகளில் தொல்காப்பியப் புறத்துறைகளைச் சார்ந்தவை 28; அகத்துறைகளைச் சார்ந்தவை 6; சங்க இலக்கியங்கள் ஆகியவற்றில் காணப்பெறும் இலக்கியப் பகுதிகள் பொருட் கூறுகள் ஆகியவற்றைச் சார்ந்தவை 33; அகமும் புறமும் விரவி அமைந்தவை 2; கவிஞரின் கற்பனைப் பெருக்கால் எழுந்தவை 15; அந்தாதிப் பிரிவுகளாக அமைந்தவை 4; பொது இலக்கிய வகையைச் சார்ந்தவை 6; யாப்பமைதி உடையவை 2 எனச் 'சிற்றிலக்கியச் செல்வத்தில்' (பக்.25) டாக்டர் ந.வீ. செயராமன் பகுத்துக் காட்டுவர்.

பிரபந்த தீபம் கூறும் 97 வகைப் பிரபந்தங்களைக் கீழ்க் கண்டவாறு பாகுபாடு செய்யலாம். அகத்திணை பற்றியவை அகப்பொருட்கோவை, அனுராகமாலை, உலாமடல், உலா, ஐந்திணைச் செய்யுள், கைக்கிளை, பவனிக்காதல், குறத்திப் பாட்டு ஆக 8. புறத்திணை பற்றியவை அங்கமாலை, அட்டமங்கலம், அரசன் விருத்தம், ஆற்றுப்படை, இயன்மொழி வாழ்த்து, உற்பவ மாலை, உழிஞை மாலை, ஊரின்னிசை, ஊர்வெண்பா, ஊர் நேரிசை, ஊசல், எழுகூற்றிருக்கை, எண் செய்யுள், நாம மாலை, புகழ்ச்சிமாலை, பெருமகிழ்ச்சிமாலை, மெய்க்கீர்த்திமாலை, காப்பு மாலை, வேனில் மாலை, வீர வெட்சிமாலை, வெற்றிக் கரந்தை மஞ்சரி, வரலாற்று வஞ்சி, செருக்கள வஞ்சி, காஞ்சிமாலை, நொச்சிமாலை, தும்பைமாலை, வாகைமாலை, தோரண மஞ்சரி, சின்னப்பூ, விருத்தம், முதுகாஞ்சி, பெருமங்கலம், கண்படை நிலை, துயிலெடைநிலை, வசந்தமாலை, தாரகை மாலை, தானை மாலை, தண்டக மாலை, விளக்குநிலை, புறநிலை, கடைநிலை, கையறுநிலை, தசாங்கப்பத்து, தசாங்கத் தயல், நயனப் பத்து, பயோதரப்பத்து, பாதாதிகேசம், கேசாதி பாதம், மங்கள

வெள்ளை, தூது, குழமகன், புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, சாதகம், பிள்ளைக்கவி, சீட்டுக்கவி, சமுத்தி என 58, யாப்புப் பற்றியவை அலங்கார பஞ்சகம், இரட்டைமணிமாலை, இணைமணி மாலை, இருபா இருபது, ஊரின்னிசை, ஊர்நேரிசை, வருக்கக்கோவை, மும்மணிக்கோவை, நவமணிமாலை, நான்மணிமாலை, பல்சந்தமாலை, தண்டக மாலை, தாண்டகம், பன்மணிமாலை, மணிமாலை, வருக்கமாலை, மும்மணிமாலை, கலித்தொகை, நெடுந்தொகை, குறுந்தொகை, ஒருபா ஒருபது, பெயரின்னிசை, பேர் நேரிசை, கடிகை வெண்பா என 24; எண் பற்றியவை இருபா இருபது, பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, ஒருபா ஒருபது, தசாங்கப்பத்து, நயனப் பத்து, பயோதரப்பத்து, நாற்பது, பதிகம், சதகம் ஆக 10. அந்தாதி பற்றியன பதிற்றந்தாதி, நூற்றந்தாதி, ஒலியந்தாதி என 3. எழுத்துப் பற்றியன வருக்கக்கோவை, வருக்கமாலை, தாண்டகம் என 3. சதகம், காப்பியம், கலம்பகம் ஆகியவை அகமும் புறமும் பற்றியவையாகும். திணை பற்றியவை உழிஞை மாலை, வீரவெட்சி மாலை, வெற்றிக் கரந்தை மஞ்சரி, வரலாற்று வஞ்சி, செருக்கள வஞ்சி, போர்க்கெழு வஞ்சி, காஞ்சி மாலை, நொச்சிமாலை, தும்பை மாலை, வாகைமாலை, கைக்கிளை என 11. துறை பற்றியவை ஆற்றுப்படை, இயன்மொழி வாழ்த்து, கண்படை நிலை, துயிலெடைநிலை, விளக்குநிலை, புறநிலை, கடைநிலை, கையறுநிலை, மங்களவள்ளை, புறநிலை வாழ்த்து, வாயுறை வாழ்த்து, செவியறிவுறூஉ, முதுகாஞ்சி, பெருமங்கலம் என 14.

பிரபந்த தீபத்தின் ஆசிரியர் பெயர், அவர்தம் வரலாறு முதலியன தெரியவில்லை. நூலின் முற்பகுதியான சிறப்புப் பாயிரம் கடவுள் வாழ்த்து ஆகியவை கிடைத்திருப்பின் அவை பற்றி அறிய வாய்ப்பிருந்திருக்கும். இந்நூலை முனைவர் உ.வே.சா. நூலகத்திலிருந்து ஓலைச் சுவடியைப் பெற்று 1980இல் முனைவர் ச. வே. சுப்பிரமணியன் தூத்துக்குடியில் நடைபெற்ற பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கின்போது வெளியிட்டுள்ளார். பிரபந்தங்களைப் பற்றிய விளக்கம் என்ற பொருளில் பிரபந்த தீபம் எனும் பெயர் அமைந்துள்ளது. இலக்கண விளக்கம் எனும் நூலின் பெயர் ஒப்பு நோக்கத் தகும். நாமதீப நிகண்டு, பாரதி

தீப நிகண்டு எனச் சில நிகண்டுகள் தீபம் எனும் சொல்லுடன் வழங்குகின்றன. 'முத்துவீரியத்தின் தொடர்களை அவ்வாறே எடுத்தாண்டிருப்பதால் இது அந்நூலுக்குப்பின் தோன்றியிருக்க லாம்; சான்றாக ஊசல், தூதுவைக் காண்க' எனத் தம் பதிப்பு முகவுரையில் முனைவர் ச. வே. சு. குறித்துள்ளார். 9 நூற்பாக் களைக் கொண்டிலங்குவது இந்நூல். இதன்கண் முதலும் முடிபும் பற்றிய விளக்கமில்லை. ஏட்டுப்படியில் நூல் அகப்பொருட் கோவையுடன் நூற்பா ஒன்று என்னும் எண்ணுடன் தொடங்கு கிறது. காப்புச் செய்யுள், நோக்கம், உட்பொருள் போன்றவை நூலாசிரியரால் பாடப்படவில்லையா, விடுபட்டுள்ளனவா என அறியவியலவில்லை எனப் பதிப்பாசிரியர் குறித்துள்ளார். சமுத்திக்கு இறுதி நூற்பா விளக்கமளிக்கிறது. நூலின் முடிவிற் கான குறிப்பில்லை. கையெழுத்துப் படியில் இந்நூல் அபூர்த்தி என்றுள்ளது. பாட்டியல்கள் சிறப்பாகக் கூறும் பரணிக்கு இந்நூல் விளக்கம் கூறவில்லை. ஆதலின் பிற்பகுதியில் இடம் பெற் றிருக்குமோ? ஆசிரியர் தம் காலத்துச் செல்வாக்கிழந்தமையின் பாடாது விடுத்திருப்பாரோ? என்று ஐயம் எழுகின்றது.

சதுரகராதி குறிப்பிட்டுள்ள 96 வகைப் பிரபந்தங்களில் பரணி, உழத்திப்பாட்டு ஆகிய இரண்டனையும் விடுத்துச் சீட்டுக்கவி, சமுத்தி என்ற இரண்டனையும் தீபம் சேர்த்துள்ளது. பிற பாட் டியல்கள் சாதகத்தையோ பிள்ளைக் கவியையோ முற்கூறித்தான் தம் நூலைத் தொடங்கும். ஆனால் தீபமோ அகப்பொருட் கோவையை முற்கூறுகிறது. காரணம் அகர வரிசைப்படி நூலமைப்பு இருப்பதுதான். இப்போக்கு நூல் முழுவதும் கடைப் பிடிக்கப் பெறாமல் இடையிலே தடைப்பட்டு நின்று விடுகிறது. இலக்கியத்தின் பெயர் நூற்பாவின் முதலிலே இடம் பெறுமாறு நூலாசிரியர் அமைத்துள்ளார். 'அகப்பொருட் கோவை அறையுங் காலை' 'உலாமடல் என்பது உரைத்திடில்' என்ற போக்கில் நூற் பாக்கள் செல்கின்றன. விதிவிலக்காகச் சமுத்தி பற்றிய நூற்பாவில் மட்டும் நூலின் பெயர் முதலில் வரவில்லை. இப்பாட்டியல் மட்டும் சீட்டுக்கவி, சமுத்தி என்னும் இரு இலக்கியங்கட்கு விளக்கம் கூறியிருப்பது தனிச்சிறப்பாகும். தெய்வ வணக்கம், தேசிகன் வணக்கம், பாடுவோரின் புகழ்ச்சி, பாடப்பெறும் தலை

வனின் புகழ்ச்சி ஆகியவை அமைய ஆசிரிய விருத்தத்தால் பாடுவது சீட்டுக்கவி என 96 ஆம் நூற்பா விளக்கும். சொன்ன எழுத்தால் சொன்ன சொல்லால் தொடங்கி அகப்பொருளதாயினும் புறப் பொருளதாயினும் யாப்புக் குறைவின்றிப் பாடி முடித்தல் சமுத்தி என்று இறுதியிலுள்ள 96ஆம் நூற்பா இலக்கணம் கூறும். நூற் பாக்களின் சிற்றெல்லை ஓரடியாகவும், பேரெல்லை 28 அடியாக வும் உள்ளன. 'வேனில்மாலை இருவேனிலைப் பாடலே' என ஓரடியிலேயே வேனில் மாலையின் இலக்கணம் கூறுகிறது. குறத்திப்பாட்டின் இலக்கணம் 28 அடிகளில் விரிவாகப் பேசப்படு கிறது. (நூற்பா 92)

பிறபாட்டியல் நூல்கள் பெருங்காப்பியம், சிறுகாப்பியம் எனப் பகுத்துக் கூறுவதைத் தீபம் காப்பியமென ஒன்றாகவே கூறும் தொகைச் செய்யுள் என்பதைக் கலித்தொகை, நெடுந்தொகை. குறுந்தொகை என மூன்றாகப் பகுத்துக் கலியடிச் செய்யுளின் தொகுப்பு கலித்தொகை என்றும் நெடிலடிச் செய்யுளின் தொகுப்பு நெடுந்தொகையென்றும் குறளடிச் செய்யுளின் தொகுப்பு குறுந் தொகை என்றும் இந்நூல் விளக்கும். உலாமடலும் உலாவும் வேறுபாடு தோன்ற விளக்கப் பெறுகின்றன. உலாமடல் என்பது தலைவன் கனவில் கண்டு இன்புற்ற மங்கை பொருட்டு மடலூர்வன் எனக் கூறுவதாகக் கலிவெண்பாவால் பாடுவது. உலா என்பது மகளிர் தலைவனைப் பணியும் வகையில் குலம், குடி, பிறப்பு, குணம், அழகு முதலியவற்றைக் கூறி அவன் உலா வருமாறு கலிவெண்பாவால் இயற்றுவது. சிறு வேறுபாடுள்ள இலக்கிய வகைகளும் குறிக்கப்பட்டுள்ளன. ஊரின்னிசை என்பது தலைவன் ஊரினைச் சிறப்பித்து இன்னிசை வெண்பாவால் பாடுவது. தலைவன் ஊரை நேரிசை வெண்பாவால் 90, 70, 50 என்னும் எண்ணிக்கையில் பாடுவது ஊர்நேரிசை. ஊரின்னிசைக்கு எண்ணிக்கை கூறவில்லை.

சில இலக்கியங்களுக்கு முரணான விளக்கம் காணப்படுகிறது. ஒரு பாவின் வகையினால் பத்துப் பாட்டுப் பாடுவது ஒருபா ஒருபது என்பது காரணப்பெயராகும். ஆனால் தீபமோ,

ஒருபா ஒருபஃது உரைக்கில் அகவல்
கலித்துறை வெண்பா கலந்துபத் தியம்பலே (59)

என மூன்று பாடல் விரவிப் பாடலாம் என்று இலக்கணம் கூறுவது முரணாக உள்ளது. ஒரு பொருள் பற்றிப் பத்துப் பாடல் பாடுவதே பதிகம் எனப் பிற பாட்டியல்கள் கூறத் தீபம்,

பதிகம் என்பதுவே பலபொருள் பற்றி
பத்துப் பாட்டால் பாடல் பான்மையே (80)

என்று நுவலும். இது புதுமையாகும்.

ஊசல், குறத்திப்பாட்டு ஆகியவற்றின் இலக்கணம் விரிவாகப் பேசப்படும். ஊசல், எழு கூற்றிருக்கை, முதுகாஞ்சி முதலியவற்றுக்கு முத்து வீரியத்தைப் பின்பற்றி இலக்கணம் கூறுகிறது. சதுரகராதியின் விளக்கத் தொடர்களை அனுராகமாலை, அங்கமாலை, நவமணிமாலை முதலியவற்றில் எடுத்தாள்கிறது.

முன்னைய நூல்களுக்கு முரணாகத் தீபம் சில நூற்பாக்களை அமைத்துள்ளது.

அட்ட மங்கலமே ஆதிக் கடவுளை
ஆசிரிய விருத்தம் எட்டு அந்தாதித் துரைத்தலே (3)

என்பது தீப நூற்பா. கவரி, நிறைகுடம், கண்ணாடி, தோட்டி, முரசு, விளக்கு, பதாகை, இணைக்கயல் என்னும் அட்டமங்கலப் பொருளைத் தீபம் குறித்திலது. பன்னிருபாட்டியல் பாட்டுடைத் தலைவனைக் காக்குமாறு இறைவனை ஏத்தியுரைத்தல் என்று விளக்கந்தரும். இணைமணி மாலைக்குப் பன்னிருபாட்டியல் முதலிய பிற நூல்கள் 100 பாடல் என்று கூறத் தீபம் 200 பாடல் என்னும். பரிசில் பெறாத இரவலன் புரவலனிடம் வெறுத்து அவன் வாயிலிடத்து மொழிவது கடைநிலை என்பது பன்னிரு பாட்டியல் அளிக்கும் செய்தி. வாயிற் காவலனிடம் ‘என் வரவினை உன் இறைவனுக்குக் கூறுக’ என்று பரிசிலன் உரைப்பது கடைநிலை என்பது முத்து வீரியம் தரும் விளக்கம். ஆனால், தீபம் கடை காப்பாளர் சேய்மையில் வரும் திண் தேர் வேந்தரைக் கண்டு அன்பொடு தன் அரசனுக்குக் கூறுதல்போல அமைத்தல் கடைநிலை என்று கூறும். இது ‘சேய்வரல் வருத்தம் வீட வாயில் காவலர்க்குரைத்த கடைநிலை’ (புறத்திணையியல், 35). என்னும் தொல்காப்பியக் கருத்துக்கு முரணாகும். பாசறையில் வெற்றி உறுதி என்னும் நினைவில் கவலையற்றுத் துயிலும் அரசர்க்குப்

புகழைத் தரும் செய்தி கூறத் தூதர் துயிலெழுப்புதலைத் தீபிகை துயிலெடை நிலைக்கு விளக்கமாகக் கூறும். ஆனால் தீபமோ, பாசறையில் வயவரை வென்று மகிழ்ந்துறங்குவதைச் சூதர் புகழ்ந்து பாடும் பாட்டால் எழுப்புவது என்று விளக்கந் தரும். இது 'தாவில் நல்லிசை கருதிய கிடந்தோர்க்குச் சூதர் ஏத்திய துயிலெடை நிலை' (புறத்திணையியல், 36) என்னும் தொல் காப்பியக் கருத்தோடு இயைவதாகும்.

செய்யுளில் ஓரடிக்கு 27 எழுத்து அமையப் பாடுதல் அளவியல் தாண்டகம் என்றும் ஓரெழுத்துக் குறையின் அளவழித் தாண்டகம் என்றும் தீபம் கூறும். ஆனால் பன்னிரு பாட்டியல் அடிதோறும் அறுசீர் வருவது குறுந்தாண்டகம் என்றும் எண்சீர் வருவது நெடுந்தாண்டகம் என்றும் ஆடவரையும் இறைவரையும் புகழ்ந் துரைத்தல் இப்பாடலின் பொருண்மை என்றும் சுட்டும். சின்னப் பூவிற்கு 100 பாடல் எனத் தீபம் கூற, பிற 100, 90, 70, 50 எனப் பலவாறாக எண்ணிக்கை தரும்.

பாட்டியலின் முதற்பகுதி பல்வகைப் பொருத்தம் பார்ப்பது. அவ்வியல், சாதிப் பாகுபாடு எழுத்திலும் பாவிலும் புகுந்து நிற்பதைத் தெளிவாகக் காட்டுவது. அந்தணர் அரசர் முதலி யோர்க்கு உரிய எழுத்துக்கள் இவை, பாக்கள் இவை என்பதனை அவ்வியல் உணர்த்தும். வெண்பாவை அந்தணர் பா என்றும் அகவற்பாவை அரசர் பா என்றும் வழங்குதல் பாட்டியல்களின் இயல்பு. முன்னைய பாட்டியல்கள் கூறும் பொருத்தம் பார்க்கும் பகுதி காலத்துக் கொவ்வாது என்று கருதிப் பிரபந்த தீப ஆசிரியர் பொருத்தப் பகுதியைத் தம் நூலில் அமைக்கவில்லை. நேரே இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறத் தொடங்குகிறார். இந்நூல் அபூர்த்தி என்றிருப்பதால் இப்பகுதி விடுபட்டிருக்குமோ என ஐயுறத் தேவை யில்லை. பிற்பகுதி தான் விடுபட்டிருக்கலாம். அகர வரிசையில் நூல் தொடங்குதலின் முற்பகுதியை விட வாய்ப் பில்லை. பாயிரம் முதலிய பகுதி வேண்டுமாயின் விடுபட்டதாகக் கருத வாய்ப்புண்டு. சாதியையும் சில வேண்டாப் பழக்கங்களையும் புகுத்திப் பாடும் பொருத்தங்கூறும் பகுதியைப் பாடாமையானும் வெண்பா அகவற்பா என்று வழங்குமிடத்துப் பிற பாட்டியல்கள்

போல அந்தணர் பா, அரசர் பா என யாண்டும் சுட்டாமையானும் இந்நூலாசிரியர் வேண்டாதவற்றை விடுத்துத் தேவையான வற்றை மேற்கொண்டு காலத்திற்கேற்ப நூல் படைத்த சீர்திருத்தப் போக்குடையவர் என்று கருதலாம்.

காலப் போக்கில் இலக்கியத்தின் பாடுபொருள், பாடுமுறை, யாப்புமுறை முதலியன மாறிப் பெருகுதல் இயல்பு. அவற்றின் பெருக்கத்திற்கேற்ப நாளடைவில் இலக்கண நூல்களும் பல்க வேண்டும். 96 வகை எனக் கூறிய பிரபந்தத் தொகை இப்பொழுது மும்மடங்குக்கு மேல் வளர்ந்துள்ளது. மேலும் வளரும். திரைப்படப் பாடல்களும் புதுக் கவிதைகளும் அத்தொகையில் இடம் பெறக்கூடும். எல்லாவற்றையும் சேர்த்துத் தொகை வகைப்படுத்தி இலக்கணம் கூறுதல் காலத்துக் கேற்ற தமிழ் வளர்ச்சியாகும். செந்தொடைக்கு இலக்கணம் கூறியது போன்றேனும் புதுக் கவிதைகளுக்கு இலக்கணம் கூறி இலக்கிய வகையுள் அடக்கி மொழிவளங் காப்போமாக.

# இலக்கணக் கொத்து

டாக்டர் செ. வை. சண்முகம்

தமிழ் பரந்துபட்ட இலக்கண பாரம்பரியம் உடையது. எனவே அங்கே பலவிதமான போக்குகள் காணப்படுவது இயல்பே. பொதுவாகக் கூறினால் நன்னூலுக்குப் பிறகு தமிழ் இலக்கண உலகில் உரை ஆய்வும் தொகுப்பு ஆய்வுமே சிறப்பாக நடைபெற்றன எனலாம். தனிநூலாகத் தோன்றிய இலக்கண நூல்களும் கூட பழைய செய்திகளையே தொகுத்தும் வகுத்தும் கூறும் முகமாகவே சில புதுமைகளைக் கொண்டுள்ளன. இந்நிலையில் வடமொழிச் செல்வாக்கும் இலக்கண இலக்கிய உலகில் மிகுந்ததால் வடமொழி மரபை ஒட்டி வடமொழிக் கலைச் சொற்களைப் பயன்படுத்தி இலக்கணம் அமைக்கும் முயற்சி மேற்கொள்ளப்பட்டது. அந்த முயற்சியின் விளைவே பிரயோகவிவேகம்.

வடமொழிக் கருத்துக்களைக் கூறினாலும் தமிழாக்கிக் கூற வேண்டும் என்று எண்ணியும் அறிஞர்களிடையே வழங்கி வந்த கருத்துக்களைத் தொகுத்துக் கூறவேண்டும் என்று நினைத்தும் சாமிநாத தேசிகர் இலக்கணக் கொத்து இயற்றியிருக்க வேண்டும். அதனால்தான் தனி நூலாக இயற்றவில்லை; பல கருத்துக்களைத் தொகுத்துத்தான் கொடுத்திருக்கிறேன் என்று பாயிரத்தில் அவரே குறிப்பிட்டுள்ளார்.

... ... ... ... இறக்கும் என்று எண்ணி
அவைகளைத் திரட்டி அமைத்தனன் அன்றி
நூல் இலை என்று நுவன்றனன் அன்றே

என்பதே பாயிரவாசகம் (11.7 – 9). இந்தக் கருத்தை ஒட்டித் தண்டபாணி தேசிகரும் (1974: 223) இது 'ஆய்வுக் குறிப்புகளின் தொகுப்பு' என்று கூறியுள்ளார்.

இலக்கணக் கொத்து சொல்லதிகாரத்துக்கே முக்கியத்துவம் கொடுத்துள்ளது. இதனால் எழுத்ததிகாரச் செய்திகளைக் கூட ஒழிபியலான மூன்றாவது இயலில் ஒரு கூறாக விளக்கியுள்ளது.

சொல் என்பது வடிவமும் பொருளும் உடையது என்பது எல்லோருக்கும் ஒப்ப முடிந்தது. தேசிகர் பொருளுக்கே சிறப்பிடம் கொடுத்துள்ளார். அதனாலதான பல இலக்கணக் கூறுகளுக்குரிய வடிவங்கள் (பெயரில் – திணை – பால் விகுதி, சாரியை, வினையில் காலம் காட்டும் விகுதி, எச்சவிகுதிகள், திணை – பால் விகுதிகள் இடைச்சொற்கள்) கூறவில்லை.

மேலும் முதல் சூத்திரத்தில் பொருளை ஒட்டி வேற்றுமையை எட்டு வகையாகவும் ஏழாகவும் ஆறாகவும் பிரிக்கலாம் என்ற செய்தியைக் குறிப்பிட்டுப் பிறகு அதற்குரிய வடிவங்களைப் பற்றி விளக்கவே இல்லை.

வினை முதல், விளியே, செயப்படு பொருளே
கருவி, கொள்வோன், நீக்கம், குறையே
இடம்என எட்டும் வடமொழி வேற்றுமை
ஏழ் ஆறு என்று இயம்பும் தமிழ் நூல்

என்ற முதற் சூத்திரம் பொருள் வேற்றுமையைப் பாகுபாடு செய்யும் பலமுறைகளைத் தெரிவிப்பதோடு பல் கருத்துக்களையும் தொகுத்துஉரைக்கும்போது ஒவ்வொரு இலக்கணக் கூறின் கீழும் அது சம்பந்தமான கருத்துக்களைத் தொகுத்தும் கூற எண்ணுவதால் 'கூறியது கூறல்' என்ற குற்றம் ஏற்பட்டுவிட்டது.

உதாரணமாக ஒருபொருள் பன்மொழி, பலபொருள் ஒரு சொல் என்ற கருத்து, வேற்றுமை உருபு, தனிவினை, பகுபதம், தொடர்மொழி, அடுக்கு ஆகியவற்றின்கீழ் பேசப்பட்டுள்ளது.

வேற்றுமை உருபு: ஓருரு பிற்கே பலபொருள் வருதலும்
ஒருபொருட் கேபல உருபுகள் வருதலும்
23. 1, 2

தனிவினை : பலபொருட்கு ஒன்றும், ஓர்பொருட்கே
பலவும் 66.10

பகுபதம் : பலசொல் ஒருபொரு ளாகப் பட்டும்
பலபொருள் ஒருசொல் லாகப் பட்டும்
117. 27, 28

தொடர்மொழி: சொல்வேறு படாஅது பொருள்வேறு படுதலும்
பொருளவேறு படாஅது சொல்வேறு படுதலும் 126. 5,6

அடுக்கு : பலசொல் கூடிஓர் பொருளாய் அடுக்கல்
பலபொருட்கே ஒரு சொல்லாய் அடுக்கல்
120. 6,7

இப்படியே ஒரு கருத்து, ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் வருணிக்கப்பட்டுள்ளது.

தொடர்வினையை விளக்கும்போது சில தொடர்வினைகள் செய்வினைக்கும் செயப்பாட்டுவினைக்கும் பொது என்று குறிப்பிட்டு, உண்ட சாத்தன் என்பது செய்வினை என்றும் உண்டசோறு என்பது செயப்பாட்டுவினை என்றும் உதாரணம் கொடுத்துள்ளார்.

''தொடர்வினை ..........
செய்வினை செயப்பாட்டுவினை இப்பொது ஆகும் ......''

என்பதே அந்தச் சூத்திரவரிகள் (67.10). இதே கருத்து செயப்பாட்டு வினைகளை விளக்கும் தொடரான 'படுசொல் அற்றே படுபொருளாயும்' (73.6) என்பதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இங்கு ஒரே கருத்து இரண்டு இடத்தில் கூறியதால் 'கூறியது கூறல்' என்ற குற்றம் ஏற்பட்டுவிடுகிறது. அப்படியே தனிவினை பெயரெச்சமாகவும் வினையெச்சமாகவும் வரும் என்று 66-ஆம் சூத்திரத்தில் ('முதனியைத் தனிவினை...... இருவகை எச்சம்' 66.4) கூறிய அதே கருத்து எச்சம் பற்றிய 84-ஆம் சூத்திரத்தில் அது தொகையாக வரும் என்று (84.10) பேசியுள்ளார். எனவே 'கூறியது கூறல்' என்ற குற்றம் ஒவ்வொரு இலக்கணக் கருத்தையும் தனித் தனியே தொகுத்துக் கூறியதால்தான் ஏற்பட்டது என்பதை அறிந்து கொள்ளலாம்.

இலக்கணக் கொத்து பொருளுக்குச் சிறப்புக் கொடுத்தாலும் நூல் முழுமையும் பார்க்கும்போது வடிவத்தைத் தனியாகவும் பொருளைத் தனியாகவும் பேசியுள்ளதைக் காணலாம். உதாரண மாக வேற்றுமையியலில் ஒவ்வொரு வேற்றுமை பற்றியும் பேசும் போது பொருள்பற்றிய பாகுபாடே முதலில விளக்கப்பட்டுள்ளது (சூ. 26-43). பின்னரே ஒவ்வொரு வேற்றுமையிலும் வரும் உருபு களபற்றிக் கருத்தளவில் (உ-ம். ஒன்று, மூன்று, நான்கு, ஆறு என்னும் உருபொடுவருமே வினைமுதல் என வகுத்தனரே-சூ. 44- இங்கு நேரடியாக வடிவம் பேசப்படவில்லை) 44 முதல் 50 வரையும் கூறி உருபின் பல்வேறு பொருள்களை 53 முதல் 58 வரையும் தனித் தனியே பேசியுள்ளார். வடிவத்தையும் பொருளையும் தனித்தனி விளக்கியதால் சில குறைகள் ஏற்பட்டுவிட்டன என்பதும் சுட்டிக் காட்டத் தகுந்தது.

மேலும், பல இடங்களில் 'பொது' என்று மூன்றாவது பாகு பாடு, வடிவ நோக்கில் மட்டும் பார்த்ததால் ஏற்படுத்த வேண்டிய அவசியம் நேர்ந்துவிட்டது. உதாரணமாகத் தொடர்வினை உடன் பாட்டிலும் (விதிவினை) எதிர்மறையிலும் வரும என்பதோடு இரண்டுக்கும் பொதுவாகவும் வரும் என்று குறிப்பிட்டுள்ளார்.

'விதிவினை மறைவினை இவை இருவினைப் பொது'
67.9

உண்பான் - விதிவினை

உண்ணான் - மறைவினை

செய்யாய் - இருவினைப்பொது

அ செய்வாய் - விதி

ஆ) செய்யமாட்டாய் - மறை

பகுபத ஆய்வில் இரண்டையும் இரண்டு விதமாகப் பகுத்து ஆராய் வார்கள். விதிவினையில் எதிர்கால விகுதி இல்லை (சூனியம் என்றும் மறைவினையில் எதிர்மறை சூனியம் என்றும் கொள்ள வேண்டும். எதிர்மறை வியங்கோளாயும் உடன்பாட்டு வியங்கோ ளாயும் வரும். 'எனல்' என்ற தொடர் வினையை உடன்பாட்டுப் பொருளில்,

என் + அல் (வியங்கோள் விகுதி)

என்று இரண்டு உருபன் உடையதாகவும் எதிர்மறைப் பொருளில்

என் + அல் (எதிர்மறை) ϕ (வியங்கோள் விகுதி)

என மூன்று உருபன் உடையதாகவும் விளக்க வேண்டும்.

எனவே புறநிலையில் ஒன்று போல இருந்தாலும் இலக்கண ஆய்வில் வேறுபடுத்திக் காட்டுவது அவசியம். அப்படியில்லாமல் இதற்காக 'இருவினைப்பொது' என்று மூன்றாவது பாகுபாடு வைப்பது சிறப்பாகக் கருதப்படமாட்டாது.

'தொடர்வினை இருவகை எச்சத்திற்கும் பொது' (67.12) என்று கூறி,

தேடிய பொருள்
தேடிய வந்தான்

என்ற உதாரணங்களைக் காட்டியுள்ளார். பெயரெச்சம் என்பது வினைப்பகுதி + கால இடைநிலை + பெயரெச்ச விகுதி என்று மூன்று உருபன்களையும் வினையெச்சம் என்பது வினைப்பகுதி + வினையெச்ச விகுதி என்ற இரண்டே உருபன்களையும் உடையது. எனவே இரண்டும் ஒன்றாக வருகிறது என்பது எவரும் வடிவம் நோக்கி மட்டும் பார்ப்பதே ஆகும். சொல் என்பது வடிவமும் பொருளும் சேர்ந்தே இருப்பது. அவற்றைப் பிரிப்பது இலக்கண ஆய்வின் அடிப்படையைத் தகர்ப்பதாகும். இப்படி வடிவத்தையும் பொருளையும் தனித்தனியே பார்த்ததால் இலக்கணத்தில் சில குறை ஏற்பட்டுவிட்டது. உதாரணமாக, ஒரு சொல்லின் அகத்துறுப்பாக வரும் சில எழுத்துக்களை வேற்றுமை உருபாகக் கருதல் கூடாது என்று சூத்திரம் செய்ய வேண்டி நேரிட்டது.

மாலை நேரத்தைக் குறிக்கும் 'மாலை' என்ற சொல்லை இரண்டாம் வேற்றுமை உருபு என்று யாரும் மயங்கமாட்டார்கள். தலையில் உள்ள ஓடு என்ற பொருளைக் குறிக்கும் 'தலையோடு' என்ற தொகைச் சொல் மூன்றாம் வேற்றுமை ஏற்ற பெயர்ச்சொல் லாகக் கருதக் கூடாது என்று சொல்ல வேண்டியதில்லை. நகைச்

சுவைக்காக ஒரு சிலர் செய்கிறார்கள் என்பதற்காக வேற்றுமை உருபு அல்லாதனவும் வேற்றுமை உருபு போல வரும் என்று ஒரு சூத்திரம் செய்ய வேண்டியதில்லை.

வேற்றுமை உருபுகள் அல்லா தனவும்
வேற்றுமை உருபுகள் போல்வெளிப் படுமே

என்ற சூத்திரம் (19) வடிவத்தை மட்டும் அடிப்படையாகக் கொண்டதால் அமைக்க வேண்டியதாகிவிட்டது. வேற்றுமை உருபு என்றால் ஒரு உருபிற்குப் பதிலாகப் பிற வேற்றுமை உருபுகளையும் சேர்த்துச் சொல்லும்படி அந்தச் சொல் அமைந்திருக்கும். மாலை என்பது இரண்டாம் வேற்றுமை உருபு ஏற்ற வடிவம் என்றால் மாலொடு மாலுக்கு என்ற பிற வேற்றுமை உருபுகள் வரவேண்டும்.

அடுத்து, இந்த முறையில் பொருளை மட்டும் பார்த்ததனால் சாமிநாத தேசிகருடைய சில இலக்கணம் மெய்ப்பொருளியல் நோக்குக்கும் சமூக நோக்குக்கும் இடமளித்துவிட்டது. அதனால் இலக்கணம் மொழி அமைப்பை விளக்கும் நோக்கிலிருந்து மாறுபட்டுவிட்டது.

மனம், மொழி, மெய், அறிவு ஆகிய நான்கன்
அசைவே ஆகியும் அவ்வசைவு இன்றியும்
நல்வினை தீவினை வெறுவினை எனநடந்து
அறிந்து செய்வினை அறியாது செய்வினை
அசேதனம் செய்வினை எனவே அமர்ந்து
தீவினை நல்வினை சிலமுறை திறம்பிச்
செய்யாஇருவினை செய்வினை ஆகிச்
செய்இரு வினையே செய்யா வினையாய்
இன்னும் பலவாம் இலக்கணம் பெறுமே.

இங்கு சமயச்சார்பும் கூட வெளிப்படுகிறது. மொழி எல்லாச் சமயத்தாருக்கும் உரியது. எனவே இலக்கணமும் எல்லோரும் ஏற்றுக் கொள்ளும்படி இருக்க வேண்டும். மேலும் மொழிப் பயன்பாட்டைக் கடந்து தத்துவார்த்தமாகவும் சில சூத்திரங்கள் அமைந்துள்ளன.

பொருளைப் பொருள்எனல் பொருள்அல் லதனையே
பொருள்எனல், இதுபொருள்அன்றுஎன்று அறிந்தும்
இதுவே பொருள்எனல் எனமூன்று துணிவே (சூ.122)

என்று மூன்று வகைத் துணிவு என்பது சாதாரண மொழிப் பயன் பாட்டுக்கு அப்பாற்பட்டதாகும்.

அன்புஅருள் ஆசையோடு அறிவுஅறி யாமைஇவ்
ஐந்தால் துணிதல்அம் மூன்றனுள் அடங்கும்.

என்ற அடுத்த சூத்திரத்திலும் மதிப்பீடு கலந்துவிடுகிறது. எனவே மொழி அமைப்பை விளக்குவது இலக்கண ஆராய்ச்சி என்பது போய்த் தத்துவங்களையும் சமயக்கோட்பாடுகளையும் விளக்குவது என்று ஆகிவிடுகிறது. அப்படியானால் அடிப்படைநோக்கு பிறழ்ந்துவிட்டது என்று பொருள்படும்.

வடிவமும் பொருளும் சேர்த்து ஆராயும்போது சில சிக்கல்கள் உண்டாகத்தான் செய்கின்றன. ஏனெனில் ஆகுபெயர், மங்கல வழக்கு, இடக்கரடக்கல் போன்ற காரணங்களால் வடிவத்துக்கும் பொருளுக்கும் உள்ள உறவு வேறுபடலாம். உண்மையில் இப்படிப் பட்ட வேறுபாட்டை விளக்க இலக்கண ஆசிரியர்கள் தந்த விளக்கமே இது. எனவே இரண்டுக்கும் உள்ள உறவு புறநிலையில் மட்டும் அல்லாமல் புதை நிலையிலும் ஆராயப்பட வேண்டியதே. புறநிலையில் வேற்றுமைப் பட்டதால் அதன் சொல்லமைப்பு ஒன்றுக்கு மேற்பட்ட விதமாக அமைந்திருக்கிறது என்று விளக்க வேண்டும். உதாரணமாகத் தொழிற்பெயர் எச்சமாகப் பயன்படு வதை இலக்கணக் கொத்து (82.3)

தோன்றலாறே - தோன்றும் ஆறே
உயிர்த்தல் ஆறே - உயிர்க்கும் ஆறே

எனவினைமுற்று எச்சமாகவும் எச்சம் வினைமுற்றாகவும் கையாளப் படுவதையும் எடுத்துக் காட்டியுள்ளது.

உண்டான் சாத்தன் ஊருக்குப் போனான்

என்புழி உண்ட சாத்தன் ஊருக்குப் போனான் எனப் பொருள் படுதலும்,

வெறுத்த ஞானி வீட்டை அடைந்தான். . . .

என்புழி வெறுத்தான். . . . எனப்பொருள்பட்டு ஈரெச்சமும் முற்றாதலும் காண்க (82.4) என்று குறிப்பிட்டுள்ளார்.

அப்படியே செய்வினை செயப்பாட்டு வினையாகவும் செயப் பாட்டுவினை செய்வினையாகவும் வழங்குவதும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

'படுசொல் அற்றே படுபொருவாய் வரல்'

உ.ம். செய் குன்று - செய்யப்பட்ட குன்று

அரம்பொருத பொன் - அரத்தால் பொரப்பட்ட பொன்.

இதற்கு மாறாக

'.......... படுபொருள்
வரினும் படுபொருள வருதல் இன்றாயும் வரும்'

உட்கப்படாஅர் ஒளி இழப்பர் எஞ்ஞான்றும்
கட்காதல் கண்டொழுகு வார்.

என்புழி உட்கார் எனவே பொருள்படுதலின் படுசொற்குப் படு பொருள் வாராமை காண்க.

எனவே வடிவத்தையும் பொருளையும் இணைத்து ஆராயும் ஆய்வு கொஞ்சம் கடினமானது. ஆயினும் அவைகளிடையே பொதுமைப் படுத்தவும் பொருள் வேறுபாட்டுக்குக் காரணம் காட்டு வதற்கும் முயலவேண்டுமே தவிர அதற்காக வடிவத்தை மட்டும் எடுத்துக்கொண்டு இரண்டுவிதமாகப் பொருள்படுகிறது என்று கூறுவது இலக்கண ஆராய்ச்சியில் சிறந்ததாகக் கருதப்பட மாட்டாது.

பொதுவாகச் சாமிநாததேசிகர் இலக்கணக் கூறுகள் பற்றிய கருத்துக்களைத் தொகுத்துக் கூறும்போது வடிவம், பொருள், பயன் பாடு ஆகிய எல்லா அடிப்படையிலும் சேர்த்து விளக்கினாலும் இலக்கண உறவு, புதைநிலை உறவு போன்று பல நோக்கிலும்

பாகுபாடு செய்துள்ளார். எனவே ஒரே சீரியமுறை காணப்படாத தால் இலக்கணக் கொத்து படித்துப் புரிந்து கொள்வதற்கும் எளிமையாக இல்லை. இலக்கணக் கோட்பாடும் எல்லா இடத்தி லும் ஒரேபடித்தாக அமையவில்லை. உதாரணமாக எச்சம் பற்றிய இலக்கணக்கொத்தின் கருத்துக்களை விளக்கமாகப் பார்ப்பதன் மூலம், இலக்கணக் கொத்தின் நூல் அமைப்பு முறை, வருணனை முறை, இலக்கணக் கோட்பாடு பற்றி ஓரளவு தெரிந்து கொள்ள முயலுவோம்.

அந்தக் கருத்துக்கள் ஒரே இலக்கண அடிப்படையை உடையன அல்ல. இலக்கணப்பெயர் கலைச்சொல்), பொருள் உறவு (Semantic relation), எச்சத்தின் சொல்லியல் நோக்கு, தொழில் உறவு, எச்சத்துக்கும் கொண்டு முடியும் சொல்லுக்கும் உள்ள இலக்கண உறவு, வினை முதலுக்கும் வினைக்கும் உள்ள உறவு, எச்சத்தின் வடிவத்தின் புறநிலை, புதைநிலை உறவுகள் ஆகிய வற்றை ஒட்டிப் பாகுபாடு செய்யப்பட்டுள்ளது. சுருங்கச் சொன்னால் வடிவம், பொருள், பயன்பாடு ஆகிய மூன்றையும் ஒட்டிப் பல வகையாகப் பாகுபாடு செய்துள்ளார்.

'எச்சம் என்று ஒன்று இல்லை இவை அடை' (84 1)

என்பது அதற்குரிய பெயரைப் பற்றிய கருத்து. எச்சங்கள் பெயரை யும் வினையையும் அடுத்து வருவதால் அடை என்று அழைக்க கலாம். இது இலக்கணப் பெயர் பற்றிய கருத்து; வேண்டு மானால் கருவிமொழி பற்றிய கருத்து என்று கூறலாம்.

அடுத்த கருத்தான 'விகாரமுற்று' என்பது அதனுடைய தொடர்நிலைப் பண்பு பற்றிய கருத்து. எச்சங்கள் முற்றிலிருந்து சிறப்பாகத் தனி வாக்கியத்திலிருந்து வருவிக்கப்பட வேண்டும் என்பதே. இன்று மொழியியலில் ஏற்பட்ட வளர்ச்சியால் தோன்றிய மாற்றிலக்கண மொழியியலார் இப்படிப்பட்ட கருத்து உடையவர் கள். உதாரணமாக அகத்தியலிங்கத்தின் கருத்தைக் குறிப் பிடலாம்.

"இவை (எச்சங்கள்) தம்முள் வேறுபாடு உடையன எனினும் பலநிலைகளில் இவை ஒற்றுமை உடையனவாகக் காணப்படு

கின்றன. இவை உண்மையிலேயே வினைகளாதலால் ஒரு வினைப் பயனிலையின் முன் நிற்கும் எழுவாய், செயப்படு பொருள், கருவி முதலிய அனைத்தும் இந்த எச்சங்களுக்கு முன்னும் நிற்கும். அதாவது பெயரெச்சமாயினும் அல்லது வினை யெச்சமாயினும் அவை தமக்குரிய எழுவாய், செயப்படுபொருள் போன்றவற்றைக் கொண்டு நிற்கின்றன. . . இந்நிலையில் பெயரெச்சங்கள், வினையெச்சங்கள் ஆகியவற்றை முற்றுவினை யிலிருந்தே வருவித்துக் காட்டலாம். முற்று வினைக்குரிய சொற் றொடரியற் பண்புகள் எச்சவினைகளிலும் உள்ளன'' என்பதே அவர் வாசகம்.

இதைப்பார்க்கும்போது நமக்கு இலக்கணக் கொத்தின் மீது மதிப்பு உயரத்தான் செய்கிறது. ஆனால் சாமிநாத தேசிகர் இந்தக் கருத்துக்குரிய காரணங்களை விளக்காமல் போய்விட்ட தாலும் எச்சம் பற்றிய வேறுபல உண்மைகளைச் சேர்த்துச் சொன்னதாலும் மொழியியல் நோக்கில் அந்தக் கருத்தும் நூலும் அதிகம் பாராட்டப்படாமல் போய்விட்டது.

அடுத்து 'எச்சம் ஒன்று' என்ற இன்னொரு கருத்தைக் குறிப் பிடுகிறார். இது 'எச்சம் இரண்டு' என்ற பின்னால் வரும் கருத் தோடு தொடர்புடையது. இரண்டு கருத்துமே இரண்டு வேறு நோக்கில் கூறப்படுவது. இரண்டுவித நோக்கில் எச்சத்தைப் பாகு படுத்தலாம். முற்றைநோக்கும் போது எச்சம் என்பது ஒருவகை; சொற் பொருள் நிலையில் இதை மேனிலைப்பொருள் (hyponymy) என்று கூறலாம். எச்சத்தைக் கொண்டு முடியும் சொல்லை அடிப் படையில் பெயரெச்சம், வினையெச்சம் என்று இரண்டாகப் பிரிக்கலாம், எனவே எச்சம் என்ற பெரிய பாகுபாட்டில் 'இரண்டு' என்பது உட்பாகுபாடு.

வினையெச்சத்தைப் பற்றிச் சிறப்பாக 11வது வரியில் விளக்குவது வினையெச்சம் ஒன்று என்பதற்கே மாறுபட்டு இருக் கிறது. எனவே அதைப் பிற பகுதியில் பார்ப்போம். தொடர்ந்து அவரே பகுபத உறுப்புக்களின் அடிப்படையில் வேறு இரண்டு விதமான பாகுபாட்டைக் குறிப்பிடுகிறார். 'தன்வினை, பிறவினை இவ்விரண்டு' என்பதே சூத்திரவரி. இங்கு வினைப்பகுதி, 'செய்' என்ற வாய்பாட்டில் உள்ளதா, 'செய்வி' என்ற வாய்ப்பாட்டில்

உள்ளதா என்று பார்த்துப் பகுக்கப்படுவது. அப்படியே எச்சத்தில் உள்ள கால விகுதியை ஒட்டி எச்சம் மூன்று வகைப்படும். எனவே இந்த இரண்டு பாகுபாடும் சொல்லியல் நோக்கில் செய்யப்பட்டது என்று கூறலாம். இவை எச்சத்துக்கு மட்டும் அல்லாமல் முற்றுக்கும் பொருந்தும். எனவே எச்சத்துக்குரிய பாகுபாடு என்பது சிறப்பாகக் கருத முடியாது. பொதுவாகக் கூற வேண்டியதைத் தனித்தனியே கூறுவதன் மூலம் இலக்கணத்தில் பொதுமை ஏற்படாமல் போய்விட்டது.

'தலைமை, இல்தலைமை என இரண்டு' என்பது அடுத்த பாகுபாடு.

தச்சன் செய்த தேர், உழுது பயன் கொண்டான் வறியான் என்ற இரண்டு உதாரணங்களைத் 'தலைமை' என்பதற்கு அவரே கொடுத்துள்ளார். அரசன் செய்ததேர், உழுது பயன்கொண்டான் வேந்தன் என்பவையே இல்தலைமைக்கு அவர் கொடுத்த உதாரணங்கள். வினை முதலை (கருத்தா - agent) வேற்றுமையியலில் ஏவுதல், இயற்றுதல் என்று பாகுபடுத்தியுள்ளார். இந்த இரண்டு பாகுபாட்டுக்குமே வினைக்கும் வினை முதலுக்கும் உள்ள உறவுதான் காரணம் ஆகும்.

தச்சன் செய்த தேர், அரசன் செய்த தேர் என்ற இரண்டு பெயரெச்சத் தொடர்களையும் முறையே தச்சன் தேர் செய்தான், அரசன் தேர் செய்தான் என்ற வாக்கியங்களிலிருந்து வருவிக்கலாம். இயற்றுதல் வினைக்கும், ஏவுதல் வினைக்கும் இலக்கணக்கொத்து இந்த வாக்கியங்களையே கொடுத்துள்ளது. எனவே தலைமை, இல்தலைமை என்ற இரண்டும் முறையே இயற்றுதல் வினை, ஏவுதல் வினை ஆகிய இரண்டொடும் தொடர்பு உடையன என்பது தெளிவாகிவிடுகிறது. இரண்டு வாக்கியங்களும் வினை முதலில் வேறுபட்டுப் பயனிலையில் ஒன்றுபட்டு ('செய்தான்' என்பதே இரண்டு வாக்கியத்திலும் உள்ளது) அதன் பொருள் வேறாகவே உணரப்படுகிறது. ஏனெனில் தச்சன் நேரடியாக அந்த வினையைச் செய்பவராக இருப்பதும் அப்படி இல்லாமல் அரசன் அந்தச் செயலைச் செய்வதற்குக் காரண கருத்தாவாக மட்டுமே இருப்பதும் உணர்ந்து கொள்ள வேண்டும். எனவே செய்தான் என்பதை இரண்டு வாக்கியத்திலும் பயன்படுத்தினாலும்

அரசன் தேர் செய்தான் என்ற வாக்கியத்தில் வரும் 'செய்தான்' என்பதற்குச் செய்யப் பணித்தான் என்பதோ செய்வித்தான் என்பதோ சரியான பொருளாக இருக்க முடியும். மேலும் அந்த வாக்கியத்தை 'அரசன் தச்சனைக்கொண்டு தேர் செய்வித்தான்' என்ற புதைநிலை வாக்கியத்திலிருந்து தோன்றியதாகக் கருத முடியும். தச்சன் தேர் செய்தான் என்பதே தச்சன் செய்த தேர் என்பதற்குப் புதைநிலை வாக்கியமாக அமையும். எனவே இல் தலைமை என்பது சாதாரண மொழியில் கூறினால் ஏவுதல் என்பதைப் பயனிலையில் வரும் வினையாகக் கொண்டு புதை நிலையில் இன்னொரு வாக்கியத்தையே கொண்டிருப்பது என்று கூறலாம். மாற்றிலக்கண மொழியியலார் இதைக் கீழ்க்கண்ட வாறு விளக்குவார்கள்.




தலைமை எச்சம் எளிய வாக்கியத்திலிருந்து தோன்றியது.




இந்த அமைப்புவேறுபாடே ஏவுதல் வினைமுதல், இயற்றுதல் வினைமுதல் என்று பிரிப்பதற்குக் காரணம். சாமிநாததேசிகர் தம் முடைய நுண்ணுணர்வினால் வேறுபாட்டை உணர்ந்ததற்கு ஏற்ம

எச்சத்தையும் வினைமுதலையும் பிரித்ததோடு சென்றுவிட்டதால் அதன் தருக்க ரீதியான பாகுபாடு என்று கருதப்பட்டு அதன் சிறப்புப் புறக்கணிக்கப்பட்டுவிட்டது.

அடுத்து எச்சத்தைக் காரணம் காரியம் என இரண்டு என்று தேசிகர் பாகுபடுத்தியுள்ளார்.

மழை பெய்த நீர்
புல்லின இன்பம்

என்ற இரண்டு எச்சமும் காரணம் என்றும்,

சமைத்த அரிசி
உண்ட சோறு

என்ற இரண்டு எச்சமும் காரியம் என்றும் அவர் உதாரணம் காட்டியுள்ளார்.

எச்சத்துக்கும் அதுகொண்டு முடியும் சொல்லுக்கும் உள்ள இலக்கண உறவு, அடிப்படையிலே வேறுபடுகிறது. மழை பெய்த தால் உண்டான / ஏற்பட்ட நீர் – மழை பெய்த காரணத்தினால் உண்டான நீர் என்று பொருள்படுவதால் அது ஒரு கலப்புப் பெய ரெச்சத் தொடராகவே (Complex relative clause) கருதப்பட வேண்டும். ஆனால் சமைத்த அரிசி, உண்ட சோறு என்பனவற்றை எளிய பெயரெச்சத்தொடர் (Simple relative clause) என்று அழைக்க வேண்டும். காரண எச்சம் காரணவினையைப் புதைநிலையில் கொண்டு இருக்கும் என்று பொருள் கொடுக்கலாம். அப்படியானால் 'நீர்' காரியமாகவும் 'மழை பெய்தது' காரணமாகவும் அமையும், எச்சமும் பெயரும் காரண காரியத் தொடர்பு உடையன. சமைத்த அரிசி என்பதோ உண்ட சோறு என்பதோ (ஒருவன்) அரிசி சமைத்தான் (ஒருவன்) சோறு உண்டான் என்ற வாக்கியத்தி லிருந்து பிறப்பதால் செயப்படுபொருள் (இதைக் காரியம் என்று அழைப்பதைவிடக் கருமம் என்று அழைக்கவேண்டும். அப்படியே காரணம் என்பது காரகம் அல்லது ஏது என்று குறிப்பிடலாம்) வினை என்ற இலக்கண உறவு உடையது. அப்பொழுதுதான் வேற்றுமையியல் ஆய்வுக்கும் வினையியல் ஆய்வுக்கும் ஒற்றுமை ஏற்படமுடியும். எப்படியாயினும் காரணம், காரியம் என்ற பாகுபாடு தொடரியல் முக்கியம் வாய்ந்தது.

முதல்வினை, சினைவினை என இரண்டு என்று மற்றொரு வகையாகவும பிரிக்கலாம் என்று தேசிகர் குறிப்பிட்டுள்ளார். இதற்குப் பதிப்பாசிரியர் சாத்தன் நொந்துகிடந்தான் என்பது முதல் வினை என்றும் சாத்தன் கண் நொந்து கிடந்தான் என்பது சினைவினை என்றும் உதாரணம் தந்துள்ளார். முதல் வாக்கியத்தில் நொந்து கிடந்தான் என்ற வினை சாத்தன் என்பதைக் கொண்டு முடிந்திருப்பதால் முதல்வினை என்றும் இரண்டாம் வாக்கியத்தில் கண் என்ற பெயரைக் கொண்டு முடிவதால் சினை வினை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. உண்மையில் புறநிலையை ஒட்டிய பாகுபாடாகவே கருத வேண்டும். ஏனெனில் கண் நொந்து கிடந்தான் என்பதே நொந்து கிடந்தான் என்று வந்துள்ளதாகக் கருதவேண்டும். மேலே புதைநிலை உறவு அடிப்படையில் பாகுபடுத்திவிட்டு உடனே புறநிலை உறவு அடிப்படையில் பாகுபடுத்துவது தருக்க ரீதியான முரணாகவே அமைந்துள்ளது.

இயல்பு, திரிபு என்று செய்துள்ள பாகுபாடு, வடிவத்தை அடிப்படையாகக் கொண்டது.

மருவினநாள் - மரீஇய நாள்
தழுவிக் கொண்டான் - தழீஇக் கொண்டான்

என்ற உதாரணங்களை நூலாசிரியரே தந்துள்ளார். எனவே மருவின, தழுவி என்பன இயல்பு எச்சமாகவும் முறையே மரீஇய, தழீஇ என்பன திரிபு எச்சமாகவும் கொள்ளவேண்டும். இது வடிவத்தின் அடிப்படையில் கிளைமொழி மாற்றத்தையோ வரலாற்று மாற்றத்தையோ விளக்குகிறது.

'விரியே தொகையே என இரண்டு' என்ற கருத்துக்கு பொருததகர் - பொருதகர்; வரிந்து புனைந்த பந்து - வரிப்புனை புனைந்து என்ற உதாரணங்களைக் காட்டியுள்ளார். பொதுவாக வினையடியே எச்சமாகப் பயன்படுத்தப்படும். அதை இவரே 'முதன் நிலைத் தனிவினை ......... இருவகை எச்சம்' (69.1, 4) ஆகவரும் என்று கூறியுள்ளது முன்னரே எடுத்துக் காட்டப் பட்டிருக்கிறது. ஆயினும் தொடர் வினையிலிருந்து தனி வினையை வருவிக்க வேண்டுமா? தனிவினையும் தொடர்வினையாகப் பயன்

படுகிறது என்று குறிப்பிட்டால் போதுமா? என்பதே முக்கிய கேள்வி. ஆனால் தனிவினை, எச்சமாக வரும் என்று வருணித்த பிற்பாடு இப்படித் தொகையாகவும் வரும் என்று கூறவேண்டிய தில்லை. அங்கு வினையெச்சம் ஒன்றையே வெவ்வேறு என்றல் என்பது அடுத்த கருத்து. அதற்கு விளக்கமாகக் கீழ்க்கண்டவாறு கொடுத்துள்ளார்.

'செய்து, செய்பு முதலாயின வெவ்வேறு ஆதலால் இவை எல்லாவற்றையும் கூட்டி வினையெச்சம் என்று பெயரிடல் பொருந்தாது. அன்றியும் வினையைக் கொள்ளும் எட்டு உருபு களையும் உவம உருபுகளையும் பிறவற்றையும் வினையெச்சம் என்று பெயரிட்டு வழங்காமை காண்க என்பர். பெயரெச்சத் திற்கும் இஃது ஒக்கும்' என்பதே அவர் வாசகம். வினையெச்சம் பெயரெச்சம் என்று எச்சம் இரண்டு வகைப்படும் என்று முதலில் குறிப்பிட்டு விட்டு அடுத்து வினையெச்சம் என்று பொதுப் பெய ரிட்டு அழைப்பது என்பது பொருந்தாது என்று கூறுகிறார். அதற்கு அவர் கூறும் முக்கிய காரணம் வேற்றுமை உருபுத் தொடர்களும் வினைகொண்டு முடிவதால் அவைகளையும் வினை யெச்சம் என்று அழைக்க வேண்டிவரும் என்பதே. அப்படியானால் வினையெச்சம் என்பதற்கு வினைகொண்டு முடியும் சொற்கள் அல்லது சொற்றொடர் என்று பொருள் ஆகிறது. இது அதனு டைய வேர்ப்பொருளைப் பற்றி அமைந்தது. இலக்கணக் கலைச் சொல்லாய்த் தமிழ் இலக்கணத்தில் வினையெச்சம் என்று வழங்கு வது இலக்கண ஆசிரியர்கள் குறிப்பிட்ட வாய்பாட்டில் வரும் சொற்களை மட்டுமே. வினையடியாகப் பிறந்து வினையெச்ச விகுதிகளை ஏற்று வருவது மட்டுமே வினையெச்சம் என்று கூறி விட்டால் வினை கொண்டு முடியும் பிற சொற்களையும் தொடர் களையும் வினையெச்சமாகக் கருதுவதற்கு இடம் இல்லாமல் போய்விடும். எனவே, வினையெச்சத்துக்குச் சரியான விளக்கம் கொடுக்காததால் ஏற்பட்ட பிரச்சனை இது.

இறுதியாக, சாமிநாததேசிகர் 'இவற்றுள் ஒன்றனைத் தள்ளி அன்றனைக் கொள்ளற்க; இவை எல்லாவற்றையும் கொள்க' என்னும் பொருள்படச் சிலர் பலர் என்றாம்'

என்று விளக்கமும் கொடுத்துள்ளார். அந்தக்கருத்துக்கள் எல்லாம் பலருடைய கருத்து என்பதை

இன்னும் பலபல இலக்கண மாகச்
சொன்னார் சிலரே துணியார் பலரே (சூ. 84)

என்ற சூத்திரத்தின் இறுதி வரிகள் தெளிவுபடுத்துகின்றன. மேலும் அவரே ஒரொருவர் ஒரோர் இலக்கணமாகக் கொண்டது கூறுகின்றது என்று இந்தச் சூத்திரத்தின் உரைத் துவக்கத்தில் கூறியிருப்பதும் அந்தக்கருத்தை வலியுறுத்துகிறது. அப்படியானால் இங்குப்பல கேள்விகள் எழுகின்றன. 1) பிறர் கருத்துக்களைக் கூறும் போது வடிவம், சொல்லியல், தொடரியல் என்று வரிசைப் படுத்திக் கூறாதது ஏன்? 2) இந்தக் கருத்துக்கள் பற்றி அவருடைய விமர்சனம் என்ன? 3) ஒரு தொடருக்கே இரண்டு முறையில் ஏன் இலக்கணம் கூற வேண்டும்?

பொதுவாக இலக்கணம் என்பது தனிமொழியின் அமைப்பை விளக்குவதாக இருந்தாலும் அது கூறும் மொழி அமைப்பு பற்றிய உண்மைகள் ஊகங்கள் போலக் கூறப்பட்டுள்ளனவே தவிர அவற்றின் அடிப்படையும் காரணமும் விளக்கப்பட வில்லை. அதாவது அவருடைய கருத்தை விளக்குவதற்கு மொழி அமைப்பில் வேறுபடுவதால்தான் வெவ்வேறு வகையாகக் கருதப் பட்டிருக்கிறது என்று நிரூபித்துச் செல்லவில்லை. அதனால் அதே முறையில் தொடர்ந்து ஆராயவும், ஆராய்ந்து மதிப்பிடவும் இய லாமல் போய்விட்டது. இந்தக் குறை பல மரபிலக்கணங்களுக்கும் பொருந்தும். ஆகையினால் இலக்கணக் கொத்திலோ பிறமரபு இலக்கணங்களிலோ இன்று பார்க்கும்போது நமக்குச் சிறப்பாகத் தோன்றும் கருத்துக்கள் பாராட்டப்படாமலும் இலக்கண ஆராய்ச்சி நீரோட்டத்தில் இரண்டறக் கலந்து புதிய புதிய சிந்தனைகளையும் மொழி அமைப்பு உண்மைகளையும் வெளிப்படுத்தாமலும் போய்விட்டன.

## துணை நூல்கள்


அகத்தியலிங்கம், ச. 1972 'வினையெச்சம் பற்றித் தொல்காப்பியர்' தொல்காப்பிய மொழியியல், பக். 207-32, அண்ணாமலைநகர்.

| | | |
|---|---|---|
| தண்டபாணிதேசிகர், ச. | 1974 | 'இலக்கணக் கொத்து' இலக்கண ஆய்வுக் கட்டுரைகள்-1 பக். 219 - 232, அண்ணாமலை நகர். |
| Masayoshi Shibatani, (Ed) | 1976 | Syntax and Semantics-*The Grammar of Causative Constru -ction*, New York. |
| Suseela, M. | 1981 | A Contrastive Analysis of Rela-tive Clause in Tamil and Hindi, Ph.D thesis-submitted to the Annamalai University. |

# சுவாமிநாதம்

மு.வை. அரவிந்தன்

## அறிமுகம்

பெரிதும் பயிற்சியில் இல்லாத தமிழ் இலக்கண நூல்களுள் ஒன்று, சுவாமிநாதம். இது ஐந்திலக்கணமும் கூறுகின்ற முழுமையான நூலாகும். இதனைச் செப்பமான முறையில், முழுமையான வடிவத்தில் வெளியிட்ட பெருமை அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் மொழியியல் துறையில் பணியாற்றி வருகின்ற டாக்டர் செ. வை. சண்முகம் அவர்களுக்கு உரியதாகும்.

## நூலாசிரியர் வரலாறு

இந்நூலின் ஆசிரியர், சுவாமிநாத கவிராயர்; இவரைச் சாமி கவிராசன் என்று சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. இவர், பத்தொன்பதாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்; திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள அம்பா சமுத்திரம் வட்டத்தில் கல்லிடைக் குறிச்சி நகரில் தோன்றியவர். இவர் இந் நூலினைத் துறைசை சுப்பிரமணிய தேசிகரின் கட்டளையின்படி இயற்றினார். இவர் பொதிகை நிகண்டு என்னும் நிகண்டு நூலையும் இயற்றியுள்ளார்.

சுவாமிநாத கவிராயரின் மைந்தர், சிவசுப்பிரமணியன் என்பவர். தந்தையைப் போலவே தமிழ்ப் புலமை மிக்கவர்; நாமதீப நிகண்டு, பொதிகை நிகண்டு ஆகிய இரண்டையும் இயற்றியவர். தம் தந்தையார் இயற்றிய சுவாமிநாத நூலுக்குச் சிறப்புப்பாயிரச் செய்யுள்கள் இயற்றியுள்ளார்.

## பெயர்ப் பொருத்தம்

ஆக்கியோன் பெயரால் நூலைக் குறிப்பிடும் மரபைப் பின் பற்றி, சுவாமிநாத கவிராயர் இயற்றிய இலக்கண நூல், 'சுவாமி நாதம்' என்று பெயர் பெற்றது.

இதனைச் சிறப்புப் பாயிரம் சாமிநாதம் என்றும் (தமிழ்ப் பொழில், துணர் 4, பக்கம் 351), எழுத்ததிகாரத்தில் - எழுத்தாக்க மரபில் உள்ள முதற் செய்யுள் 'சுவாமி நாதம்' என்றும் இரு வகையாகக் குறிப்பிடுகின்றன.

அளவும் அமைப்பும்

சுவாமிநாதம் நூலை முதன் முதலில், கரந்தைத் தமிழ்ச் சங்க வெளியீடாக வருகின்ற தமிழ்ப்பொழிலில் (1924 ஆம் ஆண்டு, துணர் - 4; பக்கம் 351 - 369 வெளியிட்ட புலவர் இ. கோவிந்த சாமிப் பிள்ளை அவர்கள், இந்த நூலில் (பாயிரம், நூல் மரபு உள்பட) 213 செய்யுள்கள் உள்ளன என்று கூறியுள்ளார்கள். ஆனால், இன்று அண்ணாமலைப்பல்கலைக் கழக வெளியீடாக வந்துள்ள சுவாமிநாத நூலில், மொத்தம் 202 செய்யுள்களே உள்ளன. ஏனைய 11 செய்யுள்கள் எனன ஆயின என்பதும், அவை எவை என்பதும் தெரியவில்லை.

தமிழ்ப்பொழில் (துணர்–4, பக்கம் 351), இந்நூலிற்கு உரிய சிறப்புப்பாயிரமாக, 'தோமில்' என்று தொடங்குகின்ற செய்யுள் ஒன்றை வெளியிட்டுள்ளது. அச் செய்யுள், அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பதிப்பில் ஏனோ இடம் பெறவில்லை!

தமிழ்ப் பொழிலில் வெளிவந்துள்ள பகுதிகளை ஒப்பிட்டு நோக்கினால், சில செய்யுள்கள் கிடைக்கக் கூடும்.

சுவாமிநாதம் ஆறுபிரிவுகளை உடையது. முதற்பிரிவு நீங்கலாக ஏனைய ஐந்து பிரிவுகளிலும் பிரிவுதோறும் மும்மூன்று உட்பிரிவுகள் உள்ளன.

ஐந்திலக்கணமும் கூறுகின்ற ஐந்து அதிகாரங்களை அமைத்துக்கொண்டு அதிகாரம் தோறும் மும்மூன்று உட்பிரிவுகளை அமைத்துள்ள முறை, முத்து வீரியத்துள்ளும் காணப்படுகின்றது. முத்து வீரியத்தைப் பின்பற்றி, சுவாமிநாதம் அமைக்கப்பட்டிருக்கலாம்.

காணமுடியவில்லை

தொல்காப்பியத்திலும் நன்னூலிலும் செவிக்கு இனிய சொல் லாட்சிகள் உண்டு; உள்ளங்கவரும் உவமைகள் உண்டு; சிந்த னையைத் தூண்டும் இரட்டுற மொழிதல் உண்டு; நினை வாற்றலை வளர்க்கும் மாட்டேறுகள் உண்டு; பல வகையான உத்திகள் உண்டு. இவற்றுள் எதனையும் சுவாமிநாதத்தில் காணமுடியவில்லை!

மகடூஉ முன்னிலை

பெண்பாலரை முன்னிலைப் படுத்திப் பாடும் பாடலை 'மகடூஉ முன்னிலை' பெற்ற பாடல் என்று கூறுவது வழக்கம்.

யாப்பருங்கலக் காரிகை, மகடூஉ முன்னிலை பெற்ற பாடல் களால் ஆனதாகும்.

மகடூஉ முன்னிலை அமைத்துப் பாடுகின்ற மரபைப் பின்பற்றி, சுவாமிநாத கவிராயர் தம் நூலை அமைக்க முயன்றுள்ளார். ஆனால் இவரது முயற்சி முழுமை எய்தி வெற்றி பெறவில்லை. ஏனெனில மிகச் சில பாடல்களே மகடூஉ முன்னிலையைப் பெற் றுள்ளன. காரிகை போல், பாடலதோறும் அம்முறை பினபற்றப் படவிலலை.

அந்தாதி

அந்தாதித் தொடை அமைப்பு பாடல்களை நினைவில் கொள் ளவும் மனப்பாடம் செய்யவும் பெரியோர்களால் ஏற்படுத்தப் பட்டதாகும்.

இம்முறையைப் பின்பற்றி, சுவாமிநாத கவிராயர் தம் நூலை அந்தாதியாகத் தொகுத்துள்ளார்.

சொல்லாட்சி

சுவாமிநாத கவிராயர் வாழ்ந்து நூல் இயற்றியது ஒரு நூற் றாண்டுக்கு முன்னரே ஆதலின், இவருடைய நூலில் நாம்

வியக்கத்தகுந்த விளங்கிக் கொள்ள முடியாத சொல்லாட்சிகள் இரா என்று எதிர்பார்க்கலாம். ஆனால், இவரது நூலில் புரிந்து கொள்ள இயலாத சொற்களும், சொற்றொடர்களும் சில உள்ளன. சில இடங்கள் பிழையாக எழுதப் பட்டிருக்கலாம் போல் தோன்றுகிறது. பதிப்பாசிரியர் பல இடங்களைச் சுட்டிக்காட்டி, பொருள் விளங்க வில்லை என்று குறிப்பிட்டுள்ளார்; பல இடங் களைத் தாமே யூகித்துத் திருத்தியுள்ளார்.

குறிப்பிடத் தகுந்த சில சொற்களை இங்கே காண்போம்:-

ஒற்றுதல் என்ற சொல் 'ஒத்துதல்' என்று மக்கள் பேச்சில் மாறி ஒலிக்கும். அவ்வாறு மாறிய வழக்கை இவர், தம் நூலில் ஆண்டுள்ளார்.

'நாவிளிம்பு ஒத்தித் தை வர' (சுவாமிநாதம் – 17) என்று அச் சொல் வந்துள்ளது.

'ஊழ்' என்ற சொல்லுக்கு 'முறைமை' என்ற பொருளும் உண்டு. அச்சொல்லைக் கொண்டு இவர், 'பெயரெச்சம்' ஒன்றைப் படைத்துள்ளார்.

'ஊழ்த்த'வடிவு – (சுவாமி – 20) என்பதில் ஊழ்த்த என்பது 'முறையான' என்ற பொருளில் ஆளப்பட்டுள்ளது.

இத்தகைய புதிய சொல்லாட்சிகளைப் படைத்த இவர் 'கஷ்டம்' எனற சொல்லை, எவ்வித மாறுதலும் செய்யாமல் ஆண்டுள்ளார் (சுவாமி – 178).

ரூபகம் என்பதும் உருவகம் என்பதும் நெருங்கிய தொடர் புடைய சொற்கள். உரு – உருவம் – உருவகம் ஆயிற்று என்று சிலரும், ரூபகம் – உருபகம் – உருவகம் ஆயிற்று என்று சிலரும் தொடர்பு படுத்துகின்றனர். உருவகம் என்றசொல், பழைய இலக்கண நூல்களில் பயின்றுவந்துள்ள சொல்லாகும். அவ்வாறு இருக்க, சுவாமிநாத கவிராயர், 'உருபகம்' என்று அச் சொல்லைத் தந்துள்ளார் (சுவாமி – 179).

'பந்தம்' என்பதற்குத் தளை அல்லது கட்டு என்பது பொருள். அச் சொல்லை இவர் 'பெந்தம்' என்று வழங்கியுள்ளார் (சுவாமி – 179).

குன்றக் கூறல்

வடமொழிச் சொற்களைத் தமிழில் கடன் வாங்கி வழங்கும் போது, வடமொழிச் சொற்களில் உள்ள ஜ, ஷ, ஸ, முதலிய சிறப்பு எழுத்துக்களை மாற்றி அவற்றோடு ஒப்புமையுடைய தமிழ் எழுத்துக்களைச் சேர்த்து வழங்க வேண்டும் என்ற கொள்கையை ஏற்றுக் கொண்ட சுவாமிநாதகவி, எந்த எந்த வடமொழி எழுத்துக் களை எவ்வாறு தமிழ் எழுத்துக்களாக மாற்ற வேண்டும் என்பதைப் பட்டியல் போட்டுக் கூறுகின்றார் (சுவாமி–32). அவ்வாறு செய்யின் 'வடமொழி தென் மொழி ஆம்' என்கின்றார்.

இவர் விதித்த விதிகளில் அடங்காமல், இவருக்கு முற்பட்ட இலக்கியங்களில் வேறுபட்ட வடிவத்துடன் சில வடசொற்கள் இடம் பெற்றுள்ளன. அவற்றை இங்கே காண்போம்.

மனஸ், சிரஸ், மனுஷன் ஆகிய சொற்கள் பின்வரும் மாறுதல் களை அடைந்துள்ளன.

மனஸ் - மனசு - மனது – மனம்.
சிரஸ் – சிரசு –—— – சிரம்,
மனுஷன் - மானுடன் – மானிடன்
மனுஷன் – மனிசன் – மனிதன்.

இவையே யன்றி 'ஷ', தமிழில் ழகரமாய் மாறி வழங்கியுள்ளது. திவ்விய பிரபந்த வியாக்கியான ஆசிரியர்கள் தம் விளக்க உரைகளில் 'பாஷை' என்ற சொல்லை 'பாழை' என்று வழங்கி-யுள்ளனர்.

இத்தகைய மாற்றங்களைச் சுவாமிநாதகவியும், அவருக்கு முற்பட்ட இலக்கண ஆசிரியர்களும் அறிந்து விதி வகுக்கவில்லை!

வழி வழியாக வந்த பிழை

இலக்கண ஆசிரியர்கள், சில சொற்களுக்கு இலக்கணம் கூறிய போது, தம் காலத்துக்கு முன்னரே மருவி வழங்கி வந்த மரூஉச் சொற்களையும், சிதைந்த அல்லது உரு மாறிய சொற்றொடர்களையும் அடையாளம் கண்டு கொள்ளவில்லை. அவ்வாறு மாறிய சொறகளின் முன்னைய வடிவங்களை ஆராய்ந்து, அவற்றின் திருத்தமான வடிவங்களை அறிந்து கொள்ள வில்லை. அவை தம் காலத்தில் எவ்வாறு வழங்கி வந்தனவோ, எந்த வடிவததில இருந்தனவோ அவ்வாறே அவற்றை ஏற்றுக் கொண்டு, அவற்றிறகு இலக்கணம் கூறி விட்டனர். இதனால், சில தவறுகள் ஏற்பட்டு விட்டன. அத்தகைய தவறுகளில் ஒன்று, ஙகரம், மொழிக்கு முதலில் வரும் என்று நன்னூலார் கூறியதாகும்.

நன்னூலசர், அங்ஙனம் இங்ஙனம் எங்ஙனம் யாங்ஙனம் முதலியவற்றை,

அ + ஙனம்
இ + ஙனம்
எ + ஙனம்
யா + ஙனம்

என்று பிரித்துக் கொண்டு, ஙகரம் மொழிக்கு முதலில் வரும் என்று கருதி, அக்கருத்தை ஒரு நூற்பாவாக்கித் தம் நூலில் சேர்தது விட்டார்.

அங்ஙனம் இங்ஙனம் முதலியவை யாவும் மருவியவை (அல்லது உருவம் மாறியவை) யாகும். அவற்றின் முன்னைய வடிவங்கள் :

ஆங்கனம்
ஈங்கனம்
யாங்கனம்

என்பவை ஆகும். இவற்றை முறையே

ஆங்கு + அனம்
ஈங்கு + அனம்
யாங்கு + அனம்

என்று பிரிக்க வேண்டும்.

ஆங்கனம், ஈங்கனம், யாங்கனம் ஆகியவை காலப் போக்கில் பின் வருமாறு மாறுதலை அடைந்தன:—

ஆங்கனம் - ஆங்ஙனம் - அங்ஙனம்
ஈங்கனம் - ஈங்ஙனம் - இங்ஙனம்
யாங்கனம் - யாங்ஙனம் - எங்ஙனம்

இவை இவ்வாறு மாறியபின் பெற்ற வடிவங்களை நன்னூலார்,

அங்ஙனம் = அ + ஙனம்
இங்ஙனம் = இ + ஙனம்
எங்ஙனம் = எ + ஙனம்
(யாங்ஙனம் = யா + ஙனம்)

என்று பிரித்து விட்டார். பிரித்தபின்

'சுட்டுயா எகர வினா வழி அவ்வை
ஒட்டி ஙவ்வும் முதலா கும்மே' (நன் - 106)

என்று ஒரு விதியை ஏற்படுத்திக் கொண்டு நூற்பா இயற்றி நன்னூலில் சேர்த்துவிட்டார்.

நன்னூலாரைப் பின்பற்றி வழிவழியாக இந்தப் பிழை வழங்கி வருகிறது. சுவாமிநாத கவிராயரும் நன்னூலாரைப் பின்பற்றி, ஙகரம் சுட்டுவினாவைச் சார்ந்து மொழிக்கு முதலில் வரும் என்று கூறியுள்ளார்.

புதிய முயற்சிகள்

சுவாமிநாதகவி, சில புதிய முயற்சிகளைச் செய்து இலக்கணக் கொள்கைகளைப் புதுமையாக மாற்றி அமைக்க முயன்றுள்ளார்.

அம்முயற்சியால் விளைந்த புதுமைகள் சரியானவையா? ஏற்கத் தகுந்தவையா? அவற்றால் தமிழ்மொழிக்கு ஆக்கம் ஏற்படுமா? இந்த வினாக்களுக்கு வருங்காலம் சரியான விடைகூறும்.

1. குற்றியலுகரம் ஐந்து

குற்றியலுகரம், நெடில் ஆய்தம் உயிர் வலி மெலி இடை என ஆறுவகைப்படும் என்ற இலக்கணக் கோட்பாட்டை, சுவாமிநாத கவி மாற்றி நெடிலை நீக்கி ஏனைய ஐந்தையுமே கூறுகின்றார். நெடில் தொடர்க் குற்றியலுகரம், உயிர்த்தொடர்க் குற்றியலுகரத்துள் அடங்கும் என்று இவர் கருதினார் போலும்!

வன்மை மென்மை இடைமை உயிர்ஆய்தம் என்றுஐந்
தொடர்க்கீழ் வல்லெழுத்து ஊர் உ குறுகும்
(சுவாமி - 18)

என்று இவர் விதி அமைத்துள்ளார்.

2. வினைச் சொல்லைச் சுவாமிநாதகவி, தனிவினை தொடர் வினை என்று இருவகையாகப் பகுத்துக் கொண்டு அவற்றிற்கு பின்வருமாறு விளக்கமும் தருகின்றார்.

தனிவினையும் தொடர்வினையும் ஆகும்;
முதல்நிலையே
தனிவினை; மற்றையவை தொடர் வினைகள்
(சுவாமி - 47)

'இந்தப்பாகுபாடும் விளக்கமும் ஏற்கத் தகுந்தனவா?' என்பதை அறிஞர்கள் முடிவு செய்ய வேண்டும்.

3. பண்புப் பெயர்களை விளக்கும் போது, வடிவு அளவு நிறம் காட்சி கருத்து என்று பாகுபாடு செய்துள்ளார். காட்சி கருத்து என்பவை பண்புப்பெயர்களில் எவற்றை உணர்த்துகின்றன என்பதைச் சிந்தனையாளர்கள் சிந்தித்துத் தெளிவு படுத்த வேண்டும்.

4. தொகை மொழிகளில் 'படு தொகை' என்ற ஒன்றைக் கூறியுள்ளார்:

தொடர் மொழியிற் படு சொலும் தொக்குறுமே
(சுவாமி - 66)

என்பது இவரது விளக்கமாகும்.

கறந்த பால் காம்பில் ஏறுமா?
சொன்ன சொல் திரும்ப வருமா?

என்பவற்றில்,

கறந்த பால் என்பது, கறக்கப்பட்டபால் என்றும், சொன்ன சொல் என்பது சொல்லப்பட்ட சொல் என்றும் 'படு' சொல் பெற்று விரிகின்றது. ஆதலின் அவற்றைப் 'படு - தொகை' என்ற புதிய பாகுபாட்டில் அடக்கி, பெயரையும் இட்டுள்ளார் சுவாமிநாதகவி.

'படு தொகை' தோற்றுவிக்கப்பட்டு ஒரு நூறு ஆண்டுகள் ஆகியும் அது செல்வாக்குப் பெறாமை, அதனை இலக்கணச் சிந்தனையாளர் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதை உணர்த்துகின்றது.

5. புறப்பொருளுக்கு உரிய திணைகளையும் துறைகளையும் கூறியபின் இறுதியில் பொதுவியல் என்ற பகுதியை அமைத்துக் கொண்டு ஆடவர்களுக்கு உரிய பல செயல்களை விளக்கிக் கூறிய பின் மகளிர்க்கு விளையாட்டு வகைகளையும் பொழுது போக்குகளையும் பின்வருமாறு கூறுகின்றார் சுவாமிநாத கவிஞர்.

பூப்பறித்தல்
நீராடுதல்
பொழிலாடுதல்
சுண்ணம் இடித்தல்
தோள் நோக்கம் ஆடுதல்
குயில் கூவிதத்தல்
தெள்ளேணம் கொட்டுதல்

இவற்றை இக் கவிஞர், திருவாசகத்தை நோக்கி அமைத்துள்ளார் என்று தெரிகின்றது. இவற்றைப் புறப்பொருளில் மகளிர்க்கு உரிய செயல்களாக ஏற்கலாமா என்பதை அறிஞர் பெருமக்கள் ஆய்ந்து உரைக்கவேண்டும்.

6. காலம் காட்டும் இடைநிலைகளைக் கூறும் போது பின் வருவனவற்றை உரைக்கின்றார்.

க் ட் த் ற் — இறந்த கால இடைநிலைகள்
கிறு கிற்று கின்று ஆநின்று-நிகழ்கால இடைநிலைகள்

இவற்றுள் இறந்த காலத்திற்கு 'க்', நிகழ்காலத்திற்கு 'கிற்று' ஆகிய இரண்டும் புதியவையாகச் சுவாமிநாதகவி கூறியவை. இவற்றிற்கு உரிய எடுத்துக்காட்டுகள்:—

புக்கான் — க்
நக்கான் — க் } இறந்த காலம்

'கிற்று' என்ற இடைநிலை, நிகழ் காலத்திற்கு வந்தமைக்கு உதாரணம் தெரியவில்லை.

புக்கான், நக்கான் என்பனவற்றை புகு, நகு என்று பகுதியாக்கி, ஒற்று இரட்டித்துப் புக்கு, நக்கு என்று ஆக்கி இறந்த காலம் காட்டியன என்று கூறுவது வழக்கம். இந்த வழக்கத்தைச் சுவாமிநாதகவி ஏற்காமல் புதுவழி காட்டுகின்றார். அதனை ஏற்கலாமா?

**போற்ற வேண்டிய புதுமைக் கருத்துகள்**

சுவாமிநாதகவி, தம் நூலில் அனைவரும் போற்றவேண்டிய புதுமைக் கருத்துகள் சிலவற்றை ஆங்காங்கே கூறியுள்ளார். அவற்றை ஆய்வோம்.

1. தமிழ் நூல்களைக் கற்றுத் தெளிய வேண்டிய முறை பற்றி இவர்,

நூல் இயல் கண்டு, ஆய்ந்துரை போதனை மதி மற்றால்
அறிக தமிழே

(சுவாமி-11)

என்று கூறுகின்றார். தமிழ்நூல்களில் தெளிவு பெற எண்ணுவோர் நூலின் இயல்பைக் காணவேண்டும்; ஆய்ந்த உரைகளைக் கற்க வேண்டும்; நல்லாசிரியரை அடுத்துப் போதனை பெற வேண்டும். இவற்றோடு அறிவு நுட்பம் முதலிய மற்றவைகளினால் ஆய்ந்து தமிழை அறிய வேண்டும்-என்ற கருத்தை மிக அழகாகக் கூறியுள்ளார்.

2. எழுத்துப் பிறப்பதற்குக் காரணமான ஒலியை, 'அணுவினான் மூலவிந்தில் எழு நாதம்' (சுவாமி - 16) என்கின்றார். எழுத்து, மொழிக்குக் காரணமாகி நாத காரியப்பட்டுப் பிறக்கின்றது என்கின்றார் (சுவாமி - 14).

3. எழுத்தின் இலக்கணத்தை நன்னூலார், 'எண் பெயர் முறை' என்ற வரிசையில் கூறுகின்றார் (நன் - 57). அம்முறையை மாற்றிச் சுவாமிநாதகவி, 'பெயர் எண் முறை' என்று வரிசைப் படுத்துகின்றார் (சுவாமி - 14).

சிவஞான முனிவர் இலக்கணச் சூறாவளியில் (பக் - 65) "எண்ணுதற்கும் பெயர் கருவியாதலின், அதனை முற்கூறாதது முறையன்று' என்று எழுப்பிய மறுப்பைக் கருத்தில் கொண்டு இவர் இவ்வாறு மாற்றி அமைத்துள்ளார்.

4. ஆய்தம் பற்றி, இவர் கூறியுள்ளது போற்றத் தகுந்த வகையில் உள்ளது. அவற்றை இங்கே காண்போம்.

I சொற்களில் ஆய்த ஒலி வகை

1. இயற்கையான (இயற்) சொல்லில் வருவது

கஃசு
எஃகு
வெஃகாமை
அஃகுதல்

2. மாற்றொலி (போலி)ஆக வருவது

பத்து - பஃது
அகுதை - அஃதை (அத்தை)

எக்கூர் – எஃகூர்

பன்றி - பஃறி (பறி) (பன்றி வடிவில் செய்யப்பட்ட மீன் பிடிக்கும் கூடை)

3. ஒலிக் குறிப்பாக வருவது

கஃறென்னும் ஒலி

4. புணர்ச்சியில் மாறி வருவது

அல்திணை - அற்றிணை – அஃறிணை

முள்தீது – முட்டீது – முஃடீது

5. விளங்காத நிலையில் உள்ளவை

(i) எண்பத்து - எண் பஃது - எண்பளது. (தஞ்சை மாவட்ட வட்டார வழக்கு; ஃ இங்கே 'ள' ஆக மாறியுள்ளது).

(2) அது, இது ஆகிய சுட்டுக்கள், புணர்ச்சியில் அஃது இஃது என ஆய்தம் பெறுகின்றன.

II சார்பு எழுத்தாக ஆய்த ஒலி

ஆய்தம், சார்பெழுத்து என்பது அனைவர்க்கும் உடன்பாடான கருத்தே எனினும் ஆய்தம மற்ற சார்பு எழுத்துகளிலிருந்து பல வகையில் மாறுபடுகிறது.

1. சார்பு எழுத்திற்குத் தனியே வரிவடிவம் இல்லை. (நன்னூலார் தவறாக உயிர்மெய்களைச் சார்பெழுத்துகளாகக் கொண்டு விட்டார்) ஆய்தம் வரிவடிவம் பெற்றுள்ளது.

2. சார்பு எழுத்துகளாகிய குறில் உ, குறில் இ ஆகியவை தனியே ஒலிக்க முடியாதவை. அவற்றிற்கு மாறாக ஆய்தம் தனியே ஒலிக்கப்படுகிறது.

3. நெடுங்கணக்கில் ஆய்தம் வரிவடிவில் இடம் பெற்றுள்ளது. ஏனைய சார்பு எழுத்துகளாகிய குறில் உ, குறில் இ அவ்வாறு இடம் பெறவில்லை.

இவ்வாறு, எளிதில் முடிவு காண முடியாதபடி, ஆய்தம் சிக்கலடைந்துள்ளது.

சுவாமிநாதகவி, புணர்ச்சியில் வரும் ஆய்தத்தை நன்னூலாரைவிடத் தெளிவாக விளக்கிக்கூறி, ஆய்விற்கு ஒளிதந்து உதவுகின்றார்.

4. ல ள ஆகியவை வல்லினம் வரின் திரிந்து திரிந்தபின் தோன்ற வல்லினம ஆய்தமாகும் என்கின்றார்,

"லள வலி திரிபின் இடத்து ஆய்தம் குறுகும்'' (சுவாமி-18)

இவர் கருத்துப்படி,

அல் + திணை - அற்றிணை - அஃறிணை
முள் + தீது - முட்டீது - முஃடீது

என மாறும்.

இவர் கருத்திற்கு மாறாக நன்னூலார் 'த' வரின் ல ள ஆய்தம் ஆகிவிடும என்கிறார்.

"குறில்வழி லள தவ் அணையின், ஆய்தம்
ஆகவும் பெறூஉம் அல்வழி யான'' (நன்-228)

நன்னூலார் கருத்துப்படி,

அல்திணை - அஃறிணை
முள்தீது - முஃடீது

என்று ஆனதாய்க் கூறுகின்றார். நன்னூலார் கொள்கைப்படி, ல,ள ஆய்தம் ஆகுமாயின், 'த' ற வாக எவ்வாறு திரிந்தது என்பதற்கு விளக்கம் இல்லை.

எனவே சுவாமிநாத கவியின் கருத்தே சிறப்பாக உள்ளது.

5. ஐ, ஔ இரண்டிற்கும் மாத்திரை கூறும்போது சுவாமிநாதகவி,

ஐ ஒள முதல் ஈறு ஒன்றரை; இடையில் ஒன்றாம் (சுவாமி–20) என்கின்றார். 'ஐ, ஒள சொல்லின் முதலிலும் ஈற்றிலும் ஒன்றரை மாத்திரையாக ஒலிக்கும்; இடையில் வரின் ஒரு மாத்திரையாக ஒலிக்கும்: தனியே வரின் இரண்டு மாத்திரையாக ஒலிக்கும் என்பது இவர் கருத்து. 'ஐ, ஒள–குறில் எழுத்துகளே' என்று கூற முயல்கின்ற நம் காலத்தில், இவரது கருத்துப் போற்றும் வகையில் உள்ளது.

6. அ ஆ எ ஒ வோடு ஆகும் ஞ முதல்- (நன் - 105) என்று நன்னூலார் கூறியுள்ளார். ஆனால் பழந்தமிழ் நூல்களில், நன்னூல் தோன்றுவதற்குப் பத்து நூற்றாண்டுகளுக்கு முன்னரே ஞிணம், ஞிமிறு ஆகிய சொற்கள் வழங்கியுள்ளன*. எனவே 'ஞகரம்' இகரத்துடனும் மொழி முதலாகும் என்ற கருத்தை நன்னூலார் மறந்துள்ளார்.

நன்னூலாரின் மறதியை உணர்ந்துகொண்ட சுவாமிநாதகவி நேயம் என்பது ஞேயம் என்று மருவி வழங்குவதையும் எண்ணிப் பார்த்து,

'ஞகரம் அ ஆ எ ஒ வுடன் மட்டுமன்றி இ, ஏ ஆகிய இரண்டுடனும் சேர்ந்து முதலில் வரும்' என்று விதி வகுத்துள்ளார். (சுவாமி-21)

7. நன்னூலார்,

'பெயர் வினை இடத்து ன ள ர ய ஈற்றயல்
ஆ ஓ ஆகலும் செய்யுளுள் உரித்தே' (நன்–353)

என்று கூறிய விதியுள், கிழவன் என்பது கிழவோன் என மாறுவது இடம்பெறவில்லை. இதனை உணர்ந்த சுவாமிநாதகவி,

பெயர் வினையின் ன ள ரய ஈற்றயலின் அ ஆ ஓ ஆகும் (சுவாமி – 64)

என்று உரைத்துள்ளார்.

---

* ஞிணம் - புறநானூறு 177 (14)
ஞிமிறு – மதுரைக்காஞ்சி-684
குறிஞ்சிப்பாட்டு-111

8. விடையின் வகைகளைக் கூறும் போது, 'சொல் தொகுத்து உரைத்தல்' என்ற ஒன்றை இவர் புதிதாகக் கூறுகின்றார். பலவகையான தானியங்களின் பெயர்களைத் தனித் தனியே கூறி, உளதா என்று கேட்கும் ஒருவனுக்கு 'எல்லாத் தானியங்களும் உள' என்று கூறுவது, 'சொல் தொகுத்து' உரைத்தலாகும். இந்த விடை வகை புதியதாகவும், பொருத்தமாகவும் உள்ளது.

9. உரிச்சொல் பற்றி, மொழியியலார் கூறுகின்ற கருத்தை ஒரு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே சுவாமிநாதகவி கூறியிருப்பது வியப்பைத் தருகின்றது.

'பெயர் வினை போன்றவைக்கு அடியாய்...ஆம் உரிச் சொல்'
(சுவாமி – 57)

என்பது இவர் உரிச்சொல்லிற்குத் தந்துள்ள விளக்கம்.

Root என்ற ஆங்கிலச் சொல்லை வேர் என்றும், அடி என்றும் இன்றைய மொழி நூலார் தமிழாக்கம் செய்துள்ளனர். 'அடி' என்ற சொல்லைப் பல ஆண்டுகளுக்கு முன்னரே இவர் பயன்படுத்தி இருப்பது பெரிதும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

மருதத் திணைக்குரிய கருப்பொருள்களைக் கூறும் இடத்தில், மக்களுக்குரிய தொழில்களைக் குறிப்பிடும் போது,

''தமிழ் முதல் கல்விகள் பயிறல் பாடலுடன் ஆடல்...
அவரவர் செய் தொழிலே'' (சுவாமி – 78)

என்று கூறி இருப்பது பெரிதும் மகிழ்ச்சியளிக்கிறது. ''மருத நிலத்து மக்களுக்கே ஏனைய நிலத்து மக்களைக் காட்டிலும் தமிழ் இலக்கண இலக்கியங்கள் பயிலவும், ஆடல் பாடல்களைக் கற்கவும் வாய்ப்பு மிகுதியாக உண்டு'' என்று இவர் கருதிச் சிறப்பித்துக் கூறி இருக்கலாம். பல வகையான கல்விகளோடு தமிழ்க்கல்வியும் மக்கள் பயில வேண்டும் என்ற இவரது ஆர்வம் புலனாகின்றது.

**மரபு காத்தல்**

சுவாமிநாத கவிராயர், தொல்காப்பியருக்குப் பின் தோன்றிய இலக்கணக் கொள்கைகளைப் போற்றி மேற்கொண்டுள்ளார்.

எனினும் பின்னூல் ஆசிரியர்கள், தொல்காப்பியர் கருத்திலிருந்து மாறுபடுகின்ற இடங்கள் தவறானவை என்று தாம் கருதினால், துணிந்து தொல்காப்பிய மரபையே போற்றிக் காக்கின்றனர். இவர் தொல்காப்பிய மரபைக் காக்கும் இரண்டு இடங்கள் அகப் பொருளிலும் புறப்பொருளிலும் உள்ளன.

எற்பாடு

தொல்காப்பியர், ஐந்திணைகளுக்கும் உரிய சிறு பொழுதுகள் ஆறு என்று கூறுகின்றார்.

அவை: 1. வைகறை 2. விடியல் 3. நண்பகல்
4. எற்பாடு 5. மாலை 6. யாமம்

என்பவை. இவற்றுள், எற்பாடு – நெய்தல் திணைக்கு உரிய தாகும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். அதனை, ''பகற் பொழுதின் பிற்கூறு'' என்று விளக்குகின்றார் இளம்பூரணர்.

தொல்காப்பியரால் கூறப்பட்ட இப் பாகுபாடு, நம்பியகப் பொருள் ஆசிரியரால் ஏனோ புறக்கணிக்கப்பட்டுள்ளது.

'எற்பாடு' என்ற சிறு பொழுதைக் கூறாமல் புறக்கணித்து விட்டு, சிறு பொழுதுகள் ஐந்தே என்று அறுதியிட்டுக் கூறிய பின், நெய்தலுக்கு உரிய சிறுபொழுதைக் குறிப்பிடும்போது, வெய்யோன்பாடு நெய்தற்கு உரித்தே என்று உரைக்கின்றது. (நம்பியகப் – 17) இங்கே, ஐயத்திற்கிடமின்றி வெய்யோன்பாடு என்பது எற்பாட்டையே குறிக்கின்றது.

வெய்யோன் = எல்
வெய்யோன் பாடு = எல் + பாடு; எற்பாடு

எற்பாடு என்ற சொல், விந்தையான பொருளை உடையது. அச் சொல் கதிரவனின் மறைவையும் குறிக்கும்; தோற்றத்தையும் குறிக்கும். படு என்பது மறைதல், தோன்றுதல் ஆகிய இரண் டையும் உணர்த்தும். தொல்காப்பியர் எற்பாட்டை, கதிரவன் மறைகின்ற காலத்தைக் குறிக்கவே பயன்படுத்தியுள்ளார்.

எற்பாடு என்ற சொல்லின் பொருள், நம்பியகப் பொருள் ஆசிரியரை மயக்கியுள்ளது. அதனால்தான் அவர், முதலில் 'எற்படு காலை' என்று கூறிவிட்டு, பின்னர் 'வெய்யோன்பாடு' என்றும் கூறி முரண்படுகின்றார்.

இந்த முரண்பாட்டை நன்கு அறிந்துகொண்ட சுவாமிநாத கவிராயர், தொல்காப்பிய மரபையே பின்பற்றி, 'எற்பாடு - பகற் பொழுதின் பிற் கூறு' என்று தெளிந்து அதனை நெய்தலுக்கு உரிய சிறுபொழுதாகக் கூறியுள்ளார். (சுவாமி - 72, 73)

நம்பியகப்பொருள் கூறும் அகப்பொருள் இலக்கணத்தை மற்ற இடங்களில் எல்லாம் தழுவிச்செல்லும் சுவாமிநாத கவிராயர், எற்பாடு பற்றிய கருத்தில் மட்டும் மாறுபட்டுத் தொல்காப்பி யத்தைத் தழுவியுள்ளார்.

சிவஞானமுனிவர், சிறுபொழுது ஐந்தே என்று சாதித்துப் பலவேறு விளக்கம் கூறி இருப்பதை* அறிந்திருந்தும், முனிவர் கருத்தை ஏற்காமல் தொல்காப்பிய மரபைப் பேணிக் காத்த சுவாமி நாத கவிராயர் நம் பாராட்டுதலைப் பெறுகின்றார்.

காஞ்சித்திணை

சுவாமிநாத கவிராயர் புறப்பொருள் இலக்கணத்தில் காஞ்சித்திணை பற்றிய விளக்கத்தில் தொல்காப்பியரைப் பின் பற்றியுள்ளார். ஏனைய இடங்களில் எல்லாம் புறப்பொருள் வெண்பாமாலையின் கருத்தைப் பொன்னேபோல் போற்றி மேற் கொண்ட இவர், காஞ்சித்திணை விளக்கத்திற்குத் தொல்காப்பியத் தையே நாடுகின்றார்.

காஞ்சித்திணை நிலையாமையை உணர்த்தும் என்பதைத் தொல்காப்பியர்,

'காஞ்சி தானே...
நில்லா உலகம் புல்லிய நெறித்தே' (புறத் - 18)

---

* தொல்காப்பிய முதற் சூத்திர விருத்தி; பக்கம் - 52, 53 சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வெளியீடு (1964)

என்று தெளிவுபடுத்தியுள்ளார். ஆனால், புறப் பொருள் வெண்பா மாலை, வஞ்சித் திணைக்கு எதிரான திணையாகக் காஞ்சியைக் கூறியுள்ளது. எனினும், அக்கருத்தை ஏற்காமல், சுவாமிநாத கவிராயர் தொல்காப்பியத்தைப் பின்பற்றி,

''...காஞ்சி, நில்லாத உலகம்
பேணுதலாம்'' (சுவாமி - 1 2)

என்று கூறியுள்ளார்.

இலக்கிய வகையில் தெளிவு

கி.பி. 12-ஆம் நூற்றாண்டிற்குப் பின்னர், 'பாட்டியல்' என்ற பெயருடன் இலக்கண நூல்கள் பல தோன்றின. அவை, இலக்கிய வகைகளைத் தெளிவாக விளக்குகின்றன.

சுவாமிநாத கவிராயர் பாட்டியல் நூல்கள் கூறுகின்ற இலக்கிய வகைகளை யாப்பதிகாரத்தில் பிரபந்த மரபு என்ற பகுதியில் விளக்குகின்றார். யாப்பதிகாரத்துள் இலக்கியத்தின் வடிவங்களை ஆராய்வதே பொருந்தும் எனினும், வேறு தக்க இடம் இல்லாமையின் இலக்கிய வகைகளைக் கூறும் பாட்டியல் கருத்துகளை யாப்புடன் சார்த்திக் கூறியுள்ளார்.

'பிரபந்தம் அளவிலவாம்' (சுவாமி - 164) என்று இவர் கூறி இருப்பது, இவரது ஆய்வுத் திறனைப் புலப்படுத்துகின்றது. 96 வகை என்று வரையறுத்து விடாமல் 'அளவில' என்று கூறி இருப்பது போற்றத்தக்கதாகும்.

குறம் மறம் பள்ளு ஆகிய இலக்கிய வகைகளை இவர் நாடகங்கள் என்று அடையாளம் காட்டியுள்ளார்.

'இலங்கு குறம் மறம் பள்ளு நாடகங்கள்' (சுவாமி - 166) என்பது இவர் தந்துள்ள விளக்கமாகும்.

# முத்துவீரியம்

அ. ஆனந்தநடராசன்

தொல்காப்பியத்தை அடியொற்றி எழுந்த நூல்களுள் முத்து வீரியமும் ஒன்றாகும். இது ஐந்திலக்கணமும் உணர்த்துகிறது. இந்நூலை இயற்றியவர் முத்துவீர உபாத்தியாயர் என்பவர். இவரை முத்துவீருப்புலவர் என்றும் கூறுவர். இவர் திருச்சிராப் பள்ளியைச் சார்ந்த உறையூரினர். இதனை 'உறந்தை அகத் தெழுந்தருளிய முத்துவீரமாமுனிவன்' எனவும், 'உறந்தை வாழிய முத்துவீரமாமுனிவன்' எனவும் சிறப்புப்பாயிரங்கள் கூறுவதால் அறியலாம்.

இந்நூலின் ஒருபகுதியாகிய யாப்பதிகாரம் 1862 அக்டோபர் 15 இல் அச்சாகியுள்ளது. இப் பகுதியின்முன் ஒரு சிறப்புப் பாயிரம் உள்ளது. ஐந்திலக்கணமும் அடங்கிய முழுநூல் 1889-இல் அச்சாகியுள்ளது. இந் நூலின்முன் ஒரு சிறப்புப் பாயிரம் உள்ளது. இம்முறையில்இரண்டு சிறப்புப் பாயிரங்கள் இருக்கின்றன. ஆனால் யாப்பதிகாரத்தின் முன் கூறப்பட்ட சிறப்புப்பாயிரம் முழுநூலில் இல்லை. இச்சிறப்புப்பாயிரங்களை இயற்றியவர் திருநெல்வேலித் திருப்பாற்கடல்நாதன் கவிராயர் என்பவர் ஆவார். யாப்பதி காரத்தில் உள்ள சிறப்புப் பாயிரத்தில்

''முத்துக் கிருட்டிணன் மொழிந்தனனாக
... ... ... ... ...
முத்து வீரியம் எனத் தற்பெயர் நிறீஇ
வகுத்தனன் உறந்தை வாழிய
முத்து வீரமா முனிவன் என்பவனே''

என்று காணப்படுகின்றது. இதனால் முத்துக்கிருட்டிணன் கூற, இவர்தம் பெயரால் முத்துவீரியம் என்ற நூல் செய்தார் என்பது பெறப்படுகின்றது. முழுநூலில் காணப்படும் பாயிரத்தில்

''சுப்பிர மணிய தேசிகன் கவிப்பெருமான்
அறைந்தன னாக அகத்திய நூல்வழி
முத்துவீரியம் எனத்தற் பெயர்நிறீஇ
வகுத்தனன் உறந்தை அகத்தெழுந் தருளிய
முத்து வீரமா முனிவன் என்பவனே''

என்று விளம்பப்பட்டுள்ளது. இதனால் திருநெல்வேலியினைச் சார்ந்த சுப்பிரமணிய தேசிகர் கூற, இவர்தம் பெயரால் முத்து வீரியம் செய்தார் என்பது விளங்குகிறது. இவற்றை ஆழ்ந்து நோக்கும்போது ஒருவரே இயற்றியனவாகக் காணப்படும் பாயிரங் கள் இரண்டும் ஒன்றற்கொன்று மாறுபடுவன போல் காணப்படு கின்றன. எனினும் இவ்விரண்டு பாயிரங்களையும் இணைத்து ஒருவாறு அமைதி கூறலாம். யாப்பதிகாரம் முத்துக்கிருட்டிணன் வேண்ட இயற்றப்பெற்றது. இதனைக் கண்ட சுப்பிரமணிய தேசிகர் ஐந்திலக்கணமும் செய்க எனப் பணித்தமையால் முத்து வீரியத்தில் ஏனைய நான்கு இலக்கணங்களும் தோன்றின என்று கூறலாம்.

இவர் திரிசிரபுரம் வண்டிக்காரத்தெருவில் இருந்தவர்; முத்து வீரியம் என்னும் இலக்கணநூல் முதலியன இவரால் செய்யப் பெற்று வழங்குகின்றன என்று டாக்டர் உ.வே.சா. அவர்கள் கூறுவர்[1].

காலம்

இவரைப்பற்றி இலக்கிய வரலாற்றில் எழுதும் கா.சு. பிள்ளை அவர்கள் பதினெட்டாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் குறிப்பிடுவர். அந்த 'முத்துவீரிய உபாத்தியாயர்' முத்து வீரியம் என்னும் யாப்புநூல் செய்தது எக்காலத்தது என்று விளங்கவில்லை என எழுதியுள்ளார்.[2] கி.வா. ஜகந்நாதன் அவர்கள் 19ஆம் நூற் றாண்டில் வாழ்ந்தவர் என்று கூறுகிறார். இவர் காலத்தை அறிந்து துணிதற்குச் சிறப்புப்பாயிரங்களையே சான்றாகக் கொள்ளவேண்டும்.

முத்துக்கிருட்டிணன் என்பாரைப் பற்றிய செய்திகள் எதுவும் இப்போது அறிய இயலவில்லை. மற்றொரு சிறப்புப் பாயிரத்தில் குறிக்கப்பெறும் சுப்பிரமணிய தேசிகர் என்பார் திருநெல்வேலி

யினைச் சார்ந்தவர் என்பதும், புலமையாளர் என்பதும் கூறப்படு கின்றன. இதனை நோக்கும்போது திருவாவடுதுறை ஆதீனத்தில் எழுந்தருளியிருந்த மேலகரம் சுபபிரமணிய தேசிகர் இவராக இருக்கலாமோ என்று தோன்றுகிறது. இவ்வுண்மை வேறொரு சான்றாலும் வலிவுபெறும். தேசிகர் காலத்தில் வாழ்ந்த மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளை அவர்கள் இயற்றிய அகிலாண்டநாயகிபிள்ளைத் தமிழ் 1842 இல் வெளிவந்தது. அதற்குச் சிறப்புப் பாயிரம் கொடுத்த பலருள் முத்துவீரியம் செய்த முத்துவீர உபாத்தியாயரும் ஒருவர். எனவே முத்துவீரிய ஆசிரியர், சுப்பிரமணியதேசிகர் மீனாட்சி சுந்தரம் பிள்ளை முதலியோர் காலத்தவர் என்பது பெறப்படும். இதனால் இவர் காலம் கி.பி. 19ஆம் நூற்றாண்டாகும் என்பர்.[3]

## நூல் அமைப்பு

இந்நூல், ஆசிரியர் பெயரால் முத்துவீரியம் என வழங்கப்படு கின்றது. இவ்வாறு வழங்குதல் உண்டு என்பதனை அகத்தியம், தொல்காப்பியம் என அமைந்த பெயர்களால் அறியலாம். இந் நூல் எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்னும் ஐந்திலக் கணமும் உடையது. பொருளிலக்கணத்தில் தொல்காப்பியம் போல, அகப்பொருளுக்கும் புறப்பொருளுக்கும் இலக்கணம் அமைக்காமல் அகப்பொருளுக்கே இலக்கணம் கூறிச் செல்கின் றார். இந்நூலின் பெரும் பிரிவு, நூற்பாவின் தொகை முதலிய வற்றைப் பட்டியலில் காணலாம்.

அ. எழுத்ததிகாரம்

1. எழுத்தியல் நூற்பா - 114
2. மொழியியல் நூற்பா - 45
3. புணரியல் நூற்பா - 298

457

ஆ. சொல்லதிகாரம்

| | | |
|---|---|---|
| தற்சிறப்புப் பாயிர நூற்பா | – | 1 |
| 1. பெயரியல் நூற்பா | – | 136 |
| 2. வினையியல் நூற்பா | - | 48 |
| 3. ஒழிபியல் நூற்பா | - | 126 |
| | | 311 |

இ. பொருளதிகாரம்

| | | |
|---|---|---|
| 1. அகவொழுக்கவியல் நூற்பா | - | 60 |
| 2. களவொழுக்கவியல் நூற்பா | - | 24 |
| 3. கற்பொழுக்கவியல் நூற்பா | - | 8 |
| | | 92 |

ஈ. யாப்பதிகாரம்

| | | |
|---|---|---|
| தற்சிறப்புப் பாயிர நூற்பா | – | 1 |
| 1. உறுப்பியல் நூற்பா | - | 38 |
| 2. செய்யுளியல் நூற்பா | - | 61 |
| 3. ஒழிபியல் நூற்பா | - | 167 |
| | | 267 |

உ. அணியதிகாரம்

| | | |
|---|---|---|
| 1. சொல்லணியியல் நூற்பா | - | 24 |
| 2. பொருளணியியல் நூற்பா | - | 104 |
| 3. செய்யுளணியியல் நூற்பா | - | 31 |
| | | 159 |

மேற்கண்ட பட்டியலால் ஒவ்வோரதிகாரமும் மூன்று மூன்று உட்பிரிவுகளைக் கொண்டிருப்பது விளங்கும். இந்நூலில் அமைந்த மொத்த நூற்பாக்கள் 1286 ஆகும். ஐந்திலக்கணமும் அடங்கிய முழுநூலில் யாப்பதிகாரத்திற்குரிய நூற்பா 267 ஆகும். யாப்பதிகாரம் மட்டும் வெளிவந்த நூலில் அவ்வதிகாரத்திற்கு உரிய நூற்பா 124 ஆகும். (உறுப்பியல் 38, செய்யுளியல் 58, ஒழிபியல் 28) இதைக் கண்ணுறும் போது யாப்பதிகாரத்திற்குப் பின் சில நூற்பாக்களை ஆசிரியர் சேர்த்தும், பழைய நூற்பாக்களை மாற்றியும் முழு நூலில் உள்ள யாப்பதிகாரத்தை உருவாக்கி யிருத்தல் வேண்டும். இந்நூலின் நூற்பாக்கள் ஆசிரியப்பாவால் அமைந்தன. சில இடங்களில் உரைநடை போலவும் நூற்பாக்கள் காணப்படுகின்றன.

நூலின் தன்மை

இந்நூலில் உள்ள பல நூற்பாக்கள் தொல்காப்பியத் திலிருந்தும், சில நூற்பாக்கள் நன்னூல், யாப்பருங்கலம், காரிகை, தண்டியலங்காரம், நம்பியகப் பொருள், திருக்கோவையார் கிளவிக்கொத்து முதலியவற்றிலிருந்தும் ஆசிரிய வசனமாக எடுத்தாளப் பெற்றிருக்கின்றன. முத்துவீரியச் சொல்லதிகார நூற்பாக்கள் பெரும்பாலன, தொல்காப்பியச் சொல்லதிகார நூற்பாக்களேயாகும். யாப்பதிகாரத்தில் உள்ள நூற்பாக்கள் பெரும்பாலும் யாப்பருங்கலத்தினையும் காரிகையினையும் தழுவி உள்ளன. மேலும் யாப்பதிகாரத்தில் காட்டப்பெறும் உதாரணச் செய்யுட்களும் காரிகையில் உள்ளனவேயாம். இவ்வாறே பொருளதிகாரத்தில் காட்டப்பெறும் பாக்கள் அனைத்தும் திருக்கோவையாரின் பாடல்களாகவே காட்சி தருகின்றன.

யாப்பதிகாரத்தில் உள்ள நூற்பா அமைப்பு, விரித்துப் பேசும் பாங்குடையது. காரிகையில் ஒரு காரிகையில் உணர்த்தப்படும் இலக்கணம், முத்துவீரியத்தில் ஐந்து சூத்திரங்களால் உணர்த்தப் படுகின்றது. தொடைபற்றிய இலக்கணத்தைக் காரிகையாசிரியர் ஒருகாரிகையில் உணர்த்த இவர் 15 நூற்பாக்கள் இயற்றுகிறார்.

எழுத்ததிகார மொழியியல், நன்னூல் பதவியல் போல அமைந்துள்ளது. வீரசோழியம்போல வடமொழி விதிகளை இங்குக்

கூறுகிறார். புணரியலில் உயிரீற்றுப்புணர்ச்சி மெய்யீற்றுப் புணர்ச்சி ஆகிய இரண்டினையும் கூறுகின்றார். இங்கு வீரசோழி யத்தினைப் பின்பற்றி ழகரத்திற்கு விதி கூறியுள்ளார்.

''தநவரின் டணவா மென்மனார் புலவர்''4

என்று தகரம் வரின் டகரமாகவும். நகரம் வரின் ணகரமாகவும் திரியும் என்பர். எ.டு. திகழ்-தசக்கரம். திகடசக்கரம்; சோழ-நாடு-சோணாடு. இவ்விதி தொல்காப்பியம், நன்னூல் ஆகிய இரு நூல்களிலும் இல்லை. கந்தபுராணத்தில் இதற்கேற்ற எடுத்துக் காட்டு உள்ளது. அதுவருமாறு:-

''திகட சக்கரச் செம்முக மைந்துளான்
சகட சக்கரத் தாமரை நாயகன்
அகட சக்கர வின்மணி யாவுறை
விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்''5

இவ்விதிக்கு மூலமாயுள்ள வீரசோழியம் கூறும் நூற்பா வருமாறு:-

''நான்கொடு முன்றொன்ப தாமுயி ரின்பின்பு நவ்வருமேல்
ஏன்ற ருகாரம தாகும்; பதினைந்தொடு எண்ணி ரண்டாய்த்
தோன்றுடற் பின்னர்த் தகரம் வரினிரண்டுந் தொடர்பால்
ஆன்றவைந் தாமுடல் ஆம்; முன்பி லொற்றுக் கழிவு
முண்டே''6

ழகரமெய்யின்முன் வரும் நகர தகரங்கள் ளகரமெய்யின் முன் திரிதல் போல முறையே ணகரமாகவும், டகரமாகவுந் திரிதற்கு விதிகூறியது இந்நூற்குத் தனிச்சிறப்பாகும். இவற்றிற்கு விதிகள் வேறு நூல்களில் கூறப்பட்டில7 என்று வீரசோழியத்தின் உயர்வைப் பேசுவர். இதுபோல் முத்துவீரிய ஆசிரியரும் நினைத்துத் தான் தொல்காப்பிய நெறியில் செல்பவர் மாறாக இவ்விதி கூறியுள்ளார் போலும்.

சொல்லதிகாரப் பெயரியலில் வேற்றுமைகளை அடக்கி விதி செய்கின்றார். ஒழிபியலில் இடைச்சொல் உரிச்சொல் பற்றியும் தொல்காப்பியச் சொல்லதிகாரம் கிளவியாக்கம், எச்சவியல் பற்றியும் கூறுகின்றார். யாப்பதிகார ஒழிபியலில் பிரபந்த இலக்கணங்களைப் பாட்டியல் போலப் பகர்கின்றார். இங்கு 89 பிரபந்தங்களைச் சுட்டுகிறார். இப்பகுதியில் மெய்க்கீர்த்தி மாலை, அரசன் விருத்தம், நாற்பது, பெயர் நேரிசை முதலிய வற்றின் இலக்கணம் கூறப்பட்டுள்ளது. அணியதிகாரம் சொல் லணியியல், பொருளணியியல், செய்யுளணியியல் எனத் தலை கீழாக மாறியமைந்துள்ளது. சொல்லணியியலில் 14 வகையான சொல்லணிகளைப் பற்றிக் கூறியுள்ளார்.

இந் நூலாசிரியர் சில இடங்களில் நிகண்டு ஆசிரியர்கள் போல நூற்பா யாக்கின்றார். எடுத்துக்காட்டாக

''இரேகை வரி பொறி எழுத்தின் பெயரே''[8]

''அச்சு ஆவி சுரம் பூதமாம் உயிரென்ப''[9]

''குறுமை இரச்சுவம் குறிலெனப் படுமே''[10]

என்ற நூற்பாக்களைக் காட்டலாம். இவ்வாறு கூறுதல் இலக்கணக் குறியீடுகளில் ஒன்றற்கே உள்ள பல பெயர்களை உணர்தற்கு வாய்ப்பாக இருக்கின்றது. இலக்கணத்தில் இத்தகைய புதிய முறையினைத் தொகுத்து அறியும் முறையினை இந்நூலில் காணலாம். இம்முறை பேரகத்தியத்திரட்டு என்னும் நூலினைப் பின்பற்றி அமைந்துள்ளது என்று கூறுவர்.[11] இலக்கணக் கலைச் சொற்களைக் கூறுமிடத்து நிகண்டின் முறையைப் பின்பற்றி யுள்ளார் என்று விளம்புவர்.[12]

உரையாசிரியர்

இந்நூலின் உரையாசிரியர் திருப்பாற்கடல் நாதன் கவிராயர் என்பவர். இவரே இந்நூற் சிறப்புப் பாயிரங்கள் இரண்டையும் இயற்றியவர். இவரது உரைப்போக்கைப் படிக்கும்போது, இவர் சங்கர நமச்சிவாயர், திருக்கோவையாருரையாசிரியர், தண்டி யலங்கார உரையாசிரியர் முதலியோரைப் பின்பற்றி எழுதுகிறார் என்று கூறலாம்.

சார்பெழுத்து

முதல் எழுத்து சார்பெழுத்து என்ற பாகுபாட்டை நன்னூல் தான் முதன் முதலில் வெளிப்படையாகக் கூறுகின்றது. தொல் காப்பிய முதற் சூத்திரத்திலுள்ள 'சார்ந்து வரல் மரபின் மூன்றலங் கடையே' என்ற சொற்றொடரை வைத்துத்தான், அது முதல் எழுத்து சார்பெழுதது எனக் கொண்டதாகக் கருதுகின்றோம். சார்பெழுத்துக்கள் மூன்று எனத் தொல்காப்பியமும், ஐந்து என வீரசோழியமும், ஒன்பது என நேமிநாதமும், பத்து என நன்னூலும், ஒன்பது என இலக்கண விளக்கமும் தொன்னூல் விளக்கமும் கூற உயிர்மெய், ஆய்தம் என இரண்டு என்று முத்து வீரியம் கூறுகின்றது. முத்துவீரியம் கூறிய உயிர்மெய்யைச் சார்பெழுத்தாகக் கூறும் முன் நூல்கள் நேமிநாதம், நன்னூல், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகிய நான்கு ஆகும். ஆய்தத்தைச் சார்பெழுத்தாகக் கூறும் முன் நூல்கள் தொல்காப்பியம், நன்னூல், இலக்கணவிளக்கம், தொன்னூல் விளக்கம் ஆகிய நான்கு ஆகும். சார்பெழுத்துக்களின் எண்ணிக் கையில் குறைந்த எண்ணைக் குறிப்பது முத்து வீரியம் ஒன்றே யாகும்.

> ''சார்புயிர் மெய்தனி நிலையிரு பாலன''[13]
>
> ''புல்லல் சார்தல் புணர்தல் சார்பெனவே''[14]

என்று முத்துவீரியம் சார்பெழுத்துக்களைக் கூறும். உயிர்மெய் உயிரும் மெய்யும் கூடிப்பிறத்தலானும், ஆய்தம் ஒரு மொழிக் கண்ணும் தொடர் மொழிக்கண்ணும் விதித்த முதல் எழுத்துக்கள் இருமருங்தும் நின்றெழுப்ப இருசிறகெழுப்ப எழும் உடலது போல் இடையெழுந்து ஒலிப்பதன்றி ஒருவாற்றானும் முதலாகவோ அன்றி ஈறாகவோ வரும் தன்மையதன் றாகலானும் இவை யிரண்டும் சார்பெழுத்தாயின என்பர்.[15]

சங்கரநமச்சிவாயர் (17ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி) சார் பெழுத்தின் வகை கூறும் நன்னூல் சூத்திரத்திற்குத் (60) தரும் விளக்கத்தை ஒட்டியே முத்துவீரிய ஆசிரியர் சார்பெழுத்து என்பது உயிர்மெய்யும் ஆய்தமும் என்று கொண்டிருக்க வேண்டும்.

முத்துவீரியர் கருத்துப்படித் தமிழ் ஒலிகளை எழுத்துக்கள், அல் எழுத்துக்கள் என்று பிரிக்கலாம். எழுத்துக்கள் என்ற தலைப்பில், உயிரும் மெய்யும் முதல எழுத்துக்களாகவும், உயிர்மெய்யும் ஆய்தமும் சார்பெழுத்துக்களாகவும் கொள்ளப்படும். அல் எழுத்துக்கள் என்ற தலைப்பில் குற்றியலுகரம், குற்றியலிகரம், அளபெடை என்பன போன்றவை கொள்ளப்படும் என்று கூறுவர்.[16]

முத்துவீரியர் வரிவடிவம் உடைய எழுத்துக்களை மட்டுமே எழுத்துக்கள் என்று கருதியும் இருக்கலாம். பொதுவாகச் சொன்னால் 'எழுத்துக்கள்' என்பது தனிவரிவடிவம் உடையதாய், வரும் இடம் கட்டுப்பாடு இல்லாமலும் விகாரம் இல்லாமலும் இருப்பது. 'அல்எழுத்து' தனிவரிவடிவம் இல்லாததாய், எழுத்தின் விகாரமாய் வருபவை. எனவே எழுத்துக்களை ஒலியனவாகவும், அல்எழுத்துக்களை மாற்றொலியாகவும் கொள்ளலாம் என்பர்.[17]

இவற்றை நுணுகிப்பார்க்கும்போது முத்துவீரியரின் சார் பெழுத்துக் கொள்கை புதியதாக, மற்ற இலக்கணஆசிரியர்களின் கருத்துக்களினின்றும் மாறுபட்டதாக இருக்கின்றது. அதாவது (1) சார்பெழுத்துக்கு வரிவடிவம் இருக்க வேண்டும். (2) பிற எழுத்துக்களின் கூட்டாகவோ, சார்ந்து வரும் தன்மையுடையன வாகவோ இருத்தல் வேண்டும். இவ்விரண்டு தன்மைகளையும் ஒருசேர உடையனவே சார்பெழுத்துக்கள் என்பது அவருடைய தனிக் கொள்கையாகும். இதனால் இவருடைய புதிய சிந்தனை நமக்குப் புலப்படுகின்றது.

அளபெடை

அளபெடை ஓசை நிறைவுக்காக வருவது. அது உயிர் அளபெடை, ஒற்றளபெடை என இருவகைப்படும். இன்னிசை அளபெடை, சொல்லிசை அளபெடை என்ற நிலையிலும் உரைப்ப துண்டு. ஆனால் முத்துவீரியம் அளபெடை எட்டுவகைப்படும் என்று கூறுவது மிகவும் புதிய செய்தியாகும்.

"அதுதான் இயற்கை செயற்கை இன்னிசை சொல்லிசை நெடில் குறில் ஒற்றளபு எழுத்துப்பேறுஅளபு எண்வகைப்படும் என்மனார் புலவர்[18]" என்று கூறுவர். அளபெடை எட்டாவன:-

1. அழைத்தல், விலைகூறல், புலம்பல் - எழுத்துச் செயற்கை இன்றிப் பிறந்தது; இயற்கை அளபெடை

2. செய்யுளில் சீர், தளை......கெட்டவிடத்துப் புலவன் கொள்ளு தல் - செயற்கை அளபெடை

3. கெடுப்பதூஉம் (குறள். 15) - குற்றுகரம் அளபெடுத்த இன்னிசை அளபெடை

4. தளைஇ-ஐகாரக்குறுக்கம் அளபெடுத்த சொல்லிசை அளபெடை

5. ஆஅ-நெடில் அளபெடை

6. மணீஇ- குற்றெழுத்து நெட்டெழுத்தாகி அளபெடுத்த குறில் அளபெடை

7. சிந்ந்து - ஒற்றளபெடை

8. சந்திரனை அராஅப் பற்றிற்று - விகாரத்தெழுந்த எழுத்துப் பேறு அளபெடை

முத்துவீரியர் எட்டுவகையாகப் பிரித்ததன் நுட்பம் குறிப்பிடத் தக்கது. இயற்கையளபெடை என்பது அளபெடையை அடிப்படை வடிவமாக உடையது எனலாம். ஏனையவை பிற எழுத்துக்கள் மாறி அளபெடையாக வந்தவை. அடிப்படை வடிவத்தில் நெடி லாக இருந்து அளபெடையாக வந்தவை நெடில் அளபெடை என்றும் குறில் அளபெடை என்பது குறில் அடிப்படை வடிவத்தில் இருந்து அளபெடையாக மாறியது என்றும் கூறலாம்.

அளபெடை பற்றி விரிவாகப் பேசுவது இந்நூலேயாகும். அளபெடைக்கு இந்த ஆசிரியர் பெயர் வைத்த முறை, மொழி யையும் உலகியலையும் உற்று நோக்கி உணரும் அவருடைய திறனைக்காட்டும். காட்டாக இயற்கை அளபெடையைக் கூறலாம். அழைப்பவர், விலைகூறுபவர் இயல்பாக எழுத்தின் மாத்திரையை நீட்டிக் கூறுவர். நீட்டுகிறோம் என்ற உணர்வு இல்லாமலேயே நீட்டுவர். ஆதலால் இதற்கு இயற்கை அளபெடை என்று கூறுவர். சொல்லாலேயே அந்த அளபெடை எளிதாகப்

பொருள் விளங்குகிறது. இதுபோல் ஒவ்வொரு அளபெடைக்கும் இவர் பெயர் வைத்த திறம் புதுமையும் பொலிவும் உடைத்து. ஆதலால் அளபெடை பற்றி இவருக்குத் தனிக்கொள்கை உண்டு என அறிகிறோம்.

உயிரளபெடையில் மற்ற இலக்கண ஆசிரியர்கள் போல எந்தெந்த எழுத்துக்கள் நீண்டு ஒலிக்கும் என்பதைக் கூறுகிறார். ஒற்றளபெடையில் எந்தெந்த ஒற்றுக்கள் அளபெடுக்கும் என்பதைத் தொல்காப்பியர் பேசாது இருந்தாலும் பிற்காலத்தார் அவற்றைக் கூறுகின்றனர். நன்னூல் சூத்திரத்தில் கூறப்பட்டுள்ள பத்து ஒற்றுக்களும் ஆய்தமும் அளபெடுக்கும் என்பதை அதற்குப் பின்பு வந்த நூல்கள் எல்லாம் கூறுகின்றன. ஆனால் முத்து வீரியம் எழுத்துக்களைப் பற்றிக் கூறவேயில்லை. இது ஏன் என்று புலப்பட வில்லை. தொல்காப்பியர் கூறாததால் இவரும் கூறாது விட்டிருப் பாரோ என்று எண்ணத் தோன்றுகின்றது.

மாத்திரையின் கால், அரை, முக்காலுக்கும் வரையறை கூறி யிருப்பது புதிய நுண்மையான முறையாகும்.

''உன்னல் காலே ஊன்றல் அரையே
முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே[19]''

என்பது அந் நூற்பாவாகும். அன்றியும் இவ்வியலில் ஆசிரியர் செய்திருக்கும் மற்றொரு புதுமை, சிற்சில பெயர்களுக்கு மறுபெயர் கூறியிருப்பதாகும்.

''அச்சாவி சுரம்பூத மாமுயி ரென்ப[20]''

''நெடுமையுந் தீர்க்கமும் நெட்டுயி ராகும்[21]''

''அளபும் புலுதமு மளபெடைப் பெயரே[22]''

''சங்கம் புணர்ச்சி சையோக மயக்கம்
புல்லல் கலத்தலும் பொருளொன் றேயாம்[23]''

ஆகியவற்றைப் பார்க்கும்போது மறுபெயர்களாக வடமொழிப் பெயர் கூறியிருப்பது அவருடைய வடமொழிப்பயிற்சியையும் அக்காலப் போக்கையும் வீரசோழிய நூற்பயிற்சியையும் காட்டும்.

மொழியியலில் ஓரெழுத்தொரு மொழியாகும் எழுத்துக்களைக் கூறிப் பின் மொழியின் வகைகளைக் கூறி அதன்பின் வடமொழி ஆக்கமே மிகுதியும் கூறுகிறார். வடமொழிச் சொற்கள் தமிழில் வரும்போது எவ்வெத்திரிபுபெற்று வரும் என்பதையே விரிவாகப் பேசுகிறார். மொழியைத் தனிமொழி, இணைமொழி, துணை மொழி, பொதுமொழி, தணமொழி, கணமொழி, கலப்புமொழி என எழுவகைப்படுத்தியிருப்பதும் சொற்களைச் சங்கதம், பாகதம், சதுக்கிரகம், அவப்பிரபஞ்சனம் எனப் பாகுபாடு செய்திருப்பதும் சந்தியைத் தீர்க்கசந்தி, குணசந்தி, விருத்திசந்தி எனப் பாகுபாடு செய்திருப்பதும் புதிய செய்திகளாகும்.

புணரியலில் தொல்காப்பியத்தைப் பெரும்பான்மையும் தழுவிக் கருத்துக்களைக் கூறியுள்ளார். 'மான்' என்னும் சாரியையை இவர் பதிதாகக் கொண்டுள்ளதும், ''கோமா முன்வரின் யகரமும் குதிக்கும்[24]'' என்று கோ, மா என்ற சொற்களின்முன் உயிர்வரின் வகரமேயன்றி யகரமும் உடம்படுமெய்யாகவரும் எனக் கூறியிருப் பதும் புதியதும் பயனுள்ளதும் ஆகும்.

சொல்லதிகாரத்தில் தொல்காப்பியச் சொல்லதிகாரக் கருத்துக் களைப் பெரும்பான்மை தழுவியும் நன்னூலைச் சிறுபான்மை தழுவியும் கூறியுள்ளார் இவ்வாசிரியர்.

பொருளதிகாரத்தில் அகவொழுக்கவியலில் கைக்கிளை முத லாகப் பெருந்திணை இறுதியாக ஏழுதிணைகளையும் விளக்கி முதல் கரு உரிப்பொருள்களைக் கூறுகிறார். ஐந்திலக்கண நூல்களையும் கூறும் இலக்கண நூல்களில் புறத்திணை பற்றி விரித்துரைப்பது தொல்காப்பியமும் இலக்கண விளக்கமுமேயாகும். வீரசோழியம், தொன்னூல் விளக்கம், முத்துவீரியம் ஆகிய இம்மூன்று நூல் களிலும் புறத்திணைபற்றிய விரிவான செய்திகள் இல்லை. இந் நூலில் புறத்திணை எட்டைப்பற்றியும் எட்டு நூற்பாக்கள் இருத் தலன்றி வேறு துறைகளோ வேறுசெய்திகளோ இல்லை.

களவொழுக்கவியல் கற்பொழுக்கவியல் ஆகிய இவ்விரு இயல் களும் திருக்கோவையாருக்குப் பேராசிரியர் எழுதிய உரைச் சூத்திரங்களைத் தழுவி அமைந்துள்ளன. திருக்கோவையாருக்கு இலக்கணமாய் இது அமைந்துள்ளது.

யாப்பதிகாரம் தொல்காப்பியச் செய்யுளியலையும் யாப்பருங் கலக்காரிகையையும் தழுவி அமைந்துள்ளது. பாட்டியல் இலக் கணமும் இருக்கின்றது. நான்கு பாக்களுக்குரிய நாள், கிரகம் முதலியனவும் கூறப்பட்டுள்ளன.

அணியதிகாரத்தில் தண்டியலங்கார ஆசிரியர் கூறிய இயல் முறை தலைகீழாக மாறியுள்ளது. மடக்கின் வகை விரிவாகவும் சித்திரக்கவிகளின் அமைப்புச் சுருக்கமாகவும் கூறப்பட்டுள்ளன. 58 அணிகள் விளக்கப்பட்டுள்ளன.

செய்யுளணியியலில் தொகைநிலை, குளகம், முத்தகம், தொடர்நிலை ஆகிய நால்வகைச் செய்யுட்களினியல்பும் வைதர்ப் பர் விரும்பும் பத்துவகை நெறிகளும் எண்வகைப் பொருள் கோள்களதியல்பும் பிரிபொருட்சொற்றொடர் வழுவாமாறும் அஃது அமைதியாமாறும் கூறப்பட்டுள்ளன.

இம்முறையில் முத்துவீரியம் பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையும் நிலவிய வழக்கையும் செய்யுளையும் இலக்கண நூல் களையும் ஆய்ந்து ஏற்பன ஏற்றுத் தள்ளுவன தள்ளி நல்ல இலக் கண நூலாக முத்துவீரிய உபாத்தியாயரால் இயற்றப்பட்டுள்ளது. இந்நூலைக் கற்று நாம் நல்ல பயனும் மகிழ்ச்சியும் அடை வோமாக,

1. உ.வே.சா. மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் சரித்திரம், பக். 16,17
2. கா.சு. பிள்ளை. இலக்கியவரலாறு, ப. 438.
3. புலவர் சோம. இளவரசு. இலக்கணவரலாறு, ப. 213.
4. முத்துவீரியம். புணரியல், நூ. 370.
5. கந்தபுராணம். விநாயர்காப்பு
6. வீரசோழியம். சந்திப்படலம், நூ. 15
7. வீரசோழியம். மூகவுரை, ப. 8
8. முத்துவீரியம். எழுத்தியல், ப. 3
9. முத்துவீரியம். எழுத்தியல், நூ. 7
10. முத்துவீரியம். எழுத்தியல், நூ. 9
11. புலவர் சோம. இளவரசு. இலக்கணவரலாறு, ப. 217

12. டாக்டர் ச.வே. சுப்பிரமணியன். இலக்கணத்தொகை எழுத்து, முன்னுரை, ப. 9
13. முத்துவீரியம். எழுத்தியல், நூ. 22
14. முத்துவீரியம். எழுத்தியல், நூ. 23
15. கு. சுந்தரமூர்த்தி. முத்துவீரியம், நூ. 22 விளக்கவுரை.
16. டாக்டர் செ.வை. சண்முகம். எழுத்திலக்கணக்கோட்பாடு ப. 135
17. டாக்டர் செ.வை. சண்முகம். எழுத்திலக்கணக்கோட்பாடு பக். 136, 137
18. முத்துவீரியம். எழுத்தியல், நூ. 32.
19. முத்துவீரியம். எழுத்தியல், நூ. 98
20. முத்துவீரியம். எழுத்தியல், நூ. 7
21. முத்துவீரியம். எழுத்தியல், நூ. 11
22. முத்துவீரியம். எழுத்தியல், நூ. 33
23. முத்துவீரியம். எழுத்தியல், நூ. 66
24. முத்துவீரியம். புணரியல், நூ. 184.

# தமிழ்நூல்

டாக்டர் ஆறு. அழகப்பன்

## நூல் அறிமுகம்

'தமிழ் நூல்' என்ற பெயருடன் தமிழ்ப் பெரும் புலவர் த. சரவணத் தமிழனார் அவர்கள் ஒரு பொதுமுறைத் தமிழ் இலக்கண நூலை எழுதியிருக்கின்றார்.

தமிழ் இலக்கணம் முதன் முதலில் அகத்தியரால் வகுக்கப் பட்ட தென்பர். அவரால் இயற்றப்பட்ட 'அகத்தியம்' நமக்குக் கிடைக்கவில்லை. அவர் மாணவர் எனக் கூறப்படும் தொல் காப்பியர் தந்த 'தொல்காப்பியம்' தான், தமிழரின் தனிப்பெரும் முதல் இலக்கண நூலாகத் தமிழுக்குக் கிடைத்துள்ளது. தொல் காப்பியம் எழுந்து பல நூற்றாண்டுகள் சென்றபின்னர் எழுந்தது அதன் வழிநூலாகிய 'நன்னூல்'. இது காலப் போக்கில் தொல் காப்பியருக்குப்பின் கி.பி. 12ஆம் நூற்றாண்டு வரை தமிழ் மொழியில் ஏற்பட்டுள்ள மாற்றங்களையும் வளர்ச்சிகளையும் இலக்கண இலக்கிய மரபுகளையும் தெளிவாக எடுத்துரைக் கின்றது.

நன்னூலார் காலம் கி.பி. 12 ஆம் நூற்றாண்டு என்பது ஆய்வாளர் துணிபு. அக்காலத்திற்குப் பின் கி. பி. 20ஆம் நூற்றாண்டு வரை தமிழ் எவ்வளவோ மாறுதலைப் பெற்றுள்ளது. அந்நியப் படையெடுப்பு, அயல்நாட்டார் குடியேற்றம், ஆட்சி மாற்றம் ஆகிய பலப்பல காரணங்களால் தமிழில் எண்ணற்ற சொற்கள் வந்து கலந்தன. தமிழ்ச் சொற்கள் மாற்றம் பெற்றன. தமிழிலக்கணத்தில் பிறமொழி மரபுகள் கலந்தன. மொழி அமைப்பில் ஆங்கிலக்கல்வி காரணமாகப் பல புதுமுறைகள் புகுந்தன. ஆயினும் நன்னூலாருக்குப் பின் பல நூற்றாண்டுகள் வரை ஏற்பட்ட இம்மாற்றங்களை வகுத்து உரைக்கும் இலக்கண

நூல் எழுதப்படவில்லை என்பது ஒரு குறையாகவே இருந்து வந்தது. இக் குறையைப் போக்குவதையே குறிக்கோளாகக் கொண்டு திரு. சரவணத் தமிழனார் 'தமிழ்நூல்' என்ற இலக்கண நூலை எழுதியிருக்கின்றார். 20ஆம் நூற்றாண்டுத் தமிழுக்கு இலக்கணம் இல்லை என்ற குறையை இந்நூல் நீக்குகின்றது. எனவே இந்நூலைத் தமிழறிஞர் கூடியுள்ள இப்பேரவையில் அறிமுகம் செய்கின்றோம்.

தொல்காப்பியத்தை முதல்நூலாகவும், நன்னூலை வழி நூலாகவும், தமிழ் நூலைச் சார்பு நூலாகவும் வைத்துப் பேசுகின்றார் இவ்வாசிரியர். தமது நூலின் முதல் நூற்பாவில்,

"தமிழ் மொழிக்கு வரிசையுற இலக்கணம் இயற்றிவந்தோரின் அடிச்சுவட்டில் மேற்சென்று, தொல்காப்பிய முதல் நூற்கும், வழிநூல் நன்னூற்கும் முடிபொருங்கொத்துப் பின்னே அமைந்த மாற்றங்கள் சுட்டி ஒருபுடைதழுவும் சார்புநூல் செய்வேன்"

என இவர் எழுதியிருப்பது குறிப்பிடத்தக்கது.

பழமையைத் தழுவிப் புதுமையைப் புகுத்தவேண்டுமிடங்களில் புகுத்தி நன்னூலைப் போன்றே நூற்பாக்களால் இந்நூலை அமைத்துத் தந்திருக்கின்றார் சரவணனார்.

இலக்கணவிளக்க நூலாசிரியரும் இலக்கணக் கொத்து நூலாசிரியரும் செய்ததைப் போலவே, இவ்வாசிரியர் தமது நூலுக்குத் தாமே உரை எழுதி இருப்பதால் மூலத்தின் உண்மைப் பொருள் இன்னதென மயக்கமறத் தெளிவாக உணரமுடிகின்றது. பல நூற்பாக்கள் இவ்வாறு உரை எழுதப்படாவிட்டால் குழப்பத்தை ஏற்படுத்தியிருக்கும். இவ்வாறு பாட்டும் உரையும் எழுதித் தமிழ் அன்னைக்குப் பணி புரிந்த இவர் தொண்டு பாராட்டத்தக்கது.

சில நல்ல புதுமைக் கருத்துக்களைத் துணிவோடு எடுத்துக் கூறிய இந்நூலாசிரியரை ஊக்குவித்து இவர் பணிக்கு ஆக்கம் கூட்டுவது தமிழ் அறிஞரின் கடமையாகும்.

தமிழ்நூல் பற்றிய சான்றோர் மதிப்புரை

இவ்விலக்கண நூல் தமிழ்ப் பேரறிஞர் பாராட்டுகட்கு உள்ளாகியுள்ளது.

தமிழ் மொழிக்கு ஒப்பிலக்கணம் கண்ட மொழி இயல் முனைவர் ஞா. தேவநேயப் பாவாணர் அவர்கள்,

''ஆசிரியர்...இக்கால மாணவர் தமிழைப் பிழையறப் பேசுவதற்கும், எழுதுதற்கும் இன்றியமையாத இலக்கணங்களையெல்லாம் 433 நூற்பாவாலும் அவற்றின் உரையாலும் விளக்கியிருக்கின்றார்''.

''சொற்களின் திரிவு முறைகளையும், மரூஉக்களின் மூலத்தையும் காட்டிலும் நிறுத்தக்குறி இலக்கணத்தை நூற்பாவில் அமைத்தலும் தமிழின் தூய்மையைப் போற்றலும் குலமத கட்சிச் சார்பின்றிப் புலமையைப் பாராட்டலும் இந்நூலின் சிறப்புக் கூறுகளாம்''

எனப் பாராட்டியிருக்கின்றார்கள்.

தென்மொழி ஆசிரியரான பாவலர்ஏறு பெருஞ்சித்திரனார்,

''மன்னிய புலவன் சரவணத் தமிழன்
தேவ நேயன் திருத்திய தெளிதமிழ்க்
கேவலன் தானென எடுத்துக்காட்டி
யாப்பில் தொடுத்த காப்புடைத் தமிழ்நூல்
புதுவரி வெடுப்பினும், புதுமொழி வழக்கினும்
எதுமுறை நிலைப்பென இறப்ப எண்ணா
ஒரிரு கொள்கை உரைத்தா னெனினும்
பாரவன் நூற்குப் பராவுக பயனே''

எனப் பாயிரம் தந்து சிறப்பித்துள்ளார்.

''அவர் தமிழ்நூல் என்ற பெயரில் பழைமையைப் போற்றுமிடத்தே போற்றிப் புதுமையைப் புகுத்துமிடத்தே புகுத்தி இலக்கண நூல் ஒன்றினை இயற்றியுள்ளார். அந்நூல் தமிழறிஞர்க்குப் பெருவிருந்தாகும். திருவாளர் த. சரவணத் தமிழனும் அவர்தம் சிறந்த தமிழ்த் தொண்டும் தமிழுலகில் நின்று நிலவுக''

என்பது பேராசிரியர் அடிகளாசிரியரின் போற்றுரை. இவ்வாறு பலரது பாராட்டுதலைப் பெற்றுள்ள சரவணத் தமிழனாரின் இலக்கணப் பணி நீடுநினையத் தக்கதாகும்.

நூலின் அமைப்பு

இந்நூலாசிரியர் இவ்விலக்கண நூலுக்குத் 'தமிழ்நூல்' என்றே பெயர் இட்டுள்ளார்.

நன்னூலைப் போலவே 'நூற்பாக்களால்' அமைந்து இலக்கண விதிகளை வகுத்துரைக்கின்றது தமிழ்நூல். 'நூல்' என்பது இலக்கணத்தைக் குறிப்பதாக ஆசிரியர் சுட்டிச் செல்கின்றார்.

இந்நூல் 433 நூற்பாக்களைக் கொண்டது

எழுத்தியல், சொல்லியல், உறுப்பியல், புணரியல், பொது வியல், ஒழிபியல், தொடரியல் என ஏழியல்களை உடையது.

முதல் நூற்பா பாயிரம் போல அமைந்துள்ளது. ஆயினும் பாயிரத்தால் பெறப்படும் ஆக்கியோன்பெயர் முதலாய எட்டனுள் 'வழி' ஒன்றுமட்டுமே இதன்கண் கூறப்பட்டுள்ளது. மற்றவை அதன் உரையால் விளக்கப்படுகின்றன. எழுத்து, சொல் என்ற இருவகை இலக்கணமே இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

படையல்பா, கடமைப்பா, கிழமைப்பா, நன்றிப்பா என்னும் நான்கு பாக்கள் நூலின் தொடக்கத்திலும், அடைவு என்னும் தலைப்பில் உள்ள பன்னிரண்டு பாக்கள் நூலின் இறுதியிலும் இடம் பெற்றுள்ளன.

எண்திரிபுப் படம், பலுக்கற் படம் என்பன தமிழ் எண்கள் எழுத்துக்கள் ஆகியவற்றில் காலப்போக்கில் ஏற்பட்ட திரிபைப் படங்கள் வாயிலாக விளக்குகின்றன.

மொத்தம் நானூற்று நாற்பத்தைந்து நூற்பாக்களையும் (433 + 12) அவற்றின் உரைகளையும் கொண்டுள்ள இந்நூல் 184 பக்கங்களில் அடங்கியுள்ளது.

## நூலின் சிறப்பியல்புகள்

இந்நூல் தனக்கெனச் சில தனிச்சிறப்புக்களைப் பெற்றுள்ளது.

1. கி.பி. 20ஆம் நூற்றாண்டில் நன்னூல் போன்று எழுதப் பட்டுள்ள தனி இலக்கண நூல் இது.
2. நன்னூலாருக்குப்பின் இக்காலம் வரை ஏற்பட்டுள்ள மொழி மாற்றங்களை எடுத்துரைப்பதால் இந்நூற் றாண்டின் இலக்கணக் கண்ணாடியாக விளங்குகின்றது.
3. நிறுத்தற்குறிகளை நூற்பாவில் அமைத்து எழுதப்பட்ட ஒரே இலக்கணநூல் எனக்கூறத் தகும் பெருமைக்குரியது.
4. இதுவரை எந்த இலக்கண ஆசிரியரும் கூறாத புதுமைக் கருத்துகள் பலவற்றைத் துணிவோடு எடுத்துரைக் கின்றது.
5. தமிழின் தூய்மையைப் பாட்டாலும் உரையாலும் வற்புறுத்துகின்றது.
6. தமிழ் எழுத்துக்களின் வரிவடிவு மாற்றத்தை எடுத்துக் காட்டுகின்றது
7. கட்சிச் சார்போ, குல மதச் சார்போ இல்லாமல் தம் கொள்கையை நிறுவிச் செல்கின்றது.
8. ஒவ்வொரு கருத்தையும் குழப்பத்திற்கிடனின்றி ஆணித் தரமாக அடித்துக் கூறித் தெளிவு படுத்திச் செல்கின்றது.
9. சிறப்பாக ஆங்கில மொழியமைப்பைத் தழுவித் தமிழில் வாக்கியங்களை வகைப்படுத்திக் கூறும் வகையில் இக் காலப் புதுமுறைக்கல்விபயிலும் மாணவர்க்கு வழிகாட்டி யாய் அமைந்துள்ளது.

## நூல் நுவலும் புது இலக்கணக் கருத்துக்கள்

பண்டைக்கால இலக்கணங்களாகத் தொல்காப்பியரும் நன்னூ லாரும் கூறிய பல கருத்துக்கள், நூலில் பெரும்பான்மையும் இடம் பெற்றிருக்கின்றன. பழமையான இலக்கணமரபு வழுவாமல் அவற்றை ஆசிரியர் கூறிச் செல்கின்றார்.

''முன்னோர் மொழி பொருளே யன்றி அவர் மொழியும்
பொன்னே போல் போற்றுவம்''

என்பதற்கிணங்க நூல் நெடுகிலும் தொல்காப்பிய நூற்பாக்களை அப்படியே எடுத்தமைத்துக் கொண்டிருக்கின்றார். அவற்றை விடுத்து, 20ஆம் நூற்றாண்டின் புதுமை வழக்குகளாக இவர் வகுத்துள்ள இலக்கணங்களை மட்டும் இங்குக் குறிப்போம்.

எழுத்துச் சீர்திருத்தம்

அச்சிடுதற்கும் தட்டெழுத்துப் பயிற்சிக்கும் எளிமையான வகையில் எழுத்துக்களைச் சுருக்கும் நோக்கத்தோடு இன்றைய தமிழக அரசு சில எழுத்துச் சீர்திருத்தங்களை அறிவித்துள்ளது. அவை பயன்தருவன என்பதைக் கருத்திற் கொண்டு இந்நூலாசிரியர்,

''ஆகா ரத்தின் கீழ்விலங்குக் குறி
ஞண ருஎன மூன்றிற் கேறிக்
குழப்பு வதிலும்அந் நான்கையும் மாற்றி
இடப்புறம் காலிடல் எளியநன் மாற்றமே'' நூற்பா:39

என வரையறுக்கின்றார்.

(எ.டு) ஞ-னா; ண-ணா., ரு-றா; ஆ-அா.

ஐ, ஔக்களின் எதிர்காலம்

எதிர்காலத்தில் அறிவு முதிர்போக்கில் எழுத்துச் சீர்திருத்தம் காரணமாக ஐ, ஔ என்னும் இரண்டெழுத்துக்களும் தமிழினின்றே ஒழிந்து போகும் என இவர் துணிந்து கூறுகின்றார். அப்படியே அவற்றில் தோன்றும் உயிர்மெய் முப்பத்தாறும் கூட அற்றுப் போகும் என்கின்றார்.

''எதிர்காலத்தின் முதிர் கோலத்தில்
ஐ ஔ என்னும் உயிரும் அதன்வழி
உயிர்மெய்யும் அற்றுப் போதல் ஒக்குமே'' -நூற்பா.41

**மாத்திரை**

மாத்திரை என்பது எழுத்துக்களை ஒலிக்கும், கால அளவு. ஓரளவிற்கு முன்னூலாசிரியர்கள் கண்ணிமை, கைந்நொடி அளவு கூறுவர். இவற்றை ஆசிரியர் மறுக்கவில்லை. எனினும் இக்கால அமைப்புக்கேற்ப,

''மாத்திரை என்பது எழுத்தொலி அளபு
மணிப்பொறி நொடி ஒன்று ஓரொலி அளவே''. நூற்.12

என்று கூறுவது, புதுவது புகுதல். உயிரும் மெய்யும் கூடும் போது மாத்திரை மிகாமல் அப்பொடு பெய்த உப்பே போலக் கலந் தொலிக்கும் என உவமை கூறுவர் பண்டைய உரையாசிரியர். இவர் 'சூலுற்ற மகளிரை ஒரு மகளாய் எண்ணுவது போலக் கொள்க' எனக் கூறுவது நயமான பகுதி.

**ஊம், ஆம், சரி.**

தமிழில் காலப் போக்கில் மக்கள் வாழ்க்கையில் எவ்வளவோ சொற்கள் வந்து வழங்கியுள்ளன. ஒருவர் கூறுவதைக் கேட்கும் போது எதிரில் உள்ளவர் 'ஊம்' போடுகிறார். ஒருவர் கருத்தை மறுக்கும் போது 'ஊகூம்' எனக் கூறுகின்றார். சம்மதத்தைத தெரிவிக்கும்போது 'சரி' என்று சொல்லுகின்றார். அல்லது 'ஆம்' என்கின்றார். இவை இது வரை எந்த இலக்கண நூலிலும் இடம் பெறவில்லை. இவற்றிற்கு,

''ஊமென் ஒலிக்குறிப்பு அசையொடு மேற்கொளல்''
-நூற். 141
''ஆமே இக்கால் உடன்பாடு உரையசை'' -நூற். 142
''சரியெனல் உரையசை ஏற்றுக் கோடல்'' -நூற். 143

என விதி வகுக்கின்றார்.

**ஆளன் - காரன்; ஆட்டி - காரி.**

உலகவழக்குச் சொற்கள் மிகப்பலவாகத் தமிழில் பெருகிவிட்டன. பால் விற்பவனைப் பால்காரன் எனவும், வீட்டுவேலை செய்யும் பெண்ணை 'வேலைக்காரி' எனவும் வழங்குகின்றோம். தேர்தலில்

நிற்பவனை 'வேட்பாளன்' என்ற புதுச்சொல்லால் சுட்டுகின்றோம். இவை போன்ற சொற்கள் சிலவற்றுக்கு விதி கூறியுள்ளார்.

''ஆளன் காரன் ஆண்பெயர் இறுதி
ஆட்டி காரி பெண்பெயர்க் கிறுதி
ஆளர் காரர் கள்ளொடு பலர் பால்
இய்யே இருதிணை ஒருமைக் குறுமே'' -நூற். 185

தொண்டு - தொண்பது

தொள்ளாயிரம், தொண்ணூறு என்னும் சொற்களுக்குப் பண்டைய இலக்கண ஆசிரியர்கள் புணர்ச்சி விதி கூறுவதை நாம் அறிவோம். அவர்கள் கூறும் முறைக்கு இவர் கூறும் கருத்து சற்று மாறுபடுகின்றது.

'தொண்டு' என்னும் சொல்லே பழங்காலத்தில் ஒன்பதைக் குறிப்பதற்கு வழங்கியது என்பது இவர் கருத்து. அதனை வலியுறுத்தி,

'தொண்டே ஒன்ப தாகுதல் தொன்மை' -நூற்.240

எனக்கூறி அவ்வடிப்படையில் விதிகளை வகுத்துச் செல்லுகின்றார்.

பன்னிரண்டு என்னும் எண்வடிவத்தை நோக்கினால் 'பான்' என்பது பத்திற்குரிய மற்றொரு சொல்லாய்ப் பழமையில் இருந்தது தெரியும் என்கின்றார். இவ் வகையில் தொல்காப்பியரையும் இவர் மறுத்துரைப்பது சிந்தனைக்குரியது.

''தொல்காப்பியமும் மருளுறக் கூறலின் (435) அதன் முந்து குமரிக்கண்டத் தமிழ் அழிவுச் சொல் இஃது எனலாம்''
-நூற்பா- 244-ன் உரை.

அம்மான்சேய்–அம்மாஞ்சி

'மரூஉ' என்னும் வழக்கிலக்கணம் பற்றிப் பழைய இலக்கண நூல்கள் தெளிவாக எடுத்துரைக்கின்றன. வழக்கின் இருவகையில்

'மரூஉ', இயல்பு வழக்கின் பாற்படும். சொல்சிதைந்து வழங்கு வதுதான் 'மரூஉ'. இவ்வாறு மருவி வழங்கும் போதும் 'உலகத் தார் பேச்சில் வரும் கொச்சை வழக்கு மரூஉச் சொற்களை இலக்கணப் புலவர்கள் 'மரூஉ' என ஏறறுக கொள்ளவில்லை. இவ்வகையில் அவர்கள் மிக உன்னிப்போடு இலக்கண விதிகளை வகுத்துச் சென்றனர். எடுத்துக்காட்டாக,

தஞ்சாவூர் - தஞ்சை
மலையமான்நாடு–மலாடு

போன்ற திரிபுகளைத்தான் 'மரூஉ' என அவர்கள் கொண்டனரே யன்றி,

வருகிறான் - வர்ரான்
கொண்டுவா - கொண்டா

என்பன போன்ற கொச்சை வழக்குகளை 'மரூஉ' என ஏற்றுக் கொள்ளவிலலை என்பது குறிப்பிடத்தக்கது.

அம்மான்சேய் - அம்மாஞ்சி
கைம்பெண்டாட்டி – கம்மனாட்டி

என்பன மரூஉவின் பாற்படும என இவர் கூறுவது எந்த அளவுக்குப் பொருந்தும் என்பது ஆய்வுக்குரியது.

ஒருவன்-ஒருவள்

நன்னூலார் ஒன்றென்னும் எண்ணடியாகப் பிறந்த ஆண்பாற் பெயரை ஒருவன் என்றும் பெண்பாற் பெயரை ஒருத்தி என்றுமே குறித்தார்.

''ஒருவன் ஒருத்தி பெயர்மேல் எண்ணில''

என்பது அவர் நூற்பா. இம் மரபு ஓரளவு மாறியுள்ளது. எனவே ஒருவனை-ஒருத்தன் என்பதும் ஒருத்தியை-ஒருவள் என்பதும் புதியன புகுதல். இவர் ஒருவள் என்ற சொல்லை ஏற்கின்றார்.

''ஒருவள் என்பது ஒருத்திக் கீடே'' - நூற். 309

**பாய்-கீய்**

தற்கால உலகவழக்குத் தமிழில் ஒரு குறிப்பிடத்தக்க சொற்பிரயோகத்தைக் காணலாம். நமக்கு வேண்டியவர் நம்வீட்டிற்கு வந்தால் நாம் வேலைக்காரனை 'நாற்காலி கீற்காலி எடுத்துப் போடு' என்கிறோம். படுப்பதற்குப் பாய் கீய் இருக்கிறதா ? என்று சில வேளைகளில் கேட்கிறோம்.

இவ்வாறு ஒருசொல்லை அடுத்துவரும் கீகாரச் சொற்களைப் பற்றித் தமிழ் மூதறிஞர் உ. வே. சாமிநாதய்யா அவர்கள் நல்லதொரு விளக்கம் தந்திருக்கிறார்கள். நாற்காலி கீற்காலி என்னும் சொல்வழக்கு, சிறந்த பொருள் நலம் உடையது. வந்தவருக்கு நாற்காலி போடு, நாற்காலி இலலாவிட்டால் அதைப்போன்ற 'ஸ்டூல்' மாதிரி ஏதாவது போடு என்ற பொருளில் தான் இச்சொற்றொடர் பயன்படுத்தப்பட்டு வருகிறது. 'பாய் கீய்' என்பதில் பாய் இருந்தால் போடு, பாய் இல்லாவிட்டால் அதைப்போன்ற ஏதாவது ஒன்றைப் (சமுக்காளம், விரிப்பு) போடு என்பதுதான் அதற்குப் பொருள். மற்றையவும் அன்ன. எனவே ஒருசொல்லோடு சேர்ந்துவரும் கீகார முதலெழுத்துச் சொற்கள் பொருளற்றன எனக் கொள்வதற்கில்லை. ஆனால் தமிழ் நூலாசிரியர்,

''கிகர உயிர்மெய் தவிர்சொல் வழக்கில்
கிகர முதலாய் எதிரொலிப் படல் வழு'' - நூற். 321

எனக் கூறி இவ்வழக்கை 'வழு' எனக் கூறுகின்றார். இக் கூற்றும் சிந்தனைக்குரியதே.

**ஆனால்-சும்மா**

ஆனால், சும்மா என்பன போன்ற சில சொற்கள் உலக வழக்கிலும் இலக்கிய வழக்கிலும் இடம் பெற்றுவிட்டன. இவற்றுக்கு இலக்கணம் கூறவேண்டியது முறைமை யல்லவா? இம்முறையை நூற்பா 331, 335 ஆகியவற்றில் இவர் அழகுற எடுத்துக் கூறுகின்றார். ஆயினால் என்பது ஆனால் என வந்தது,

''சும்மா எனுந்திரிபு இலவயம் வெறுமை
காலத் தடிக்கடி முதலிய பொருள்படும்'' - நூற். 335

சும்மா என்பது திரிபுச் சொல் என்பது இவர் கருத்து. ஆனால் எச்சொல்லின் திரிபு என எடுத்துக் காட்டப்படவில்லை. காட்டியிருந்தால் சிறப்பாக இருக்கும்.

முகவரி எழுத வேண்டிய முறைமை

நாம் கடிதத்தில் முகவரியை எழுதும் போது முதலில் பெறுபவரின் பெயர், வீட்டு எண், தெரு, ஊர், அஞ்சல், வட்டம், மாவட்டம் என்று இம்முறையில் தான் எழுதிவருகின்றோம். இதைத் தலைகீழாக மாற்றி எழுதவேண்டும் என்கிறார் இவர்.

''முகவரி முறைமையில் தமிழுக் கியைய
ஊர் தெரு பெயர் எனும் ஒழுங்கே நன்றாம்'' - நூற். 339

பெறல்:- தமிழ்நாடு,
தஞ்சாவூர் மாவட்டம்,
திருவாரூர்,
நடவாகனத் தெரு,
இயற்றமிழ்ப் பயிற்றகம்

என எழுத வேண்டும்.

''இக்கால வழக்கில் உள்ள முறைமைக்கு மாறாக இதனைக் கூறியது குழப்புவதற்கன்று. ஆங்கிலத் தொடர் அமைப்பிற் கியைய வழங்கும் இக்காலப் பெயர், தெரு, ஊர் முறையினும், தமிழ்த்தொடர் மரபு முறை அஞ்சலகப் பணிக்கும் பிறவற்றிற்கும் எளிதாதல் காண்க. மெய்ம்மைக்குறிப்பு (Promissory Note), ஒற்றி முதலியவற்றில் இம்முறைப்படி எழுதப்படுதல் காண்க' என இவர் குறிப்பது ஒப்பத்தக்கது.

அராபிய எண்கள்

இப்போது உலகம் முழுவதிலும் வழக்கில் உள்ள 1, 2, 3 முதலான எண்களை அராபிய எண்கள் எனக் கூறுவது வழக்கு. இவை அராபியாவிலிருந்து உலகம் முழுதும் பரவின போலும் என எண்ணிவிட வேண்டா. அவை முற்றிலும் தமிழுக்கே உரியன என அடித்துக் கூறிய முதல் இலக்கண ஆசிரியர் இவரே.

''வழக்கில் உள்ள அனைத்துல கெண்கள்
அரபிக் கொடையல; அருந்தமிழ் இருப்பே'' -
நூற். 342

நிறுத்தல் குறிகள்

கால்புள்ளி, அரைப்புள்ளி, முற்றுப்புள்ளி, வினாக்குறி, வியப்புக்குறி, அடைப்புக்குறி போன்றவை இக் காலத்தமிழில் பெரிதும் கையாளப்பட்டு வருகின்றன. ஆனால் இவற்றுக்கு நூற்பாவில் இலக்கணவிதி கூறிய நூல் எதுவும் இல்லை. இக் குறையை நீக்கி இவற்றுக்கு நூற்பா வடிவில் விதி வகுக்கின்றார் இவர்.

**சொற்றொடர் வகைகள்**

சொற்றொடர் எனப்படும் வாக்கியங்களை ஆங்கில நடையை ஒட்டித் தமிழிலும் தனிச் சொற்றொடர், கூட்டுச் சொற்றொடர், காப்புத் தொடர் எனப் பகுக்கும் முறை இக்காலத்தில் கையாளப் பட்டு வருகிறது. பாடத்திட்டங்களில் இவை இடம் பெற்றுள்ளன. எனவே இவற்றின் இன்றியமையாமையை உணர்ந்து இவற்றிற்கு விதி கூறும் நூற்பாக்களை இயற்றியுள்ளார். நேர் கூற்று - அயற் கூற்று இவற்றையும் பற்றிப் பேசுகின்றார். ஆங்கில மொழி யமைப்பில் உள்ள clause என்பதைக் 'கிளவியம்' என்ற தமிழ்ச் சொல்லால் குறிக்கினறார்.

முடிப்பு

இக்காலததில் தமிழ் மொழியில் வந்து வழங்கும் எல்லாச் சொற்களுக்கும், எல்லாமரபுகட்கும் புதுமை வழக்குகளுக்கும் இந் நூல இலக்கணம் வகுத்துரைக்கின்றது எனறு கூறமுடியாது. ஆனால், கூடியவரை இக்காலத்தில் தோன்றியுள்ள புதியசொல் வழக்குகள் பலவற்றுக்கு இந்நூல் இலக்கணம் கூற முயன்றுள்ளது எனபது மறுக்க முடியாத உணமை. இதில் கூறப்படும் கருத்துகள் அனைத்தும் முடிவானவை எனக் கூறிவிடமுடியாது. ஆனால் சொல்லும் கருததைத் துணிவாக – தெளிவாக – குழப்பமின்றி இவர் கூறியிருப்பது பாராட்டத்தக்கது.

இம்முயற்சியை வரவேற்று இதுபோன்ற பணிகள் தொடர்ந்து நடைபெற ஆக்கமும் ஊக்கமும் தருவது அறிஞர் பெருமக்களின் தலையாய கடமையாகும்.

# யாப்புநூல்

த. சரவணத்தமிழன்

இந்த நூற்றாண்டிற்கேற்பச் செந்தமிழ் மொழியின் ஐந்திலக் கணத்தை மாற்றியமைத்தல் வேண்டும் என்னும் நோக்கில் எழுத்து சொல் இரண்டையும் தமிழ் நூல் என்று பெயரிட்டுப் பத்தாண்டிற்கு முன் இயற்றினேம். முனைவர் முதலாண்டு M.Phil) ஆய்விற்குச் சென்னைப் பல்கலைக்கழகம் ஏற்றுக் கொண்டது. இக்கால இலக்கணம் ஐந்தோடு இசை-நாட்டிய நூல், நாடக-திரைப்படநூல், ஓவிய–சிற்பநூல் என எட்டாக்கும் எண்ணமுண்டு.

பத்தாண்டு படர்ந்த சிந்தனையைத் தேக்கி யாப்பு நூல் எழுதினேம். தமிழ் நாட்டரசின் (1982) முதல் பரிசு கிடைத்தது. யாப்பு நூலும் தமிழ் நூலும் 15 ஆண்டுகளாக மாலை நேரத்தில் 25 நண்பர்களுக்குப் புலவர் வகுப்பு நடத்தியதன் பயனே. பாடஞ் சொல்லும் போது எழுந்த ஐயமும புதுமையும் எம்மைத் தூண்டின.

உறுப்பியல்

நான்கு சீரடிகட்கு மட்டும் இணை, பொழிப்பு, ஒரூஉ, கூழை, முற்று, மேற்கதுவாய், கீழ்க்கதுவாய் எனக் கூறிய தொடை இலக்கணத்தை மறி என்னும் முன் அடையால் எட்டுச்சீர்க்கும் 'உறுதவ கூர் நனி' என்பவற்றால் 20 சீர்க்கும் நீட்டினேம். பாட்டியல் ஆய்வாளர் – அரங்கராசன் அவர்கள் மூன்று (முற்று) என அச்சுப்பிழை கொண்டு குறை கூறினார். அது பிழையன்று. அச்சுப் பிழையே

அளபெடைத் தொடையும் முரண்டொடையும் வழக்கிழந்தமையின் ஒழித்தாம்.

தளை உண்மையில் ஏழனுள் இயற்சீர் வெண்டளையும் வெண்சீர் வெண்டளையும் மட்டுமே ஆதலை விளக்கி ஏனை ஐந்தும் விலக்கி விடுத்தாம்.

அடிவரையறையில் பஃறொடை வெண்பாவிற்கு ஏழடி வரம் பாதற்கு,

"ஏழடி இறுதி ஈரடி முதலா
ஒழிய வெள்ளைக் கியைந்தன அடியே"

என்னும் சங்கயாப்பும், குமரகுருபரரின் சிதம்பரச் செய்யுட்கோவை ஏழடியில் அமைத்திருக்கும் பஃறொடைப்பாவும் களவழி நாற்பது ஏழடி கடவாமையும் எடுத்துக்காட்டாக்கியுள்ளேம்.

**பாவியல்**

நூற்பா என்னும் பழைய ஏற்பாட்டை முற்றும் தளைபார்க்கப் படாத அகவல், கலி, வஞ்சி மூன்றையும் அசைப்பா என்றும் தளைக்கட்டுப்பாடுடைய விருத்தம் கட்டளைக் கலித்துறை உட்பட வெண்பா – தளைப்பா என்றும் வரையறுத்துள்ளேம்.

**புதுப்பா**

எதுகையின்றி மோனையும் உவமையின்றி உருவகமும் அசை வரம்பின்மையும் கொள்ளுதலைக் கூறியுள்ளேம். புதுப் பா உரைப் பா வேறுபாடும் குறிக்கப்பட்டுள்ளது.

திரைப்பா, இசைப்பா, மெல்லிசை செவ்விசை முறையில் ஓசையினின்று வேறுபடலால் பெயரளவில் பதியப்பட்டுள. இசை நாட்டிய நூலில் விரிவுறக் கூறப்படும்.

**இணைக்குறள் அகவல்**

பெயரிற்கேற்ப-இருசீர் இருமுறைவரல் வழக்குத் தொடக்கமும் வஞ்சிப்பாவின் பெயரில் துறையும் விருத்தமுமாய் வரும் முச்சீர், இருசீர் இணைச் குறள் செந்துறையாதலை நிறுவியுள்ளேம். கலிவிருத்தத்தினின்று ஆசிரிய எழுசீர் புறப்பட்டு அறுசீர் எண்சீர்

எளிமையாகி வழக்கில் பரந்துபட்டமையும் கூறியுள்ளேம். வஞ்சி கலி அகவல் வெண்பா இவையே வளர்முறை என வரலாற்று முறை இறுதியில் கூறப்பட்டுள்ளது. வெண்டளையோடு நடந்து வந்த பாரதியின் குயில்பாட்டு ஈற்றடியில் 'யாதேனும் சற்றே இட மிருந்தால் கூறீரோ' என்று நாற்சீராய் முடிவதனைக் கலிமண்டில வெண்பா எனப் பெயர் கொடுக்கும் புதுமுயற்சி நடக்கிறது.

நாலாயிரத் தெய்வப்பனுவலில் இருந்து ஆசிரிய எழுசீர் விருத்தம் எண்சீர் விருத்தம் வெண்டளையோடு விளங்குதல் கண் டெடுக்கப்பட்டுள்ளது. பாவலரேறு பெருஞ்சித்திரனார் மகபுகு வஞ்சி என வஞ்சிப்பாவிற்கு இலக்கியம் படைத்துப் பகரப்படுகிறது. பாவேந்தரின்

திங்களொடும் செழும்பரிதி
தன்னோடும் விண்ணோடும்
உடுக்களோடும்
மங்குல் கடல் இவற்றோடும்
பிறந்த தமிழுடன் பிறந்தோம்
நாங்கள் ஆண்மைச்
சிங்கத்தின் கூட்டமென்று
சிறியோர்க்கு ஞாபகம் செய்
முழங்கு சங்கே

என்னும் மூன்றடிப்பாடல கண்ணதாசனுக்குத் தவறாக வழி காட்டியிருப்பது குறிக்கப்பட்டுளளது.

வண்ணப்பாக்கள் என்பதை இரண்டாக்கி
நொண்டிச்சிந்து – (ஒருவழிச்சந்தம்)
காவடிச்சிந்து (பலவடிச் சந்த வேறுபாடு)

என்று வகைப்படுத்துகிறது.

மகப்பாவைத் தனித்தலைப்பில் கூறியிருந்தாலும் ஈரசை முச்சீர் என்று யாப்பு வடிவம், இணைக் குறள் செந்துறை எனப் பழம் பெயரில் அடங்குதல் பற்றித் தனித்துக் குறித்திலேம்.

**வார்ப்பியல்**

பண்டைய பாட்டியல் தனி இலக்கணமாக இயலாமையின் யாப்பில் அடக்கி வடிவம் பற்றிய வார்ப்பாக்கினேம். மற்று

நடப்பில் இலக்கியம் பெற்ற வா புகள் 32 மட்டுமே மொழியப் பட்டுள்ளன.

''புராணம் என்பது அ பியல் வளர்ச்சி
இராத பொழுதில் எழு கதைகளே''

என்று புதிய இலக்கணம் வகுக்க து.

'அரைத்த மாவே அரைத்தி இன்றிப், பிள்ளைத் தமிழின் பெற்றிபோல, இளமையில் இறந்தவர் இருந்தால் ஆற்றும், வலிமைகொள் செயல்களை வரைவதான, முதுமைத் தமிழ்போல் புதுமை புகுவோம்'

என்னும் நூற்பாவைக் கண்டு நீடாமங்கலம் மருத்துவர் மறையரசன் எனபவர் 'பட்டுக்கோட்டை கலியாணசுந்தரம் முதுமைத் தமிழ்' என்னும் புதிய இலக்கியம் படைததுள்ளார்.

உலா மகளிர்க்கு ஏழு பருவம் இயம்பப்படல் போல ஆடவர்க்கும் எழுபருவம் வகுத்துள்ளேம்.

பாலன்
மீளி
மறவோன்
திறவோன்
காளை
விடலை
முதுமகன்

கலிங்கத்துப் பரணியை அனைவரும் தாழிசை என்றே கூறினும் ஈரடி மட்டும் கொண்டு அறுசீர், எழுசீர், எண்சீர் விருத்தம் போல வருதலான் தாழிசை என்னும் மையற் பெயரை மாற்றிக் கண்ணி அல்லது குறளியல் என்னும் பெயரைச் சார்த்து கிறது.

இரம்போலா மாசுகரனேசு திருக்காவலூர் கலம்பகத்தில் தாழிசை எனப்பெயர் குறித்த தவறான யாப்புகட்குத் தகவான பெயர் தருகின்றது.

அணிநூல் அணியமாக்க யாப்புநூல் ஒரு வரைகோட்டுக் கோலமாக அமைந்தது.